## **ஸ்ரீ குருப்யோ நம:**

## **முன்னுரை**

ஈஷ்வரனை அறியவோ துன்பத்தினை முழுவதுமாக அழிக்கவோ நாம் அதனை குறித்து அறிவை அடையவேண்டியது அவசியமாகிறது. துன்பமானது மூன்று வகைப்படுகிறது ஜுரம் முதலிய ஆத்யத்மிகம் , புலி முதலிய ஆதிபௌதிகம் , இடி முதலிய ஆதிதைவிகம் என்றும். ஈஷ்வரனை குறித்த விசாரமோ பல இடத்திலும் பல முறையில் குறிப்பிட்ப்பட்டுள்ளது. இதனில் பிரமானமானது எது என்ற குழப்பம் உண்டாகும் நிலையில, ஷ்ருதி சம்மதமான சித்தாந்தமே சரி என்பதால் அதுவும் பலவாக குறிப்பிடப்பட்டதால் அனாதி பரம்பரையாக வந்த அத்வைத சிந்தாந்தமே சரி என்று தர்க்கத்தாலும் அனுபவத்தாலும் நிரூபனமாகும் நிலையில் . அதனில் பிரபலமான கிரந்தங்களில் மிகவும் எளியதாகவும் துவக்க அப்யாசிகளுக்கும் சித்தாந்தம் தெளிவாக விளக்கும் **ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்தபரிபாஷை** மிகவும் பிரசித்தி பெற்றதானது. ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பாஷ்யத்தில் விளக்கப்பட்ட சித்தாந்தம் அழகாகவும் எளிமையாகவும் இதனில் தரப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் அறியாதவர்களும் அதனை கற்றறியும் பொருட்டு **வேதாந்தலஹரி** எனும் இந்த விளக்கவுரையானது எழுதப்பட்டது.

இந்த கிரந்தம் வேதாந்தத்தின் ஆறு பிரமாணத்தையும் விளக்குவதோடல்லாமல் அதன் விஷயம் மற்றும் பிரயோஜனத்தினையும் தெளிவாக்குகிறது. மற்றெல்லா பிரமாணமும் பிரத்தியக்ஷதையே சார்ந்ததாலும் வேதாந்த அறிவு எல்லோருக்கும் **அனுபவமானதாலும்** மற்ற சித்தாந்தத்தினை காட்டிலும் இந்த பிரமாணம் இதனில்


வேறுபட்டதாலும் அதற்கு விஸ்தாரமான விளக்கம் தரப்பட்டுள்ளது.

இந்த கிரந்தத்தினை சந்தேகமில்லாமல் அறிந்தால் வேதாந்த ஞானமானது நிச்சயமாக உண்டாகும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

இந்த கிரந்தம் வெளிவர உதவிய எல்லோருக்கும் இறைவனின் பரிபூர்ண ஆசிகள் உண்டாகட்டும். ஆஸ்த்திக அன்பர்கள் இதனை முறையாக படிக்க முயற்ச்சிக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

**ரிஷிகேஷ்** **ஆசிரியர்**
**கார்திகை தீப ம்**
**5-11-2006**

## ஸ்ரீ குருப்யோ நம:



**'திராவிடாசாரியார்'** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

**ஸ்ரீ குருப்யோ நம:**

**Vedanta Paribhasha– VedantaLahari**
**Dravidacarya Sri Ramakrishnan Swamiji**
பதிப்பு - 2006

**கிடைக்குமிடம்**


**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas

வேதாந்தலஹரி பொருளடக்கம்


अथ प्रत्यक्षपरिच्छेदः

பிரத்யக்ஷ பரிச்சேதம் 1

अथ अनुमानपरिच्छेदः

அனுமான பரிச்சேதம் 63

अथोपमानपरिच्छेदः

உபமான பரிச்சேதம் 72

अथागमपरिच्छेदः

ஆகம பரிச்சேதம் 74

अथार्थापत्तिपरिच्छेदः

அர்த்தாபத்தி பரிச்சேதம் 95

अथानुपलब्धिपरिच्छेदः

அனுபலப்தி பரிச்சேதம் 100

अथ विषयपरिच्छेदः

விஷய பரிச்சேதம் 113

अथ प्रयोजनपरिच्छेदः

பிரயோஜன பரிச்சேதம் 143

# वेदान्तपरिभाषा

## வேதாந்த பரிபாஷை

## अथ प्रत्यक्षपरिच्छेदः

## பிரத்யக்ஷ பரிச்சேதம்

यदविद्या विलासेन भूतभौतिकसृष्टयः ।
तं नौमि परमात्मानं सच्चिदानन्दविग्रहम् ॥ १ ॥

எந்த பிரம்மத்தில் நிலையாகி (அவித்யா) வின் மாற்றத்தினால் இந்த ஆகாயம், வாயு, அக்னி, நீர் மற்றும் நிலம் முதலிய பூதங்களும் அதிலிருந்து சூக்ஷமானதும் , ஸ்தூலமானதுமானதும் ஸ்ருஷ்டி உண்டாகியதோ அந்த சத்தும் சித்தும் ஆனந்தமும் இயல்பான அந்த பிரம்மத்தினை வணங்குகிறேன். -1-

**விளக்கம்**

இங்கு ஜீவனிலிருந்து வேறற்றது பிரம்மம் என்பதை விளக்கவே பரமாத்மா என்பது கூறப்பட்டுள்ளது. அப்படி வேறற்று இருப்பது என்றால் அதற்க்கு வணக்கம் செலுத்துவது முறையாகாது என்றால் (தன்னை விட மேலானதற்கே வணக்கம் செலுத்துவது முறை) கற்பனை செய்யப்பட்ட பிரிவை ஏற்று அவித்யாவின் பிரதிபிம்பமான (அவித்தை கூடிய சைத்தன்யம்) செயல்புரிபவன் போன்ற நிலைகளுடன் கூடிய ஜீவனை நமஸ்கரிக்கும் புருஷனாகவும், அதிலிருந்து வேறான (மாயா கூடிய சைத்தன்யம்) சர்வஞ்ஞர் முதலியது கூடிய பரமாத்மாவை மேலானதாக எண்ணி நமஸ்காரம் செய்யப்படுகின்றது **விஸிஷ்ட ஸுத்தாத் நாதிரிச்யதே** (வேறு எதனோடு கூடியது சுத்தமானதை விட மேன்மையானதாக இருக்கமுடியாது) என்ற நியாயத்தை

தொடர்ந்து ஜீவன் சுத்த பிரம்மத்தைவிட மேன்மையான ஒன்றாக இல்லாததால்.

ஆனால் **லக்ஷண பிரமாணப்யாம் வஸ்து ஸித்தி** (லக்ஷணத்தினாலும் பிரமாணத்தினாலும்) என்ற நியாயப்படி பிரம்மமே இங்கு நிரூபிக்கபடாத நிலையில் எப்படி ஜீவ, பிரம்மம் இரண்டினும் உள்ள அபேதத்தை (பிரிவற்ற தன்மை) நிரூபிக்க முயர்ச்சி செய்யப்படுகின்றது என்றால் அப்படியில்லை, பஞ்சபூதங்களும் அதிலிருந்து உண்டானவைகளுமே அதன் இருப்பிற்க்கு பிரமாணமாகியதால். ஸ்திதி பிரளயத்திற்க்கு உபலக்ஷணமாக ஸ்ருஷ்டி கூறப்பட்டுள்ளது.

**ஸ ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேய** (அது பார்த்தது பல வகையாக பிரஜைகளை உண்டாக்குவேனாக)

**மாயா அத்யக்ஷேண ப்ரகிருதி ஸுயதே ஸசாரசரம்** (என்னால் நிர்வகிக்கப்பட்டு இந்த பிகிருதி ஸ்ருஷ்டியை செய்கின்றது) என்பது போன்ற ஷ்ருதி , ஸ்மிருதி இதற்க்கு சான்று.

மாயா கூடிய சைத்தன்யத்தை இந்த ஸ்ருஷ்டிக்கு காரணமாக கூறியதால் அசத் காரணம் என்று கூறும் சாங்கிய மற்றும் பௌத்த மதம் நிராகரிக்கப்பட்டது.

அந்த பரமாத்மாவை என்று கூறியதால் தேகம் ஆத்மா என்று கூறுபவரின் மதமும் கண்டிக்கப்பட்டது. பரம் என்றும் விசேஷனத்தால் தேகத்தில் அடங்கியிருப்பது ஆத்மா என்றும் ஜைனர்களின் வாதமும் சிறியது (கடுகளவு) ஆத்மா என்ற வாதமும் நிராகரிக்கப்படுகின்றது.

புத்தி முதலியவைகளின் ஆஷ்ரயமாகவும் கர்தாவாகவும் போக்த்தாவாகவும் இருப்பது ஆத்மா என்னும் தார்க்கிகர்கள் (நையாயிக மற்றும் வைஸேஷிகர்கள்) மற்றும் பிராபகர (பூர்வ மீமாம்ஸை) மதமும், நான் என்னும் அனுபவம் இருவகையாகவும் இருப்பதால் ( நான் செவிடு, என் காது என்பது போன்ற ) ஜடபோத ரூபம் என்று ஒப்புக்கொள்ளும் பாட்ட மதத்தினரையும் சச்சினானந்த விக்ரகம் என்பதால் நிராகரிக்கிறார்.

இப்படி பிரம்மத்தை வணங்கிய பின் குருவின் கருணை என்னும் பிரசாதமும் அந்தரங்க சாதனை என்று ஒப்புக்கொள்ளப்படுவதால் குரு வணக்கத்தை இரு ஸ்லோகத்தில் செய்கின்றார்.

முதலில் குருவின் குருவான பரம குருவினை வணங்குகிறார்-

**यदन्तेवासिपञ्चास्यैर्निरस्ता भेदिवारिणाः ।**

**तं प्रणौमि नृसिंहाख्यं यतीन्द्रं परमं गुरम् ॥ २ ॥**

எவருடைய சிங்கம் போன்ற சிஷ்யர்கள் பேதத்தை பேசும்தன்மையுள்ள யானை போன்றவர்களை அழித்தார்களோ. அப்படிப்பட்ட **நிருசிம்ஹர்** என்ற பெயருடைய யதிகளில் சிறந்தவரான பரம குருவினை வணங்குகிறேன். -2-

**விளக்கம்**

பேதவாதி என்பது இங்கு பொதுவாக கூறப்படும் ஐந்து பிரிவை ஒப்புக்கொள்பவரை குறிக்கிறது. அவை.

**1. ஜடத்திற்க்கும் சைத்தன்யதன்மைக்கும் உள்ள பிரிவு.**
**2. ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள பிரிவு.**
**3. ஜீவனுக்கும் ஜடத்திற்க்கும் உள்ள பிரிவு.**
**4. ஈஸ்வருனுக்கும் ஜடத்திற்க்கும் உள்ள பிரிவு.**
**5. ஜடத்தில் ஒன்றுக்கொன்று உள்ள பிரிவு.**

பரமகுருவினை வணங்கிய பின் தன்னுடைய வித்யா குருவினை மூன்றாவது ஸ்லோகத்தில் வணங்குகிறார்.

**श्रीमद्वेङ्कतनाथाख्यान् वेलाङ्गुडिनिवासिनः ।**

**जगद्गुरूनहं वन्दे सर्वतन्त्रप्रवर्त्तकान् ॥ ३ ॥**

எல்லா சாஸ்திரங்களின் உண்மையை அறிந்து அவைகளில் தன்னுடைய சிஷ்யர்களை பிரவிருத்திக்க செய்யும் வேலாங்குடி கிராமத்தை சேர்ந்த **ஸ்ரீமத் வேங்கடநாதர்** என்னும் குருவினை நான் வணங்குகிறேன். -3-

**விளக்கம்**

இப்படியாக குருவினையும் பரமகுருவினையும் போற்றிய பின் அவர்களின் சீடனான தானும் சற்றும் சலைத்தவர் இல்லை என்பதை நிரூபிக்கவும், இந்த கிரந்தத்தினுடைய மகிமையையும் அதில் பிரமானதன்மையையும் நிரூபிக்கவும் தன்னுடைய பெருமையை கூறுகிறார்.

येन चिन्तामणौ टीका दशटीकाविभञ्जिनी ।
तर्कचूदमणिर्नाम कृता विद्वन्मनोरमा ॥ ४ ॥

எவரால் **தத்வசிந்தாமணி** என்னும் நூலின் மேல் உள்ள பத்து விளக்க உரைகளையும் கண்டனம் செய்யும், வித்வான்களுக்கு ஆனந்தத்தை தரக்கூடிய **தர்க்கசூடாமணி** என்னும் விளக்கவுரை எழுதப்பட்தோ -4-

तेन बोधाय मन्दानां वेदार्थावलम्बिनी ।
धर्मराजाध्वरीन्द्रेण परिभाषा वितन्यते ॥ ५ ॥

அந்த **தர்மராஜ அத்வரீந்திரனால்** மந்த புத்தியுள்ளவர் வேதாந்தத்தின் பொருளை (தாத்பர்யத்தை) புரிந்து கொள்ளும் பொருட்டு **வேதாந்த பரிபாஷா** எழுதப்படுகின்றது -5-

**விளக்கம்**

மோக்ஷத்தை அடையும் பொருட்டு **சாரீரகமீமாம்ஸை** (பிரம்ம சூத்திர பாஷ்யம்) போன்றவைகள் இருக்கும் பொழுது இந்த கிரந்தத்தின் அவசியமின்மையை சந்தேகித்தால், மந்த புத்தியுள்ளவர்களுக்கு கடினமாக

இருக்கும் அதில் பிரவேசம் இன்மையால் அவர்களின் பொருட்டு இந்த கிரந்தம் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை உணர்ந்த **தேன** என்று ஆரம்பிக்கின்றார். **வேதாந்தமாலா** போன்ற கிரந்தங்கள் அதற்காக இருக்கின்றதே என்றால், அவைகளில் வேதாந்தம்முழுமையாக கூறப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

**इह खलु धर्मार्थकाममोक्षाख्येषु चतुर्विधपुरुषार्थेशु मोक्ष एव परमपुरुषर्थः न स पुनरावर्त्तते इति श्रुत्या तस्य नित्यत्वावगमात्। इतरेषां त्रयाणांप्रत्यक्षेण तद्यथेह कर्मचितो लोकः क्षीयते एवेमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते इत्यादिश्रुत्या चानित्यावगमात्। स च ब्रह्मज्ञनात् इति ब्रह्म तज्ज्ञानं तत्प्रामाणं च सप्रपञ्चं निरूप्यते॥**

இந்த உலகத்தில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் எனப்படும் நாலுவித புருஷார்தத்தில் , மோக்ஷமே சிறந்ததானது. அவன் திரும்பி வருவதில்லை என்ற வேதத்தினால் அதை நித்தியமானது என்று அறிவதினால். மற்ற மூன்றும் பிரத்தியக்ஷத்தினாலும். **எப்படி இங்கு லோகத்தில் கர்மத்தினால் அடையப்படுவது அழிக்கின்றதோ அப்படியே புண்யத்தினால் அடையப்பட்ட லோகங்களும் அழிகின்றது** என்பது போன்ற வேத வாக்கியங்களால் அநித்யமானது என்று அறியப்படுவதால். அந்த மோக்ஷம் பிரம்ம ஞானத்தினால் அடையப்படுவதால், பிரம்மம், அதன் ஞானம், அதை நிரூபிக்கும் பிரமாணங்களும் விளக்கமாக நிரூபிக்கப்படுகிறது.

## விளக்கம்

**சாரீரகமீமாம்ஸையில்** எந்த உயர்வான பிரயோஜனம் விளக்கப்பட்டுள்ளதோ அதே இங்கும் விளக்கப்படுகின்றது. என்பதை கூற **இஹ** என்று ஆரம்பிக்கிறார். **பிரயோஜனம்மனுத்திஷ்ய ந மன்தோபி ப்ரவர்ததே** (பிரயோஜனம் இல்லாமல் மந்த புத்தியுள்ளவனும் ஒரு விஷயத்தில் ஈடுபடுவதில்லை) என்ற நியாயப்படி தன்னுடைய கிரந்தத்தினால் அடையக்கூடிய பிரயோஜனத்தை கூறுகிறார். தர்மம் முதலிய புருஷார்த்தத்தில் , புருஷார்த்தம் என்றால் **புரம் உஷதி தஹதி இதி புருஷ தஸ்மின் ஸ்தித்வா யத் அர்த்யதே தத்** (

எரிக்கப்படும் உடம்பினை புருஷன் என்னும் அதில் இருந்து கொண்டு அடையப்படுவது - எரியும் தன்மை உள்ளது என்று கூறப்பட்டதால் ஆண், பெண் இருவருக்கும் ஞானம் பொதுவாகின்றது ), மோக்ஷமே சிறந்தது என்பதால் பரம என்று கூறப்பட்டுள்ளதால் **பரமத்வம் - நிரதிஸயத்வே ஸதி க்ஷயஸூந்யத்வ** (குறைவின்றி இருந்து கொண்டே அழியாத்தன்மை உடையது), அது மோக்ஷத்திலேயே உள்ளதால், ஸ்ருதியும் அதை நிரூபிப்பதால். மற்றவைகளோ அனுபவத்திலும், வேதத்தில் கூறப்பட்டதாலும் அழியும் தன்மை உடையது என்பது அறியப்படுவதால் . மோக்ஷமே அடையப்படவேண்டியது என்று நிரூபணமாகின்றது. ஆனால் **அபாம ஸோமமருதா அபூம** (நாம் சோமரசத்தை குடித்தபடியால் அமரர் - மரணமற்றவர் ஆகிவிட்டோம்), **அக்ஷயம் ஹ வை சாதுர்மாஸ்ய யாஜிநம் ஸுக்ருதம் பவதி** (சாதுர்மாஸ் யாகத்தை செய்தவரின் புண்யம் அழிவற்றதாகிறது) போன்ற வேத வாக்கியத்தால் தர்ம பலன் நித்தியமாக அறியப்படுகின்றது என்றால் **தத்யதேஹ கர்மசிதோ லோக க்ஷியதே** (எப்படி கர்மத்தினால் அடையப்பட்ட உலகம் அழிகின்றதோ ) என்ற வேத வாக்கியத்தால் அது நிராகரிக்கப்படுகின்றது. சாதுர்மாஸ்ய யாகத்தினை செய்தவரின் புண்யமோ பிரளயகாலம் வரை நிரந்தரமானது என்று கூறப்படும்.

கர்மத்தால் அடையப்படும் பலன்கள் நான்கு வகை ஆகிறது.

1. **உண்டு செய்யப்படுவது. (உத்பாத்ய)**
2. **மாற்றத்தினால் (விகார்ய)**
3. **சம்ஸ்காரத்தினால் (சம்ஸ்கார்ய)**
4. **அடையப்படுவது (ப்ராப்த) .**

1. **உண்டு செய்யப்படுவது** - அரிசியை வேகவைத்து சாதம் உண்டாக்குவது போல ஆத்மா உண்டாக்கப்படுவதில்லை.

2. **மாற்றத்தினால்** - பாலிலிருந்து தயிரைபோல ஆத்மா மாற்றமில்லாதன்மையுடையதால் மாற்றத்தினால் அடையப்படுவது அல்ல.

3. **சம்ஸ்காரத்தினால்** - துணியை துவைப்பது அழுக்கை போக்க செய்யப்படும் சம்ஸ்காரம் அதைபோல வைதிககர்மத்தில் நீர் தெளிப்பதால் நெல் சம்ஸ்காரிக்கப்படுகின்றது. அதுபோல ஆத்மா சம்ஸ்காரம் என்னும் செயலின்

பலனில்லை.

4. **அடையப்படுவது** - முன்பு இல்லாததை அடைவது போல, வேறு கிராமத்தை அடைவது போல ஆத்மா அடையப்படுவது அல்ல.

இந்த நான்கு வகையான கர்மங்களின் பலனாக மோக்ஷம் இல்லாததால் அது நிரந்தரமானது என்பது நிரூபணமாகின்றது. **தரதி ஷோகமாத்மாவித்** ( ஆத்மாவை அறிந்தவர் சோகங்களை (சம்சாரத்தை) கடக்கிறார்) **நான்ய பன்தா வித்யதே அயனாய** (அதை அறிய வேறு வழி இல்லை) போன்ற ஷ்ருதி வாக்கியங்களால் பிரம்ம ஞானமே அதை அடையும் வழி என்பது நிரூபணமாகின்றது.

அந்த பிரம்மாத்ம ஐக்கியமே மோக்ஷமானபடியால் , அதை அடையவேண்டியது வேத வாக்கியங்களின் பிரமாணத்தினாலும் அந்த பிரமாணங்கள் முதலில் விளக்கப்படுகின்றது.

**மானாதிநா மேய ஸித்தி மாந ஸித்திஷ்ச லக்ஷணாத்** ( பிரமேயத்தின் நிரூபணம் பிரமாணத்தினால் அந்த பிரமாணத்தின் நிரூபணமோ லக்ஷணங்களினால்) என்கிற நியாயப்படி பிரமாணங்களை நிரூபிக்க அதன் லக்ஷணத்தை காண்போம்.

**तत्र प्रमाकरणं प्रमाणम्। तत्र स्मृतिव्यावृत्तं प्रमात्वमनधिगताबधितविषयज्ञानत्वम्। स्मृतिसाधारणं त्वबाधितविषयज्ञानत्वम्। नीरूप्यस्यापि कालस्येन्द्रियवेद्यत्वाभ्युपगमेन धारावाहिकबुद्धेरपि पूर्वपूर्व ज्ञानाविषयतत्तत्क्षणविषकत्वेन न तत्राव्याप्तिः॥**

இங்கு பிரமாவுக்கு கரணமாக (கருவியாக) இருப்பது பிரமாணம். அதில் ஸ்மிருதி (நினைவு) யிலிருந்து வேறாக பிரமாவின் லக்ஷணத்தை செய்யும் பொழுது எது முன்பே அறியப்படாததோ மற்றும் எதன் பாதனையும் ஆவதில்லையோ அப்படிப்பட்ட விஷயத்தின் ஞானம் பிரமா என்று கூறப்படுகின்றது. (ஸ்மிருதியை

பிரமாவாக ஒப்புக்கொள்பவருக்கு) ஸ்மிருதியோ பாதனை செய்யப்படாத விஷயத்தின் ஞானத்தன்மை ஆகிறது.

ரூபமில்லாததாக இருந்தும் பாவம் இந்திரியங்களினால் (புலன்) பார்க்கப்படுவதை ஏற்பதினால் தாரை பிரவாகமான அறிவிலும் முந்தைய க்ஷணத்தின் உள்ள பொருளின் அறிவு உண்டான போதிலும் பிந்தைய க்ஷணத்தினலுள்ள பொருளின் அறிவு உண்டாவதில்லை என்பதால் பிரமாவின் லக்ஷணத்தில் அவ்வியாப்தி (குறைபாடு) இல்லை.

## விளக்கம்

**லக்ஷணம்** என்றால் குறிப்பு அது மூன்று தோஷங்களில்லாமல் இருத்தல் அவசியம். 1. **அவ்வியாப்தி** - குறைவடைவு, 2. **அதிவியாப்தி** - கூடுதலடைவு, 3. **அசம்பவம்** - தவறானது

**1. அவ்வியாப்தி** - மாடு என்பது கருப்பு நிறம் உடையது என்பது போல, வெள்ளையான மாடுகளில் லக்ஷணம் செல்லாது.

**2. அதிவியாப்தி** - மாடு நான்கு கால்களுடையது என்பது போல. மாடல்லாத பிராணிகளையும் குறிப்பதாக ஆகும்.

**3. அசம்பவம்** - மாடு என்பது ஒரு குளம்பினையுடையது என்பது போல. மாடு இருகுளம்புடைய பிராணியாகையால் அதில் குறிப்பு முற்றிலும் செல்லாது.

அதனால் **பிரமா கரணம் பிரமாணம்** என்ற லக்ஷணத்தில் இந்த தோஷங்கள் இல்லாமல் இருப்பதற்க்காக பிரமா என்றால் என்ன என்ற விசாரம் செய்யப்படுகின்றது. பின்பு கரணம் என்றால் என்ன ( இவை நியாய கோட்பாட்டின் கீழ் விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது என்றாலும் சிறு விளக்கம் அதை அறியாதவருக்கு அவசியமாகின்றது – விளக்கமாக **தர்க்கலஹரியில்** காண்க). **அஸாதாரணம் காரணம் கரணம்** ( சாதாரமாண காரமில்லாமல் இருப்பது கரணம்), சாதாரணம் காரணம் என்ன என்றால், தேசம், காலம், ஈஸ்வரன், அவர் ஆசை (இச்சா) ஜீவன் அதிர்ஷடம் (பாவம், புண்ணியம்) இவையே. இவையில்லாது , ஒரு

பொருளை உண்டாக்க தேவைப்படும் காரணம் **கரணம்** என்படுகின்றது. ஒரு பாணையின் பொருட்டு , தண்டம் ,சக்கரம், அறுக்க உபயோகமாகும் கருவி முதலியன சாதாரணமான காரணமாக இல்லாதது அசாதாரணம் காரணமாகும்.

.இங்கு ஸ்மிருதி (நினைவு) யை பிரமாவாக ஒப்புக்கொள்ளாதவருக்கு **அநதிகதாபாதித விஷய ஞாநத்வம்** என்று ஆகின்றது. அதை ஒப்புக்கொள்பவருக்கே **அபாதிதவிஷய ஞாநத்வம்** என்பது லக்ஷணமாக ஆகின்றது ஆனால் அபாதித என்ற விசேஷணத்தை தராமல் விட்டால் தவறான அறிவான பிரமையிலும் (சிப்பியில் வெள்ளியை காண்பது போல) பிரமா லக்ஷணம் சென்றுவிடும்.

இங்கு தாராபிரவாகமான இடத்தில் தோஷம் வரும் என்று கூறுவது எப்படி என்றால் கண்களால் பார்க்கப்பட்ட பாணையானது இது பானை என்ற அறிவை தரும். இதை அதன் முதல் க்ஷணமாக எடுத்தால், இந்த அறிவை அடைந்தபின் உண்டாகும் இரண்டாவது, மூன்றாவது க்ஷணத்தில் உண்டாகும் இது பானை என்ற அறிவு பாதனை செய்யப்படாத பானையை விஷயமாக கொள்வதானாலும் ஏற்கனவே அறியப்பட்டதாக ( **அதிகாரிதம்** ) இருக்கிறபடியால் செய்த லக்ஷணத்தில் அவ்வியாப்தி என்ற தோஷத்தை உண்டு செய்வதாக ஆகின்றது என்றால்,

அப்படி இல்லை, முதல் க்ஷணம் கூடிய பாணை இரண்டாவது க்ஷணத்தில் அறியப்படாததாக இருப்பதால், அந்தந்த க்ஷணம் கூடிய பானை அந்தந்த க்ஷணத்தினுடைய அறிவை கொடுப்பதால் அங்கு அறியப்படாத வஸ்துவாக இருக்கிறபடியால் பிரமாவாகவே ஆகும் அதனால் அவ்வியாப்தி தோஷம் இல்லை என்றாகின்றது. இப்படி நிரூபிக்கப்பட்டாலும்.

**किञ्च सिद्धान्ते धारवाहिकबुद्धिस्थले न ज्ञानभेदः किन्तु यावद्घटस्फुरणं तावद् घटाकारान्तःकरणवृत्तिरेकैव न तु नाना वृत्तेः स्वविरोधिवृत्त्युत्पत्तिपर्यन्तं स्थायित्वाभ्युगमात्। तथा च तत्प्रतिफलितचैतन्यरूपं घटादिज्ञानमपि तत्र तावत्कालीनमेकमेवेति नाव्याप्तिशङ्काऽपि ॥**

அதுவுமில்லாமல் (வேதாந்த ) சித்தாந்த்தில் தாரை பிரவாகமான நிலையில் ஞானத்தின்( விஷயத்தின் தன்மையுடைய விருத்தியில்) எந்த வேறுபாடுமில்லை ஆனால், எதுவரை இது பானை என்று பானையின் அனுபவம் உள்ளதோ அதுவரை பானை ஆதாரமான அந்தக்கரணத்தின் விருத்தியும் ஒன்றாகவே இருக்கிறது. வேறுவேறாக இல்லை. ஒரு விருத்தி தனக்கு விரோதமான விருத்தி உண்டாகும் வரையில் அப்படியே மாறாமல் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளபடுவதினால். அதனாலேயும் அந்த சமயத்தில் அந்த பானை விருத்தியினால் ) முதலிய பிரதிபலிக்கப்பட்ட சைத்தன்யரூபமான பானை முதலிய ஞானமும் அங்கு அதுவரை ஒன்றாகவே இருக்கிறது என்பதாலும் அவ்வியாப்தி தோஷம் உண்டு என்ற சந்தேகத்திற்கே இடமில்லை.

## விளக்கம்

ரூபமில்லாத காலத்தை இந்திரியங்களைகொண்டு அறியமுடியும் என்று ஒப்புக்கொள்வதால், ஆகாயத்தில் பருந்து போன்ற அனுபவத்திலும் ஆகாயம் பார்க்கப்படுவதாக ஆகும், அதை ஒப்புக்கொண்டால் ஸ்ரீ சாங்கராச்சாரியாரின் வாக்கு (பிரம்ம சூத்திர பாஷ்யத்தில்) **அப்ரத்யக்ஷே ஹ்யாகாஷே பாலாஸ்தலமாலிநதாத் த்ருஸ்யந்தி** (பிரத்தியக்ஷமாக தெரியாத ஆகாசத்தில் சிறுவர்கள் தலம், அழுக்கு போன்றவற்றை ஏற்றி பார்கிறார்கள்) தவறாக ஆகும். அதுவுமில்லாமல் சத்தத்தின் ஆஸ்ரயமானது என்று ஆகாயத்தை அனுமானம் செய்வதற்க்கும் அவசியமில்லை.

காலத்தினை பிரத்தியக்ஷமாக கொண்டு பதில் கொடுக்கப்பட்டது. பிரத்தியக்ஷமாக கொள்ளாமலும் தாரைபிரவாக ஞானத்தில் எந்த தோஷமும் இல்லை. எதுவரை பானை இருக்கிறது என்ற அறிவு உண்டாகின்றதோ அதுவரை அதனால் உண்டாகும் பானையாகார விருத்தி ஒன்றாகவே இருக்கிறது என்று லாகவமாக கொள்ளலாம்.

ஆனால், இது லாகவமென்றால் இல்லை . இது கௌரவமே . அதனினும் லாகவம் தூக்கம் (**சுஷூப்தி**) வரை ஒரே விருத்தியாக ஒப்புக்கொள்வது என்றால் அது சரியல்ல ஒரு விருத்தியின் விரோமான விருத்தி உண்டாகும் வரை அது

இருப்பதாக வேதாந்தமதத்தில் ஒப்புக்கொள்ளப்படுவதால். பானை ஆகாரத்தின் விருத்தி, துணி ஆகாரவிருத்தியே, அசட்டையாக (**உதாசீன**) இருக்கும் சமயத்தில் உண்டாகும் விருத்தியோ நீக்கிவிடுவதால். முடிவைக்கொண்டு நாம் பார்க்கும் போது தூக்கத்தை போல, அசட்டையாக இருக்கும் போதும் விருத்தி நீங்கி விடுகிறது. அப்படி இல்லாதிருந்தால் நான் பிரம்மம் என்ற **அகண்டாகார விருத்தி** உணடானபின் வேறு விருத்தி உண்டாகாது ஆகையால் அகண்டாகாரவிருத்தி நீங்காது, பின்வரும் விருத்தியே முன் விருத்தியை நீக்கும் என்பதால் , ஆனால் விருத்தியற்ற நிலையே இருக்கிறது என்று கொள்ளவேண்டும் இல்லையென்றால் துவைதமுண்டாகும்.

ननु सिद्धन्ते घटादेर्मिथ्यात्वेन बाधितत्वात्तज्ज्ञानं कथं प्रमाणम्। उच्यते। ब्रह्मसाक्षात्कारानन्तरं हि घटादीनां बाधः यत्र त्वस्य सर्वमात्मैवाभूत् तत्केन कं पश्येत् इति श्रुतेः न तु संसारदशायां बाधः यत्र हि द्वैतमिव भवति तदितर इतरं पश्यति इति श्रुतेः। तथा चाबाधितपदेन संसारदशायामबाधितत्वं विवक्षितमिति न घटादिप्रमायामामव्याप्तिः। तदुक्तम् -

देहात्मप्रत्ययो यद्वत् प्रमाणत्वेन कल्पितः।
लौकिकं तद्वदेवेदं प्रमाणं त्वाऽऽत्मनिश्चयात्॥ १॥

ब्रह्मसाक्षात्कारपर्यन्तमित्यर्थः। लौकिकमिति घटादिज्ञानमित्यर्थः॥

ஆனால், சித்தாந்தத்தில் பானை முதலியவை மித்யா என்று நிராகரிக்கப்பட்டதால் அதன் ஞானமானது எப்படி பிரமாணமாகும், என்றால் கூறுகிறோம். பிரம்ம சாக்ஷாத்காரத்தின் பின்பே பானை முதலியவைகளின் நிராகரணம் **எங்கு இவருக்கு எல்லாம் ஆத்மாவாகவே ஆகிவிட்டதோ அங்கு எதனைகொண்டு எதை பார்ப்பார்** என்று ஷ்ருதி கூறுகின்றது, சம்சாரமானது இருக்கும் போது அதன் நிராகரணமில்லை **எங்கு துவைதத்தை போல இருக்கிறதோ அங்கு ஒருவர் மற்றவரை பார்க்கிறார்** என்று ஷ்ருதி கூறுகின்றது. அதனால் அபாதிதம் என்ற சொல்லினால் சம்சாரமானது இருக்கும்போது உள்ள நிராகரணமற்றதன்மை கூறப்படுகிறது என்பதால் பானை முதலிய ஞானத்தில்

பிரமாவின் லக்ஷணத்தில் அவ்வியாப்தியில்லை. அது கூறப்பட்டிருக்கின்றது –

நான் மெலிந்தவன், பிராம்மணன் என்பது முதலானவைகள் உடம்பினில் ஆத்மா என்ற அறிவு எப்படி பிரமாணமாக கற்பனை செய்யப்பட்டிருக்கின்றதோ, அதுபோலவே பானை முதலிய லௌகிக பொருட்களிலும் பிராமண புத்தி ஆத்மசாக்ஷாத்காரத்திற்க்கு முன் உண்டாகின்றது.

(**ஆ ஆத்மநிஸ்சயாத்**) பிரம்ம சாக்ஷாத்காரம் வரை என்று பொருள். லௌகிகமென்பது பானை முதலியதின் ஞானம் என்று பொருள்.

## விளக்கம்

**அனதிகத அபாதித விஷய ஞானத்வம் பிரமாத்வம்** என்று கூறுப்பட்ட லக்ஷணம் எல்லா மதத்தின் அனுசரித்து செய்யப்பட்டதென்றால் முன் கூறிய அவ்வியாப்தி தோஷம் உண்டாகும். வேதாந்த சிந்தாந்தத்தில் மட்டும் என்றால் அதில் பிரம்மஞானம் மட்டுமே பிராமணமாக ஒப்புக்கொள்ளப்பட்டதால் சிறு பூச்சி முதல் பிரம்மா வரை எல்லாம் மித்யா என்று கூறுப்பட்டதாலும், கிளிஞ்சலில் வெள்ளி போல மித்யா என்று பானை முதலியது நீக்கப்பட்டதாலும் **அபாதித** என்ற விசேஷணம் சரியானது இல்லை என்றால் **உச்யதே** என்று பதில் கூறுகிறார். சம்சாரதசையில் பாதனை இல்லை பிரம்மத்தினை சாக்ஷாத்காரம் செய்த பின்பே பாதனை , அதற்க்கு முன்பு வரை நான் பிராம்மணன் , நான் க்ஷத்திரியன் , நான் உயரம், நான் குள்ளம் போன்ற உடலே ஆத்மா என்றும் நினைப்பு பிராமணமாக எப்படி கற்பனை செய்யபட்டதோ அதுபோலவே பானை முதலிய உலக விஷயங்களும் வியவகாரதன்மையுள்ள பிராமணமாக ஏற்கப்படுகின்றது. அதனாலே எப்படி உடலே ஆத்மா என்றும் எண்ணம் பிரம்ம சாக்ஷாத்காரத்திற்க்கு பின்பு நீங்குகின்றதோ அதுபோல பானை முதலியவைகளும் நீங்கிவிடுகின்றன. **லௌகிகம்** என்பதால் லோகத்தில் உள்ளது மட்டுமே என்ற பொருள்படும் அதனால் வேதத்தில் சொல்லப்பட்டவைகள் **வைதிகம்** என்று கூறப்பட்டபடியால் அதில் கூறப்பட்ட சுவர்கம் முதலியவைகள் பிரமாணமாக கொள்ளப்படவேண்டும் என்று கூறினால், அப்படியில்ல, பிரம்மத்தினை விட வேறாக இருக்கும் எதுவுமே இந்த லோகமானாலும், சுவர்கலோகமானாலும் எல்லாமே லௌகிகமென்றே கொள்ளப்படவேண்டும், ஏனென்னறால் பிரம்மத்தினை அடையும் வரை

லௌகிகமான ஞானமும் பிரமாணமே. இதுவரை லக்ஷணத்திலுள்ள பிரமா என்ற சொல்லிற்க்கும் , கரணமென்ற சொல்லிற்க்கும் பொருள் விளக்கம் தந்துவிட்டு பிரமாணம் என்றால் என்ன என்பதை விளக்க முற்ப்படுகிறார்.

तानि च प्रमाणानि षट् प्रत्यक्षानुमानोपमानागमार्थापत्त्यनुपलब्धिभेदात्।

அந்த பிரமாணங்கள் ஆறு வகைப்படும்.அவை பிரத்தியக்ஷம் , அனுமானம், உபமானம் , ஆகமம் , அர்தாபத்தி, அனுபலப்தி என்று.

**விளக்கம்**

பிரமாணம் எத்தனை வகைப்படும் என்பதற்க்கு ஆறு என்று கூறப்பட்டது இந்த எண்ணிக்கையை குறிப்பிடுவதற்க்கு காரணம் பல மதங்களில் பலவாக கொள்ளப்பட்டதே காரணம்.

**சார்வாகர்கள்** பிரத்தியக்ஷம் ஒன்றே பிரமாணம் என்று ஒப்புக்கொள்கிறார்கள். **காணாதரும் (வைசேஷிகம்) பௌத்தரும்** அனுமானத்தையும் கூட ஏற்கின்றனர். **கபிலரும் (சாங்கியம்) பாதஞ்சலியும்( யோகம்)** ஆகமத்தையும் கூட ஏற்கின்றனர். **கௌதமர் (நையாயிகம்)** உபமானத்தையும் ஏற்கின்றனர். **பிராபாகரர் (பூர்வ-மீமாம்ஸை)** அர்த்தாபத்தியும் ஏற்கின்றனர். **பாட்டரும் (பூர்-மீமாம்ஸை) வேதாந்திகளும்** அனுபலப்தி என்ற இல்லாமையும் ஒரு பிரமாணம் என்று ஆறுவகையையும் ஏற்கின்றனர். இவைகளில் பிரத்தியக்ஷமே மற்ற எல்லா பிராமணஙகளுக்கும் உயிராக, ஆதாரமாக விளங்குவதால் முதலில் பிரத்தியக்ஷத்தையே விளக்குகிறார்.

तत्र प्रत्यक्षप्रमायाः करणं प्रत्यक्षप्रमाणम्। प्रत्यक्षप्रमा चात्र चैतम्यमेव यत्साक्षादपरोक्षाद् ब्रह्म इति श्रुतेः। अपरोक्षादित्यस्यापरोक्षमित्यर्थः।

அங்கு பிரத்தியக்ஷ பிரமாவின் (ஞானத்தின்) கரணமாக (கருவியாக)

இருப்பது பிரத்தியக்ஷப்பிராமணம். அந்த பிரத்தியக்ஷப் பிரமா என்பது இங்கு ( வேதாந்தத்தில்) சைத்தன்யமே . பிரம்மமே **சாக்ஷாத் ஆபரோக்ஷரூபமானது** என்கிறது ஷ்ருதி. **அபரோக்ஷாத்** (பஞ்சமி – ஐந்தாம் வேற்றுமை) என்பதற்க்கு அபரோக்ஷம் (முதல் வேற்றுமை) என்று பொருள்.

## விளக்கம்

அங்கு என்று மூலத்தில் தரப்பட்டது பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்களில் என்று பொருள்.

**ப்ரத்யக்ஷ ப்ரமாயா கரணம் ப்ரத்யக்ஷ ப்ரமாணம்** என்று லக்ஷணம் செய்யப்பட்டது. நையாயிகர்களோ **இந்திரியார்த்தஸன்னிகர்ஷஜன்யம் ஞானம் ப்ரத்யக்ஷம்** (இந்திரியமும் பொருளும் இனைவதால் (சேர்க்கையால் ) உண்டாகும் ஞானம் பிரத்தியக்ஷம் ) என்று கூறுகின்றனர், வேதாந்திகள் மனதை இந்திரியமாக ஒப்புக்கொள்ளாததால் அங்கு உண்டாகும் இன்பம், துன்பம் ஆகியவைகளின் பிரத்தியக்ஷம் ஆகாது போகும் என்ற அவ்வியாப்தி தோஷம் உண்டாகும்.

நையாயிகர்கள் **ஞானாகரணகம் ஞானம் ப்ரத்யக்ஷம்** (ஞானம் எதற்க்கு கருவியாக இல்லையோ அப்படிப்பட்ட ஞானம் பிரத்தியக்ஷம்) என்று வேறொரு லக்ஷணம் கூறுகின்றனர். ஆனால் அதிலும் முன்பு அனுபவம் செய்யபட்டதின் சம்ஸ்காரம் அழிந்துவிடுவதால் (இடம், காலம் முதலிய) ஸ்மிருதி காரணமாக இல்லாததால் அதில் அவ்வியாப்தி தோஷம் உண்டாகும்.

ஆனால் வேதாந்த்த்தில் சைத்தன்யம் மாத்திரம் பிரத்தியக்ஷ பிரமாவாக பிருஹதாரண்யக உபநிஷத்தில் கூறுப்பட்ட வாக்கியம் முதலானது பிரமாணமாக இருப்பதால், அதுவே அபரோக்ஷமாக அதாவது நேரடி அனுபவமாக இருப்பதால் அதுவே பிரத்தியக்ஷ பிரமாவாக ஆகிறது. இந்திரியங்களால் உண்டாகாத பிரமாவாக இல்லாததால் சாக்ஷாத் (நேரடியாக) என்ற விசேஷணம் கூறப்பட்டுள்ளது.

**ननु चैतन्यमनादि तत्कथं चक्षुरादेस्तत्करणत्वेन प्रमाणत्वमिति। उच्यते। चैतन्यस्यानादित्वेऽपि तदभिव्यञ्जकान्तःकरणवृत्तिरिन्द्रियसन्निकर्षादिना जायते इति वृत्तिविशिष्टं चैतन्यमादिमदित्युच्यते। ज्ञानवच्छेदकत्वाच्च वृत्तौ ज्ञानत्वोपचारः। तदुक्तं विवरणे अन्तःकरणवृत्तौ ज्ञानत्वोपचारात् इति॥**

ஆனால், சைத்தன்யம் அனாதி (முதலும், முடிவும் இல்லாதது) அது எப்படி கண்கள் முதலியவைகள் அதனுடைய கருவியாக பிரமாத்தன்மையை அடைகின்றது என்றால் கூறுகின்றோம். சைத்தன்யம் அனாதியாக இருந்தாலும் அதன் அனுபவம் அந்தக்கரணத்தின் விருத்திகளினால் உண்டாகின்றது. அது இந்திரியத்திற்க்கும் பொருளிற்க்கும் உண்டாகும் சேர்க்கையினால் உண்டாகின்றது. என்பதால் விருத்தியுடன் கூடிய சைத்தன்யம் உண்டாகுவது என்று கூறப்படுகின்றது. ஞானத்தினை பாகுபடுத்துவது என்பதாலும், அதில் ( விருத்தியில்) உபசாரத்திறக்காக ஞானத்தன்மை பார்க்கப்படுகின்றது. அது (**ஸ்ரீ பிரகாஷாத்மரின்**) விவரணத்தில் கூறப்பட்டுள்ளது. அந்தக்கரணத்தின் விருத்தியில் ஞானத்தன்மை உபசாரமானதால் என்று.

**ननु निरवयवस्यान्तःकरणस्य परिणामात्मिका वृत्तिःकथं इत्थम्। न तावदन्तःकरणं निरवयवं सादिद्रव्यत्वेन सावयवत्वात्। सादित्वं च तन्मनोऽसृजत इत्यादिश्रुतेः। वृत्तिरूपज्ञानस्य मनोधर्मत्वे च कामः सङ्कल्पो विचिकित्सा श्रद्धा अश्रद्धा धृतिरधृतिर्ह्रीर्धीर्भीरित्येतत्सर्वं मन एव इति श्रुतिर्मानम्। धीशब्देन वृत्तिरूपज्ञानाभिधानात् अत एव कामादेरपि मनोधर्मत्वम्॥**

ஆனால், அவயவங்களில்லாத !உறுப்பு) அந்தக்கரணத்தில் மாற்றங்கள் கூடிய விருத்தி எவ்வாறு உண்டாகும் என்றால் இப்படியே , அந்தக்கரணம் என்பது அவயவங்கள் இல்லாதது இல்லை, துவக்கம் உடைய திரவியத்தினால் உண்டானதால் அது அவயவமுள்ளதாகிறது. துவக்கம் உள்ள தன்மை **அது மனதை படைத்தது** போன்ற ஷ்ருதிகளால் தெரிகிறது. விருத்திகளான ஞானமும் மனதின் தர்மமானதாலும் **ஆசை , சங்கல்பம் , சந்தேகம், சிரத்தை, சிரத்தையின்மை,**

**நியாபகம், மறதி , வெட்கம், அறிவு, பயம் என்பது எல்லாம் மனமே** என்ற ஷ்ருதி பிரமாணம். **தீ** (அறிவு) என்பதால் விருத்திரூபமான ஞானம் குறிக்கப்படுகின்றது அதனால் ஆசை முதலியவைகளும் மனதின் தர்மமே.

**விளக்கம்**

அந்தக்கரணம் உறுப்பற்றது என்று எதிர்வாதி கண்டணம் செய்ய காரணம், உறுப்பற்ற (அவயவமற்ற) ஆகாயத்ததை போல அந்தக்கரணத்திலும் எந்த மாற்றமும் இருக்க வாய்ப்பு இல்லை என்று நிரூபிக்கவே அப்படி அதில் விருத்தியே இருக்க இயலாது என்று தீர்மானமாவதால் அந்தக்கரணத்தின் விருத்தியுடன் கூடிய சைத்தன்யம் ஞானம் என்று கூறுவது இயலாதாகிறது அதனால் ஆத்மாவுடன் வேறானது ஞானம் என்று நையாயிகர் சந்தேகிக்கின்றனர். வேதாந்தந்திலோ ஆத்மாவை விடுத்து அன்னியமான ஒன்றும் இல்லை என்பதே சிந்தாந்தமாகையால். ஞானம் ஆத்மாவிற்க்கு அன்னியமாக இருக்க இயலாது ஆரம்பம் இல்லாத காரணத்தையும் ஆத்மாவை தவிர வேறு எதிலும் ஒப்புக்கொள்வதில்லை என்பதாலும் **தந் மநோ அஸ்ருஜத** (அது மனதை உண்டாக்கியது) என்பது போன்ற வாக்கியத்தினால் அந்தக்கரணம் ஆரம்பம் உடையது என்பது நிச்சயமாகின்றது. இப்படியாக மனதின் ஆரம்பத்திற்க்கு பிரமாணம் கொடுத்து அதிலுள்ள மாற்றங்களை அனுமானம் செய்யாமல் அதற்கும் பிரமாணம் ஷ்ருதியே என்பதை **காம** முதலிய ஷ்ருதியால் நிரூபிக்கின்றார். ஞானத்தையும் புத்தி என்ற சொல்லினால் குறிப்பிட்டதால் மற்றவையும் மனதின் தர்மமே என்பது நிச்சயமாகின்றது.

**ननु कामादेरन्तःकरणधर्मत्वेऽहमिच्छाम्यहं जानाम्यहं बिभेमीत्याद्यनुभव आत्मधर्मत्वगाहमानः कथमुपपद्यते। उच्यते। अयःपिण्डस्य दग्धृत्वाभावेऽपि दग्धृत्वाशयवह्नितादात्म्याध्यासात् तथा अयो दहतीति व्यवहारस्तथा सुखाद्याकारपरिणाम्यन्तःकरणैक्याध्यासात् अहं सुखी दुःखीत्यादिव्यवहारः॥**

ஆனால், காமம் முதலியவை அந்தக்கரணத்தின் தர்மங்கள் என்றால், நான் ஆசைப்படுகிறேன், நான் அறிந்திருக்கிறேன், நான் பயப்படுகின்றேன் முதலிய

அனுபவங்கள் ஆத்மாவின் தர்மத்தைப்போல அறியப்படுகின்றது. எப்படி உண்டாகும் என்றால் கூறுகிறோம். இரும்புருண்டையில் சுடும் தன்மை இல்லாதிருந்தபோதிலும் சுடும் தன்மையுடைய நெருப்புடன் ஒன்றாக இருப்பதினால் உண்டாகும் தவறான எண்ணத்தினால் இரும்புருண்டை சுடுகிறது என்று நடைமுறையில் எப்படி கூறப்படுகின்றதோ அதுபோல இன்பம் முதலான தன்மைகளின் மாற்றத்தினை உடைய அந்தக்கரணத்திலும் ஆத்மாவை ஒன்றாக ஏற்றிபார்ப்பதினால் நான் இன்புற்றுள்ளேன், துன்புற்றுள்ளேன் முதலிய வியவகாரங்கள் உண்டாகின்றது.

## விளக்கம்

இரும்புருண்டையில் சுடும் தன்மை இல்லாமல் போனாலும் நெருப்புடன் உண்டான சேர்க்கையால் அதில் உண்டான சுடும் தன்மை முன்னிட்டு இரும்புருண்டை சுடுகின்றது போன்ற வியவகாரம் உண்டாவது போல் நான் துன்பப்படுகிறேன். நான் இன்பப்படுகிறேன் போன்றவை அறியாமையில் மூழ்கியிருக்கும் அஞ்ஞானிகளின் வியவகாரம் மாத்திரமே ஆகும் ஏனென்றால் ஆத்மாவில் இன்பம், துன்பம் போன்ற வியவகாரங்கள் ஏற்பது ஷ்ருதிக்கும், கற்றறிந்தவரின் அனுபவத்திற்க்கும் வேறுபாடானது . இப்படி ஒன்றின் தன்மையை மற்றொன்றில் ஏற்றிப்பார்ப்பதே **அத்யாசம்** எனப்டுகின்றது.

**नन्वन्तःकरणस्येन्द्रियरयाऽतीन्द्रियत्वात् कथमहमिति प्रत्यक्षविषयतेति। उच्यते। न तावदन्तःकरणमिन्द्रियमित्यत्र मानमस्ति। मनः षष्टानीन्द्रियाणि इति भगवद्गीतावचनं प्रमाणमिति चेत् न अनिन्द्रियेणाऽपि मनसा षड्त्वसङ्ख्यापूर्णाविरोधात्। नहीन्द्रियगतसंङ्ख्यापूरणमिन्द्रियेणैवेति नियमः यजमानपञ्चमा इडां भक्षयन्ति इत्यत्र ऋत्विग्गतपञ्चत्वसङ्ख्याया अनृत्विजाऽपि यजमानपूरणदर्शनात् वेदानध्यापयामास महाभारतपञ्चमान् इत्यत्र वेदगतपञ्चत्वसङ्ख्याया अवेदेनापि महाभारतेन पूरणदर्शनात्। इन्द्रियेभ्यः परा ह्यर्था अर्थेभ्यश्च परं मनः इत्यादिश्रुत्या मनसोऽनिन्द्रियत्वावगमाच्च। न चैवं मनसोऽनिन्द्रियत्वे सुखादिप्रत्यक्षस्य साक्षात्त्वं न स्यादिन्द्रियाजन्यत्वादिति वाच्यम्।**

न हीन्द्रियजन्यत्वेन ज्ञानस्य साक्षात्त्वम् अनुमित्यादेरपि मनोजन्यतया सक्षात्त्वापत्तेः ईश्वरज्ञानस्यानिन्द्रियजन्यस्य साक्षात्त्वानापत्तेश्च ॥

ஆனால் , அந்தக்கரணம் இந்திரியம் ஆனபடியால் அவை இந்திரியத்திற்க்கு அப்பாற்பட்டதாகையால் எப்படி நான் என்பது பிரத்தியக்ஷத்திற்க்கு விஷயமாகும் என்றால், கூறுகிறோம். அந்தக்கரணம் இந்திரியம் என்று கூற எந்த பிரமாணமும் இல்லை. **மனம் எதில் ஆறாவதான இந்திரியம்** என்று **பகவத்கீதை** வசனம் (வாக்கியம்) பிரமாணம் என்றால், இல்லை, இந்திரியமில்லாதபோதும் மனதினால் ஆறு என்ற எண்ணிக்கையை பூர்த்தி செய்யப்பட்டதால் எந்த விரோதமும் இல்லை. இந்திரியத்தினை குறிக்கும் எண்ணிக்கையை பூர்த்தி செய்ய ஒரு இந்திரியமே அவசியம் என்ற நியமம் ஒன்றுமில்லை, **யஜமானா ஐந்தாவது ரித்விக்காக இடாவை உண்பார்** எனும் இடத்தில் ரித்விக்கினை குறிக்கும் ஐந்து என்னும் எண்ணிக்கை ரித்விக் அல்லாத எஜமானரினால் பூர்த்தி செய்யப்படுவது பார்க்கப்படுவதால் **மஹாபாரதம் எதில் ஐந்தாவதோ அப்படியான வேதத்தை கற்ப்பித்தார்** எனுமிடத்தில் வேதத்தினை குறிக்கும் ஐந்து என்னும் எண்ணிக்கை வேதமல்லாத பாரதத்தினால் பூர்த்தி செய்யப்படுவது பார்க்கப்படுவதால்.

**இந்திரியத்தினை விட (சூக்ஷ்மமான) பொருள் உயர்ந்தது, பொருளை காட்டிலும் மனம் உயர்ந்தது** முதலிய ஷ்ருதியினாலும் மனம் இந்திரியமில்லை என்பது தெரிகின்றதாலும். ஆனால், மனம் இந்திரிமில்லாததினால் இன்பம், துன்பம் முதலியவைகளின் அனுபவம் ஆகாது, இந்திரியத்தினால் உண்டாகாததால் என்று கூறக்கூடாது. இந்திரியத்தினால் உண்டாவதாலே ஞானத்தின் அனுபவம் உண்டாவதில்லை, அனுமானத்திலும் மனதினால் உண்டாவதால் நேரடி அனுபவம் என்று ஆகிவிடும். ஈஷ்வர ஞானத்தில் இந்திரியத்தினால் உண்டாவதில்லை என்பதினால் அனுபவம் இல்லை என்றாகும்.

## விளக்கம்

மனம் இந்திரியம் என்று நிரூபிக்க ஷ்ருதியில் பிரமாணம் இல்லாவிட்டாலும் ஸ்மிருதியில் பிரமாணம் உண்டு என்று **ந தாவத்** என்று

ஆரம்பித்து பகவத் கீதை வசனத்தை பிரமாணித்தால், அது சரியல்ல எண்ணிக்கைக்காக இந்திரியமல்லாத மனதையும் இந்திரியமாக கொள்வதால், **யஜமான பஞ்சமா இடாம் பக்ஷயத்தி** போன்று. **இந்திரியானாம் மனஸ்சாஸ்மி** (இந்திரியங்களில் மனம் ஆகிறேன்) என்பது பிரமாணம் என்று கூறுதல் சரியாகாது ஏனென்றால் அங்கேயே **நக்ஷத்ராணாமஹம் ஷஷி** (நக்ஷத்திரங்களில் நான் சந்திரன்) என்று கூறியிருப்பது போல, சந்திரன் நக்ஷத்திர எண்ணிக்கையில் பிரமாணமாக இல்லாததால்.

சுகம், துக்கம் முதலியவைகளின் பிரத்தியக்ஷத்திற்க்கு காரணமாக இருப்பது மனம் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவதால் இல்லாவிட்டால் சுகம் முதலியவைகளின் பிரத்யக்ஷம் (அனுபவம்) உண்டாகாது ஆகையால் மனம் இந்திரியம் என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்றால் அது சரியல்ல, கூறப்பட்டதுபோல சுகம் முதலியவைகளின் அனுபவத்திற்க்கு பிரத்தியக்ஷ தன்மை தந்து மனதையும் இந்திரியமாக ஆக்கினால், அதனால் செய்யப்படும் அனுமானமும் பிரத்தியக்ஷம் ஆகிவிடும் அதனால் அனுமானம் முதலியவைகளை ஏற்க்க அவசியமில்லாமல் போகும். ஈஷ்வரருக்கு மூன்று காலங்களில் உள்ளதும் பிரத்தியக்ஷம் என்பதால் அங்கு ஞானத்தின் பிரத்தியக்ஷம் உண்டு ஆனால் இந்திரியத்தினால் உண்டாவதில்லை அதனால் ஈஷ்வரனின் ஞானத்தில் பிரத்தியக்ஷத்தின் லக்ஷணம் செல்லாது. இந்த காரணத்தால் மனம் இந்திரியம் இல்லை என்பது நிரூபணமாகின்றது.

**सिद्धान्ते प्रत्यक्षत्वप्रयोजकं किमिति चेत् किम् ज्ञानगतस्य प्रत्क्षत्वस्य प्रयोजकं पृच्छसि किं वा विषयगतस्य। आद्ये प्रमाणचैतन्यस्य विषयावच्छिन्नचैतन्याभेद् इति ब्रूमः। तथाहि त्रिविधं चैतन्यं प्रमातृचैतन्यं प्रामणचैतन्यं विषयचैतेन्यं चेति। तत्र घटाद्यवच्छिन्नं विषयचैतन्यं अन्तःकरणवृत्त्यवच्छिन्नं प्रमाणचैतन्यम् अन्तःकरणावच्छिन्नं चैतन्यं प्रमातृचैतन्यम्॥**

(அத்வைத ) சித்தாந்தத்தில் பிரத்தியக்ஷ தன்மையின் வியவாகாரத்திற்க்கு காரணம் என்ன என்றால், ஞானத்தில் பிரத்தியக்ஷதன்மை எதனால் உண்டாகிறது என்று கேட்கிறார்களா இல்லை விஷயத்தில் எதனால் உண்டாகிறது என்றா.

முதலாவதில் பிரமாண சைத்தன்யமும் விஷயம் கூடிய சைத்தன்யமும் பிரிவற்று இருப்பதே என்று கூறுவோம். அது எப்படியென்றால் – சைத்தன்யம் மூன்று விதம் **பிராமாத்ரு சைத்தன்யம்** (அறிபவர்), **பிரமாண சைத்தன்யம்** (அறியும் வகை), **விஷய சைத்தன்யம்** (அறிபடுபொருள்) என்று. அதில் பானை முதலியதுடன் கூடிய சைத்தன்யம் விஷய சைத்தன்யம், அந்தக்கரண விருத்தியுடன் கூடிய சைத்தன்யம் பிரமாண சைத்தன்யம், அந்தக்கரணத்துடன் கூடிய சைத்தன்யம் பிரமாத்ரு சைத்தன்யம்.

## விளக்கம்

இங்கு பானை என்ற அனுபவத்தில் பானை மட்டுமே பிரத்தியக்ஷம் ஆகின்றது, பானையை நான் அறிந்தேன் என்பதில் பானையும் பானை என்ற அறிவும் பிரத்தியக்ஷம் என்று ஏற்க்கப்படுகின்றது. இதில் ஞானத்தில் உண்டாகும் பிரத்தியக்ஷத்திற்க்கு காரணம் கேட்கப்படுகின்றதா இல்லை விஷயத்தினில் உண்டாவதற்க்கா என்று கேள்வி எழுப்பப்பட்டு ஞானத்திற்க்கு என்றால் எங்கும் பரந்து விரிந்து இருக்கும் பிரம்மமானது, பானை முதலிய விஷயத்திலும், அந்தக்கரணத்திலும் அதன் விருத்தியிலும் வியாபித்து இருப்பதால் அங்கும் பிரம்ம சைத்தன்யம் உள்ளது. இதில் பிரித்து காட்டும் தன்மையுடைய **உபாதிகள்** (வறையரைகள்) எடுத்துக்கொள்ளப்படாவிட்டால் பிரம்ம சைத்தன்யம் ஒன்றேயாகும். வியவாகாரத்தில் அவைகளின் தரத்தில் இருக்கும் பொழுது அது மூன்றாக பிரிக்கப்படுகின்றது. பானை முதலிய பொருட்களில் உள்ள சைத்தன்யம் விஷய சைத்தன்யம் என்றும், அந்தகரணத்தில் உள்ள சைத்தன்யம் பிராமாத்ரு சைத்தன்யம் என்றும் அதன் விருத்தியில் உள்ள சைத்தன்யம் என்றும் அதன் விருத்தியில் உள்ள சைத்தன்யம் பிரமாண சைத்தன்யம் என்றும் கூறப்படுகின்றது.
(விஷயம் – பொருள், பிராமாத்ரு – அறிபவர், பிரமாணம் – அறியும் வழி)

அந்தகரணத்தில் விருத்தி என்பது இல்லை எனும் போது அதில் உள்ள சைத்தன்யம் பிரமாண சைத்தன்யம் என்பது கூறுதல் முறையில்லை. என்று **பூர்வாக்ஷி** (எதிர்வாதி) கூறுகின்றனர். அந்தக்கரணம் அணுவின் அளவு உள்ளதால் அதில் விருத்தி உண்டாகாது.. அது மிகவும் பெரியது என்று கூறினால் மரணத்தின்போது போக்கும் வரவும் உண்டாகாது. சரி , மத்தியமான அளவு உடையது என்று கூறினால் அது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் செல்ல

தாமதம் ஆகும் அதனால் உடனே விஷயம் உள்ள இடத்திற்க்கு சென்று அதை விளக்க முடியாது என்று கூறினால், வேதாந்தத்தில் அந்தக்கரணம் அணு போன்ற அளவு உள்ளதாக ஏற்க்கப்படுவது இல்லை ஏனென்றால் அப்படி இருந்தால் தலையிலும் , காலிலும் ஒரே சமயத்தில் உண்டாகும் வலியை அது உணராது, காரியமானதால் அந்தக்கரணம் மிகவும் பெரியதாகவும் இருக்க முடியாது. இதனால் அந்தக்கரணத்தை மத்திய அளவு உடையதாக ஏற்பதே சரி. அதாவது சரீரம் எவ்வளவு பெரியதோ அதே அளவாக அது ஏற்க்கப்படுகின்றது. அதை உதாரணம் மூலம் விளக்குகின்றார்.

**तत्र यथा तडागोदकं छिद्रान्निर्गत्य कुल्यात्मना केदारान्प्रविश्य तद्वदेव चतुष्कोणाद्याकारं भवति तथा तैजसमन्तःकरणमपि चक्षुरादिद्वारा निर्गत्य घटादिविषयदेशं गत्वा घटादिविषयाकारेण परिणमते। स एव परिणामो वृत्तिरित्युच्यते। अनुमित्यादिस्थले तु अन्तःकरणस्य वह्न्यादिदेशगमनं वह्न्यादेश्चक्षुराद्यसन्निकर्षात्। तथा चायं ट इत्यादिप्रत्यक्षस्थले घटादेस्तदाकारवृत्तेश्च बहिरेकत्र देशे समवधानात्तदुभयावच्छिन्नं चैतन्यमेकमेव विभाजकयोरप्यन्तःकरणवृत्तिघटादिविषययोरेकदेशस्थत्वेन भेदाजनकत्वात्। अत एव मठान्तर्वर्तिघटावच्छिन्नाकाशान्न भिद्यते। तथा चायं ट इति टप्रत्यक्षस्तले घटाकारवृत्तेर्घटसंयोगितया घटावच्छिन्नचैतन्यस्य तद्वृत्त्यवच्छिन्न चैतन्यस्य चाभिन्नतया तत्र घटज्ञानस्य घटांशे प्रत्यक्षत्वम्।**

அங்கு, எப்படி ஓடை நீர் துவாரத்தின் வழியாக சென்று வரப்பு வழியாக பாத்தியை அடைந்து, அது போலவே சதுரம் முதலிய உருவத்தை அடைகிறது. அப்படியே தைஜசமான அந்தக்கரணமும் கண்கள் முதலானவை வழியாக சென்று பானை முதலிய விஷயம் உள்ள இடம் அடைந்து அதன் உருவத்தை அடைகின்றது. அந்த மாற்றமே விருத்தி எனப்படுகின்றது. அனுமானம் செய்யப்படும் இடத்திலோ அந்தக்கரணம் நெருப்பு முதலிய உள்ள இடத்தை அடைவதில்லை, நெருப்பு முதலியவுடன் கண்கள் முதலியவைகளுக்கு தொடர்பின்மையால் அதனால் இது பானை என்றதான பிரத்தியக்ஷம் நடக்கும் இடத்தில் பானை முதலிய விஷயம் மற்றும் பானை உருவ விருத்தி இரண்டும்

வெளியில் ஒரே இடத்தில் இருப்பதால் அவை இரண்டுடனும் கூடிய சைத்தன்யம் ஒன்றே ஆகும். பிரித்து காட்டும் அந்தக்கரணத்தினுடைய விருத்தியும் பானை முதலிய விஷயமும் ஒரே இடத்தில் இருக்கின்றபடியால் . அதனால் தான் அறையில் உள்ள பானை கூடிய ஆகாயம் அறையுடன் கூடிய ஆகாயமும் வேறுபடுவது கிடையாது. அதுபோல இது பானை என்ற பானையின் பிரத்தயக்ஷம் இடத்தில் பானையாகார விருத்தியும் பானையும் சேர்ந்திருப்பதால் பானை கூடிய சைத்தன்யமும் அதன் விருத்தி கூடிய சைத்தன்யமும் வேறு அல்லாததால் அங்கு பானை என்ற ஞானத்தில் பானை அம்ஸத்தில் பிரத்தியக்ஷ தன்மை.

**விளக்கம்**

அறையில் உள்ள ஆகாசமும், அதில் வைக்கப்பட்ட பானையில் ஆகாசமும் ஒன்றே ஆகும். பானையை அறையின் வெளியே வைத்தால் அவை வேறுவேறாகும். ஆனால் ஆகாயம் எல்லா இடத்திலும் ஒன்றேயாகும். பானை, அறை முதலிய பிரிவிகளினால் அவை வேறாக பார்க்கபடுகின்றது.

**सुखाद्यवच्छिन्नचैतन्यस्य तद्वृत्त्यवच्छिन्नचैतन्यस्य च नियमेनैकदेशस्थतोपाधिद्वयावच्छिन्नत्वात् नियमेनाहं सुखीत्यादिज्ञानस्य प्रत्यक्षत्वम् ।**

சுகத்துடன் கூடிய சைத்தன்யமும், அதன் விருத்தியுடன் கூடிய சைத்தன்யமும் ஒரே இடத்தில் இருக்ககூடிய இரண்டு பிரிவான படியான நான் சுகப்படுகிறேன் போன்ற ஞானம் பிரத்தியக்ஷமாக ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

**விளக்கம்**

பானை முதலியவை வெளியிலும், அந்தக்கரணமானது உள்ளேயும் உள்ளபடியால், பானை பரோக்ஷமாகவும் அதன் விருத்தியுடன் கூடிய பானை அபரோக்ஷமாகவும் அறியப்படுகின்றது. ஆனால், இன்பமும் அதன் விருத்தியும் ஒரே இடத்தில் (சரீரத்தின் உள்ளே) உண்டாகிறபடியால் நான் சுகமாக இருக்கிறேன் என்கிற அனுபவத்தில் சுகம் முதலியவை பிரத்தியக்ஷமாகவே ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**नन्वेवं स्ववृत्तिसुखादिस्मरणस्यापि सुखाद्यंशे प्रत्यक्षत्वापत्तिरिति चेन्न। तत्र स्मर्यमाणसुखस्यातीतत्वेन स्मृतिरूपान्तःकरणवृत्तेर्वर्तमानत्वेन तत्रोपाध्योर्भिन्नकालीनतया तत्तदवच्छिन्नचैतन्ययोर्भेदात्। उपाध्योरेकदेशस्थत्वे सत्येककालीनत्वस्यैवोपधेयाभेदप्रयोजकत्वात्॥**

ஆனால், அந்தகரணத்தில் உண்டாகும் சுகம் முதலியவையின் நினைவிலும், சுகம் முதலியவைகளின் அம்சத்திலும் பிரத்தியக்ஷம் ஆகும் வாய்ப்பிருக்கின்றது என்றால் இல்லை. அங்கு நினைக்கப்படும் சுகம் முதலியவை இறந்தகாலத்தினாலும், நினைவுடன் கூடிய அந்தக்கரணத்தின் விருத்தி நிகழ்காலத்தில் உள்ளதாலும் அவைகளின் இருப்பு வேறுவேறு காலத்தில் உள்ளதால், அவைகளுடன் கூடிய சைத்தன்யதிலும் வேறுபாடு இருக்கும். உபாதி (இருப்பு அல்லது அடைவு) ஒரே தேசத்திலும் ஒரே காலத்திலும் இருக்கவேண்டும். அப்பொழுதே அதனுடன் கூடிய சைத்தன்யம் வேறற்றதாக கருதப்படும்.

**<u>விளக்கம்</u>**

முன்பு ஒரே இடத்தில் உபாதி (அடைவு) இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. அப்படியென்றால் நான் முன்பு சுகமாக இருந்தேன் என்று முன்பு அடைந்த இன்பத்தை நினைக்கும் இடத்திலும் சுகம் பிரத்தியக்ஷமாக கொள்ளப்படவேண்டும் என்றால் உபாதி ஒரு இடத்தில் இருப்பது மட்டும் போதாது ஒரே சமயத்திலும் இருக்க வேண்டியதாக உள்ளதால் இங்கு அடையப்பட்ட சுகம் கடந்த காலமாகவும் அதன் நினைவு நிகழ்காலமாகவும் இருப்பதால் வேறாகிறது.

**यदि चैकदेशस्थत्वमात्रमुपधेयाभेदप्रयोजकं तदा अहं पूर्वं सुखीत्यादिस्मृतावतिव्याप्तिवारणाय वर्तमानत्वं विशयविशेषणं देयम्।**

ஒரே இடத்தில் மாத்திரம் உள்ள உபாதிகள் (வரைவு) வேறற்றதாக முடியும் என்று ஒப்புக்கொள்ளும் இடத்தில் <u>நான் முன்பு சுகமாக இருந்தேன்</u> என்ற இடத்தில்

அதிவியாப்தி தோஷம் உண்டாகும் அதனால் அதை விளக்க நிகழ்காலத்தில் என்ற விசேஷணத்தை தரவேண்டும்.

नन्वेवमपि स्वकीयधर्माधर्मौ वर्त्तमनौ यदा शब्दादिना ज्ञायेते तदा तादृशशाब्दज्ञानादावतिव्याप्तिः तत्र धर्माद्यवच्छिन्नतद्वृत्त्यवच्छिन्नचैतन्ययोरेकत्वादिति चेन्न। योग्यत्वस्यापि विषयविशेषणत्वात्। अन्तःकरणधर्मत्वाविशेषऽपि किञ्चिद्योग्यमित्यत्र फलबलकल्प्यः स्वभाव एव शरणम् अन्यथा न्यायमतेऽप्यात्मधर्मत्वाविशेषात् सुखादिवद्धर्मदेरपि प्रत्यक्षापत्तिर्दुर्वारा ॥

அப்படியானாலும் தன்னுடைய தர்மமும், அதர்மமும் நிகழ்காலத்தில் இருந்தாலும் எப்படி சொற்களினால் அறியப்படுகின்றதோ, அப்படிப்பட்ட சப்த ஞானத்தில் அதிவியாப்தி உண்டாகும். அங்கு தர்மம் முதலிய கூடிய, அதன் விருத்திகள் கூடிய சைத்தன்யம் ஒன்றானதால் என்றால் இல்லை,. யோக்யத்தன்மையும் லக்ஷணத்தில் விசேஷணமாக கூறப்படுவதால் . அந்தக்கரணத்தில் தர்மத்தினை (சுகம் முதலியதுபோல) பிரத்தியக்ஷ யோக்யமாக இல்லாத காரணத்தால் அங்கு பலனை கொண்டு காரணத்தை அறிகின்ற சுவபாவமே நமக்கு வழி, இல்லாவிட்டால் நியாய மதத்திலும் சுகம்- துக்கம் போல தர்மமும் ஆத்மாவின் குணமானதால் சுகம் முதலியதை போல தர்மமும் பிரத்தியக்ஷம் ஆவதை தடுக்கமுடியாது.

**விளக்கம்**

நீ தர்மமானவர் , அவர் தர்மமானவர் போன்ற சொற்களால் ஒருவருடைய தர்மமும், அதர்மமும் அறியப்படுகின்றது. அது ஒரே காலத்திலும், ஒரே இடத்திலும் இருப்பதாலும் பிரத்யக்ஷம் ஆகிவிடும் என்பதால் தர்மம் முதலியவைகளில் லக்ஷணம் அதிவியாப்தி தோஷத்தை அடைகிறது ஏனென்றால் சுகம் முதலியவை போன்று தர்மமும் அந்தக்கரணத்திலேயே இருக்கும் குணம் ஆகியதால் அதனால் இந்த தோஷத்தை நீக்க யோக்யத்தன்மை உடைய என்ற விசேஷணத்தை தருவதால் நீக்கிவிடலாம். சுகம் முதலியது போல தர்மமும் அந்தக்கரணத்தில் அறியப்பட்டாலும் வெளிப்படையாக அதனுடைய பிரத்யக்ஷம்

அறியப்படுவதில்லை. அதனால் அங்கு வெளிப்படையாக அறியப்படும் பலனை கொண்டே அதை அறியமுடியும் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நையாயிகர்களுடைய மதத்திலும் தர்மமானது சுகம், துக்கம் போன்று ஆத்மாவின் குணமாக ஒப்புக்கொள்ளபடுவதினால் அவை போன்ற தர்மத்தையும் பிரத்தியக்ஷமாக ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கும், அதை நீக்க முடியாது.

**न चैवमपि वर्त्तमानतादशयां त्वं सुखीत्यादिवाक्यजन्यज्ञानस्य प्रत्यक्षता स्यादिति वाच्यम्। इष्टत्वात्। दशमस्त्वमसि इत्यादौ सन्निकृष्टविषये शब्दादप्यपरोक्षज्ञानाभुपगमात्। अत एव पर्वतो वह्निमानित्यादिज्ञानमपि वह्न्यंशे परोक्षं पर्वतांशेऽपरोक्षम्। पर्वताद्यवच्छिन्नचैतन्यस्य बहिर्निःसृतान्तःकरणवृत्त्यवच्छिन्नचैतन्याभेदात्।**

ஆனாலும், நிகழ்காலத்தில் நீ இன்பமாக இருக்கிறாய் முதலிய வாக்கியத்தினால் உண்டான ஞானத்திலும் பிரத்தியக்ஷத்தை உண்டாகும் என்று கூறக்கூடாது. அது எங்களுக்கு விருப்பமானதால். பத்தவதாக நீ இருக்கிறாய் முதலிய நெருங்கிய விஷயத்தை கூறும் சொற்களினால் **அபரோக்ஷ** (பிரத்தியக்ஷ) ஞானத்தை ஏற்பதால். அதனால்தான் மலை நெருப்புடையது முதலிய ஞானத்திலும் நெருப்பு அம்சத்தில் பரோக்ஷம் , மலை அம்சத்தில் அபரோக்ஷம் , மலை கூடிய சைத்தன்யமும், வெளியில் சென்ற அந்தக்கரண விருத்தி கூடிய சைத்தன்யமும் வேறற்றதால். நெருப்பு அம்சத்திலோ அந்தக்கரண விருத்தி செல்ல முடியாததால், நெருப்பு கூடிய சைத்தன்யமும், பிரமாணம் கூடிய சைத்தன்யமும் வேறாகின்றது. அதனால் இந்த அனுபவம் மலையை பார்கிறேன் , நெருப்பை அனுமானம் செய்கிறேன் என்ற. நியாய மத்திலோ மலையை அனுமானம் செய்கிறேன் என்றே ஒப்புக்கொள்ளவேண்டும்.

## விளக்கம்

நீ தர்மமானவர் என்ற இடத்தில் எப்படி அந்த ஞானமானது பிரத்தியக்ஷமாக ஆகாதோ அப்படியே நீ இன்பமாக இருக்கிறாய் என்ற இடத்திலும் பிரத்தியக்ஷம் ஆகவேண்டும், தர்மம் யோக்யமான விஷயமாக இல்லாததால், அது பிரத்தியக்ஷம் ஆகாது என்று கூறிவிட்டதால், இங்கு பலனை

கொண்டு கற்பனை செய்யும் யுக்தியை சந்தேகித்தால் அது சரியல்ல, ஏனென்றால் வேதாந்திகளுக்கு நீ சுகமாக இருக்கிறாய் என்ற ஞானத்தினை பிரத்தியக்ஷமாக ஏற்கிறோம். தூரத்தில் உள்ள பொருட்களை பற்றிய சொல்லின் அறிவினால் உண்டாகும் இன்பம் பிரத்தியக்ஷமாக இல்லாவிட்டாலும், பிறிவில்லாத உள்ள விஷயத்தில் உண்டாகும் அறிவு பிரத்தியக்ஷமாக ஏற்க்கப்படுகின்றது. உதாரணத்திற்க்கு , தொலைந்த பத்தாவது நபர் தான் என்பதை உணராது (தன்னை எண்ணாமல் மற்றவரை எண்ணியதால்) உள்ள ஒருவரிடம் நீயே பத்தாவதானவர் என்று கூறினால் அந்த அறிவினால் , சப்தத்தினால் உண்டானாதானலும், பிரத்தியக்ஷமாக அது ஏற்க்கப்படுவதால், சப்தமும் அபரோக்ஷ ஞானத்தை தர வல்லது. அதனால்தான் வேதாந்திகள் மலை நெருப்பினை உடையது என்ற ஞானத்திலும், மலை விஷயத்தில் பிரத்தியக்ஷமாகவும், நெருப்பு விஷயத்தில் பரோக்ஷமாகவும் ஏற்கின்றோம். ஏனென்றால் மலை கூடிய சைத்தன்யமும், வெளியில் சென்ற அந்தக்கரண விருத்தி கூடிய சைத்தன்யமும் ஒன்றாகவே இருப்பதால் மலையை பார்க்கிறேன் என்று அனுபவம் உண்டாகின்றது.

**वह्न्यंशे त्वन्तःकरणवृत्तिनिर्गमनासम्भवेन वह्न्यवच्छिन्नचैतन्यस्य प्रमाणचैतन्यस्य च परस्परं भेदात्। तथा चानुभवः पर्वतं पश्यामि वह्निमनुमिनोमीति। न्यायमते तु पर्वतमनुमिनोमीत्यनुव्यवसायापत्तिः॥**

நெருப்பினை நேரடியாக காண இயலாததால் அந்தக்கரண விருத்தியானது நெருப்பு கூடியதாக இருப்பதினால் அதனால் நெருப்பு கூடிய சைத்தன்யம் விருத்தி கூடிய சைத்தன்யத்துடன் வேறாகவே இருக்கிறது. இப்படி இரண்டும் வேறாக இருக்கும் காரணத்தினால் நெருப்பினை அனுமானம் செய்கிறேன் என்ற அனுபவம் உண்டாகின்றது. ஆனால் நையாயிகர்களின் மதத்தில் மலைக்கும் நெருப்புக்கும் உள்ள சம்பந்தம் தெரியாததால் மலையையும் அனுமானம் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள், கண்களால் பார்க்கமுடிந்தும் கூட.

असन्निकृष्टपक्षकानुमितौ तु सर्वांशेऽपि ज्ञानं परोक्षम्। सुरभिचन्दनमित्यादिज्ञानमपि चन्दनखण्डाऽशे अपरोक्षं सौरभांशे तु परोक्षं सौरभ्यस्य चक्षुरिन्द्रियायोग्यतया योग्यत्वटितस्य निरुक्तलक्षणस्याभावात्॥

பக்ஷமானது அருகில் இல்லாதபோது செய்யப்படும் அனுமானத்தில் எல்லா வகைகளிலும் ஞானம் பரோக்ஷமாகவே இருக்கின்றது. அதுபோல, நறுமணம்மிக்க சந்தனம் என்ற இடத்திலும் கூட சந்தன கட்டையில் பிரத்தியக்ஷமாகவும் மனம் அம்சத்தில் பரோக்ஷமாகவுமே அறியப்படுகின்றது. மனம் கண்களால் பார்க்கப்படக்கூடிய யோகிதை இல்லாததால், யோகியதன்மை கூடியதாக பிரத்தியக்ஷ லக்ஷணத்தினில் கூறப்பட்டதால.

**விளக்கம்**

· மலை நெருப்புடன் கூடியது என்ற அனுமானத்தில் பக்ஷமான மலை கண்களால் பார்க்கப்படுவதால் அதை **சன்னிகிருஷ்ட** (அருகில் உள்ள) பக்ஷம் என்று கூறுகிறோம். அதுபோலவே மண்ணின் பரமானு வாசனையுடையது என்று கூறும் அனுமானத்தில் வாசனையுடையது மண் என்ற நையாயிகர்களின் கோட்பாட்டின்படி (லக்ஷணம்) அதன் பரமானுவும் வாசனையுடையதாக இருக்கவேண்டும் என்று அனுமானம் செய்தால் அதில் பக்ஷமான மண்ணின் பரமானு கண்களால் காணப்படமுடியாததால் , இது **அசன்னிகிருஷ்ட** (அருகில் அல்லாத) அனுமானம் என்ற வகையை சேருகிறது. இந்த இடத்தில் மண்ணின் பரமானு, அதன் வாசனை , அவைகளின் சம்பந்தம் எதுவுமே கண்களுக்கு புலப்படாததால் எல்லா வகையிலும் இந்த அனுமானம் பரோக்ஷமாகவே இருக்கிறது. ஆனால், வாசனையுள்ள சந்தனம் என்ற இடத்தில் சந்தனக்கட்டை கண்களால் பார்க்கப்படகூடியதாக இருப்பதால் அந்த இடத்தில் பிரத்தியக்ஷமாகவும் அதன் வாசனை கண்களால் காணப்படக்கூடிய யோக்கியம் இல்லாததால் அது பரோக்ஷமாகவும் கொள்ளப்படுகின்றது. காரணம், யோகியத்தன்மையுடன் கூடியதாக பிரத்தியக்ஷத்தின் லக்ஷணம் கூறப்பட்டதால்.

**न चैवमेकत्र ज्ञाने परोक्षत्वापरोक्षत्वयोरभ्युपगमे तयोर्जातित्वं न स्यादिति वाच्यम्। इष्टत्वात्। जातित्वोपाधित्वपरिभाषायाः सकलप्रमाणागोचरतया अप्रामाणिकत्वात्। घटोऽयमित्यादि प्रत्यक्षं हि घटत्वादिसद्भावे मानं न तु तस्य जातित्वेऽपि। जातित्वरूपसाध्याप्रसिद्धौ तत्साधकानुमानस्याप्यनवकाशात्।**

ஆனால், ஒரே இடத்தில் ஞானம் பரோக்ஷமாகவும் அபரோக்ஷமாகவும் ஏற்றால் அதனுடைய ஜாதி தன்மை உண்டாகாது என்று கூறவேண்டாம், அது எங்களுக்கு சம்மதமானதால், ஜாதி மற்றும் உபாதி (வரையறை) இவைகளின் பரிபாஷைகள் எல்லாவற்றாலும் ஏற்க்கப்படாததால், இது பானை என்ற பிரத்தியக்ஷம் பானையின் இருத்தலுக்கு பிரமாணமாக உள்ளது. அதனுடைய ஜாதிக்கும் இல்லை. ஜாதி என்பதே இல்லாத நிலையில் அதை நிரூபிக்கும் பிராமாணமும் இருப்பதற்க்கு வாய்ப்பில்லாமல் ஆகிறது.

**விளக்கம்**

இப்படி ஒரே இடத்தில் பிரத்தியக்ஷமாகவும் பரோக்ஷமாகவும் ஏற்பதால் அதனுடைய ஜாதியானது உண்டாகாது. ஜாதி என்பது நையாயிகர்களின் வகை அல்லது தன்மை ஆகும். பானையில் பானைத்தன்மை அதன் ஜாதி. அதுபோல இங்கு ஜாதி உண்டாகாது என்றால், வேதாந்தியான நமக்கு அது சம்மதமே. ஏனென்றால் , இந்த ஜாதியானதிற்க்கும் (தன்மை) உபாதியானதிற்க்கும் (வரையறை) கூறப்பட பரிபாஷை எல்லோராலும் ஏற்க்கப்படாததால் பிரமாணமில்லாமல் போகிறது. அதுவுமில்லாமல், இது பானை என்ற பிரத்தியக்ஷத்தில் பானையின் இருப்பு மாத்திரத்திற்க்கு பிரமாணம் என்று ஏற்க்கப்படுகின்றது. அதனுடைய ஜாதியின் இருப்பை நிரூபிப்பது பிரத்தியக்ஷ பிராமாணத்தினால் இயலாதபடியால், ஜாதி என்பதே இல்லாத காரணத்தினால், அனுமானம் முதலிய பிராமாணங்களாலும் நிரூபிக்க முடியாததாகின்றது.

**समवायासिद्ध्या ब्रह्मभिन्ननिखिलप्रपञ्चस्यानित्यतया च नित्यत्वसमवेतत्वटितजातित्वस्य टत्वादावसिद्धेश्च। एवमेवोपाधित्वमपि निरसनीयम्।**

சமவாய (சம்பந்தம்) நிரூபிக்க முடியாததாகிறதாலும், பிரம்மத்தை தவிர ஏனைய பிரபஞ்சம் முழுவதும் அநித்தியமானதாலும், நித்தியமும், சமவாயமும் கூடிய ஜாதியின் லக்ஷணத்தில் பானை முதலியது பிரமாணமில்லாது போகிறது. இதுபோலவே உபாதியையும் நிராகரிக்கவேண்டும்.

**விளக்கம்**

ஜாதியின் லக்ஷணத்தை கூறும்போது **நித்யவே ஸதி அநேகஸமவேதத்வம் ஜாதித்வம்** (நித்தியமானதாக இருந்தபோது பலவற்றில் சமவாய சம்பந்தத்துடன் இருப்பது ஜாதி) என்று நையாயிகர்களால் ஏற்க்கப்படுகின்றது. சமவாய சம்பந்தமோ நிரூபிக்கப்படமுடியாதது. சமவாயம் என்பது நையாயிகர்களின் சித்தாந்தபடி குணத்திலும் அதை உடைய குணியிலும், ஜாதியிலும் வியக்தியிலும், அவயவத்திலும் - அதையுடைய அவையவியிலும் , நித்திய திரவியங்களிலும், விசேஷம் முதலியவைகளில் உள்ளது. உதாரணத்திற்க்கு **ரூபி கட** (பானை உருவமுள்ளது) என்னும் இடத்தில் பானைக்கும் அதன் உருவத்திற்க்கும் உள்ள சம்பந்தத்தினை சமவாயம் என்கின்றனர். அப்படியானால், பானையும் சமவாயமும், சமவாயமும் பானை ரூபமும் என்ன சம்பந்தத்துடன் இருக்கும் என்று கேட்டால் அதற்க்கு ஒரு சம்பந்தத்தை கற்பனை செய்தால் நிலையில்லாமல் போகும் அநவஸ்தா தோஷம் உண்டாகும் இப்படியானதால் சமவாயமே இங்கு பார்க்கமுடியாததாகவும், நிரூபிக்கமுடியாததாகவும் இருக்கின்றபடியாலும், வேதாந்த சித்தாந்தத்தில் பிரம்மத்திற்க்கு அன்னியமாக ஒன்றும் இல்லாததாலும் அதனால், பிரபஞ்சம் அநித்தியமானதினாலும், நித்தியமும் சமவாய சம்பந்தமும் உடைய ஜாதியின் லக்ஷனை இங்கு ஏற்கமுடியாததாகின்றது. இதுபோலவே உபாதியினையும் நிராகரிக்கிறோம்.

**पर्वतो वह्निमानित्यादौ च पर्वतांशे वह्न्यंशे चान्तःकरणवृत्तिभेदाङ्गीकारेण तत्तद्वृत्त्यवच्छेदकभेदेन परक्षापरोक्षत्वयोरेकत्र चैतन्ये वृत्तौ न विरोधः। तथा च**

**तत्तदिन्द्रिययोग्यवर्तमानविषयावच्छिन्नचैतन्याभिन्नत्वं तत्तदाकारवृत्त्यवच्छिन्नज्ञानस्य तत्तदंशे प्रत्यक्षत्वम्।**

மலை நெருப்புடையது முதலியவைகளில் மலையிலும் நெருப்பிலும் அந்தக்கரணத்தின் வேற்றுமையை ஒப்புக்கொள்வதால், அதனதன் விருத்தியினால் வரையறுக்கப்பட்ட வேற்றுமையினால் (பிரிவினால்) பரோக்ஷமும் அபரோக்ஷமும் ஒரே சைத்தன்யத்தில் இருப்பதில் எந்த விரோதமுமில்லை. இதனால், அந்தந்த இந்திரியங்களின் யோகியத்தன்மை கூடிய நிகழ்காலத்தில் உள்ள விஷயம் கூடிய சைத்தன்யத்தின் ஞானத்திற்க்கு அந்தந்த நிலையில் பிரத்தியக்ஷம்.

**घटादेर्विशयस्य प्रत्यक्षत्वं तु प्रमात्रभिन्नत्वम्। ननु कथं घटादेरन्तःकरणावच्छिन्नचैतन्याभेदः अहमिमं पश्यामि इति भेदानुभवविरोधादिति चेत्। उच्यते। प्रमात्रभेदो नाम न तदैक्यम् किन्तु प्रमातृसत्ताऽतिरिक्तसत्ताकत्वाभावः। तथा च घटादेः स्वावच्छिन्नचैतन्येऽध्यस्ततया विषयचैतन्यसत्तैव घटादिसत्ता अधिष्ठानसत्तऽतिरिक्ताया आरोपितसत्ताया अनङ्गीकारात्। विषयचैतन्यं च पूर्वोक्तप्रकारेण प्रमातृचैतन्यमेवेति प्रमातृचैतन्यस्यैव घटाद्यधिष्टानतया प्रमातृसत्तैव घटादिसत्ता नान्येति सिद्धं घटादेरपरोक्षत्वम्।**

பானை முதலிய விஷயத்திற்க்கு பிரமாதாவினுடன் உள்ள பிரிவற்றதன்மையே பிரத்தியக்ஷம், ஆனால், எப்படி பானை முதலியவைகளுக்கும், அந்தக்கரணம் கூடிய சைத்தன்யத்திற்ககும், பிரிவற்ற நிலை நான் இதை பார்க்கிறேன் என்ற பிரிவுள்ள அனுபவத்திற்க்கு எதிரானதால் என்றால். கூறகிறோம். பிரமாத்ருவின் பிரிவற்றதன்மை என்றால் அதன் (ஐக்கியம்) சேர்க்கை இல்லை ஆனால் பிராமாத்ருவை தவிர வேறு ஒரு இருப்பின் இல்லாமை. அதனால்தான் பானை முதலியவை தன்னுடைய ஆத்மா கூடிய சைத்தன்யத்தில் நிலைபெற்றிருப்பதால் விஷய சைத்தன்யத்தின் இருப்பே பானை முதலியவைகளின் இருப்பு, அதிஷ்டானத்தினை தவிர வேறு இருப்பு

ஏற்க்ப்படாததால். விஷய சைத்தன்யமும் முன் கூறிய வகையில் பிராமாத்ரு சைத்தன்யமே என்பதால் பிரமாத்ரு சைத்தன்யத்தினுடையதே பானை முதலியவையின் அதிஷ்டானமாகாததால், பிரமாத்ருவின் இருப்பே பானை முதலியவைகளின் இருப்பு வேறு ஒன்றில்லை என்று பானை முதலியவைகளின் அபரோக்ஷம் நிரூபணமாகிறது.

## விளக்கம்

முன்பு , ஞானத்தினுடையதா இல்லை விஷயத்தினுடைய பிரத்யக்ஷமா என்று கேள்வி இரு பிரிவாக கேட்கப்பட்டது அதில் விஷயத்தினுடைய பிரத்தியக்ஷத்தில் உண்டான சந்தேகத்திற்க்கு, விஷயம் பிரமாத்தாவினுடன் உண்டாகும் பிரிவற்றதன்மையே என்று விளக்கம் கூறப்பட்டது. அப்படியென்றால், பிரதமாத்தாவுடன் பானைக்கோ அதனுடன் கூடிய சைத்தன்யத்துடனோ உள்ள பிரிவற்ற நிலை என்று உண்டானால் நான் பானையை பார்க்கிறேன் என்ற அனுபவத்தில் அது உண்டாகாததால் எப்படி முடியும் என்று கேள்வி எழும்புகின்றது. அதற்க்கு விளக்கம் வேதாந்தத்தில் பிரமாதாவுடன் விஷயத்தின் பிரிவற்றதன்மை என்று கூறினால் அவைகளின் சேர்க்கை இல்லை, பிரமாதாவினை தவிர வேறு ஒரு இருப்பை நாம் ஏற்காததால், அவை முழுவதும் கற்பனை செய்யப்பட்டது என்று ஆனதால், பிரமாதாவினை தவிர வேறு இருப்பின்மையே பிரிவிற்றதன்மை என்று ஆகின்றது. பானை கூடிய சைத்தன்யத்தில் பானையானது கற்பனை செய்யப்பட்டதாக ஆகிறது. கற்பனை செய்ப்பட்டது எதில் கற்பனை செய்யப்பட்டதாக ஆகிறது. கற்பனை செய்யப்பட்டது எதில் கற்பனை செய்யப்பட்டதோ அதனைவிட வேறு தனி இருப்பு ஒருவருக்கும் (எந்த சித்தாந்திகளுக்கும்) சம்மதமில்லை.

பானையை பார்ப்பதற்க்கு கண் மூலமாக அந்தக்கரணத்தின் விருத்தி புறப்பட்டு அந்த பானை உள்ள இடத்தினை அடைந்து அதன் உருவத்தையே அடைகின்றது அதனால் அந்த நேரத்தில் பானை கூடிய சைத்தன்யமும் பிரமாதாவின் சைத்தன்யமும் வேறற்றதாக ஆகின்றது. பிரமாத்ரூ சைத்தன்யத்ததையும், பானை முதலிய விஷயத்தின் சைத்தன்யத்தையும் பிரிப்பது பானையும், அந்தக்கரணமும் ஆனதாலும், அவை வெவ்வேறு இடத்தில் இருப்பதாலும் பிரிவு உண்டானது. இப்பொழுது இரண்டும் (கூடிய சைத்தன்யமாக)

பிரிவற்ற தன்மையை அடைந்ததால் (ஒரே இடத்தில் நிலைபெற்றதால்) பானை முதலிய விஷயம் அபரோக்ஷமாகின்றது. அதாவது பிரமாத்ரு சைத்தன்யத்தை தவிர வேறு இருப்பு இல்லை என்ற நிலையில் பானை முதலியவைகளின் அபரோக்ஷம் நிரூபணமாகின்றது.

**अनुमित्यादिस्थले त्वन्तःकरणस्य वह्न्यादिदेशनिर्गमनाभावेन वह्न्यवच्छिन्नचैतन्यस्य प्रमातृचैतन्यानात्मकतया वह्न्यादिसत्ता प्रमतृसत्तातो भिन्नेति नातिव्याप्तिः ।**

ஆனால் அனுமானம் செய்யப்படும் இடத்தில் அந்தக்கரணம் நெருப்பு முதலியவைகளின் இடத்தை அடைவதில்லாததால், நெருப்பு கூடிய சைத்தன்யமும் பிரமாத்ரு கூடிய சைத்தன்யத்துடன் பிரிவற்ற தன்மை இல்லாததால், நெருப்பு முதலியவைகளின் இருப்பு பிரமாதாவினை விட வேறாகிறதால் இங்கு அதிவியாப்தி இல்லை.

**விளக்கம்**

நெருப்பு முதலான வெளிவிஷயங்களில் செய்யப்படும் அனுமானத்தினில் விஷயம் வெளியிலும் அந்த விஷயாகார விருத்தி உள்ளேயும் இருக்கின்றது. அதனால் விஷய சைத்தன்யத்திற்க்கும் பிரமாத்ரு சைத்தன்யத்திற்க்கும் பிரிவற்றதன்மை உண்டாவதில்லை. ஆகையால் கூறப்பட்ட லக்ஷணம் அனுமான ஞானத்தில் அதிவியாப்தி ஆவதில்லை.

**नन्वेवमपि धर्माधर्मादिगोचरानुमित्यादिस्थले धर्माधर्मयोः प्रत्यक्षत्वापत्तिः धर्माधर्मद्यवच्छिन्नचैतन्यस्य प्रमातृचैतन्याभिन्नतया धर्मादिसत्तायाः प्रमातृसत्तानतिरेकादिति चेत् । न । योग्यत्वस्यापि विषयविशेषणत्वात् ।**

இப்படியானாலும், தர்மம் – அதர்மம் முதலிய விஷயங்களின் அனுமானம் எங்கு செய்யப்படுகின்றதோ அங்கு அந்த தர்மம் – அதர்மத்தில் பிரத்தியக்ஷம்

உண்டாகின்றது. ஏனென்றால் தர்மம் முதலிய கூடிய சைத்தன்யம் பிராமாத்ரு கூடிய சைத்தன்யத்தோடு பிரிவற்று இருப்பதினால், தர்மம் முதலியவை பிரமாதாவின் இருப்பிலிருந்து வேறற்றதாக ஆகின்றது என்றால், இல்லை. யோகியதன்மையையும் அங்கு விசேஷனமாக (சிறப்பு) குறிப்பிடபட்டிருப்பதால்.

**விளக்கம்**

நான் தர்மவான், நான் அதர்மி என்று தர்மம் – அதர்மம் முதலியவற்றின் அனுமானம் செய்யப்படும் இடத்தில் பிரத்தியக்ஷ லக்ஷணத்தில் அதிவியாப்தி ஆகும் ஏனென்றால் அங்கு அனுமானத்திற்க்கு விஷயமாகின்ற தர்மம் முதலியவை உடம்பிற்க்கு உள்ளே இருப்பதினால் முன்பு கூறியபடி வேறு இடத்தில் இல்லாததால் அது பிராமாத்ரூ சைத்தன்யத்தோடு பிரிவற்றதாக ஆகின்றது என்றால் அது சரியல்ல, காரணம், லக்ஷணத்தில் பிரத்யக்ஷயோக்யத்வம் என்பது விசேஷணமாக தரப்பட்டதால், தர்மம் முதலியவை விஷயமாக பிரத்யக்ஷமாகும் யோக்கியத்தன்மையில்லாததானதால் இங்கு அதன் அனுமிதியில் பிரத்யக்ஷத்தின் லக்ஷணமானது அதிவியாப்தி உண்டாவது இயலாது.

**नन्वेवमपि रूपी इति प्रत्यक्षस्थले घटगतपरिमाणादेः प्रत्यक्षत्वापत्तिः रूपावच्छिन्नस्य परिमाणाद्यवच्छिन्नचैतन्यस्यापि पर्मात्रभिन्नतया परिमाणादिसत्तयाः प्रमातृसत्तातिरिक्तत्वाभावादिति चेत्। न। तत्तदाकारवृत्त्युपहितत्वस्यापि प्रमातृविशेषणत्वात्। रूपाकारवृत्तिदशायां परिमाणाद्याकारवृत्त्यभावेन परिमाणाद्याकारवृत्त्युपहितप्रमातृचैतन्याभिन्नसत्ताकत्वाभावेनातिव्याप्त्यभावात्।**

ஆனால், இவ்வாறு கூறினாலும் **ரூபி கட** (பானை ரூபமுடையது) என்பது முதலான பிரத்யக்ஷத்தில் பானையில் இருக்கும் அளவு (பரிமாணம்) முதலியவற்றில் பிரத்யக்ஷமானது ஏற்படவேண்டும். ஏனென்றால், பானையின் ரூபம் கூடியதான சைத்தன்யமும் பரிமாணம் கூடிய சைத்தன்யமும் ஒன்றாவதால் ரூபம் கூடியதான சைத்தன்யம் . பிராம்த்ரு சைத்தன்யத்தோடு வேறற்றதாக எவ்வாறு இருக்கின்றதோ அவ்வாறே பரிமாணம் கூடிய சைத்தன்யமானது பிராமாத்ரு சைத்தன்யத்தோடு வேறற்றதாக உள்ளது. ஆதலால் பரிமாணம்

முதலியவற்றின் இருத்தலானது பிராமாத்ருவின் இருத்தலோடு வேறற்றதாக ஆகும் என்று சந்தேகித்தால், அது தவறு, **தத்ததாகாரவிருத்தி உபஹிதம்** (அத்தோடு விஷயத்தின் ஆகாரமான விருத்தி கூடியதான) என்று பிரமாத்ருவில் விசேஷணம் தரப்பட்டதால். ரூபாகாராவிருத்தி உண்டாகும் நிலையில் பரிமாணம் முதலிய விருத்திகளானது இருத்தல் இன்மையானதால், அப்படிப்பட்ட பரிமாணம் முதலிய விருத்தியானது கூடியதான பிரமாத்ரு சைத்தன்யத்துடன் பரிமாணம் முதலியவைகள் வேறற்றதானதால் அதிவியாப்தி தோஷமானது உண்டாக இயலாது.

## விளக்கம்

**ரூபி கட** (பானை ரூபமுடையது) என்னுமிடத்தில் பானை, ரூபம் மற்றும் அவையின் சம்பந்தமானது பிரத்யக்ஷம் என்று ஏற்கப்படுவதால், ரூபாகாரமான விருத்தியானது அந்த பானையில் உள்ள ரூபத்தினை கண்டபின் உண்டாகின்றது . அந்த நிலையில் ரூபம் கூடிய சைத்தன்யமும், பிரமாத்ரு சைத்தன்யமும் வேறற்றதாக ஆவதால் , ரூபத்தின் பிரத்யக்ஷமானது உண்டாகின்றது. இப்படியே அடுத்த நிலையிலும், எப்படி ரூபம் பானையின் தர்மமோ அப்படியே அதன் பரிமாணம் முதலியவைகளும். அதனால் ரூபம் கூடியதும் பரிமாணம் முதலியவை கூடியதுமான சைத்தன்யமானது ஒன்றேயாகின்றது. இதனால், **ரூபி கட** (பானை ரூபமுடையது) என்று பிரத்யக்ஷமானது உண்டாகும் போதே அங்கு பரிமாணம் முதலியவையும் வேறற்றதாக இருப்பதால் பிரமாத்ரு சைத்தன்யத்துடன் வேறற்றதாக ஆகும் என்பதால் விஷயமானது யோக்கியத்தன்மையுடையதானதாலும் பரிமாணம் முதலியவையும் அப்போது பிரத்யக்ஷம் ஆகவேண்டும் என்று கேட்டால், (பூர்வபக்ஷியின் சந்தேகம்), அதற்க்கு பதில், முதலில் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும், அதாவது, எந்த நிலையில் எதனை அந்தக்கரணாகாரமான விருத்தியாக அடைகின்றோமோ அந்நேரத்தில் அந்தக்கரணமானது அந்த ஆகாரத்தின் சைத்தன்யம் கூடியது என்று ஏற்க்கப்படுவதால், ரூபாகாரமானது உண்டாகும் போது (விருத்தியாக) ரூபாகாரவிருத்தி கூடிய சைத்தன்யமும், பரிமாணாகார விருத்தி உண்டாகும் போது பரிமாணாகார விருத்தி கூடியதான சைத்தன்யமும் பிராமாதாவுடன் வேறற்றதாக இருப்பதால் முறையே ரூபமும், பரிமாணமும் பிரத்யக்ஷம் ஆகின்றது என்பதால் அந்தந்த ஆகாரமாக உள்ள விருத்தியானது கூடியதான சைத்தன்யமே

பிரத்யக்ஷமாகும் மற்றைய விஷயங்கள் அல்ல என்பது தெளிவாகின்றது. அதனால், அந்தந்த ஆகாரவிருத்தி கூடிய (தத்ததாகார விருத்தி உபஹித) என்னும் விசேஷணம் கூறப்படுகின்றது லக்ஷணத்தில்.

**नन्वेवं वृत्तावव्याप्तिः अनवस्थाभिया वृत्तिगोचरवृत्त्यनङ्गीकारेण तत्र स्वाकारवृत्त्युपहितत्वघटितोक्तलक्षणाभावादिति चेत्। न। अनवस्थाभिया वृत्तेर्वृत्त्यन्तराविषयत्वेऽपि स्वविषयत्वाभ्युपगमेन स्वविषयवृत्त्युपहितप्रमातृचैतन्याभिन्नसत्ताकत्वस्य तत्रापि भावात्। एवं चान्तःकरणतद्धर्मादीनां केवलसाक्षिविषयत्वेऽपि तत्तदाकारवृत्त्यभ्युपगमेन उक्तलक्षणस्य तत्रापि सत्त्वान्नाव्याप्तिः।**

ஆனால், இப்படியும் விருத்தியில் அதிவியாப்தியானது நீக்கப்பட முடியாதாகின்றது, அநவஸ்தா தோஷத்தின் பயத்தால் , விருத்தியினை அறியும் வேறு விருத்தியானது ஏற்க்கப்படாததால், விருத்தியினை பிரத்யக்ஷம் செய்யும் போது, விருத்தியாகாரமான விருத்தி கூடியதானதாக லக்ஷணம் கூறப்படாததால் என்றால் அநவஸ்தா பயத்தால் விருத்தியினை வேறு விருத்திகொண்டு அறிவது ஏற்க்கப்படாவிட்டாலும் தன்னை தானே அறிய (விருத்தி) முடியும் என்பது ஏற்க்கப்பட்டதால் , தன்னைதானே விஷயமாக்கும் விருத்தி கூடியதான பிரமாத்ரு சைத்தன்யமானது வேறற்றதாக இருப்பது ஏற்க்கப்படுவதால், அங்கும் அது இருப்பதால். அந்தக்கரணம் மற்றும் அதன் தர்மங்களானது சாக்ஷியால் மட்டுமே அறியப்படுவதாக இருந்தாலும் அந்தந்த ஆகாரமான விருத்தி ஏற்கப்படுவதால் கூறப்பட்ட லக்ஷணமானது அந்த நிலையிலும் உள்ளதால் அங்கும் அவ்வியாப்தி உண்டாகாது.

## விளக்கம்

விருத்தியில் கூறப்பட்ட லக்ஷணமானது அதிவியாப்தி உண்டாகும் ஏனென்றால், விருத்தியானது தன்னைத்தானே அறியும் என்பதற்க்கு எந்த பிரமாணமும் இல்லாததாலும், இதனால் வேறு விருத்தியினால் அறியப்படுவது

என்று ஏற்றால் அதனை அறிய மற்றொன்று என்று அநவஸ்தா தோஷமானது உண்டாகும் என்பதாலும், இந்த லக்ஷணத்திலும் **ஸ்வாகார விருத்தி உபஹித** ( தன்னுடைய (விருத்தி) ஆகாரமான விருத்தி கூடிய) என்று கூறப்படாததாலும். அதனால் விருத்தியினை பிரத்யக்ஷம் செய்யும் விருத்தியனை ஏற்க்கமுடியாததாகும் நிலையில், விருத்தியானது பிரத்யக்ஷம் ஆகமுடியாது என்பதாலும், ஆனால், விருத்தியானது பிரத்யக்ஷம் ஆவதாக இருப்பதால் அப்படிப்பட்ட பிரத்யக்ஷத்தினை லக்ஷணமான குறிக்காததால் அவ்வியாப்தி தோஷமானது உண்டாகும் என்று கூறினால், நீங்கள் கூறியது உண்மையானாலும் , அதாவது விருத்தியினை அறியும் வேறு விருத்தியனை ஏற்க்காமாலிருந்தாலும் பானையை அறிகிறேன், துணியினை அறிகிறேன் முதலிய பிரத்யக்ஷத்தில் உண்டாகும் விருத்தியானதினை அந்த விருத்தியினை கொண்டே அறிகிறோம். இதனால் அந்த விருத்தியானது தன்னோடு கூடிய சைத்தன்யமாக இருப்பதால் அது **ஸ்வயம்பிராகாசமாக** (தானே ஒளிர்கின்றது) ஆகின்றது. இது ஏனென்றால் விருத்தி வேறாகவும் அதோடு கூடியதான சைத்தன்யம் வேறாகவும் இருத்தல் இயலாது என்பதால் அந்தந்த ஆகாரமான விருத்தினை ஏற்பதால், சுகம், துக்கம் முதலிய அந்தக்கரணத்தின் விஷயமான விருத்திகள் சாக்ஷியினால் மட்டுமே அறியப்படுவது என்று ஏற்பது இயலாது ஆகும். இதனால் விருத்தியினை பிரத்யக்ஷம் செய்வது என்பதில் அவ்வியாப்தி தோஷத்தினால் கூடியதாக ஆகாது.

**न चान्तःकरणतद्धर्मादीनां वृत्तिविषयत्वाभ्युपगमे केवलसक्षिविषयत्वाभ्युपगमविरोध इति वाच्यम्। न हि वृत्तिं विना साक्षिविषयत्वं केवलसाक्षिवेद्यत्वं किन्त्विन्द्रियानुमानादिप्रमाणव्यापारमन्तेरण साक्षिविषयत्वम्। अत एवाहंकारटीकायामाचार्यैरहमाकारान्तःकरणवृत्तिरङ्गीकृता अत एव च प्रातिभासिकरजतस्थले रजताकाराविद्यावृत्तिः साम्प्रदायिकैरङ्गीकृता तथा चान्तःकरणतद्धर्मादिषु केवलसाक्षिवेद्येषु वृत्त्युपहितत्वटितलक्षणस्य सत्त्वान्नाव्याप्तिः।**

அந்தக்கரண தர்மம் முதலியவைகள் விருத்தி விஷயம் என்று ஏற்பதால் சாக்ஷியினால் மட்டும் அறியப்படுவது எனும் நிலைக்கு விரோதமாகும் என்று கூற இயலாது. விருத்தியற்றதாக சாக்ஷியின் விஷயமானது அதனால் அறியப்படுவதாக

இருப்பதில்லை, ஆனால், மாறாக, இந்திரியங்கள் அனுமானம் முதலிய பிரமாணமும் அதன் வியாபாரமும் இல்லாமலே சாக்ஷி விஷமாகின்றது. அதனாலேயே **அஹங்கார டீகா** (விளக்கவுரை) யிலும், **ஸ்ரீ பத்மபாதாசாரியார்** அவர்கள் அஹமாகார விருத்தியினை ஏற்றுக்கொள்கிறார், இதனால் , பிராதிபாசிகமான வெள்ளி தோன்றும் இடத்தில் வெள்ளி ஆகாரமான அவித்யா விருத்தியானது சம்பிரதாயத்தில் (பரம்பரையில்) உள்ளவர்களாலும் ஏற்க்கப்படுகின்றது. அதனால், அந்தக்கரணம் மற்றும் அதன் தர்மம் முதலியவைகளும் சாக்ஷியால் மட்டும் அறியப்படுவதாக இருந்தாலும் விருத்திகூடியதான என்பது லக்ஷணத்தில் கூறியப்படுவதால் அவ்வியாப்தி தோஷம் உண்டாவதில்லை.

## விளக்கம்

**கேவல** எனும் பதமானது சாக்ஷியில் கூறப்பட்டதால், (கேவல – அதனால் மட்டும்) சாக்ஷியால் அறியப்படுவதாக இருக்கின்றது என்று விருத்திகள் கூறப்பட்டதால் விருத்தியானது அந்தக்கரணத்தின் தர்மங்களான காமம், முதலியவைகளை அறியமுடியும் என்றால், அங்கு கேவலம் என்றும் பதமானது விருத்திகளை நீக்குவதற்க்காக கூறப்பட்டதல்ல ஆனால் இந்திரிய அனுமானம் முதலிய பிரமாணங்களினை நிராகரிக்கவே என்பதால் இங்கு எந்த விரோதமுமில்லை. இதற்க்கு பிரமாணம் ஏதாவது இருக்கிறதா என்றால், அதனை நிரூபிக்கவே **ஸ்ரீ பத்மபாதாசாரியாரின் பஞ்சபாதிகையில்** (பிரம்ம சூத்திர பாஷ்யத்தின் மேலுள்ள விளக்கம்) **ஸ்ரீ பிராகாஷாத்மயதியினால்** செய்யப்பட்ட அஹங்கார டீகாவில் (விளக்கத்தில்) **அஹம் விருத்தி அவச்சின்னமேவ அந்தக்கரணம் சைத்தன்யஸ்ய விஷயம் ஆபாத்யதே** ( அஹம் விருத்தி கூடியதாகவே அந்தக்கரண சைத்தன்யத்தின் விஷயமாகின்றது) என்று. அதனால் சம்பிரதாயத்தியிலுள்ள **ஸ்ரீ சர்வஞ்ஞாத்மமுனி** முதலியவர்களும் பிராதிபாசிகமான வெள்ளி தோன்றுமிடத்தில் வெள்ளி ஆகாரமான விருத்தியனை ஏற்க்காமலிருந்தாலும் அந்த வெள்ளி ஆகாரமான ஒரு அவித்யா விருத்தியனை ஏற்கின்றனர். அதனால் அந்தக்கரணமும் தன்னுடைய விருத்தியின் விஷயமாகின்றது என்பதால், கேவல சாக்ஷியினால் அறியப்படும் அந்தக்கரணம் மற்றும் அதன் தர்மங்களிலும் விருத்திகூடியதான லக்ஷணமானது செல்லுபடியாகின்றது என்பதால் இங்கு எந்தவித அவ்வியாப்தி தோஷமுடன்

இருத்தல் இயலாது.

**तदयं निर्गलितोऽर्थः स्वाकारवृत्त्युपहितप्रम्मतृचैतन्यसत्ता अतिरिक्तसत्ताकत्वशून्यत्वे सति योग्यत्वं विषयस्य प्रत्यक्षत्वम्। तत्र संयोगसंयुक्ततादात्म्यादीनां सन्निकर्षाणां चैतन्याभिव्यञ्जकवृत्तिजनने विनियोगः।**

கூறப்பட்ட லக்ஷணமானது அதனால், பானை முதலிய ஆகாரமான விருத்தி கூடிய பிரமாத்ரூ சைத்தன்யத்தின் இருத்தலில் இருந்து வேறான இருத்தல் அல்லாதது யோக்கியத்தன்மை என்பது பிரத்யக்ஷத்தின் லக்ஷணம் ஆகும். அங்கு சம்யோகம், சம்யுக்தம், தாதாத்மியம் முதலிய சன்னிகர்ஷங்களானது (சம்பந்தம்) சைத்தன்யத்தின் தோன்றல் விருத்தி உண்டாவதற்க்கு மட்டும் அவசியமாகிறது.

**விளக்கம்**

விஷயாகாரமானதோ அதனை அறிவதானதோ ஆன எந்த விருத்தி கூடியதான பிராமாத்ரு சைத்தன்யம் அந்த ரூபமாக இருத்தல் உள்ளதோ அதுவல்லாத இருத்தல் இல்லாததாகும் போது பிரத்யக்ஷயோக்கியத்தன்மையுடையது என்பது பிரத்யக்ஷத்தின் லக்ஷணம் ஆகும். முன்பு ஞானதின் மற்றும் விஷயத்தின் பிரயோஜகமாக பிரத்யக்ஷமானது பிரிக்கப்பட்டது. அதனில் ஞானத்தின் பிரயோஜகமானது, விஷய விருத்திகூடிய சைத்தன்யமானது விஷயவிஷயம் கூடியதான சைத்தன்யத்தோடு வேறற்ற நிலையே ஆகும். விஷய பிரத்யக்ஷ பிரயோஜகமோ , விஷய விஷயத்தின் அப்படிப்பட்டதான பிரமாத்ரு சைத்தன்யத்தோடு வேறற்ற நிலையே ஆகும். இப்படியானதால், விஷயத்தின் பிரத்யக்ஷ ஞானமோ சைத்தன்யமே ஆகும். அது **அநாதி** என்பதால் சம்யோகம் முதலிய சம்பந்தமானது அவசியமற்றது என்று சந்தேகமுண்டாகும், அது சம்பந்தமானது விருத்தியானது உண்டாக்க அவசியமாகிறதால், பானை முதலிய பிரத்யக்ஷமானது உண்டாவதால் சம்யோக சம்பந்த முதலியவை அதன் ரூபம் முதலியவற்றை உடைய விருத்தி உண்டாக்க பிரயோஜனமாகின்றது என்று பொருள்.

सा च वृत्तिश्चतुर्धा संशयो। निश्चयो। गर्वः। स्मरणमिति। एवंविधवृत्तिभेदेन एकमप्यन्तःकरणं मन इति बुद्धिरिति अहङ्कार इति चित्तमिति व्याख्यायते। तदुक्तम् -

मनोबुद्धिरहङ्कारश्चित्तं करणमान्तरम्। संशयो निश्चयो गर्वः स्मरणं विषया इमे ॥

இந்த விருத்திகளானது நான்கு வகைப்படும், **சம்ஷயம்** (சந்தேகம்), **நிஷ்சயம்** (நிச்சியம்) , **கர்வம்** (அஹங்காரம்) **ஸ்மரணம்** (நினைவு) என்பதாக. இந்த வகையான விருத்திகளின் வேறுபாட்டால் ஒன்றான அந்தக்கரணமும் மனம் என்றும் புத்தி என்றும், அஹங்காரம் என்றும், சித்தம் என்றும் கூறப்படுகின்றது. இது கூறப்பட்டுள்ளது - மனம், புத்தி, அஹங்காரம் , மற்றும் சித்தம் என்று அந்தக்கரணம் நான்கு வகைப்படுகின்றது, சந்தேகம், நிச்சயம் , அஹங்காரம் மற்றும் நினைவு என்று இதன் விஷயமாகும் என்று.

**<u>விளக்கம்</u>**

பிரத்யக்ஷமானது உண்டாவதற்க்கு அவசியமான விருத்தியானது எத்தனை வகைப்படும் என்று கேட்டால், சம்ஸயாகாரமாக, நிச்சயாகாரமாக, கர்வாகாரமாக மற்றும் ஸ்மிருதி ஆகாரமாக என்று விருத்தி நான்கு வகைப்படுகின்றது. அந்தந்த விருத்திகளையுடையதாக முறையே இவை மனது, புத்தி, அஹங்கரம் மற்றும் சித்தம் என்று பெயர் உண்டாகின்றது, ஒன்றாகவே இருக்கும் அந்தக்கரணத்திற்க்கு.

तच्च प्रत्यक्षं द्विविधम्। सविकल्पकनिर्विकल्पकभेदात्। तत्र सविकल्पकं वैशिष्ट्यावगाहिज्ञानं यथा घटमहं जानामीत्यादि ज्ञानम्। निर्विकल्पकं तु संसर्गानवगाहिज्ञानम्। यथा सोऽयं देवदत्तः। तत्त्वमसीत्यादिवाक्यजन्यज्ञानम्।

அந்த பிரத்யக்ஷமானது இரண்டு வகை, சவிகல்பகம் மற்றும் நிர்வகல்பகம் என்று. இதனில் சவிகல்பமானது **<u>வைஷிஷ்ட்ய அவகாஹி ஞானம்</u>** (விஷிஷ்ட தன்மையை அறியும் அதாவது சம்பந்தத்தை அறியும் ஞானம்) ஆகும். <u>நான் பானையை அறிகிறேன்</u> என்று. நிர்விகல்பகமானது இப்படி சம்பந்தத்தினை அறியாத ஞானம் ஆகும். உதாரணத்திற்க்கு <u>இவர் அந்த தேவதத்தன்</u> என்றும்

தத்வமஸி முதலிய வாக்கியத்தால் உண்டாகும் ஞானம்.

**விளக்கம்**

பிரத்யக்ஷ ஞானத்திற்க்கு பிரயோஜகமான விருத்திகளை கூறிவிட்டு அதன் பிரிவு கூறப்படுகின்றது **சவிகல்பம்** மற்றும் **நிர்விகல்பம்** என்றும். சவிகல்பம் என்றால் விகல்பம் கூடியதான அதாவது குணம் முதலியவற்றை சேர்த்து, இதனையே **வைஷிஷ்ட்ய அவகாஹி ஞானம்** என்று லக்ஷணத்தால் கூறப்பட்டது. அதாவது, விசேஷணம் மற்றும் விசேஷ்யத்தின் ஞானம் ஆகும், அதன் சம்பந்தத்தின் ஞானத்துடன் சேர்த்து, இதற்க்கு உதாரணம், பானையை நான் அறிகிறேன் என்பதில் நான் என்னும் விசேஷியம், அதன் ஞானம் விசேஷணம் இதன் சம்பந்தம் ஆகியவற்றை அறிவதில் உண்டாகும் ஞானம். ஞானத்தின் ஞானமானதால் இதனை **அனுவியவசாய ஞானம்** என்று ஏற்கின்றனர் நியாய மதத்தவர்கள். நிர்விகல்பகமானது, விகல்பமற்ற ஞானம் என்று பொருள், அதாவது எங்கு சம்பந்தமானது (விசேஷணா - விசேஷ்ய) அறியப்படுவதில்லையோ அது என்று பொருள். இவர் அந்த தேவதந்தன் எனுமிடத்தில் வேறு இடத்தில் கண்ட ( பார்த்த) தேவதத்தனை நிகழ்கால தேவதத்தனுடன் சம்பந்தமாகிறது. **ஸ்மரண** - தேவதத்தனுடன் (விசேஷணத்துடன்) நிகழ்கால தேவதத்தன் (விசேஷியத்தின்) சம்பந்தம் உண்டாகாததால் இது நிர்விகல்பகம் என்று ஏற்க்கப்படுகின்றது. எவ்வாறு என்றால், சப்த ஞானத்தில் தாத்பர்யமான விஷயம் மட்டும் பிரகாசிக்கும் என்னும் நியமம் உள்ளதால் இங்கு இரண்டும் வேறல்லாதது என்பதனை நியமம் உள்ளதால் இங்கு இரண்டும் வேறல்லாதது என்பதனை மட்டும் உணர்த்துவதாக இந்த சப்தமானது இருக்கின்றது. இங்கு பிரத்யக்ஷத்தால் உண்டாகும் ஞானத்தை குறிப்பிடவில்லை, சாப்த ஞானத்தையே நிர்விகல்பஞானம் என்று கூறப்பட்டதாக அறியவேண்டும்.

**ननु शाब्दमिदं ज्ञानं न प्रत्यक्षमिन्द्रियाजन्यत्वादिति चेत्। न। न हि इन्द्रियजन्यत्वं प्रत्यक्षत्वे तन्त्रं। दूषितत्वात्। किन्तु योग्यवर्तमानविषयकत्वे सति प्रमाणचैतन्यस्य विषयचैतन्याभिन्नत्वमित्युक्तम्।**

ஆனால், சாப்தமான இந்த ஞானமானது ( இவர் அந்த தேவதத்தன் ) பிரத்யக்ஷமாக இயலாது காரணம் இந்திரியத்தால் உண்டாவதாக அல்லாததால் என்றால், தவறு, அதாவது, பிரத்யக்ஷத்தன்மையானது இந்திரியத்தினால் உண்டாக வேண்டும் என்னும் நியமம் ஏதும் இல்லை, இதனை முன்பே நிராகரித்துவிட்டதால். ஆனால், அதற்க்கு பிரயோஜகம்மாவது யோக்கிய நிகழ்கால விஷயமாகும் போது பிரமாண சைத்தன்யமானது விஷயசைத்தன்யத்தோடு வேறற்றதாக இருத்தலே, என்று கூறப்பட்டது.

## விளக்கம்

பிரத்யக்ஷத்திற்க்கு இவ்வாறு தோஷங்களற்றதான லக்ஷணத்தினை செய்த பின்னர், அது நிரூபணமானதால், அதன் பிரிவுகளை (எல்லோரும் ஏற்பதாகிய) சவிகல்பகம் மற்றும் நிர்விகல்பகம் என்று கூறி. அந்த நிர்விகல்பகமான ஞானத்தினை வாக்கியமும் உண்டாக்கக்கூடும் என்பதினை கூறவே, சப்தமானது சவிகல்பக ஞானத்தை மட்டுமே தரும் என்று ஏற்பது முறையல்ல **சோயம் தேவதத்த** முதலிய இடங்களை போல **தத்வமஸி** முதலிய வாக்கியத்தால் உண்டாகும் நிர்விகல்ப ஞானமும் பிரத்யக்ஷமே ஆகும். அவர் இந்த தேவதத்தன் முதலியவற்றை போல **தத்** என்பதால் குறிக்கப்படும் **சர்வஞ** (எல்லாமறிந்த) முதலியதான பிரம்மமும், **த்வம்** என்பதால் குறிக்கப்படும் (**கிஞ்சித்**) (குறையுடைய) ஞானவானை ஜீவனும் **அஸி** என்பதால் ஒன்றே என்று விட்டும் விடாத லக்ஷணையால் கூறப்பட்டது.

**तथा च सोऽयं देवदत्त इति वाक्यजन्यज्ञानस्य सन्निकृष्टविषयतया बहिर्निःसृतान्तःकरणवृत्त्यभुपगमेन देवदत्तावच्छिन्नचैतन्यवृत्त्यवच्छिन्नचैतन्ययोरभेदेन सोऽयं देवदत्त इति वाक्यजन्यस्यज्ञानस्य प्रत्यक्षत्वम्। एवं तत्त्वमसि इत्यादिवाक्यजन्यज्ञानस्यापि। तत्र प्रमातुरेव विषयतया तदुभयाभेदस्य सत्त्वात्।**

இதனாலேயே அவர் இந்த தேவதத்தன் என்கிற வாக்கியத்தால் உண்டாகும் ஞானத்திற்க்கு விஷயமானது நெருங்கியதாக இருப்பதால்,

அந்தக்கரணமானது வெளியே செல்வதானதாக ஏற்க்கப்பட்டுள்ளது என்பதால், தேவதத்தன் கூடிய சைத்தன்யமும் விருத்தி கூடியதான சைத்தன்யமும் வேறற்றதானதால் அவர் இந்த தேவதத்தன் என்று வாக்கியத்தால் உண்டாகும் ஞானமானது பிரத்யக்ஷமாகிறது. இப்படியே **தத்வமஸி** முதலிய வாக்கியங்களாலும் பிரத்யக்ஷ ஞானம் உண்டாகின்றது . இங்கு பிரமாதாவே (அறிபவரே) விஷயமாகவும் ஆவதால் அவையிரண்டும் வேறற்றதாக இருப்பது என்பதால்.

**விளக்கம்**

ஆனால், தேவதத்தன் முதலிய உலக வியவகார நிகழ்ச்சியில் காணப்படுவது போல வைதீக வாக்கியத்தில் காண்பது இயலாது காரணம், **விஞ்ஞாதாரம் அரே கேன விஜானீயாத்** (அறிபவர் எதனைகொண்டு தன்னை அறிவது) முதலிய வேத வாக்கியத்தால் அது நிராகரிக்கப்பட்டதால். என்று கூறினால் அது தவறு , காரணம் **தத்வமஸி** முதலிய வாக்கியத்தால் உண்டாகும் ஞானமும் தொடர்ந்து நெருங்கியதாக இருக்கும் **தத்** (அது) என்னும் சொல்லினால் குறிக்கப்பட்ட விஷயமே சுட்டிக்காட்டப்படுவதால், இங்கு, அந்தக்கரணமும் வெளியே செல்வதாக ஏற்க்கப்பட்டதானதாலும், **தத்** கூடியதும், விருத்தி கூடியதுமான சைத்தன்யமும் **அபேத** (பிரிவற்ற) நிலையை அடைகின்றதால் பிரத்யக்ஷஞானமானது உண்டாகும் என்றாகின்றது. இங்கு **த்வம்** (நீ) எனும் சொல்லால் குறிக்கப்பட்ட வேறல்லாததான **பிரமாதா** (அறிபவரே) குறிக்கப்பட்டதால் **த்வம்** பதத்தால் குறிக்கப்பட்ட விஷயமும் இதனுடன் அபேதமானதானதால் அந்த ஞானமானது பிரத்யக்ஷமாவதில் எந்த தடையும் இல்லாது போகின்றது. இங்கு கவனிக்கப்படவேண்டியது, ஷ்ருதியானது விருத்தி வியாப்யத்தினை மட்டும் ஏற்கின்றது என்பதால், நிஷேதிக்கப்பட்டது அவ்வியாப்யமே என்பது.

**ननु वाक्यजन्यज्ञस्य पदर्थसंसर्गावगाहितया कथं निर्विकल्पकत्वम्। उच्यते। वाक्यजन्यज्ञानविषयत्वे हि न पदार्थसंसर्गत्वं तन्त्रम् । अनभिमतसंसर्गस्यापि वाक्यजन्यज्ञानविषयत्वापत्तेः। किन्तु तात्पर्यविषयत्वम्।**

ஆனால் , வாக்கியத்தால் உண்டாகும் ஞானமானது அதன் ஒவ்வொரு பதத்தில் (சொல்லின்) பொருளுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், நிர்விகல்பம் என்று எவ்வாறு கூறுப்பட்டது என்றால் கூறுகின்றோம், வாக்கியத்தால் உண்டாகும் ஞானமானது அதன் சொற்பொருளுடன் சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை . இல்லாவிட்டால், நம்மால் குறிக்கப்படாத விஷயத்தினையும் வாக்கியமானது குறிப்பதாக ஆகும் என்பதால், வாக்கியமானது தாத்பர்யத்தினையே சார்ந்திருப்பதாக இருப்பதாக ஏற்க்கப்பட்டதாலும்

**விளக்கம்**

அவர் இந்த தேவதத்தன் முதலிய வாக்கியத்தால் உண்டான ஞானத்தில் அந்த வாக்கியத்தின் ஒவ்வொரு சொல்லின் பொருளும் சம்பந்தப்பட்டதால் அதன் குறிப்பை உணர அது (வாக்கியம்) சவிகல்பக ஞானத்தினையே உண்டாக்கும், மாட்டைக்கொண்டு வா எனும் வாக்கியத்தை போல, என்று சந்தேகம் உண்டானால் அதற்க்கு பதில், கூறுவது சரியே ஆகும், வாக்கியமானதால் உண்டாகும் ஞானமானது சம்பந்ததத்தினை (சொற்-பொருள்) சார்ந்ததாக இருந்தால், ஆனால் அவ்வாறு காணப்படுவது இல்லை என்பதால், காரணம், அப்படி ஏற்றால் ( சம்பந்தப்பட்டது என்று ) நம்மால் குறிக்கப்படாத தாத்பர்யமும் அந்த வாக்கியத்திற்க்கு ஏற்க்கப்படும் என்றாவதால் , வாக்கிய ஞானத்தினை நியமிப்பது அதன் தாத்பர்யமே ஆகும் என்றாகிறது.

**प्रकृते च सदेव सोम्येदमग्र आसीत् इत्युपक्रम्य तत्सत्यं स आत्मा तत्त्वमसि श्वेतकेतो इत्युपसंहारे विशुद्धे ब्रह्मणि वेदान्तानां तात्पर्यमवसितमिति कथं तात्पर्यविषयसंसर्गमवबोधयेत् ।**

இங்கு, வேதாந்தமானது **சதேவ சோம்ய இதமக்ர ஆஸீத்** ( மேன்மையானவனே, சத் மட்டுமே சிருஷ்டிக்கு முன்னால் இருந்தது) என்று தொடங்கி, **தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்வமஸி ஷ்வேதகேதோ** ( சுவேதகேது , அதுவே உண்மை, அதுவே ஆத்மா, அது நீயாகிறாய்) என்று முடிப்பதாலும் அதன் தாத்பர்யமானது மிகவும் தூய்மையான பிரம்மத்திலேயே இருப்பதால், எவ்வாறு

அது சொற்பொருளுடன் சம்பந்தப்படுவதாக எவ்வாறு தாத்பர்யத்தினை ஏற்பது இயலும்.

**விளக்கம்**

உலகத்தில் உபயோகிக்கப்படும் அவனே இந்த தேவதத்தன் முதலிய வாக்கியத்தில் எவ்வாறு அவன் மற்றும் இந்த ஆகிய இரு பிண்டத்தை குறித்த பிரிவற்றத்தன்மையே கூறப்படுகின்றதோ அப்படியே இங்கு வேதாந்த வாக்கயித்தில் **உபகிரமம்** ( முன்னுரை) **உபசம்ஹாரம்** ( முடிவுரை) முதலிய தாத்பர்யத்தினை நிச்சயம் செய்யும் லிங்கங்களானது.

**इदमेव तत्त्वमस्यादिवाक्यानामखण्डार्तत्वम्। यत्संसर्गानवगाहियतर्थज्ञानजनकत्वमिति। तदुक्तम् -**

**संसर्गासङ्गिसम्यग्धीहेतुता या गिरामियम्।**
**उक्ताऽखण्डार्थता यद्वा तत्प्रातिपदिकार्थता॥**

**प्रातिपदिकार्थमात्रपरत्वं वाऽखण्डार्थत्वमिति चतुर्थपादार्थः।**

**தத்துவமஸி** (அது நீ ஆகிறாய்) முதலிய வாக்கியங்களின் அகண்டார்த்த தன்மை இதுவேயாகும். எது ஒன்று சம்பந்தத்தினை அடையாத யதார்த்த ஞானத்தினை உண்டாக்குவது. இதுவே **ஸ்ரீ சித்சுகாசாரியாராலும்** கூறப்பட்டுள்ளது – சம்பந்தத்தோடு சேராத சரியான அறிவையடைய காரணத்தன்மையுடைய எந்த வேத வாக்கியமானது உள்ளதோ அதுவே அகண்டார்த்த தன்மையுடைய வாக்கியம் அல்லது அந்த வாக்கியங்களின் பிராதிபதிகார்த்தம் என்று இங்கு நாலாம் பாதத்தில் **பிராதிபதிகார்த்தமாத்ரபரத்வம்** ( பிராதிபதிக (வேற்றுமை பகுதி) அர்த்தத்தினை மட்டும் சார்ந்திருப்பது) என்று அறியவேண்டும்.

**तच्च प्रत्यक्षं पुनर्द्विविधं जीवसाक्षि ईश्वरसाक्षि चेति। तत्र जीवो नामान्तःकरणस्य विशेषणत्वोपाधित्वाभ्यामनयोर्भेदः।**

அந்த பிரத்யக்ஷமானது மீண்டும் இருவகைப்படும், ஜீவசாக்ஷி மற்றும் ஈஷ்வரசாக்ஷி என்றும். இங்கு ஜீவன் என்றால் அந்தக்கரணம் கூடிய சைத்தன்யம், அதன் சாக்ஷியோ அந்தக்கரணத்தில் இருக்கும் சைத்தன்யமே, அந்தக்கரணத்தின் விசேஷணத்தன்மைக்கும் உபாதித்தன்மைக்கும் உள்ள வேற்றுமையால் இவை வேறுபடுகிறது ( ஜீவன் , ஜீவசாக்ஷி என்று).

**विशेषणं च कार्यान्वयि व्यावर्तकम्। उपादिश्च काय्यार्नन्वयी व्यावर्तको वर्तमानश्च। रूपविशिष्टो घटोऽनित्य इत्यत्र रूपं विशेषणम्। कर्णशष्कुल्यवचिन्नं नभः श्रोत्रमित्यत्र कर्णशष्किल्युपाधिः। अयमेवोपाधिर्नैयायिकैः परिचायक इत्युच्यते।**

காரியத்தில் ஊடுருவியிருப்பதும், வேறுபடுத்தி காட்டுவதுமாக இருப்பது விசேஷணம் ஆகும். உபாதியோ காரியத்தில் ஊடுருவாது வேறுபடுத்துவதாகவும் இருப்பது. உதாரணத்திற்க்கு, ரூபம் கூடிய பானை அநித்தியம் எனுமிடத்தில் ரூபம் விசேஷணம். காது மடல்களுடன் கூடியதான ஆகாயம் ஷ்ரோத்திரம் என்பதில் காது மடல் உபாதியாகும். (உபாதி – வரையறை, விசேஷணம் – குறிப்பு) . இந்த இருவகையான உபாதிகளையும் நையாயிகர்கள் **பரிசாயகம்** என்று கூறவர்.

**प्रकृते चान्तःकरणस्य जडतया विषयभासकत्वायोगेन विषयभसकचैतन्योपाधित्वम्। अयं च जीवसाक्षी प्रत्यात्मं नाना। एकत्वे मैत्रावगते चैत्रस्याप्यनुसन्धानप्रसङ्गः।**

இங்கு அந்தக்கரணமானது ஜடமானதால் விஷயத்தினை பிரகாசிக்கும் தகுதியற்றதால் விஷயத்தினை பிரகாசிக்கும் சைத்தன்யம், (அந்தக்கரணத்திற்கு) உபாதி எனப்படுகின்றது. இந்த ஜீவசாக்ஷியானது பலவாகவும் உள்ளது. ஒன்று என்று ஏற்றால் மைத்ரனால் அறியப்பட்ட விஷயம் சைத்திரனும் அறியும் நிலையுண்டாகும்.

ईश्वरसाक्षी तु मायोपहितं चैतन्यम्। तच्चैकम्। तदुपाधिभूतमायाया एकत्वात्। इन्द्रो मायभिः पुरुरूप ईयते इत्यादिश्रुतौ मायाभिरिति बहुवचनस्य मायागतशक्तिविशेषाभिप्रायतया मायागतसत्त्वरजस्तमोरूपगुणाभिप्रायतया वोपपत्तेः।

ஈஷ்வரசாக்ஷியோ மாயா கூடிய சைத்தன்யமேயாகும். அதுமட்டுமல்லாது ஒன்றாகவும் இருப்பது, அதன் உபாதியான மாயாவானது ஒன்றானதால், **இந்த்ரோ மாயாபி புருரூபோ ஈயதே** ( இந்திரன் (ஈஷ்வரன்) மாயாக்களினால் பல ரூபம் எடுக்கிறார்) என்பதான ஷ்ருதியில் கூறப்பட்ட மாயாகளினால் எனும் பன்மையானது மாயாவின் சக்தியின் விசேஷத்தன்மையை குறிப்பதற்க்காகவோ மாயாவிலுள்ள சத்துவ, ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்களை குறிப்பதற்க்காகவோ என்றாகும்.

मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् , अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजास्सृजमानां सरूपाः। अजो ह्येको जुषमाणोऽनुशेते जाहात्येनां भुक्तभोगामजोऽन्यः॥, तरत्यविद्यां विततां हृदि यस्मिन्निवेशिते। योगि मायाममेयाय तस्मै विद्यात्मने नमः॥ इत्यादि श्रुतिस्मृतिषु एकवचनबलेन लावानुगृहीतेन मायाया एकत्वं निश्चीयते। ततश्च तदुपहितं चैतन्यम् ईश्वरसाक्षि तच्चानादि तदुपाधेर्मायाया अनादित्वात्।

**மாயாம் து பிரக்ருதிம் வித்யாத் மாயினம் து மஹேஷ்வரம்** ( மாயாவினை பிரகிருதியாகவும் மாயாவினையுடையவரையோ மகேஷ்வரன் என்றும் அறிவாயாக), **அஜாமேகாம் லோஹித சுக்லக்ருஷ்ணாம் பஹ்வீ ப்ரஜா ஸ்ருஜமானாம் ஸரூபா அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோ அனுஷேதே ஜஹாத்யேனாம் புக்த போகாமஜோ அன்ய** ( ஒரு பிரகிருதியான சிகப்பு, வெண்மை மற்றும் கருப்பு (நிறங்களுடையது) சமானமான பலவினை சிருஷ்டி செய்தது.

அதனில் ஒன்று (ஜீவன்) அதனை அனுபவிப்பதாகவும் மற்றது அனுபவித்து அடங்கியதாக ( எந்த சலனமுமில்லாமல் ) அதனை விட்டுவிடுகின்றது. **தரத்யவித்யாம் விததாம் ஹ்ருதி யஸ்மின் நிவேஷிதே யோகி மாயாமமேயாய தஸ்மை வித்யாத்மனே நம** ( எதனை இதயத்தில் நிருத்துவதால் அவித்யாவான மாயாவினை கடக்கின்றனரோ யோகிகள் அந்த விஷயமாகாத ஞான ஸ்வரூபமானவருக்கு நமஸ்காரம்) முதலிய ஷ்ருதி மற்றும் ஸ்மிருதிகளில் ஒருமையில் குறிப்பிடப்பட்டதால் மாயவானது ஒன்று என்று நிச்சயமாகின்றது. அதனால் அது (மாயா) கூடியதான சைத்தன்யமான ஈஷ்வரசாக்ஷியும் ஒன்று , அநாதியும் ஆகும். அதன் உபாதியான மாயாவானது அநாதியானதால்.

**मायावच्छिन्नं चैतन्यं परमेश्वरः मायाया विशेषणत्वे ईश्वरत्वमुपाधित्वे साक्षित्वमिति ईश्वरत्वसाक्षित्वयोभेदः न तु धर्मिणोरीश्वरतत्साक्षिणोः। स च परमेश्वर एकोऽपि स्वोपाधिभूतमायानिष्ठसत्त्वरजस्तमोगुणभेदेन ब्रह्मविष्णुमहेश्वर इत्यादिशब्दवाच्यतां लभते।**

மாயாகூடிய சைத்தன்யம் ஈஷ்வரன், அங்கு மாயாவின் விசேஷணமாக் ஈஷ்வரத்தன்மை மற்றும் உபாதியாக ஈஷ்வர சாஷித்தன்மையானது உள்ளது. அதனால் ஈஷ்வரர் அதன் சாக்ஷியிலும் வேற்றுமையுள்ளது. அதன் தர்மங்களான ஈஷ்வரர் மற்றும் சாக்ஷியில் இல்லை. அந்த பரமேஸ்வரர் ஒன்றானாலும் தன்னுடைய உபாதியான மாயாவில் இருக்கும் சத்துவ, ரஜஸ் மற்றும் தமோ குணங்களின் வேற்றுமையால் பிரம்மா, விஷ்ணு மற்றும் மகேஷ்வரர் முதலிய பெயர்களை அடைகின்றது.

**नन्वीश्वरसाक्षिणोऽनादित्वे तदैक्षत बहुस्यां प्रजायेय इत्यादिना सृष्टिपूर्वसमये परमेश्वरस्यागन्तुकमीक्षणमुच्यमानं कथमुपपद्यते। उच्यते। यथा विषयेन्द्रियसन्निकर्षादिकारणवशेन जीवोपाध्यन्तःकरणस्य वृत्तिभेदा जायन्ते। तथा सृज्यमानप्राणिकर्मवशेन परमेश्वरोपाधिभूतमायाया वृत्तिविशेषा इदमिदानीं स्रष्टव्यमिदमिदानीं पालयितव्यमिदमिदानीं संहर्तव्यमित्याद्याकारा जायन्ते। तासां च वृत्तीनां**

**सादित्वात्तत्प्रतिबिम्बितं चैतन्यमपि सदीत्युच्यते। एवं साक्षिद्वैविध्येन प्रत्यक्षज्ञानद्वैविध्यम्। प्रत्यक्षत्वं च ज्ञेयगतं ज्ञप्तिगतं चेति निरूपितम्।**

ஆனால், ஈஷ்வர சாக்ஷியானது அநாதியானால் **ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய** (அது பார்த்து பலவகையான பிரஜைகளை உண்டாக்குவேன்) என்பது முதலான வாக்கியத்தால் சிருஷ்டிக்கு முன்னர் பரமேஸ்வரனில் வந்து சேர்ந்த **ஈக்ஷணமானது** என்பது எவ்வாறு உண்டாகும், என்றால், கூறுகிறோம், எப்படி விஷயம் மற்றும் இந்திரியம் ஆகியவற்றின் சேர்க்கையால் ஜீவ உபாதியான அந்தக்கரணத்தில் விருத்திகளின் வேற்றுமைகளானது (பிரிவுகளானது) உண்டாகின்றதோ, அவ்வாறே , உண்டாகும் பிராணிகளின் கர்மத்தின் (புண்ணிய - பாவத்தின்) காரணத்தால் பரமேஷ்வரனில் உபாதியான மாயாவினிலும் விருத்திகளானது இதனை இப்பொழுது சிருஷ்டிக்க வேண்டும், இதனை இப்பொழுது காக்க வேண்டும், இதனை இப்பொழுது அழிக்க வேண்டும் என்பது முதலானவைகளாக உண்டாகின்றது. அந்த விருத்திகளும் துவக்கமுள்ளவையாகின்றதால் அதனை எதிரொளிக்கும் சைத்தன்யமும் துவக்கமுள்ளது என்று ஏற்க்கப்படுகின்றது. இப்படி சாக்ஷி இருவகையானதால் பிரத்யக்ஷ ஞானமும் இருவகைப்படுகின்றது. பிரத்யக்ஷத்தன்மையானது விஷயத்தாலும், ஞானத்தாலும் உண்டாவது என்று நிரூபிக்கப்பட்டது.

**तत्र ज्ञप्तिगतप्रत्यक्षस्य सामान्यलक्षणं चित्तमेव। पर्वतो वह्निमानित्यादावपि वह्न्याद्याकारवृत्त्युपहितचैतन्यस्य स्वात्मांशे स्वप्रकाशतया प्रत्यक्षत्वात्। तत्तद्विषयांशप्रत्यक्षत्वं तु पूर्वोक्तमेव। तस्य च भ्रान्तिरूपप्रत्यक्षे नातिव्याप्तिः। भ्रमप्रमासाधारणप्रत्यक्षत्वसामान्यनिर्वचनेन तस्यापि लक्ष्यात्वात्।**

அதனில் ஞானத்தினால் உண்டாகும் பிரத்யக்ஷத்தன்மையானதின் சாதாரணமான லக்ஷணம் (குறிப்பு) சித்தமேயாகும். பர்வதோ வன்னிமான் ( மலை நெருப்புடையது) எனுமிடத்திலும் நெருப்பு முதலிய ரூபமாக உள்ள விருத்திகூடியதான சைத்தன்யமானது தன்னுடைய அம்சத்தில் சுயம்பிரகாசமாக பிரத்யக்ஷமாகின்றது. அந்தந்த விஷயம் கூடியதான நிலையில் உண்டாகும்

பிரத்யக்ஷமோ முன்பே கூறப்பட்டது. அது **பிராந்தியாக** (தவறாக) உண்டாகும் பிரத்யக்ஷத்தில் அதிவியாப்தி தோஷம் அடைவதில்லை. ( பிராந்தியும் ) பிரத்யக்ஷம் எனும் சாதாரணமான நிலையில் கூறப்பட்டதால் அதுவும் குறிக்கப்பட்டதாக ஆவதால்.

**यदा तु प्रत्यक्षप्रमाया एव लक्षणं वक्तव्यं तदा पूर्वोक्तलक्षणेऽबाधितत्वं विषयविशेषणं देयम्। शुक्तिरूप्यादिभ्रमस्य संसारकालीनबाधविषयप्रातिभासिक - रजतादिविषयकत्वेनोक्तलक्षणाभावान्नातिव्याप्तिः।**

பிரத்யக்ஷ பிரமா மட்டும் லக்ஷணையால் கூறப்படவேண்டும் எனும்போது முன்பு கூறப்பட்ட லக்ஷணத்தில் **அபாதிதத்வம்** (பாதிக்கப்படாதத்தன்மை) எனும் விசேஷணம் விஷயத்திற்க்கு தரப்படவேண்டும். சிப்பியில் தோன்றும் வெள்ளி முதலியவற்றில் சம்சார காலத்திலேயே பாதனையுண்டாவதாலும் **பிராதிபாசிக** வெள்ளியை விஷயமாக்குவதாலும் கூறப்பட்ட ( பாதிக்கப்படாத) லக்ஷணம் இல்லாததால் அதிவியாப்தி உண்டாவதில்லை.

**ननु विसंवादिप्रवृत्त्या भ्रान्तिज्ञानसिद्धावपि तस्य प्रातिभासिकतत्कालोत्पन्नरजतादिविषयकत्वे न प्रमाणम्। देशान्तरीयरजतस्य क्लृप्तस्यैव तद्विषयत्वसंभवादिति चेत्। न। तस्यासन्निकृष्टतया प्रत्यक्षविषयत्वायोगात् न च ज्ञानं तत्र प्रत्यासत्तिः। ज्ञास्य प्रत्यासत्तित्वे तत एव वह्न्यादेः प्रत्यक्षत्वापत्तावनुमानाद्युच्छेदापत्तेः।**

ஆனால், **விசம்வாதி** (அறியாமல் செயல்புரியும்) நிலையில் பிராந்தி ஞானமானது நிரூபிக்கப்பட்டாலும், அதன் பிராதிபாசிகம் அந்த நேரத்திலுண்டான வெள்ளி முதலிய விஷயத்தில் உண்டாவதற்க்கு எந்த பிரமாணமும் இல்லை, காரணம் வேறு இடத்தில் உள்ள வெள்ளியே இங்கு முழுமையாக அதன் விஷயமாக இயலும், என்றால். இல்லை, அது நெருங்கியதாக இல்லாததால் பிரத்யக்ஷம் ஆவது இயலாது அதன் ஞானம் நெருங்கியதாக இருப்பதால் ( பிரத்யக்ஷம் ஆவது இயலும் என்றால்) என்பது தவறு அவ்வாறு ஏற்பதானால் ஞானமானது நெருங்கியிருப்பதால் நெருப்பு முதலியவை இப்பொழுதே

நிரூபணமாகும் என்பதால் அனுமானம் முதலியவை அவசியமற்றதாக ஆகும்.

**ननु रजतोत्पादकानां रजतावयवानामभावे शुक्तौ कथं तवापि रजतमुत्पद्यते इति चेत्। उच्यते। नहि लोकसिद्धसामग्री प्रातिभासिकरजतोत्पादिका। किन्तु विलक्षणैव। तथा हि काचकामलादिदोषदूषितलोचनस्य पुरोवर्तिद्रव्यसंयोगादिदमाकारा चाकचिक्याकारा काचिदन्तःकरणवृत्तिरुदेति तस्यां च वृत्ताविदमवच्छिन्नं चैतन्यं प्रतिबिम्बते। तत्र पूर्वोक्तरीत्या वृत्तेर्निर्गमनेनेदमवच्छिन्नं चैतन्यं वृत्त्यवच्छिन्नं चैतन्यं प्रमातृचैतन्यं चाभिन्नं भवति। ततश्च प्रमातृचैतन्याभिन्नविषयचैतन्यनिष्ठा शुक्तित्वप्रकारिकाऽविद्या चाकचिक्यादिसादृश्यसन्दर्शनसमुद्बोधितरजतसंस्कारसध्रीचीना काचादिदोषसमवहिता रजतरूपर्थाकारेण रजतज्ञानाभासाकारेण च परिणमते।**

ஆனால், வெள்ளி தோன்றுவதற்க்கு அதன் எந்த சாமகிரியும் இல்லாததால் சிப்பியில் உங்களுடைய (வேதாந்த) மதத்திலும் வெள்ளி தோன்றுகின்றது, என்றால், கூறுகின்றோம். உலகத்தில் பிரசித்தமான சாமகிரிகள் (பொருட்கள்) பிராதிபாசிகமான வெள்ளியை தோற்றுவிக்க அவசியபடுவதில்லை, ஆனால் வேறு விலக்ஷணமானதே அவசியமாகிறது. அதாவது பழுதடைந்த கண்களானது அதன் முன்புள்ள விஷயத்துடன் சேரும்போது அறியப்படும் மினுமினுப்பான ரூபமுடைய ஒரு அந்தக்கரண விருத்தியானது தோன்றுகின்றது. அந்த விருத்தியில் இது கூடியதான சைத்தன்யம் பிரதிபிம்பம் தோன்றுகின்றது. அதனில் முன்பு கூறப்பட்டபடி விருத்தி செல்லுவதால் இது கூடிய சைத்தன்யம் , விருத்தி கூடிய சைத்தன்யம் மற்றும் பிரமாத்ரு சைத்தன்யமானது வேறல்லாததாக ஆகின்றது. அதனால் பிரமாத்ரு சைத்தன்யத்துடன் வேறல்லாத விஷயசைத்தன்யத்திலிலுள்ள சிப்பித்தன்மை பிரகாரமான அவித்தை மினுமினுப்பு முதலிய சமானத்தன்மையினை கானுவதால் உண்டாகும் வெள்ளி எனும் சம்ஸ்காரத்தால் தூண்டப்பட்டதான மஞ்சல் காமாலை முதலிய தோஷத்தால் உதவப்பட்டதாக வெள்ளி எனும் ரூபமாகவும் வெள்ளி ஞானமாக பிரகாசிப்பதாகவும் மாற்றமடைகின்றது.

परिणामो नाम उपादानसमसत्ताककार्यापत्तिः। विवर्तो नाम उपादानविषमसत्तककार्यापत्तिः। प्रातिभासिकरजतं चाविद्यापेक्षया परिणामः चैतन्यापेक्षया विवर्त इति चोच्यते। अविद्यापरिणामरूपं च तद्रजतमविद्याधिष्ठाने इदमवच्छिन्नचैतन्ये वर्तते। अस्मन्मते सर्वस्यापि कार्यस्य स्वोपादानाविद्याधिष्ठानाश्रितत्वनियमात्।

**பரிணாமம்** (மாற்றம்) என்பது உபாதானத்தின் சமானமான காலத்திலேயே இருப்பதற்க்கு பெயர். **விவர்த்தம்** என்பது உபாதானத்திலிருந்து வேறுகாலத்தில் இருப்பது. பிராதிபாசிகமான வெள்ளியோ அவித்தையை அனுசரித்து பரிணாமம் எனவும் சைத்தன்யத்தை அனுசரித்து விவர்த்தம் எனவும் கூறப்பட்டுள்ளது. அவித்தை பரிணாம ரூபமான வெள்ளியோ அவித்தையுன் அதிஷ்டானமான இது கூடியதான சைத்தன்யத்தில் உள்ளது. எங்களுடைய (வேதாந்த ) மதத்திலோ காரியமான எல்லாமும் தன்னுடைய உபாதானமான அவித்தையை சார்ந்திருப்பது என்று ஏற்க்கப்பட்டுள்ளது.

ननु चैतन्यनिष्ठस्य रजतस्य कथमिदं रजतमिति पुरोवर्तितादात्म्यम्। उच्यते। यथा न्यायमते आत्मनिष्ठस्य सुखादेः शरीरनिष्ठत्वेनोपलम्भः शरीरस्य सुखाद्यधिकरणताचच्छेदकत्वात्। तथा चैतन्यमात्रस्य रजतं प्रत्यनधिष्ठानतया इदमवच्छिन्नचैतन्यस्य तदधिष्ठानत्वेन इदमोऽवच्छेदकतया रजतस्य पुरोवर्तिसंसर्गप्रत्यय उपपद्यते।

ஆனால், சைத்தன்யத்தில் இருப்பதான வெள்ளியானது எவ்வாறு இது வெள்ளி என்று நம்முன் தோன்றுமிடத்தில் **தாதாத்மியத்தினை** ( ஒருமைத்தன்மை, அதுபோலவே ஆகுதல்) அடைகின்றது, என்றால் கூறுகிறோம், எவ்வாறு நியாய மதத்தில் ஆத்மாவிலிருக்கும் சுகம் முதலியவைகளை சரீரத்திலிருப்பதாக அடைகிறார்களோ சரீரமே சுகம் முதலியவற்றின் அதிகரணமாக வரையறுக்கப்பட்டதால், அதுபோல, சைத்தன்யத்தில் மட்டுமே இருப்பதான வெள்ளிக்கு அதிஷ்டானமாக இது கூடிய தான சைத்தன்யம்

ஏற்க்கப்படாவிட்டாலும், அது அதிஷ்டானமாகவே இது என்பதால் வரையறுக்கப்பட்டதாக உள்ள வெள்ளியாக நம் முன்னால் தோன்றுவது இயலுகிறது.

**तस्य च विषयचैतन्यस्य तदन्तःकरणोपहितचैतन्याभिन्नतया विषयचैतन्याध्यस्तमपि रजतं साक्षिण्यध्यस्तं केवलसाक्षिवेद्यं सुखादिवदनन्यवेद्यमिति चोच्यते।**

அந்த விஷயசைத்தன்யமும் அந்தக்கரணம் கூடிய சைத்தன்யமும் பிரிவற்றதாக இருப்பமதால் விஷயசைத்தன்யத்தில் ஏற்றிப்பார்க்கப்பட்ட வெள்ளியும் சாக்ஷி ( சைத்தன்யத்தில்) அது ஏற்றிப்பார்க்கப்பட்டது என்ற கூறப்படுகிறது் சாக்ஷியால் மட்டும் அறியப்ப்வதும் சுகம் முதலியவைப்போல போன்று அறியப்படாதது என்றும் கூறப்படுகிறது்.

**ननु साक्षिण्यध्यस्तत्वेऽहं रजतमिति प्रत्ययः स्यात्। अहं सुखीतिवदिति चेत्। उच्यते। न हि सुखादीनामन्तःकरणावच्छिन्नचैतन्यनिष्ठाविद्याकार्यत्वप्रयुक्तम् अहं सुखीतिज्ञानम्। सुखादीनां घटादिवच्छुद्धचैतन्य एवाध्यासात्। किन्तु यस्य यदाकारानुभवाहितसंस्कारसहकृताविद्याकार्यत्वं तस्य तदाकारानुभवविषयत्वमित्येवानुगतं नियामकम्।**

ஆனால், அவ்வாறு சாக்ஷி ( சைத்தன்யத்தில்) அது ஏற்றிப்பார்க்கப்பட்டது என்ற கூறினால் <u>நான் வெள்ளி</u> என்ற ஞானமே தோன்றும், <u>நான் இன்பமாக இருக்கிறேன்</u> என்பது போல, என்றால் கூறுகிறோம், சுகம் முதலியவை அந்தக்கரணத்தில் இருக்கும் சைத்தன்யத்திலிருக்கும் அவித்தையின் காரியமாக உண்டாவது நான் சுகமாக இருக்கிறேன் எனும் ஞானம், என்பதில்லை. காரணம் , சுகம் முதலியவை , பானை முதலியவைப்போல சுத்தமான ( தூய்மையான) சைத்தன்யத்திலேயே ஏற்றிப்பார்க்கப்பட்டதால், ஆனாலும் எவருக்கு எதனால் எந்த ஆகாரமாக ( ரூபமாக) அனுபவிக்கப்பட்டதாக சம்ஸ்காரம் கூடியதான அவித்தையின் காரியமோ அவருக்கு அந்த ரூபமாகவே அது அனுபவத்திற்க்கு

வரும் என்பது எல்லா இடத்திலும் காணப்படுவதால்.

तथा च इदमाकारानुभवाहितसंस्कारसहकृताविद्याकार्यत्वात् घटादेरिदमाकारानुभवविषयत्वम्। अहमाकारानुभवाहितसंस्कारसहिताविद्याकार्यत्वाद् अन्तःकरणादेरहमाकारानुभवविशयत्वम्।शरीरेन्द्रियादेरुभयविधानुभवसंस्कारसहिताविद्या-कार्यत्वादुभयविधानुभवविषयत्वम्। तथा चोभयविधोऽनुभवः इदं शरीरमहं देही अहं मनुष्योऽहं ब्राह्मण इदं चक्षुरहं काण इदं श्रोत्रमहं बधिर इति।

அதனால் இது என்ற ரூபமாக அனுபவிக்கப்பட்டதான சம்ஸ்காரம் கூடியதான அவித்தையானதின் காரியமாக பானை முதலியவை இது என்ற ரூபமாகவே அனுபவத்திற்க்கு உண்டாகின்றது. நான் என்பதால் தூண்டப்பட்டதான சம்ஸ்காரம் கூடியதான அவித்தையின் காரியமாக அந்தக்கரணம் முதலியவை நான் என்ற வகையாக அனுபவத்திற்க்கு உண்டாகின்றது. சரீரம், இந்திரியம் முதலியவற்றிலோ இரண்டு வகையான சம்ஸ்காரம் கூடியதான அவித்தையின் காரியமானதால் இரண்டு வகையாகவும் அனுபவத்திற்கு வருகின்றது. அதாவது, இது சரீரம், நான் உடல், நான் மனுஷ்யன், நான் பிராம்மணன், இது கண், நான் குருடன் , இது காது , நான் செவிடன் முதலிய இருவகையாகவும் அனுபவம் உள்ளது.

प्रकृते च प्रातिभासिकरजतस्य प्रमातृचैतन्याभिन्नेदमंशावच्छिन्नचैतन्यनिष्ठाविद्याकार्यत्वेऽपि इदं रजतमिति सत्यस्थलीयेदमंशाकारानुभवाहितसंस्कारजन्यत्वादिदमाकारानुभवविषयता। न त्वहं रजतमित्यहमाकारानुभवविषयतेत्यनुसन्धेयम्।

இங்கு (விசாரம் நடக்குமிடத்தில்) பிராதிபாசிகமான வெள்ளியானது பிரமாத்ரு சைத்தன்யத்தோடு வேறல்லாத இது என்று அம்சம் கூடியதான சைத்தன்யத்தில் நிலை பெற்றிருப்பதான அவித்தையின் காரியமானாலும் இது வெள்ளி என்று உண்மையான இடத்தில் உள்ள இது என்ற அம்ச ரூபமான

அனுபவத்தினால் உண்டான சம்ஸ்காரத்தினால் உண்டானதால் இது என்கிற ரூபமாக அனுபவத்திற்க்கு வருகிறது. நான் வெள்ளி என்று நான் ரூபமாக அனுபவமானது இல்லை என்று நினைவில் கொள்ளவேண்டும்.

**नन्वेवमपि मिथ्यारजतस्य साक्षात्साक्षिसम्बन्धितया भानसंभवे रजतगोचरज्ञानाभासरूपाया अविद्यावृत्तेरभ्युपगमः किमर्थः इति चेत्। न। स्वगोचरवृत्त्युपहितचैतन्यभिन्नसत्ताकत्वाभावस्य विषयापरिक्षरूपतया रजतस्यापरोक्षत्वसिद्धये तदभ्युपगमात्।**

ஆனால், இவ்வாறு கூறினாலும் மித்யா வெள்ளியானது நேரடியாக சாக்ஷியோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதாக பிரகாசிக்க இயலும் என்பதால் வெள்ளி என்பதில் உள்ள ஞானத்தின் பொய்த்தோற்றமான அவித்தை விருத்தியானது (எவ்வாறு) ஏன் ஏற்க்கப்படுகின்றது, என்றால், அவ்வாறு இல்லை, தன்னோடு (விஷயத்தோடு) கூடியதான விருத்தி கூடிய சைத்தன்யத்தோடு வேறு நிலையில் இருப்புடையதாக இல்லாத விஷயம் அபரோக்ஷமாக (நேரடியாக) இருப்பதால், வெள்ளியானது அபரோக்ஷம் என்பது நிரூபிக்க ஏற்கப்பட்டதாகிறது.

**नन्विदंवृत्ते रजताकारवृत्तेश्च प्रत्येकमेकैकविषयत्वे गुरुमतवद् विशिष्टज्ञानानभ्युपगमे कुतो भ्रमज्ञानसिद्धिरिति चेत्। न। वृत्तिद्वयप्रतिबिम्बितचैतन्यैकस्य सत्यमिथ्यावस्तुतादात्म्यावगाहित्वेन भ्रमस्य स्वीकारात्। अत एव साक्षिज्ञानस्य सत्यासत्यविषयतया प्रामाण्यानियमात् अप्रामाण्योक्तिः साम्प्रदायिकानाम्।**

ஆனால், இது என்கிற விருத்தியும் வெள்ளி ரூபமான விருத்தியும் வெவ்வேறு விஷயத்தினையுடையதானதால் குரு மதத்தைப்போல (பிரபாகர் பூர்வ-மீமாம்ஸை ) **விஷிஷ்ட** (கூடியதான) ஞானத்தினை ஏற்க்காததால் எங்ஙனம் இந்த ஞானமானது பிரமை என்று நிரூபணமாகும் என்றால் , அது தவறு, இருவகை விருத்தியிலும் பிரதிபிம்பமாக உள்ள சைத்தன்யமானது ஒன்றானதால், அதுவே சத்தியம் மற்றும் மித்யா (சிப்பி மற்றும் வெள்ளி) ஆகிய விஷயங்கள்

தாதாத்மியத்தினை அறிவதால் பிரமத்தன்மையானதாக ஏற்க்கப்படுகிறது. அதனாலேயே சாக்ஷி ஞானத்திற்க்கு சத்தியம் மற்றும் அசத்தியமான விஷயங்களை அறிவதானதால் பிரமாணத்தன்மை நியமிக்கப்பட்டதாக இல்லாததாக (அத்வைத) சம்பிரதாயத்தினர் ஏற்கின்றனர்.

**ननु सिद्धान्ते देशान्तरीयरजतमप्यविद्याकार्यमध्यस्तं चेति कथं शुक्तिरूप्यस्य ततो वैलक्षण्यमिति चेत्। न। त्वन्मते सत्यत्वाविशेषेऽपि केषाञ्चित्क्षणिकत्वं केषाञ्चित्स्थायित्वमित्यत्र यदेव नियामकं तदेव स्वभावविशेषादिकं ममापि। यद्वा घटाद्यध्यासे अविद्यैव दोषत्वेनापि हेतुः। शुक्तिरूप्याद्यध्यासे तु काचादयो दोषा अपि। तथा चागन्तुकदोषजन्यत्वं प्रातिभासिकत्वे प्रयोजकम्। अत एव स्वप्नोपलब्धरथादीनामागन्तुकनिद्रादिदोषजन्यत्वात्प्रातिभासिकत्वम्।**

ஆனால், அத்வைத சித்தாந்தத்தில் வேறு இடத்திலுள்ள (வியவாகாரின்) வெள்ளியும் அவித்தையின் காரியமாகவும் கற்பனை செய்யப்பட்டதாகவும் ஏற்பதால் எவ்வாறு சிப்பியில் தோன்றும் வெள்ளியானது அதிலிருந்து வேறுபடும் என்றால், இல்லை, உங்களுடைய மதத்திலும் (நீங்களும்) எவ்வாறு எல்லாவற்றையும் சத்தியம் என்று ஏற்றாலும் ( பானை முதலியவை) சில விஷயங்கள் க்ஷணிகமாகவும் சில நிரந்தரமாகவும் எந்த வகையில் ஏற்கின்றீர்களோ அதே வகையில் எங்களுடைய சித்தாந்தத்திலும் இல்லாவிட்டால், பானை முதலிய அத்யாச விஷயங்களில் அவித்தை மட்டுமே தோஷத்திற்க்கு காரணமாகின்றது. ஆனால் சிப்பியில் தோன்றும் வெள்ளி முதலியவைகளிலோ மினுமினுப்பு முதலியவைகளும் தோஷ காரணமாகின்றது. அதனால் இவ்வாறான நிரந்தரமற்றதான தோஷத்தினால் உண்டாவது பிராதிபாசிகம் என்றாகின்றது. அதனாலேயே கனவில் கானும் ரதம் முதலியவைகள் தூக்கம் முதலிய தோஷத்தினால் உண்டாவது என்பதால் பிராதிபாசிகத்தன்மையடைகின்றது.

**ननु स्वप्नस्थले पूर्वानुभूतरथादेः स्मरणमात्रेणैव व्यवहारोपपत्तौ न रथादिसृष्टिकल्पनं गौरवादिति चेत्। न। रथादेः स्मरणमात्राभ्युपगमे रथं पश्यामि स्वप्ने**

**रथमद्राक्षमित्याद्यनुभवविरोधापत्तेः। अथ रथान् रथयोगान् पथः सृजते इति रथादिसृष्टिप्रतिपादकश्रुतिविरोधापत्तेश्च। तस्मच्छुक्तिरूप्यवत् स्वप्नोपलब्धरथादयोऽपि प्रातिभासिकाः यावत्प्रतिभासमवतिष्ठन्ते।**

ஆனால் கனவு நிலையில் முன்னர் அனுபவித்த ரதம் முதலியவைகளின் நினைப்பினாலேயே அதன் வியவகாரத்தின் நிரூபணமானது உண்டாகும் போது ரதம் முதலியவைகளின் கற்பனை என்று ஏற்பது கௌரவம் (எனப்படும்) தோஷம் ஆகும் என்றால், இல்லை, ரதம் முதலியவை நினைவினாலேயே உண்டாவதாக (தோன்றுவதாக) ஏற்றால், ரதம் காண்கிறேன் , கனவில் ரதத்தினை கண்டேன் முதலிய அனுபவத்திற்க்கு விரோதம் உண்டாகும் . **அத ரதான் ரதயோகான் பத ஸ்ருஜதே** (கனவில் ரதம், குதிரை மற்றும் மார்க்கத்தினை சிருஷ்டிக்கிறார்) என்று ரதம் முதலியவைகளை சிருஷ்டிப்பதாக நிரூபிக்கும் ஷ்ருதிக்கு விரோதமாகவும் ஆகும். அதனால், சிப்பியில் வெள்ளி போன்று கனவில் அடையப்பெறும் ரதம் முதலியவைகளும் பிராதிபாசகமாக, எதுவரை அடையப்பெறுகிறதோ அதுவரை இருக்கின்றது என்றாகும்.

**ननु स्वप्नरथाद्यधिष्ठानतयोपलभ्यमानदेशविशेषस्यापि तदाऽसन्निकृष्टतया अनिर्वचनीयप्रातिभासिकदेशोऽभ्युपगन्तव्यः। तथा च रथाद्यध्यासः कुत्रेति चेत्। न। चैतन्यस्य स्वयंप्रकाशस्य रथाद्यधिष्ठानत्वात्प्रतीयमानं रथाद्यस्तीत्येव प्रतीयते इरि सद्रूपेण प्रकाशमानं चैतन्यमेवाधिष्ठानम्। देशविशेषोऽपि चिदध्यस्तः प्रातिभासिकः। रथादाविन्द्रियग्रह्यत्वमपि प्रातिभासिकम्। तदा सर्वेन्द्रियाणामुपरमात् अहं गजः इत्यादिप्रतीत्यापादनन्तु पूर्ववन्निरसनीयम्।**

ஆனால், கனவில் காணப்படும் ரதம் முதலியவற்றிர்க்கு அடிப்படையான தேசம் முதலியவைகளும் அந்நிலையில் மிகவும் நெருங்கியதாக காணப்படுவதல்லாததால் அதனை **அநிர்வசனீயம்** (கூறமுடியாதது) என்று ஏற்க்கவேண்டியதாகும் . என்பதால் ரதம் முதலியவை எதனில் கற்பனை செய்யப்பட்டது என்றால், தவறு, சைத்தன்யமான தானே ஒளிர்கின்றதான அதனில்

ரதம் முதலியவை ஏற்றிப்பார்க்கப்படுகின்றது என்பதால் ரதம் முதலியவை இருக்கிறது. என்றே நம்மால் அறியப்படுகின்றது என்பதால் இருத்தல் என்கிற ரூபமாக பிரகாசிக்கும் சைத்தன்யமே அதிஷ்டானம் ஆகும். அங்கு காணப்படும் இடம் முதலியவைகளும் சைத்தன்யத்தில் ஏற்றிப்பர்க்கப்பட்டதே (பிராதிபாசிகமே). ரதம் முதலியவை இந்திரியங்களால் அறியப்படுவதும் பிராதிபாசிகமேயாகும். அந்நிலையில் இந்திரியங்களெல்லாம் அடங்கியிருப்பதால் நான் யானை முதலிய தோற்றமெல்லாம் முன்னர் கூறியதுபோல நிராகரிக்கப்படவேண்டும்.

**स्वप्नगजादयः सक्षान्मायापरिणामा इति केचित्। अन्तःकरणद्वारा तत्परिणामा इत्यन्ये।**

கனவில் தோன்றும் யானை முதலியவை மாயையின் பரிணாமமே (மாற்றமே) என்று சிலர் கூறுவர். வேறு சிலரோ அந்தக்கரணத்தின் மூலமாக அதன் மாற்றம் என்பர்.

**ननु गजादेः शुद्धचैतन्याध्यास्तत्वे इदानीमधिष्ठानसाक्षात्काराभावेन जागरणेऽपि स्वप्नोपलब्धगजादयोऽनुवर्तेरन्। उच्यते। कार्यविनाशो हि द्विविधः कश्चिदुपादानेन सह। कश्चिद्विद्यमान एवोपादाने। आद्यो बाधः। द्वितीयस्तु निवृत्तिः। आद्यस्य कारणमधिष्ठानतत्त्वसाक्षारः। तेन विनोपादानभूताया अविद्याया अनिवृत्तेः। द्वितीये विरोधिवृत्त्युत्पत्तिदोषनिवृत्तिश्च। तदिह ब्रह्मसाक्षात्काराभावात् स्वप्नप्रपञ्चो माबाधि। मुसलप्रहारेण घटादेरिव विरोधिप्रत्ययान्तरोदयेन स्वप्नजनकीभूतनिद्रादिदोषनाशेन वा गजादिनिवृत्तौ को विरोधः।**

ஆனால், யானை முதலியவை தூய்மையான சைத்தன்யத்தில் ஏற்றிப்பார்க்கப்பட்டதால், தற்சமயம் அந்த (சைத்தன்யம்) அதிஷ்டானமானது சாக்ஷாத்கரிக்கப்படாததால் விழிப்பு நிலையிலும் கனவில் கண்ட யானை முதலியவை அறியப்படவேண்டும் என்றால் கூறுகிறோம், காரியத்தின்

அழிவானது இரண்டு வகைப்படுகின்றது, உபாதானம் கூடியதாகவும், உபாதானம் அல்லாமலும் என்றும். முதல் வகை **பாதம்** எனப்படுகிறது. இரண்டாவதே **நிவிருத்தி** ஆகும். முதல் வகைக்கு காரணம் அதிஷ்டானத்தின் தத்துவ சாக்ஷாத்காரமே, அதல்லாமல் உபாதானமான அவித்தையானது நிவிருத்தியடைதல் இயலாததால். இரண்டாவது வகைக்கோ விரோதியான ( எதிரான) விருத்தி உற்பத்தியாவதும் தோஷமானது விலகுவதும் காரணமாகும். இங்கு பிரம்மத்தின் சாக்ஷாத்காரமானது உண்டாகாததால் கனவு உலகமானது பாதிக்கப்படுவதில்லை. தடி கொண்டு அடிப்பதால் உடையும் பானையை போல விரோதியான வேறு பிரத்யயம் உண்டாவதால் அல்லது கனவிற்க்கு காரணமான தூக்கம் முதலிய தோஷம் நாசமடைவதாலோ யானை முதலியவை நீங்குவதில் என்ன தடை, (எந்த தடையும் இல்லை என்று பொருள்).

**एवं च शुक्तिरूप्यस्य शुक्त्यवच्छिन्नचैतन्यनिष्ठतूलाविद्याकार्यत्वपक्षे शुक्तिरिति ज्ञानेन तदज्ञानेनसहरजतस्य बाधः। मूलाविद्याकार्यत्वपक्षे तु मूलाविद्याया ब्रह्मतत्त्वसक्षात्कारमात्रनिवर्त्यतया शुक्तित्वज्ञानेनानिवर्त्यतया रजतस्य तत्र शुक्तिज्ञानान्निवृत्तिमात्रं। मुसलप्रहारेण घटस्येव।**

இதுபோலவே சிப்பியில் தோன்றும் வெள்ளியும் சிப்பியோடு கூடிய சைத்தன்யத்திலிருக்கும் (**பஞ்சபாதிகாவினில்**) **தூல அவித்தையின்** காரியத்தன்மையாக ஏற்றால் சிப்பி எனும் ஞானத்தால் அதனில் அஞ்ஞானத்தால் உண்டான வெள்ளியானது **பாதம்** ஆகின்றது. **மூல அவித்தையின்** காரியம் (**விவரணத்தில்**) என்று ஏற்றால் பிரம்ம தத்துவத்தின் சாக்ஷாத்காரத்தினால் மட்டுமே நீங்குவதானதால் சிப்பியின் ஞானத்தால் நீங்காத வெள்ளி என்ற அஞ்ஞானம், அங்கு, சிப்பி ஞானத்தால் **நிவிருத்தி** மட்டும் ஆகிறது, தடி கொண்டு உடைக்கப்பட்ட பானைப்போல்.

**விளக்கம்**

மூல அவித்தையின் ஒரு நிலையே தூல அவித்தை என்பது. அவித்தை, அஞ்ஞானம் பரியாய சொற்களாக ஏற்க்கப்பட்டுள்ளது ( ஒரு

பொருள்படும் பல சொற்கள்) பிரதியோகி - எதன் இன்மையே அது உடையது . பிரதியோகிதாக ( பாத்திரம், பாத்திரத்தன்மை இன்மைக்கு)

**ननु शुक्तौ रजतस्य प्रतिभाससमये प्रातिभासिकसत्त्वाभ्युपगमे नेदं रजतमिति तैकालिकनिषेधज्ञानं न स्यात्। किन्त्विदानीम् इदं न रजतमिति। इदानीं घट। श्यामो नेतिवदिति चेत्। न। न हि तत्र रजतत्वावच्छिन्नप्रतियोगिताकाभावो निशेधधीविषयः। किन्तु लौकिकपारमार्थिकत्वावच्छिन्नप्राति-भासिकरजतप्रतियोगिताकः। व्यधिकरणधर्मावच्छिन्नप्रतियोगिताकाभावाभ्युपगमात्।**

ஆனால் சிப்பியில் வெள்ளி பிராதிபாசமாக தோன்றும் நேரத்தில் பிராதிபாசிகத்தின் இருப்பை ஏற்றால் இது வெள்ளி இல்லை என்று மூன்று காலத்திலும் அதன் நிஷேத ஞானமானது உண்டாவது இயலாது, ஆனால், இப்பொழுது இது வெள்ளி இல்லை, என்றே , இப்பொழுது பானை , கருப்பு நிறமல்ல என்பது போன்று என்றால், தவறு அங்கு வெள்ளித்தன்மை கூடிய இன்மையின் , பாத்திரமாகும் தன்மையின் இன்மை நிஷேதிக்கப்படும் புத்தி விஷயமல்ல, ஆனால், லௌகிக பாரமார்த்திகம் (வியவகாரிக) கூடியதான பிராதிபாசிக வெள்ளியின் இன்மையின் பாத்திரமாகும் தன்மையே உள்ளது, என்பதால், வியதிகரண (சந்தேகமான) தர்மம் கூடிய இன்மையின், பாத்திரமாகும் தன்மையின் இன்மை ஏற்க்கப்பட்டதால்.

**ननु प्रातिभासिके रजते पारमार्थिकत्वमवगतम्। न वा। अनवगमे प्रतियोगितावच्छेदकावच्छिन्नरजततत्त्वज्ञानाभावादभावप्रत्यक्षानुपपत्तिः। अवगमेऽपरोक्षावभासस्य तत्कालीनविषयसत्तानियतत्वाद् रजते पारमार्थिकत्वमप्यनिर्वचनीयं रजतवदेवोत्पन्नमिति तदवच्छिन्नरजतसत्त्वे तदवच्छिन्नाभावस्तस्मिन् कथं वर्तते इति चेत्। न। पारमार्थिकत्वस्याधिष्ठाननिष्ठस्य रजते प्रतिभाससम्भवे रजतनिष्ठपारमार्थिकत्वोत्पत्त्यनभ्युपगमात्। यत्रारोप्यमसन्निकृष्टं तत्रैव**

प्रातिभासिकवस्तूत्पत्तेरङ्गीकारात्। अत एवेन्द्रियसन्निकृष्टतया जपाकुसुमगतलौहित्यस्य स्फटिके भानसंभवाद् न स्फटिकेऽनिर्वचनीयलौहित्योत्पत्तिः।

ஆனால், பிராதிபாசிகமான வெள்ளியில் பாரமார்திகத்தன்மை ஏற்க்கப்பட்டதா, இல்லையா. ஏற்கப்படாவிட்டால், இன்மையின் பாத்திரத்தால் வரையறுக்கப்பட்டதோடு கூடிய வெள்ளியின் ஞானத்தின் இன்மையால் இன்மை பிரத்யக்ஷமானது தோன்றுவது இயலாது. ஏற்றாலோ, நேரடியாக பிரகாசிக்கும் அந்நேரத்தில் விஷயத்தின் இருப்பை ஏற்பதால், வெள்ளியில் பாரமார்த்திகத்தினை போன்று அநிர்வசனீயமானதிலும் வெள்ளியை போன்று உண்டாகும் என்பதால், அது கூடிய வெள்ளியின் (பாரமார்த்திகம் கூடிய) இருத்தல் உள்ளபோது அது கூடிய வெள்ளியின் இன்மை எவ்வாறு ஏற்க்கமுடியும் என்றால், தவறு பாரமார்த்திகமான அதிஷ்டானத்தில் (ஆதாரத்தில்) இருப்பதான வெள்ளியில் பிரதிபாச நிலை இயலும் என்பதால் வெள்ளியில் உள்ள பாரமார்திகமானது தோன்றுவது ஏற்க்கபடுவதில்லை. எங்கு ஏற்றிப்பார்க்கப்படுவது நெருங்கியதாக இல்லையோ அங்கு மட்டுமே பிராதிபாசிகமான விஷயம் உற்பத்தியாவது ஏற்க்கப்பட்டதால். அதானாலேயே இந்திரியங்களுக்கு நெருங்கியதாக (சம்பந்தமுடையதாக) உள்ள செம்பருத்தியின் சிகப்பு நிறமானது ஸ்படிகத்தில் பிரகாசிக்க இயலுகின்றது, இதனால், ஸ்படிகத்தில் அநிர்வசனீயமான சிகப்பு நிறம் தோன்றுவது இல்லை.

नन्वेवं यत्र जपाकुसुमं द्रव्यान्तरव्यवधानादसन्निकृष्टं तत्र लौहित्यप्रतीत्या प्रातिभासिकलौहित्यं स्वीक्रियतामिति चेत्। न। इष्टत्वात्।

ஆனால், எங்கு செம்பருத்தியானது வேறு திரவியத்தினால் பிரிக்கப்பட்டதானதால் நெருங்கியதாக இல்லை, என்பதால், அங்கு சிகப்பு நிறத்தின் தோற்றமானது பிராதிபாசிசம் என்று ஏன் ஏற்பதில்லை என்றால், (நம்முடைய மதத்திற்க்கு) அனுகூலமானதால்.

एवं प्रत्यक्षभ्रमान्तरेष्वपि प्रत्यक्षसामान्यलक्षणाऽनुगमो यथार्थप्रत्यक्षलक्षणासद्भावश्च दर्शनीयः।

இவ்வாறே, மற்ற பிரத்யக்ஷ பிரமைகளிலும் பிரத்யக்ஷத்தின் சாமான்ய லக்ஷணமானது அறியவேண்டும். யதார்த்த பிரத்யக்ஷ லக்ஷணத்தின் இன்மையும் காணப்படவேண்டும்.

उक्तं प्रत्यक्षम् प्रकरन्तरेण द्विविधम्। इन्द्रियजन्यं तदजन्यं चेति। तत्रेन्द्रियाजन्यं सुखादिप्रत्यक्षम्- मनस इन्द्रियत्वनिराकरणात्। इन्द्रियाणि पञ्च। घ्रणरसनचक्षुःश्रोत्रत्वागात्मकानि। सर्वाणि चेन्द्रियाणि स्वस्वविषयसंयुक्तान्येव प्रत्यक्षज्ञानं जनयन्ति।

கூறப்பட்ட பிரத்யக்ஷமானது இரு வகைப்படுகின்றது, இந்திரியத்தால் உண்டாவது, அதனால் (இந்திரியத்தால்) உண்டாவதில்லை என்றும். அங்கு இந்திரியத்தால் உண்டாவதல்லாதது சுகம் முதலியவற்றின் பிரத்யக்ஷம், மனமானது இந்திரியம் என்பது நிராகரிக்கப்பட்டதால் இந்திரியங்கள் ஐந்து வகைப்படும், மூக்கு , நாக்கு, கண் , காது, மற்றும் தோல் என்று. இந்த இந்திரியங்கள் எல்லாம் தங்கள் தங்கள் விஷயத்தோடு கூடியதாக உள்ளபோதே பிரத்யக்ஷத்தினை உண்டு செய்கின்றது.

तत्र घ्राणरसनत्वगिन्द्रियाणि स्वस्थानस्थितान्येव गन्धरसस्पर्शोपलम्भाञ्जनयन्ति। चक्षुःश्रोत्रे तु स्वत एव विषयदेशं गत्वा स्वस्वविषयं गृह्णीतः। श्रोत्रस्यापि चक्षुरादिवत् परिच्छिन्नतया भेर्यादिदेशगमनसम्भवात्। अत एवानुभवो भेरीशब्धो मया श्रुत इति।

அங்கு மூக்கு, நாக்கு மற்றும் தோல் இந்திரியங்கள் தங்களுடைய இடத்தில் இருந்தவாறே வாசனை, சுவை மற்றும் தொடு உணர்ச்சியை அடைவிக்கின்றது. கண் மற்றும் காது இரண்டும் விஷயம் உள்ள இடத்திற்க்கு சென்று தங்கள் தங்கள் விஷயத்தினை அடைகின்றது. காதும் கண்களை போன்று வரையறுக்கப்பட்டதால்

பேரிகை முதலிய சப்தம் உண்டாகும் இடத்திற்க்கு செல்லுதல் இயலும் என்பதால் அதனாலேயே பேரிகையின் நாதம் என்னால் கேட்கப்பட்டது என்னும் அனுபவம் உண்டாகின்றது.

वीचीतरङ्गादिन्यायेन कर्णशष्कुलीप्रदेशेऽनन्तशब्दोत्पत्तिकल्पनागौरवम्। भेरीशब्धो मया श्रुत इति प्रत्यक्षस्य भ्रमत्वकल्पनागौरवं च स्यात्। तदेवं व्याख्यातं प्रत्यक्षम्॥

**வீசிதரங்க நியாயத்தால்** காது மடலின் இடத்தில் வந்து சேரும் பல வகையான சப்தமானது உத்பத்தியாவது எனும் கற்பனை கௌரவ தோஷம் ஆகும். பேரிகையின் சப்தமானது என்னால் கேட்கப்பட்டது எனும் பிரத்யக்ஷமும் பிரமைத்தன்மையின் கற்பனை கௌரவ தோஷமும் ஆகும். இப்படியாக பிரத்யக்ஷமானது நிரூபிக்கப்பட்டது.

## इति प्रत्यक्षपरिच्छेदः॥

## பிரத்யக்ஷ பரிச்சேதம் முற்றும்

# अथ अनुमानपरिच्छेदः

## அனுமான பரிச்சேதம்

अथानुमानं निरूप्यते। अनुमितिकरणमनुमानम्। अनुमितिश्च व्याप्तिज्ञानत्वेनव्याप्तिज्ञानजन्या। व्याप्तिज्ञानानुव्यवसायादेस्तत्त्वेन तज्जन्यत्वाभावान्नानुमितित्वम्।

அடுத்து அனுமானத்தை நிரூபிக்கின்றோம். **அனுமிதியின் கரணம் அனுமானம்** ஆகும் அனுமிதி என்பதோ வியாப்தி ஞானத்தினால் உண்டாவது. வியாப்தி ஞானமான அனுவியவசாயம் முதலியவைகளே வியாப்தி ஞானமானதால் உண்டாவதில்லை என்பதால் அவை அனுமிதித்தன்மையை அடைவதில்லை.

अनुमितिकरणं च व्याप्तिज्ञानं तत्संस्कारोऽवान्तरव्यापरः। न तु तृतीयलिङ्गपरामर्शोऽनुमितौ करणम्। तस्यानुमितिहेतुत्वासिद्ध्या तत्करणत्वस्य दूरनिरस्तत्वात्।

அனுமிதி கரணமோ வியாப்தி ஞானமே அதன் சம்ஸ்காரமோ **அவாந்தர** (இரண்டாவது - முக்கியமற்றது) வியபாரம். **திருதீய** (மூன்றாவது) **பராமர்ஷமானது** அனுமிதிக்கு காரணம் அல.ல என்பது நிரூபிக்கப்படாததால் அது கரணம் என்பதும் நிராகரிக்கப்பட்டதாகிறது.

न च संस्कारजन्यत्वेनानुमितेः स्मृतित्वापत्तिः। स्मृतिप्रागभावजन्यत्वस्य संस्कारमात्रजन्यत्वस्य वा स्मृतित्वप्रयोजकतया संस्कारध्वंससाधारणसंस्कारजन्यत्वस्य तदप्रयोजकत्वात्।

ஆனால் சம்ஸ்காரத்தினால் உண்டாவதால் அனுமிதியானது ஸ்.மிருதியாகும் நிலையுண்டாகாது ஸ்மிருதியின் முன்னின்மையால் உண்டாகும் அல்லது சம்ஸ்காரத்தினால் உண்டாவது என்பது ஸ்மிருதியின் தோன்றலுக்கு காரணமாவதால் சம்ஸ்காரத்தினால் உண்டாவது என்பது அதற்க்கு (ஸ்மிருதிக்கு) காரணமாகாததால்.

न च यत्र व्याप्तिस्मरणादनुमितिस्तत्र कथं संस्कारो हेतुरिति वाच्यम्। व्याप्तिस्मृतिस्थलेऽपि तत्संस्कारस्यैवानुमितिहेतुत्वात्। न हि स्मृतेः संस्कारनाशकत्वनियमः। स्मृतिधारादर्शनात्। न चानुद्बुद्धसंस्कारादप्यनुमित्यापत्तिः। तदुद्बोधस्यापि सहकारित्वात्।

ஆனால் எங்கு வியாப்தியினை நினைவு கூறுவதால் அனுமிதியானது உண்டாகிறதோ அங்கு சம்ஸ்காரம் காரணம் என்பது எவ்வாறு என்று சந்தேகித்தல் கூடாது வியாப்தியினை நினைவு கூறுமிடத்திலும் அதன் சம்ஸ்காரமே அனுமிதிக்கு காரணமாவதால. ஸ்மிருதியானது சம்ஸ்காரத்தினை அழிப்பது என்று ஒரு நியதியும் இல்.லை ஸ்மிருதியின் தாரையானது (ஒட்டமானது) காணப்படுவதால.. தோன்றாத சம்ஸ்காரத்தினாலும் அனுமிதி உண்டாகும் எனக்கூறுவதியலாது அதன் (சம்ஸ்காரத்தின்) தோற்றத்தினையும் உதவிபுரியும் காரணமாக ஏற்க்கப்பட்டதால்.

एवं च अयं धूमवानिति पक्षधर्मताज्ञानेन। धूमो वह्निव्याप्य इत्यनुभवाहितसंस्कारोद्बोधे सति। वह्निमानित्यनुमितिर्भवति। न तु मध्ये व्याप्तिस्मरणं

**तज्जन्यवह्निव्याप्यधूमवानित्यादिविशेषणविशिष्टं ज्ञानं वा हेतुत्वेन कल्पनीयम्। गौरवात् मानाभावाच्च।**

இதனால் இது (மலை) புகையுடையது என்ற **பக்ஷதர்மதா** ஞானத்தினால் புகை நெருப்பின் வியாப்யமாகும் என்ற சம்ஸ்காரம் உற்பத்தியாவதால். நெருப்புடையது (மலை) எனும் அனுமிதியானது உண்டாகின்றது வியாப்தியின் ஸ்மரணமோ அதனால். உண்டான நெருப்பு வியாப்யமான புகையுடையது என்பது முதலான விசேஷணம் கூடியதான ஞானமோ காரணமாக கற்பனை செய்வதுகூடாது கௌரவதோஷம் உண்டாவதலும் எந்த பிரமாணமும் இல்லாததாலும்.

**तच्च व्याप्तिज्ञानं वह्निविषयकज्ञानांश् एव करणम्। न तु पर्वतविषयकज्ञानांश इति पर्वतो वह्निमानिति ज्ञानस्य वह्न्यंश एवानुमितित्वं न पर्वताद्यंशे। तदंशे प्रत्यक्षत्वस्योपपादितत्वात्।**

அந்த வியாப்தி ஞானமும் நெருப்பு விஷயமான ஞானத்தின் அம்சத்தால். மட்டுமே கரணம் ஆகும் மலை விஷயமான ஞானத்தில் இல்லை. மலை நெருப்புடையது எனும் ஞானத்தில் நெருப்பு அம்சத்தில் மட்டுமே அனுமிதியானது உண்டாகின்றது மலை அம்சத்தில் இல்லை. அதன் அம்சத்தில் பிரத்தியக்ஷத்தன்மை நிரூபிக்கப்பட்டதால்.

**व्याप्तिश्च अशेषसाधानाश्रयाश्रितसाध्यसामानाधिकरण्यरूपा। सा च व्यभिचारादर्शने सति सहचारदर्शनेन गृह्यते। तच्च सहचारदर्शनं भूयो दर्शनं सकृद्दर्शनं वेति विशेषो नादरणीयः। सहचारदर्शनस्यैव प्रयोजकत्वात्।**

வியாப்தியும் முழுமையான சாதனங்களை சார்ந்ததை சார்ந்துள்ள சாத்யத்தின் நேரே நிலையில் இருப்பது. அதுவும் வியபிசாரமானது காணப்படாத நிலையில் **சஹசார தர்ஷணத்தினால்** அடையப்படுகிறது. அந்த

**சஹாசாரதர்ஷணமும்** பலமுறை பார்ப்பது அல்லது ஒருமுறை பார்ப்பது என்ற எந்த விசேஷத்தினையும் எதிர்நோக்குவதில்லை. சஹாசாரதர்ஷணம் மட்டுமே பிரயோஜனத்தன்மையுடையது என்பதால்.

**तच्चानुमानमन्विरूपमेकमेव। न तु केवलान्वयि। सर्वस्यापि धर्मस्यास्मन्मते ब्रह्मनिष्ठात्यन्ताभावप्रतियोगित्वेन अत्यन्ताभावाप्रतियोगिसाध्यकत्वरूपकेवलान्वयित्वस्यासिद्धेः।**

அந்த அனுமானம் **அன்வயிரூபமாக** மட்டும் உள்ளது. **கேவலான்வயி** ரூபமில்லை. எல்லா தர்மமும் எங்களுடைய மதத்தில் பிரம்மத்தில் நிலைப்பட்ட நிரந்தர இன்மைக்கு பாத்திரமாக உள்ளதால். நிரந்தர இன்மையின் பாத்திரமல்லாத சாதியத்தினையுடையது கேவலான்வயியானது நிரூபிக்கப்பட இயலாதது.

**नाप्यनुमानस्य व्यतिरेकिरूपत्वम्। साध्याभावे साधनाभावनिरूपितव्याप्तिज्ञानस्य साधनेन साध्यानुमितावनुपयोगात्। कथं तर्हि धूमादावन्वव्याप्तिमविदुशोऽपि व्यतिरेक्व्याप्तिज्ञानादनुमितिः। अर्थापत्तिप्रमाणादिति वक्ष्यामः।**

அனுமானமானது **கேவல வியதிரேகியாகவும்** இருத்தல் இயலாது. சாத்யத்தின் இன்மையில் இருக்கும் சாதனை இன்மையின் வியாப்தி ஞானமானது சாத்யத்தால் சாதியத்தின் அனுமிதியினை செய்வதில் உபயோகமற்றதால். பின் எவ்வாறு புகை முதலிய அன்வய வியாப்தியினை அறியாதவரும்கூட வியதிரேக ஞானத்தினால் அனுமிதியை அடைவார்கள் என்றால் அதற்க்கு விடை அர்த்தாபத்தி பிரமாணத்தினால் என்று கூறுவோம்.

**अत एवानुमानस्य नान्वयव्यतिरेकिरूपत्वं व्यतिरेकव्याप्तिज्ञानस्यानुमित्यहेतुत्वात्।**

அதனாலேயே அனுமானத்திற்க்கு **அன்வயவியதிரேகமுமில்லை**.

ஏனென்றால் வியதிரேகவியாப்தியின் ஞானமானது அனுமிதிக்கு காரணமாக ஏற்க்கப்படாததால்.

तच्चानुमानं स्वार्थपरार्थभेदेन द्विधम्। तत्र स्वार्थं तूक्तमेव। परार्थं तु न्यायसाध्यम्। न्यायो नामावयवसमुदायः। अवयवाश्च त्रय एव प्रसिद्धाः प्रतिज्ञाहेतूदाहरणरूपाः। उदाहरणोपनयनिगमनरूपा वा। न तु पञ्चावयवरूपाः। अवयवत्रयेणैव व्याप्तिपक्षधर्मतयोरुपदर्शनसम्भवेनाधिदावयवद्वयस्य व्यर्थत्वात्।

அந்த அனுமானமும் **ஸ்வார்த்தம்** மற்றும் **பரார்த்தம்** என்று இருவகைப்படுகின்றது. இதனில் ஸ்வார்த்தமானது கூறப்பட்டுவிட்டது. பரார்த்தமோ நியாயத்தினால் (தர்க்கத்தினால்) நிரூபிக்கப்படுவது. நியாயம் என்றால். அவயவ கூட்டம் என்று பொருள். அவயவங்களோ மூன்று வகைப்படுவதாகவே காணப்படுகின்றது - பிரதிஞ்ஞா, ஹேது, உதாஹரணமோ அல்லது உதாஹரணம், உபநயம், நிகமனமோ என்று. அவயவங்கள் ஐந்து வகைப்படும் என்று ஏற்ப்பதில்லை. காரணம் மூன்றவயவங்களாலேயே வியாப்தி பக்ஷதர்மதா ஆகியவைகள் நிரூபிக்கப்படுவது இயலுவதால் அதிகமாக இரண்டு அவயவங்கள் கற்பனை செய்வது அநாவசியமே.

एवमनुमाने निरूपिते तस्माद् ब्रह्मभिन्ननिखिलप्रपञ्चस्य मिथ्यात्वसिद्धिः। तथा हि। ब्रह्मभिन्नं सर्वं मिथ्या ब्रह्मभिन्नत्वाद्यदेवं तदेवं यथा शुक्तिरूप्यम्। न च दृष्टान्तासिद्धिः। तस्य साधितत्वात्। न चाप्रयोजकत्वं शुक्तिरूप्यरज्जुसर्पादीनां मिथ्यात्वे ब्रह्मभिन्नत्वस्यैव लावेन प्रयोजक्त्वात्।

இப்படியாக அனுமானமானது நிரூபிக்கப்பட்ட நிலையில் பிரம்மத்தினைத்தவிர பிரபஞ்சம் முழுவதும் மித்யாத்தன்மையுடையது என்பது நிரூபணமாகின்றது. அதாவது பிரம்மமல்லாதது எல்லாம் மித்யா ஆகும் , பிரம்மல்லாததால் ,எது இவ்வாறு உள்ளதோ அது அவ்வாறு உள்ளது (பிரம்மமல்லாது உள்ளதோ அது மித்யாவாக உள்ளது) , சிப்பியில் தோன்றும்

வெள்ளியைப் போல. கூறப்பட்ட உதாஹரணம் நிரூபணமாகாது என்று கூறுதல் இயலாது. அதனை (மித்யா என்று) முன்னரே (பிரத்யக்ஷத்தில்) நிரூபித்துவிட்டதால் (பிரம்மமல்லாதது எனும் காரணம்) பிரயோஜனத்தன்மை அல்லாதது என்று கூறுவது தவறு சிப்பியில் தோன்றும் வெள்ளி கயரில் தோன்றும் பாம்பு முதலியவைகளில் மித்யாத்தன்மையினை நிரூபிக்க பிரம்மமல்லாதது எனும் காரணமே லாகவமாவதால் பிரயோஜனத்தன்மையுடையதே.

**मिथ्यात्वं च स्वाश्रयत्वेनाभिमतयावन्निष्ठात्यन्ताभावप्रतियोगित्वम्। अभिमतपदं वस्तुतः स्वाश्राप्रसिद्ध्या असम्भवारणाय। यवत्पदमर्थान्तरवारणाय। तदुक्तम् -**

**सर्वेषामेव भावानं स्वाश्रयत्वेन सम्भवे।**
**प्रतियोगित्वमत्यन्ताभावं प्रति मृषात्मता॥**

மித்யாத்தன்மையானது ஸ்வாஷ்ரயமாக (தன்னை சார்ந்ததாக) ஏற்க்கப்பட்டதான எந்தெந்த விஷயமோ (அதிகரணம்) அதனில் இருக்கும் நிரந்தர இன்மையின் பிரதியோகித்தன்மை அபிமதம் (ஏற்க்கப்பட்டது) எனும் சொல்லானது உண்மையில் தன்னை சார்ந்ததாக இருப்பது பிரசித்தமல்லாததால் அசம்பவ தோஷத்தினை நீக்க கூறப்பட்டது. யாவத் (எந்தெந்த) என்கிற சொல்லோ வேறு பொருளை குறிப்பதை தவிர்க்கவே கூறப்பட்டது. இதனையே (**ஸ்ரீ சித்சுகாசாரியாரும்**) -

எல்லா பாவவிஷயங்களும் தன்னை சார்ந்ததாக ஏற்க்கப்பட்டதால்.

அதன் பிரதியோகித்தன்மை அத்யந்தாபாவத்திற்க்கு (நிரந்தரயின்மைக்கு) மித்யாத்தன்மையாவதால்.

**விளக்கம்**

**ஸ்வ** - பானை முதலியவை, **ஆஷ்ரய** - கபாலம் முதலியவை அதனில் (கபாலத்தில்) அதன் நிரந்தர இன்மை இருந்தால். பானையானது அதற்க்கு பிரதியோகி (இன்மைக்கு பாத்திரம்) ஆகின்றது. இதனால் பானை மித்யாத்தன்மை அடைகின்றது என்பது லக்ஷணையின் பொருத்தம்.

இங்கு **அபிமத** என்ற சொல் தரப்படாவிட்டால் எதனை எது உண்மையில் சார்ந்ததாக இருக்கின்றதோ அதன் நிரந்தர இன்மையினை அதனில் காண்பது இயலாது என்பதால் அசம்பவ தோஷம் உண்டாகும். இதனால் உண்மையில் சார்புடையதாக இல்லாமல் சார்புடையதாக ஏற்க்கப்பட்ட விஷயத்திலேயே அதன் நிரந்தர இன்மை இருக்கும். அங்கு மட்டுமே மித்யாத்தன்மையானது நிரூபணமாகும்.

அதுபோல, **யாவத்** (எந்தெந்த) எனும் சொல் தரப்படாவிட்டால் நிரந்தர இன்மையின் பிரதியோகியாக இருந்தபோதிலும் மித்யாத்தன்மையானது நிரூபணமாகாமல் போகும் எனும் அர்த்தாந்தர தோஷம் உண்டாகும். அதாவது, மரத்தில் குரங்கின் சம்யோகத்தினை ஏற்க்கும் இடத்திலும், கிளையால் வரையறுக்கப்பட்ட அதன் நிரந்தர இன்மை உள்ளது இருந்தாலும் அதனை மித்யா என்று கூறுவது சரியல்ல. இதுவே அர்த்தாந்தரம் எனும் தோஷம்.

**यद्वा अयं पटः एतत्तन्तुनिष्ठात्यन्ताभावप्रतियोगी। पटत्वात्। पटान्तरवदित्याद्यनुमानं मिथ्यात्वे प्रमाणम्। तदुक्तम् –**

**अंशिनः स्वांशगात्यन्ताभावस्य प्रतियोगिनः।**
**अंशित्वादितरांशीवद्दिगेषैव गुणादिषु॥**

இல்லையென்றால், இந்த துணி, இதனிலுள்ள நூலிலிருக்கும் நிரந்தர இன்மையின் பிரதியோகி, துணியானதால், மற்ற துணிகளைப்போல என்கிற அனுமானம் மித்யாத்தன்மைக்கு பிரமாணம் இதனையே (**ஸ்ரீ சித்சுகாசாரியாரும்**) –

அவயவங்களில் தன்னுடைய அவயவத்திலுள்ள நிரந்தரயின்மைக்கு பிரதியோகியுள்ளது .

அவயவமானதால் மற்ற அவயவங்கள்போல என்பதுபோன்றே குணம் முதலியவைகளிலும் அறிவு.

**न च घटादेर्मिथ्यात्वे सन् घट इति प्रत्यक्षेण बाधः। अधिष्ठानब्रह्मसत्तायास्तत्र विषयतया घटादेः सत्यत्वासिद्धेः। न च नीरुपस्य ब्रह्मणः कथं चाक्षुषादिज्ञानविषयतेति**

**वाच्यम्। नीरूपस्यापि रूपादेः प्रत्यक्षविषत्वात्। न च नीरूपस्य द्रव्यस्य चक्षुराद्ययोग्यत्वमिति नियमः। मन्मते ब्रह्मणो द्रव्यत्वासिद्धेः। गुणाश्रयत्वं समवायिकारणत्वं वा द्रव्यत्वमिति तेऽभिमतम्। न हि निर्गुणस्य ब्रह्मणो गुणाश्रयता नापि समवायिकारणता। समवायासिद्धे। अस्तु वा द्रव्यत्वं ब्रह्मणः। तथाऽपि नीरुपस्य कलस्येव चाक्षुरादिज्ञानविषयत्वेऽपि न विरोधः।**

பானை முதலியவைகள் மித்யாத்தன்மையானது பானை இருக்கிறது எனும் பிரத்யக்ஷத்தினால் நிராகரிக்கப்படுகிறது என்று கூறக்கூடாது, அதனில் (பானை முதலியவற்றில்) அதிஷ்டானமாக பிரம்மத்தின் இருப்பு உள்ளதால் விஷயமாக பானை முதலியவற்றின் இருத்தல் நிரூபணமாவதில்லை. இதனால், ரூபமல்லாத பிரம்மமானது எவ்வாறு கண்கள் முதலிய இந்திரியத்தினால் அறியப்படும் விஷயமாகிறது என்று கூறக்கூடாது, ரூபமல்லாத ரூபம் முதலியவைகளும் பிரத்யக்ஷ விஷயமாவதால். அப்படியும், ரூபமல்லாத திரவியமகாது கண்கள் முதலியவற்றால் பிரத்யக்ஷமாகும் யோகியத்தன்மையற்றது என்கிற எந்த நியமமும் இல்லை என்றால், எங்களுடைய சிந்தாந்தத்தில் பிரம்மமானது திரவியத்தன்மையுடையது என்று நிரூபணமாகாததால். திரவியமானது, குணங்களுக்கு ஆஷ்ரயமானதோ சமவாயி காரணத்தன்மையுடையதோ என்று உங்களால் ஏற்க்கப்படுகிறது, ஆனால் குணமற்ற பிரம்மத்தில் குணங்களின் ஆஷ்ரயமோ சமவாயிகாரணத்தன்மையோ இருத்தல் இயலாது, சமவாயமானது நிரூபணமாவது இயலாததால். சரி, (ஒரு பேச்சிற்க்கு) பிரம்மமானது திரவியத்தன்மையுள்ளது என்றாலும், ரூபமற்ற பாவமானது போல பிரம்மத்திலும் கண்கள் முதலிய இந்திரியங்களின் ஞான விஷயமாவது ஏற்பதிலும் எந்த விரோதமும் இல்லை.

**यद्वा त्रिविधं सत्त्वम्। पारमार्थिकं व्यावहारिकं प्रातिभासिकं च। पारमार्थिकं सत्त्वं ब्रह्मणः। व्यावहारिकं सत्त्वमाकाशादेः। प्रातिभासिकं सत्त्वं शुक्तिरजतादेः। तथा च घटः सन्निति प्रत्यक्षस्य व्यावहारिकसत्त्वविषयत्वेन प्रामाण्यम्। अस्मिन्पक्षे तु घटादेर्ब्रह्मणि**

निषेधो न स्वरूपेण। किन्तु पारमार्थिकत्वावच्छिन्नप्रतियोगिताकत्वमत्यन्ताभावविशेषणं द्रष्टव्यम्। तस्मादुपपन्नं मिथ्यात्वानुमानमिति।

இல்லையென்றால், மூன்று வகையான இருத்தலானது ஏற்கப்படுகிறது – **பாரமார்திகம், வியாவகாரிகம்,** மற்றும் **பிராதிபாசிகம்** என்றும். பாரமார்திகமான இருத்தல் நிலையானது பிரம்மத்துடையது. வியாவகாரிகமான இருத்தலோ ஆகாயம் முதலியவற்றினுடையது. பிராதிபாசிகமான இருத்தல் சிப்பியில் தோன்றும் வெள்ளி முதலியவற்றில் அதனால், பானை இருக்கின்றது எனும் பிரத்யக்ஷமானது வியவகாரிகமான இருத்தல் உடைய விஷயமாக பிரமாணத்தன்மை அடைகிறது. இந்த நிலையில் பானை முதலியவைகளின் நிராகரணமானது பிரம்மத்தில் சுவரூபமாக செய்யப்படுவதில்லை, ஆனால், பாரமார்திகமாகவே என்பதால் எந்த விரோதமும் இல்லை. அந்த நிலையில் மித்யாத்தன்மையின் லக்ஷணமானது பாரமார்திகத்தன்மை கூடிய பிரதியோகிதா உடையது என்று நிரந்தர இன்மையின் விசேஷணத்தை அறிந்துகொள்ளவேண்டும். அதனால் மித்யாத்தன்மையின் அனுமானமானது நிரூபணமாயிற்று.

## इत्यनुमानपरिच्छेदः ॥

## அனுமான பரிச்சேதம் முற்றும்

# अथोपमानपरिच्छेदः

## உபமான பரிச்சேதம்

अथोपमानं निरूप्यते। तत्र सादृश्यप्रमाकरणमुपमानम्। तथा हि। नगरेषु दृष्टगोपिण्डस्य पुरुषस्य वनं गतस्य गवयेन्द्रियसन्निकर्षे सति भवति प्रतीतिः। अयं पिण्डो गोसदृश इति। तदनन्तरं भवति निश्चयः। अनेन सदृशी मदीया गौरिति। तत्रान्वयव्यतिरेकाभ्यां गवयनिष्ठगोसादृश्यज्ञानं करणं गोनिष्ठगवयसादृश्यज्ञानं फलम्।

அடுத்து உபமானத்தை நிரூபிக்கின்றோம். அங்கு சாதிருஷ்ய (சமானமான) ஞானமான பிரமாவின் கரணம் உபமானம் ஆகும். அதாவது, நகரத்தில் மாடு பிண்டத்தை கண்ட புருஷன் காட்டிற்க்கு சென்றபோது அங்கு கவயம் (காட்டெருமை) இந்திரிய சன்னிகர்ஷம் உண்டாகும்போது அவருக்கு தோன்றுகிறது, இந்த பிண்டமானது மாட்டினை போல உள்ளது என்று. அதன் பின்னர் அவருக்கு நிச்சயமானது உண்டாகிறது. இதனைப்போன்றது என்னுடைய மாடும் என்று. இங்கு நேர்மடையாகவும் எதிர்மடையாகவும் காட்டெருமையிலுள்ள மாட்டின் சாதிருஷ்ய ஞானமானது கரணம் ஆகும், அதனால் மாட்டிலுள்ள காட்டெருமையின் சாதிருஷ்ய ஞானம் பலனாகும்.

न चेदं प्रत्यक्षेण संभवति। गोपिण्डस्य तदेन्द्रियासन्निदर्षात्। नाप्यनुमानेन। गवयनिष्ठगोसादृश्यस्यातल्लिङ्गत्वात्।

இது பிரத்யக்ஷத்தினால் அடையப்படுவதில்லை , மாட்டினுடன் இந்திரிய சேர்க்கையானது அந்நேரத்தில் உண்டாவதினால். அனுமானத்தினாலும் இயலாது, காட்டெருமையிலிருக்கும் மாட்டின் சாதிருஷ்யத்தன்மையானது லிங்கமாக (குறி) இல்லாததால்.

नापि मदीया गौरेतद्गवयतादृशी। एतन्निष्ठसादृश्यप्रतियोगित्वाद्। यो यद्गतसादृश्यप्रतियोगी स तत्सदृशः। यथामैत्रनिष्ठसादृश्यप्रतियोगी चैत्रः मैत्रसदृशः। इत्यनुमानात्तत्संभव इति वाच्यम्। एवं विधानुमानानवतारेऽप्यनेन सदृशी मदीया गौरिति प्रतीतेरनुभवसिद्धत्वात्। उपमिनोमीत्यनुव्यवसायाच्च। तस्मादुपमानं मानान्तरम्।

இதனால், என்னுடைய மாடு இந்த காட்டெருமையை போன்றது இதனில் இருக்கும் சாதிருஷ்யத்தின் பிரதியோகித்தன்மையால், எது எதனில் சாதிருஷ்யத்தின் பிரதியோகியோ அது அதனைப்போன்றது, எப்படி மைத்திரனிலுள்ள சாதிருஷ்யத்தின் பிரதியோகி சைத்திரனில் மைத்திரனைப் போன்றவன் என்கிற அனுமானத்தால் நிரூபணமாகும் என்று கூறுதலியலாது, இதுபோன்ற அனுமானமானது தரப்படாமலேயே இதனைப்போன்றது என்னுடைய மாடும் என்கிற அனுபவம் உண்டாவதால். நான் உபமானம் செய்கின்றேன் என்று ஞானமானது உண்டாவதாலும். அதனால் உபமானம் என்பது வேறு பிரமானம் ஆகும்.

**इत्युपमानपरिच्छेदः॥**

**அனுமான பரிச்சேதம் முற்றும்**

# अथागमपरिच्छेदः

## ஆகம பரிச்சேதம்

अथागमो निरूप्यते। यस्य वाक्यस्य तात्पर्यविषयीभूतसंसर्गो मानान्तरेण न बाध्यते तद्वाक्यं प्रमाणम्। वाक्यजन्यज्ञाने च आकाङ्क्षा योग्यताऽऽसत्तयस्तात्पर्यज्ञानं चेति चत्वारि कारणानि।

அடுத்து ஆகம பிரமானத்தை நிரூபிக்கின்றோம் (ஆகமம் என்பது சப்தபிரமாணம்) எந்த வாக்கியத்தின் தாத்பர்ய விஷயத்தின் சம்பந்தமானது வேறு பிரமாணத்தினால் நிராகரிக்கப்படாமல் இருக்கின்றதோ அந்த வாக்கியம் பிரமாணம் ஆகும். இப்படி வாக்கியத்தினால் உண்டாகும் ஞானத்தில் **ஆகாங்க்ஷா** (எதிர்பார்ப்பு) , **யோக்யத்தன்மை**, **ஆசத்தி** மற்றும் **தாத்பர்யஞானம்** என்று நான்கு காரணங்கள் உள்ளன.

तत्र पदार्थानां परस्परजिज्ञासाविषयत्वयोग्यत्वमाकाङ्क्षा। क्रियाश्रवणे कारकस्य। कारकश्रवणे क्रियायाः। करणश्रवणे इतिकर्तव्यतायाश्च जिज्ञासाविषयत्वात्। अजिज्ञासोरपि वाक्यार्थबोधाद् योग्यत्वमुपात्तम्। तदवच्छेदकं च क्रियात्वकारकत्वादिकमिति नातिव्याप्तिः गौरश्व इत्यादौ। अभेदान्वये च समानविभक्तिकपदप्रतिपाद्यत्वं तदवच्छेदकमिति तत्त्वमस्यादिवाक्येषु नाव्याप्तिः।

அதனில் (நான்கில்) சொற்பொருட்களானது ஒன்று மற்றொன்றின் எதிர்பார்ப்பின் விஷயமாகும் யோக்கியத்தன்மைக்கு **ஆகாங்க்ஷா** என்று பெயர். கிரியையினை (வினைச்சொல்) கேட்க்கும் போதோ பெயர் வேற்றுமையும், வேற்றுமையை கேட்கும்போது **இதிகர்த்தவ்யத்தாவினையும்**

(இதனை செய்யவேண்டும் என்பதும்) அறியும் ஆசை உண்டாகின்றது. அறியும் ஆசையில்லாதவரிலும் சொற்பொருளானது அறியபடுவதால் யோக்கயத்தன்மை தரப்பட்டது. அதன் (யோக்கியத்தன்மை) வரையறைகளானது வினைச்சொல், பெயர்ச்சொல் முதலியவை என்பதால் ஆடு , மாடு முதலிய சொற்தொடரில் அதிவியாப்தி உண்டாவதில்லை. அபேத அன்வயத்தில் ஒரே வேற்றுமையில் கூறப்பட்ட சொற்களானது நிரூபிக்கும் விஷயமே அதன் வரையறை என்பதால் **தத்வமஸி** முதலிய வாக்கியத்தில் அவ்வியாப்தி உண்டதாவதில்லை.

## விளக்கம்

அதாவது, வினைச்சொல்லும் பெயர்சொல்லும் வரையறைகளாக ஏற்பதால், மாட்டினை கொண்டுவா முதலிய வாக்கியத்தில் வினையும், பெயர்சொல்லும் ஒன்று மற்றொன்றின் எதிர்பார்பினை நீக்குவதால் மாட்டினை என்று கேட்டபோது என்ன செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்க்கு கொண்டுவா என்றும், கொண்டுவா என்னும் சொல்லின் எதிர்பார்பான எதனை என்பதற்க்கு மாட்டினை என்னும் சொல்லும் எதிர்பார்பினை நீக்குவதாக உள்ளதால் அதனை வரையறைகளாக ஏற்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. அதுமட்டுமல்லாது, இதுபோன்ற வரையறைகள் இல்லாத ஆடு , மாடு , குதிரை என்று கூறப்பட்ட வாக்கியத்தில் எதிர்பார்பினை நீக்க எந்த வினைச்சொல்லும் இல்லாததால் அதனால் வாக்கியத்தின் ஞானமும் உண்டாகாது இல்லை என்பதால் அந்த வாக்கியத்தில் அதிவியாப்தி தோஷம் உண்டாகாது.

இதனால், நீலதாமரை, தத்வமஸி முதலிய வாக்கியத்திலும் எல்லாம் முதல் வேற்றுமையிலே இருப்பதால் அங்கும் வரையறைகளான பெயர் வேற்றுமை, வினை வேற்றுமைகள் இல்லாததால் அது பொருள்தர சாமர்த்தியம் இல்லாது போகும் என்பதால் அவ்வியாப்தி தோஷம் உண்டாகும் என்றால், அதுசரியல்ல , எங்கு **அபேத அன்வயமானது** அதாவது சம்பந்தமானது பிரிவற்ற விஷயத்தினை குறித்து உள்ளதோ அங்கு யோக்கியத்தன்மையை நிரூபிக்க வினை, பெயர் வேற்றுமைகளின் வரையறைகளானது அவசியமில்லை சொற்களின் தாத்பர்யமே வரையறைகளாக இருப்பதால்.

**एतादृशाकाङ्क्षाऽभिप्रायेणैव बलाबलाधिकरणे सा वैश्वदेव्यामिक्षा वाजिभ्यो वाजिनम् इत्यत्र वैश्वदेवयागस्यामिक्षाऽन्वितत्वेन न वाजिनाकाङ्क्षेत्यादिव्यवाहारः।**

இந்த ஆகாங்க்ஷாவினை குறிப்பதாகவே (பூர்வ-மீமாம்ஸா தர்ஷணத்தின்) **பலாபல அதிகரணத்தில் - ஸா வைஷ்வதேவ்யாமிக்ஷா வாஜிப்யோ வாஜினம்** (அந்த ஆமிஷாவானது விஷவதேவனுடையதும் வாஜினானது வாஜிதேவதையுடையதும் ஆகும்) என்பதில் வைஷ்வதேவ யாகத்தினுடையது **ஆமிக்ஷா** என்பது நிரூபனமாவதால் அங்கு வாஜினுடைய எதிர்பார்ப்பு இல்லை என்று வியவகாரமானது காணப்படுவதால்.

**விளக்கம்**

சூடான பாலில் தயிரினை இடுவதால் அது கெட்டுபோகின்றது. அதனில் கட்டியானபாகமே **ஆமிஷா** என்பதும். நீரான பாகம் **வாஜின்** என்பதும் ஆகும் இரண்டும் எவ்வாறு தேவதைகளுக்கு என்று கூறப்பட்ட வாக்கியத்தால் நிருபணமாகின்றது.

**ननु तत्रापि वाजिनस्य जिज्ञासाऽविषयत्वेऽपि तद्योग्यत्वमस्त्येव। प्रदेयद्रव्यत्वस्य यागनिरूपितजिज्ञासाविषयतावच्छेदकत्वादिति चेद्। न। स्वसमानजातीयपदार्थान्वयबोधविरहसहकृतप्रदेयद्रव्यत्वस्यैव तदवच्छेदकत्वेन वाजिनद्रव्यस्य स्वसमानजातीयामिक्षाद्रव्यान्वयबोधसहकृतत्वेन तादृशावच्छेदकाभावात्। आमिक्षायां तु नैवं। वाजिनाऽन्वयस्य तदाऽनुपस्थितत्वात्।**

ஆனால், இப்படி **தப்தே பயஸி** (சூடான பாலில்) என்னும் வாக்கியத்திலும் வாஜினினை குறித்த ஆசையானது இல்லாதபோதிலும் அங்கு அதன் யோக்கியத்தன்மையானது உள்ளது என்பது நிச்சயமே யாகத்திதல் கொடுக்கப்படுவதானதால் அது யாகத்தினில் நிச்சயமாகும் (உபயோகமாகும்) விஷயமான ஆசை இருப்பதால் என்றால் அது சரியல்ல, தன்னுடைய சமான ஜாதியையுடைய பொருளானது நேர்மடையாக அறியப்படுவது இன்மையால்

அது கூடியதான யாகத்தில் இடப்படும் திரவியமானதினையே யோக்கியத்தன்மையின் வரையறையாக ஏற்பதால் வாஜின் திரவியமே தன்னுடைய சமான ஜாதியான ஆமிக்ஷா திரவியத்துடன் நேர்மடையாக சம்பந்தப்படுவது என்பது வரையறை ஆகாததால். ஆமிக்ஷாவானது இவ்வாறு இல்லாததால் வாஜினானது நேர்மடையாக சம்பந்தப்படுவது என்பது இல்லாததால்

## விளக்கம்

முன்பு கூறப்பட்டபடி வாஜி என்பது விஷ்வதேவ தேவரை சம்பந்தப்பட்டது என்பதால், அப்படிப்பட்டதாகவே அது வாக்கிய பிரமாணத்தால் நிரூபணமாவதால், அது இரண்டினையும் வாஜின் மற்றும் ஆமிக்ஷாவினை விஷ்வதேவ சம்பந்தப்பட்டதாகவோ அல்லது விகல்பமாகவோ இங்கு ஏற்கலாம் எனும் பூர்வபக்ஷியின் வாதம் சரியல்ல காரணம் விஷ்வதேவம் சம்பந்தப்பட்டது வைஷ்வதேவம் எனும் பொருளில் ஆமிக்ஷாவானது ஷ்ருதி பிரமாணத்தால் விஷ்வதேவ சம்பந்தப்பட்ட யாகத்தில் நிச்சயமாவதால் ஷ்ருதியானது எல்லா பிரமாணத்தினை காட்டிலும் (வாக்கியம் முதலிய) பலமுடையதாலும் (அதிகம் கற்பனை செய்ய அவசியமில்லாததால் **வினியோகம்** (செயல்) சீக்கிரம் நடக்கும் என்பதால்) வாஜியானது அந்த தேவதைக்கு திரவியமாக ஏற்கமுடியாது யாகமானது திரவியம் மற்றும் தேவதை என்று இரண்டு ரூபமுடையதால், இங்கு தேவதையானது விஷ்வதேவனின் என்று ஷ்ருதியில் நிச்சயமாகும் போது அதற்குரிய திரவியத்தினை குறித்த எதிர்பார்ப்பு உண்டாகும் போது ஆமிக்ஷாவே அதனை பூர்த்தி (முழுமை) செய்கின்றது. இப்படி வாஜின் திரவியத்தினுடைய எதிர்பார்ப்பானது ஒன்று மற்றொன்றினை தீர்ப்பதாக இல்லாததால் அது திரவியமாக விஷ்வதேவன் சம்ப்நதப்பட்ட யாகத்தில் ஏற்பதில்லை.

ஆனால், யாகம் என்பதின் லக்ஷணம் தேவதையை உத்தேசித்து செய்யப்படும் திரவியத்தின் தியாகமே என்பதால், ஆமிக்ஷா போன்றே வாஜினினுடைய தியாகமும் யாகத்தின் சுவரூபத்தினை நிரூபிக்கும் என்பதால் அப்படிப்பட்ட தியாகிக்கப்படும் திரவியமே யாக சம்பந்தப்பட்ட எதிர்பார்பினை நீக்குவதாக இருப்பதால், இங்கு ஆமிக்ஷாவினை போன்று வாஜினும் திரவியமாகும் தன்மை (யோக்கியத்தன்மை) உடையதே என்றால். அப்படிப்பட்ட

யோக்கியத்தன்மை நிச்சயிக்கும் வரையறையை வேதாந்த சிந்தாந்தத்தில் ஏற்பதில்லை அப்படியல்லாமல் தன்னுடைய சமமான ஜாதியுடைய பதார்த்ததுடன் நேர்மடையாக சம்பந்தமற்றதாகவே ஏற்கின்றோம். அதாவது, யாகத்தில் திரவிய வினியோகத்தினை செய்யும்போது அதன் சமான ஜாதியுடைய திரவியமானது முன்பே சம்பந்தப்படுத்தப்பட்டதா என்று பார்க்கவேண்டும். சம்பந்தப்படாவிட்டால் மட்டுமே அது திரவியத்தன்மை அடையும்.

उदाहरणान्तरेष्वपि दुर्बलत्वप्रयोजक आकाङ्क्षाविरह एव द्रष्टव्यः।

இப்படியே மற்ற உதாரணங்களிலும் பலம் குன்றியதான எதிர்பார்பின் இன்மையே இருப்பது காணப்படவேண்டும்.

**योग्यता च तात्पर्यविषयीभूतसंसर्गाबाधः। वह्निना सिञ्चतीत्यादौ तादृशसंसर्गबाधान्न योग्यता। स प्रजापतिरात्मनो वपामुदखिदत् इत्यादावपि तात्पर्यविषयीभूतपशुप्राशस्त्याबाधाद् योग्यता। तत्त्वमस्यादिवाक्येष्वपि वाच्याभेदबाधेऽपि लक्ष्यस्वरूपाभेदेबाधाभावाद् योग्यता।**

யோக்கியத்தன்மையானது தாத்பர்யவிஷயமான சம்பந்தமானது பாதிக்கப்படாமலிருப்பதே ஆகும். **வன்னினா சிஞ்சதி** (நெருப்பினால் தெளிக்கிறார் ) முதலியவைகளில் அப்படிப்பட்ட சம்பந்தம் பாதிக்கப்படுவதால் அது யோக்கியத்தன்மையுடையது இல்லை அதுபோல **பிரஜாபதிராத்மனோ வபாமுதகிதத்** (பிரஜாபதியினால் தன்னுடைய வயிற்றை கிழித்து) என்று கூறுமிடத்தில் தாத்பர்யமான பசு யாகத்தினை போற்றி கூறுதல் என்பது இருப்பதால் அங்கு யோக்கியத்தன்மை உள்ளது **தத்வமஸி** முதலிய வாக்கியத்திலும் சொற்பொருட்களின் பிறிவற்றதன்மையானது (பிரத்யக்ஷமாக) பாதிக்கப்பட்டாலும், லக்ஷியமான ஸ்வரூபத்தில் அந்த பிரிவற்றதன்மையானது பாதிக்கப்படாமல் இருப்பதாலும் யோக்கியத்தன்மை உள்ளது.

आसत्तिश्चाव्यवधानेन पदजन्यपदार्थोपस्थितिः। मानान्तरोपस्थापितपदार्थस्यान्वय-बोधाभावात्पदजन्येति। अत एवाश्रुतपदार्थस्थले तत्तत्पदाध्याहारः द्वारमित्यादौ पिधेहि इति। अत एव इषेत्वा इत्यादिमन्त्रे छिनद्मि इति पदाध्याहारः। अत एव विकृतिषु सूर्य्याय जुष्टं निर्वपामि इति पदप्रयोगः।

ஆசத்தி என்பதே இடைவெளியில்லாது உபயோகிக்கப்பட்ட பதத்தினால் உண்டாகும் அதன் சொற்பொருளின் அறிவேயாகும் வேறு பிரமாணங்களினால் உபயோகிக்கப்பட்ட சொற்களின் பொருளானது (ஒன்றுமற்றொன்றோடு) சம்பந்தப்படாது என்பதால் சொல்லினால் உண்டான (பதஜன்ய) என்னும் சொல்தரப்பட்டது இதனாலேயே கூறப்படாத சொற்களும்கூட அந்தந்த இடங்களில் தானாகவே எடுத்துக்கொள்ளப்படுகின்றது. அதாவது கதவு என்பதில் மூடவும் (திறக்கவும் என்றோ) இதுபோலவே, **இஷேத்வா** என்கிற மந்திரத்திலும் **சினத்மி** (வெட்டுகிறேன்) என்கிற சொல் எடுத்துக்கொள்ளப்படுகிறது அதுமட்டுமல்லாது விகிருதி கர்மத்தில் **சூர்யாய ஜூஷ்டம் நிர்வபாமி** (சூர்யனுக்கு இந்த ஹவிசை (அன்னத்தை) நீக்கிவைக்கிறேன்) என்று சொல் பிரயோகமாகின்றது.

## விளக்கம்

அக்னிக்கு செய்யப்படும் கர்மமானது **பிரகிருதி** (மூலம்) ஆகும் அங்கு அக்னிதேவனுக்கு ஹவிசன்னத்தை நீக்கிவைப்பதுபோல சூர்யனுக்கு செய்யப்படும் **விகிருதி** (மாற்றம்) யாகத்தில் அக்னிக்கு பதில் சூர்யன் என்றும் நான்காம் வேற்றுமை சொல் உபயோகிக்கப்படுகின்றது

पदार्थश्च द्विविधः शक्यो लक्ष्यश्चेति। तत्र शक्तिर्नामपदानामर्थेषु मुख्या वृत्तिः। यथा घटपदस्य पृथुबुध्नोदराद्याकृतिविशिष्टे वस्तुविशेषे वृत्तिः। सा च शक्तिः पदार्थान्तरम्। सिद्धन्ते कारणेषु कार्य्यानुकूलशक्तिमात्रस्य पदार्थान्तरत्वात्।

பாதார்தமானது (சொற்பொருள்) இரண்டு வகைப்படும் **சக்யம்** மற்றும்

**லக்ஷ்யம்** என்றும். அதாவது, பதத்தின் எந்த பொதுவான முக்கியபொருளோ அதுவே சக்தி எனப்படுகிறது. உதாரணத்திற்கு பானை எனும் சொல் உருண்ட அடிபாகத்தையுடைய வாயுடைய ஆகாரம் கூடியதான ஒரு பொருளுக்கு பெயராவது போல. இந்த சக்தி என்பது ஒரு தனி பதார்த்தம் ஆகும் சித்தாந்தத்தில் காரணத்தில் காரியத்திற்க்கு அனுகூலமான சக்திகளையே வேறு பதார்த்தமாக ஏற்பதால்.

**सा च तत्तत्पदजन्यपदार्थज्ञानरूपकार्य्यानुमेया। तादृशशक्तिविषयत्वं शक्यत्वम्। तच्चजातेरेव। न व्यक्तेः। व्यक्तीनामानन्यत्वेन गुरुत्वात्। कथं तर्हि गवादिपदाद् व्यक्तिभानमिति चेत्। जातेर्व्यक्तिसमानसंवित्संवेद्यत्वादिति ब्रूमः।**

அதுவும் அந்தந்த சொல்லினால் உண்டாகும் சொற்பொருளின் ஞானம் எனும் காரியத்தினால் அனுமானம் செய்யப்படுவது ஆகும். இப்படிப்பட்ட சக்தி விஷயமே **சக்யம்** எனப்படுகிறது. அது ஜாதியையே குறிப்பதாகும் தனியொரு வியக்தியை அல்ல. வியக்திகள் பல என்பதால் கௌரவ தோஷம் உண்டாகும் என்பதால், பின் எவ்வாறு மாடு என்னும் சொல்லினால் அதன் வியக்தியானது அறியப்படுகிறது என்றால், ஜாதியும் வியக்தியும் சமமான (ஒரே) ஞானத்தினால் அறியப்படுவதால் என்று கூறுவோம்.

**यद्वा। गवादिपदानां व्यक्तौ शक्तिः स्वरूपसती। न तु ज्ञाता हेतुः। जातौ तु ज्ञाता। न च व्यक्त्यंशे शक्तिज्ञानमपि कारणं। गौरवात् जातिशक्तिमत्त्वज्ञाने सति व्यक्तिशक्तिमत्त्वज्ञानं विना व्यक्तिधीविलम्बाभावाच्च।**

இல்லாவிட்டால், மாடு முதிலய சொற்களுக்கு சக்தியானது வியக்தியின் சுவரூபமாக உள்ளது, அறியப்பட்டதாக இல்லை. ஆனால் ஜாதியிலோ அது அறியப்பட்டதாக இருக்கிறது. வியக்தி அம்சத்திலும் ஜாதியைபோல சக்தி ஞானமானது காரணம் என்பது இல்லை, கௌரவதோஷம் உண்டாகும் என்பதால், ஜாதியில் சக்தியின் ஞானத்தினை அடையும் நிலையில் வியக்தியில் சக்தியின் ஞானமானது இல்லாமலே வியக்தியின் ஞானமானது உடனேயே

உண்டாவதாலும்.

अत एव न्यायमतेऽप्यन्वये शक्तिः स्वरूपसतीति सिद्धान्तः। ज्ञायमानशक्तिविषयत्वमेव वाच्यत्वमिति जातिरेव वाच्या।

அதனாலேயே நியாய சித்தாந்தத்திலும் சொற்பொருளின் சம்பந்தத்தில் சக்தியானது சுவரூபமாகவே உள்ளது என்று ஏற்கப்பட்டுள்ளது. அறிபடுபொருளின் சக்தியின் விஷயமே அதன் **வாச்சியம்** எனப்படும் என்பதால் ஜாதியே வாச்சியமாகும் (வாச்சியம் – ஷக்யம்)

अथवा व्यक्तेर्लक्षणयाऽवगमः। यथा नीलो घट इत्यत्र नीलशब्दस्य नीलगुणविशिष्टे लक्षणा। तथा जातिवाचकस्य तद्विशिष्टे लक्षणा। तदुक्तम् अनन्यलभ्यो हि शब्दार्थः इति। एवं शक्यो निर्प्पितः।

இல்லாவிட்டால், இவ்வாறு ஏற்கலாம், வியக்தியினை (தனி விஷயத்தினை) லக்ஷணையினால் அறியாலாம் எனறு உதாரணத்திற்க்கு நீலபானை என்பதில் நீலம் எனபது நீல குணத்தையுடையதில் லக்ஷணையானது போல, ஜாதி வாசகமானது அது கூடியதில் (ஜாதி) லக்ஷணை என்று ஆகும். இங்ஙனம் கூறப்பட்டுமுள்ளது, **அன்னய லப்யோ ஹி ஷப்தார்த்த** (வேறு முறையால் அறியப்படாததே சப்தத்தின் பொருள்) என்று இவ்வாறு ஷக்யமானது நிரூபிக்கப்பட்டது.

अथ लक्ष्यपदार्थो नीरूप्यते। तत्र लक्षणाविषयो लक्ष्यः। लक्षणा च द्विधा केवललक्षणा लक्षितलक्षणा चेति। तत्र शक्यसाक्षात्सम्बन्धः केवललक्षणा। यथा गङ्गायां ोष इत्यत्र प्रवाहसक्षात्सम्बन्धिनि तीरे गङ्गापदस्य केवललक्षणा। यत्र शक्यपरम्परासम्बन्धेनार्थान्तरप्रतीतिस्तत्र लक्षितलक्षणा यथा द्विरेफपदस्य रेफद्वये शक्तस्य

भ्रमरपदटितपरम्परासम्बन्धेन मधुकरे वृत्तिः। गौण्यपि लक्षितलक्षणैव। यथा सिंहो माणवक इत्यत्र सिंहशब्दवाच्यसम्बन्धिक्रौर्य्यादिसम्बन्धेन माणवकस्य प्रतीतिः।

அடுத்து லக்ஷயதின் பொருளை நிரூபிக்கிறோம். அங்கு லக்ஷணையின் விஷயமே லக்ஷயம் ஆகும். இந்த லக்ஷணையும் இரண்டு வகைப்படும் **கேவல லக்ஷணை** மற்றும் **லக்ஷித லக்ஷணை** என்று. இதனில் ஷக்யத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டது கேவல லக்ஷணா ஆகும். உதாரணத்திற்க்கு, கங்கையில் குடில் எனும் வாக்கியத்தில் கங்கை பிரவாகத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட கரையில் கங்கா எனும் சொல்லின் கேவல லக்ஷணா ஆகும். எங்கு, எந்த வாக்கியத்தில். ஷக்யத்துடன் பரம்பரையான சம்டபந்தத்துடன் வேறு ஒரு பொருளானது நமக்கு விளங்குகின்றதோ அதனை லக்ஷித லக்ஷணா என்பர். உதாரணத்திற்க்கு, **த்விரேப** எனும் சொல்லானது இரண்டு **ரேஃபங்கள்** (ரகாரம்) எனும் ஷக்ய பொருள் உண்டானாலும் **பிரமரம்** (தேனீ) எனும் சொல்லில் லக்ஷணா சம்பந்தம் அடைகிறது (பிரமரம் என்பதில் இரண்டு ர உள்ளதால்) அவ்வாறு பரம்பரை சம்பந்தத்தினால் அது தேனீயில் விருத்தி உண்டாவது லக்ஷிதலக்ஷணா ஆகும். கௌனி (முக்கியமற்ற) விருத்தியும் லக்ஷிதலக்ஷணையேயாகும். உதாரணத்திற்க்கு. **சிம்ஹோ மானவக** (இந்த மாணவன் சிங்கம்) எனுமிடத்தில் சிங்கம் எனும் சொல்லின் பொருளானது அது சம்பந்தப்பட்ட வீர, தீரத்தன்மையில் சம்பந்தபட்டதாக மாணவனுடைய தன்மை காணப்படுகிறது.

प्रकारान्तरेण लक्षणा त्रिविधा जहल्लक्षणा। अजहल्लक्षणा। जहदजहल्लक्षणा चेति। तत्र शक्यमनन्तर्भाव्य यत्रार्थान्तरप्रतीतिस्तत्र जहल्लक्षणा। यथा विषं भुङ्क्ष्वेत्यत्र स्वार्थंविहाय शत्रुगृहे भोजननिवृत्तिर्लक्ष्यते। यत्र शक्यार्थमन्तर्भाव्यैवार्थान्तरप्रतीतिस्तत्राजहल्लक्षणा। यथा शुक्लो घट इत्यत्र हि शुक्लशब्दः स्वार्थं शुक्लगुणमन्तर्भाव्यैव तद्वति द्रव्ये लक्षणया वर्तते।

இந்த லக்ஷணையானது மூன்று வகைப்படுகின்றது. **ஜகத் லக்ஷணை, அஜகத் லக்ஷணை** மற்றும் **ஜகத்அஜகத் லக்ஷணை** (விட்ட , விடாத ,

விட்டும்விடாத லக்ஷணை) என்று. அதனில் எங்கு நேரடியான பொருளை ஏற்க்காமல் வேறு பொருளானது ஏற்க்கப்படுகிறதோ அது ஜகத் லக்ஷணையாகும். உதாரணத்திற்க்கு, விஷத்தை சாப்பிடு எனுமிடத்தில் நேரடியான பொருளை ஏற்க்காமல் எதிரியின் வீட்டில் உணவு அருந்துவது நிராகரிக்கப்படுகிறது. எங்கு நேரடிபொருளானது கொண்டு வேறு விஷயமானது குறிக்கப்படுகிறதோ அது அஜகத் லக்ஷணையாகும் உதாரணத்திற்க்கு, வெள்ளை பானை எனுமிடத்தில் வெள்ளை எனும் சொல்லின் பொருளை கொண்டே அப்படிப்பட்ட குணமுடைய திரவியத்தை லக்ஷணையால் குறிப்பிடப்படுகிறது.

**यत्र हि विशिष्टवाचकः शब्दः एकदेशं विहाय एकदेशे वर्तते तत्र जहदजहल्लक्षणा। यथा सोऽयं देवदत्त इति। अत्र हि पदद्वयवाच्ययोर्विशिष्टयोरैक्यानुपपत्त्या पदद्वयस्य विशेष्यमात्रपरत्वम् यथा वा तत्त्वमसीत्यादौ तत्पदवाच्यस्य सर्वज्ञत्वादिविशिष्टस्य त्वंपदवाच्येनान्तःकरणविशिष्टेनैक्यायोगादैक्यसिद्ध्यर्थं स्वरूपे लक्षणेति साम्प्रदायिकाः।**

எங்கு விசேஷம் கூடியதான வாக்கியத்தின் ஒரு பாகத்தை விடுத்து மற்றொரு பாகத்தினை மட்டும் குறிப்பாக உள்ளதோ அது ஜகத்-அஜகத் லக்ஷணையாகும். உதாரணத்திற்க்கு அவன் இந்த தேவத்தத்ன் எனுமிடத்தில் இங்கு இரண்டு சொற்க்களால் குறிக்கப்பட்டதான (தேவதத்தன்) ஒரு பொருளில் இருத்தல் இயலாது என்பதால் அதனால் குறிக்கப்பட்ட விஷயத்தை மட்டுமே கூறுவதாக உள்ளது அதுபோல, **தத்வமஸி** (அது நீ ஆவாய்) முதலிய வாக்கியத்தில் **தத்** எனும் சொல்லால் குறிப்பிடப்பட்ட சர்வஞ்ஞன் முதலிய குணம் கூடிய சைத்தன்யமும் த்வம் என்பதால் குறிப்பிடபட்ட அந்தக்கரணம்கூடிய சைத்தன்யமும் ஓரிடத்தில் இருத்தல் இயலாது என்பதால் அதன் ஒருமையை நிரூபிக்க அதன் ஸ்வரூபத்தில் லக்ஷணையினை சம்பிரதாயிகர்கள் ஏற்கின்றனர்.

**वयन्तु ब्रूमः सोऽयं देवदत्तः। तत्त्वमसीत्यादौ विशिष्टवाचकपदानामेकदेशपरत्वेऽपि न लक्षणा। शक्त्युपस्थितयोर्विशिष्टयोरभेदान्वयानुपपत्तौ विशेष्ययोः शक्त्युपस्थितयोरेवाभेदान्वया**

**अविरोधात्। यथा घटोऽनित्य इत्यत्र घटपदवाच्यैकदेशघटत्वस्यायोग्यत्वेऽपि योग्यघटव्यक्त्या सहानित्यत्वान्वयः। यत्र पदार्थैकदेशस्य विशेषणतयोपस्थितिः। तत्रैव स्वातन्त्र्येणोपस्थितये लक्षणाऽभ्युपगमः। यथा घटो नित्य इत्यत्र घटपाद्धटत्वस्य शक्त्या स्वातन्त्र्येणानुपस्थित्या तादृशोपस्थित्यर्थं घटपदस्य घटत्वे लक्षणा।**

நாங்களோ அவன் இந்த தேவதத்தன் , **தத்வமஸி** முதிலயவைகளில் விசேஷனத்தினால் கூடிய பதங்களின் ஒருபாகத்தினை மட்டும் ஏற்றாலும் அதனில் லக்ஷணையினை ஏற்பதில்லை. சக்திவிருத்தியாக உள்ள விஷிஷ்டமான பொருளானது பிரிவின்மையை போதிக்காதபோதும் சக்திவிருத்தியாக உள்ள விசேஷியமானது பிரிவற்ற நிலையினை அடைவதில் எந்த விரோதமும் இல்லை. உதாரணத்திற்க்கு, பானை அநித்தியம் எனுமிடத்தில் பானை எனும் சொல்லின் ஒரு பாகமான பானைத்தன்மை கூடிய பானையில் யோக்கியமில்லாத போதும் யோக்கியத்தன்மையுடைய பானையில் அநித்தியத்தன்மையானது சம்பந்தப்படுவதினைப்போல எங்கு சொற்பொருளின் ஒரு பகுதியானது விசேஷனமாக (குறிப்பாக) இருக்கிறதோ அங்கு மட்டுமே சுதந்திரமாக இருக்குமதுடன் லக்ஷணையுனை ஏற்கிறோம். உதாரணத்திற்க்கு பானை நித்தியம் எனுமிடத்தில் பானை என்கிற சொல்லால் பானைத்தன்மையானது சக்தி விருத்தியினால் சதந்திரமாக இருப்பதால் அப்படிப்பட்ட நிலைக்கு பானை என்ற சொல்லில் பானைத்தன்மை லக்ஷணையாகின்றது.

**एवमेव तत्त्वमसीत्यादिवाक्येऽपि लक्षणा। शक्त्या स्वातन्त्र्येणोपस्थितयोस्तत्त्वंपदार्थयोरभेदान्वये बाधकाभावात्। अन्यथा गेहे घटो घटे रूपं घटमानयेत्यादौ घटत्वगेहत्वादेर्भिमतान्वयबोधायोग्यतया तत्रापि घटादिपदानां विशेष्यमात्रपरत्वं लक्षणयैव स्यात्। तस्मात्तत्वमसीत्यादिवाक्येषु आचार्याणां लक्षणोक्तिरभुपगमवादेन बोध्या।**

இதுபோலவே **தத்வமஸி** முதலிய வாக்கியத்திலும் லக்ஷணை ஆகிறது.

சக்திவிருத்தியால் சுதந்திரமாக இருக்கும் **தத்** மற்றும் **த்வம்** சொற்பொருளானது பிரிவற்றதாக சம்பந்தபடுவதில் எந்த விரோதமும் இல்லாததால் இல்லையென்றால் வீட்டில் பானை, பானையின் ரூபம் பானையைக் கொண்டுவா முதலியவற்றில் பானைத்தன்மை, வீட்டுத்தன்மை முதலியவற்றில ,ஏற்கபட்ட சம்பந்தமானது உண்டாவது இயலாததால் அங்கும்கூட பானை முதலிய சொற்களுக்கு விசேஷ்யத்தில் (குறிக்கபட்டதில்) மட்டும் லக்ஷணை உண்டாகும் என்பதால் **தத்வமஸி** முதலிய வாக்கியத்தில் ஆச்சாரியாகள் லக்ஷணையினை **அப்யுபகமவாதத்தினால்** ஏற்கின்றனர் என்ற அறியவேண்டும்.

## விளக்கம்

**அப்யுபகமவாதம்** என்றால் **வாதிபலபரீக்ஷனார்த்தம் அநிஷ்டஸ்வீகாரம்** , அதாவது வாதிக்கும் வாதிகளின் பலத்தை பரீக்ஷித்து பார்க்க தமக்கு விருப்பமல்லாத விஷயத்தையும் ஏற்பது அப்யுபகமவாதம் எனபடுகிறது.

**जहदजहल्लक्षणोदाहरणं तु काकेभ्यो दधि रक्ष्यतामित्याद्येव। तत्र शक्यकाकत्वपरित्यागेनाशक्यदध्युपातकत्वपुरस्कारेण काकेऽकाकेऽपि काकशब्दस्य प्रवृत्तेः।**

**ஜஹதஜஹத்** லக்ஷணைக்கு உதாரணம் (விட்டும் விடாத லக்ஷனை) காக்கைகளிடமிருந்து தயிரினை காக்கவும் என்பதே அதனில் காக்கை எனும் சொல்லின் சக்தியான காக்கைத்தன்மையினை விட்டுவிட்டு குறிக்கபடாத தயிரை அழிக்கும் தன்மை உடையதை நீக்குவதாக காக்கை மற்றும் காக்கையல்லாததிலும் காக்கை என்ற சொல் உபயோகபடுத்தபடுகிறது.

**लक्षणाबीजं तु तात्पर्य्यनुपपत्तिरेव न त्वन्वयानुपपत्तिः। काकेभ्यो दधि रक्ष्यतामित्यत्रान्वयानुपपत्तेरभवात्। गङ्गायां ोष इत्यादौ तात्पर्य्यनुपपत्तेरपि सम्भवात्।**

லக்ஷணைக்கு விதையோ (காரணம்) தாத்பரியத்தின் நிச்சயமற்ற நிலையே சம்பந்தத்தின் நிச்சயமற்ற நிலையல்ல. காக்கையிடமிருந்து தயிரினை காக்கவும்

எனுமிடத்தில் சம்பந்தத்தின் நிச்சயமற்ற நிலை இல்லாததால் கங்கையில் குடிசை என்பது முதலியவற்றில் தாத்பர்யமானது நிச்சயமில்லாததும் இருப்பதால்.

**लक्षणा च न पदमात्रवृत्तिः। किन्तु वाक्यवृत्तिरपि। यथा गम्भीरायां नद्यां घोष इत्यत्र गम्भीरायां नद्यामिति पदद्वयसमुदायस्य तीरे लक्षण।**

லக்ஷணையும் பதத்தில் மட்டும் இருத்தலுடையது இல்லை, ஆனால், வாக்கியத்தில் இருத்தலுடையதுமாகும். உதாரணத்திற்கு கம்பீரமான நதியில் குடிசை என்பதில் கம்பீரமான நதியில் என்ற இரு சொற்களும் கரையில் லக்ஷனையுடையது.

**ननु वाक्यार्थस्याशक्यतया कथं शक्यसम्भन्धरूपा लक्षणा। उच्यते। शक्त्या यत्पदसम्बन्धेन ज्ञाप्यते तत्सम्बन्धो लक्षणा। शक्तिज्ञाप्यश्च यथा पदार्थस्तथा वाक्यार्थोऽपीति न काचिदनुपपत्तिः। एवमर्थवादवाक्यानां प्रशंसारूपाणां प्राशस्त्ये लक्षणा। सोऽरोदीदित्यादिनिन्दार्थवाक्यानां निन्दितत्वे लक्षणा। अर्थवादगतपदानां प्रशस्त्यादि लक्षणाऽभ्युपगमे एकेन पदेन लक्षणया तदुपस्थितिसम्भवे पदान्तरवैयर्थ्यं स्यात्। एवं च विध्यपेक्षितप्राशस्त्यरूपपदार्थप्रत्यायकतया अर्थवादपदसमुदायस्य पदस्थानीयतया विधिवाक्येन एक्वाक्यत्वं भवतीत्यर्थवादानां पदैकवाक्यता।**

ஆனால். வாக்கியபொருளானது சக்தியுடையது (சாமர்த்திய முடையது) இல்லாததால் எவ்வாறு சக்தியுடைய சம்பந்தமான லக்ஷணையுண்டாகும் என்றால் கூறுகிறோம் சக்தியினால் எந்த சொல்லின் சம்பந்தமானது நமக்கு நீனைவூட்டபடுகிறதோ அந்த சம்பந்தமே லக்ஷனையாகும் **சக்திஞாப்யமும்** (சக்தியால் நினைவூட்டபடுவதும்) எவ்வாறு சொற்பொருளிலோ அவ்வாறே வாக்கியபொருளிலும் என்று எந்த நிலையின்மையுமில்லை இவ்வாறு **அர்த்தவாத** (போற்றி கூறுதல்) வாக்கியங்களானது போற்றி கூறுவதாக இருக்கும்போது போற்றுதலில் லக்ஷனை அவா அழுதார் என்பது முதலான தூற்றிக்கூறுதலான வாக்கியத்தில் தூற்றுவதில் லக்ஷனை அர்த்தவாதத்திலுள்ள சொற்களானது

போற்றுவது முதலான லக்ஷனையினை ஏற்கும்போது ஒரே சொல்லினால் லக்ஷனையாக அது உண்டாக இயலுமபோது மற்ற சொற்கள் அவசியமற்றது ஆகின்றது இதனால் விதியானது எதிர்நோக்கும் போற்றிக்கூறும் சொற்பொருளானது அங்கு தோற்றுவதான அர்த்தவாத சொற்கூட்டமான சொல் என்ற நிலை அடைவதால் விதிவாக்கியத்துடன் **ஏகவாக்கியத்தன்மை** (ஒரு சமமான நிலை) உண்டாவதால் அர்த்தவாதமானது **பதைகவாக்கியத்தன்மை** என்று ஆகிறது.

**क्व तर्हि वाक्यैकवाक्यता। यत्र प्रत्येकं भिन्नभिन्नसंसर्गप्रतिपादकयोर्वाक्ययोराकाङ्क्षावशेन महावाक्यर्थबोधकत्वम्। यथा दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत इत्यादिवाक्यानां समिधो यजति इत्यादिवाक्यानां च परस्परापेक्षिताङ्गाङ्गिभावबोधकवाक्यतैकवाक्यता। तदुक्तं भपादैः**

**स्वार्थबोधे समाप्तानामङ्गाङ्गित्वाद्यपेक्षया।**
**वाक्यानामेकवाक्यत्वं पुनः संहत्य जायते॥**

**एवं द्विविधोऽपि पादार्थो निरूपितः।**

எதுபின்னர் **வாக்கிய ஏக வாக்கியதன்மை** எங்கு ஒவ்வொனறும் வெவ்வேறு சம்பந்தத்தினை நிரூபிப்பதான வாக்கியத்தில் எதிர்பார்ப்பு உண்டாவதால் **மகாவாக்கியத்தினை** உணர்ததும் தன்மை அடைகிறது. உதாரணத்திற்கு, **தர்ஷபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத**(அமாவசை பௌர்ணமியில் ஸ்வர்கத்தில் ஆசையுள்ளவன் யாகம் செய்யவும்) என்பது முதலான வாக்கியத்தில் **சமிதோ யஜதி** (சமிதினை யாகம் செய்கிறார்) என்பது முதலான வாக்கியத்திலும் பரஸ்பரமாக எதிர்நோக்கும் அங்க மற்றும் அங்கி தன்மையினை குறிக்கும் வாக்கியத்தால் ஏக வாக்கியத்தன்மை இவ்வாறு **ஸ்ரீ பட்டபாதர்** கூறியிறுக்கிறார் –

தன்னுடைய பொருளை கூறுவதில் முழுமையடைந்த அங்க–அங்கி தன்மையின் எதிர்பார்பினால், வாக்கியங்களானது ஏகவாக்கியத்தன்மை மீண்டும் சேர்ந்து அடைகிறது. என்று

இவ்வாறு இரண்டு வகையான பொருளும் நிரூபிக்கபட்டடது.

तदुपस्थितिश्चासत्तिः। सा च शाब्दबोधे हेतुः। तथैवान्वयव्यतिरेकदर्शनात्। एवं महावाक्यार्थबोधेऽवान्तरवाक्यार्थबोधो हेतुः। तथैवान्वयाद्यवधारणात्।

அதன் இருத்தல் (பதத்தினால் உண்டான சொற்பொருளின் ஸ்மிருதி) ஆசத்தி எனபடுகிறது. அதுவும் சப்தத்தின் ஞானத்தையடைய காரணம் அவ்வாறே நேர்மடை-எதிர்மடையாக காணப்படுவதால், இவ்வாறு **மஹாவாக்கியத்தின்** பொருளையறிய **அவாந்தர** (முக்கியமற்ற) வாக்கியத்தின் பொருளின் ஞானமானது காரணமாகிறது. அவ்வாறே நேர்மடை முதலியவை காணபடுகிறதால் (அறியபடுகிறதால்)

क्रमप्राप्तं तात्पर्यं निरूप्यते। तत्र तत्प्रतीतीच्छयोच्चरितत्वं न तात्पर्यम्। अर्थज्ञानशून्येन पुरुषेणोच्चरिताद्वेदादर्थप्रत्ययाभावप्रसङ्गात्। अयमध्यापकोऽव्युत्पन्न इति विशेषदर्शनेन तत्र तात्पर्यभ्रमस्याप्यभावात्। न चेश्वरीयतात्पर्यज्ञानात् तत्र शाब्दबोध इति वाच्यम्। ईश्वरानङ्गीकर्तुरपि तद्वाक्यार्थप्रतिपत्तिदर्शनात्।

கிரமமாக வந்த தாத்பார்யத்தினை நிரூபிக்கிறோம். அங்கு விஷயத்தினை குறிக்கும் ஆசையுடன் கூறபட்டது தாத்பர்யமில்லை. பொருளின் ஞானமானது உண்டாகாதபொழுது புருஷனால் உச்சரிக்கப்பட்ட வேதத்தில் பொருளினையறிவது இயலாததால். இந்த அத்யாபகர் (வாத்தியார்) தகுதியற்றவர் என்ற விசேஷமாக காணபட்டதால் அங்கு தாத்பர்யத்தின பிரமையானது உண்டாவதில்லை ஈஷ்வரரின் தாத்பர்ய ஞானத்தினால் அங்கு சப்த ஞானமானது உண்டாகும் என்பது கூடாது. ஈஷ்வரரை ஏற்காதவர்களும்கூட வாக்கியத்தின் பொருளையறிந்துகொள்வது காணபடுவதால்.

उच्यते। तत्प्रतितिजननयोग्यत्वं तात्पर्यम्। गेहे घट इति वाक्यं गेहघटसम्सर्गप्रतीतिजननयोग्यं। न तु पटस।सर्गप्रतीतिजननयोग्यमिति तद्वाक्यं घटसंसर्गपरां न तु पटसंसर्गपरमित्युच्यते।

கூறுகிறோம். அதன் பொருளை உணர்த்தும் யோகியத்தன்மை தாத்பர்யமாகும் வீட்டில் பானை , என்ற வாக்கியம் வீடு மற்றும் பானையின் சம்பந்ததினை உணர்த்துவதில் தகுதியுள்ளது. அதல்லாமல், துணி சம்பந்தத்தினை உணர்த்தும் தகுதியுள்ளது என்றல்ல என்பதால் அந்த வாக்கியம் பானை சம்பந்தபட்டது துணி சம்பந்தபட்டதில்லை என்று கூறுகிறோம்.

ननु सैन्धवमानय इत्याद्वाक्यं लवणानयनप्रतीतीच्छया प्रयुक्तं तदाऽश्वसंसर्गप्रतीतिजनने स्वरूपयोग्यतासत्त्वाल्लवणत्वज्ञानदशायामप्यश्वादि-संसर्गज्ञानापत्तिरिति चेत्। न। तदितरप्रतीतीच्छयाऽनुच्चरितत्वस्यापि तात्पर्यं प्रति विशेषणत्वात्। तथा च यद्वाक्यं यत्प्रतीतिजननस्वरूपयोग्यत्वे सति यदन्यप्रतीतीच्छया नोच्चरितं तद्वाक्यं तत्संसर्गपरमित्युच्यते।

ஆனால். **ஸைந்தவமானய** (சிந்துவிலுண்டானதை கொண்டுவா) என்பது முதலான வாக்கியம், உப்பினை கொண்டுவருவதை உணர்ததும் ஆசையுடன் உபயோகபடுத்தபட்டபோது குதிரை (சிந்து தேச குதிரை) சம்பந்தத்தினை உணர்த்துவதில் சுவரூப தகுதியானது இல்லாததால் உப்பினை குறித்த ஞான நிலையிலும் குதிரை முதலிய சம்பந்தத்தை உணர்ததுவதாகும் என்றால், தவறு அதனைதவிர மற்றதினை உணர்ததும் ஆசையில் உபயோகபடுத்தாவிட்டாலும் தாத்பர்யத்திற்கு அது விசேஷனமாக ஏற்கபட்டதால் அதனால் எந்த வாக்கியம் எதனை உணர்த்த சுவரூப யோக்கியத்தன்மை உடையதாக இருந்து எந்த மற்றொன்றை உணர்ததும் ஆசையோடு உச்சரிக்காதது அந்த வாக்கியம் அது சம்பந்தபட்டது என்று கூறுவர்.

शुकादिवाक्येऽव्युत्पन्नोच्चरितवेदवाक्यादौ च तत्प्रतीतीच्छाया एवाभावेन तदन्यप्रतीतीच्छयोच्चरितत्वाभावेन लक्षणसत्वान्नाव्याप्तिः। न चोभयप्रतीतीच्छयोच्चरितेऽव्याप्तिः। तदन्यमात्रप्रतीतीच्छयाऽनुच्चरितत्वस्य विवक्षिततत्वात्।

கிளி பேச்சிலோ அல்லது அறிவற்றவரின உளரலிலோ கூறபட்டதான வேத வாக்கியமானதில் அதன பொருள் உணர்த்தும் ஆசை இன்மையால் அதனைதவிர மற்ற பொருளை உணர்த்துவதிலும் ஆசை இன்மையால் கூறபட்ட லக்ஷணமானது இருப்பதால் அவ்வியாப்தி இல்லை. இரண்டு பேரும் பொருளை உணர்த்தும் ஆசையுடன் கூறியிருந்தால் அவ்வியாப்தி உண்டாகாது, உணர்த்தவேண்டி விரும்பியதினை தவிர வேறு பொருளை உணர்த்த ஆசையின்மையினை கூறியிருப்பதால்.

उक्तप्रतीतिमात्रजननयोग्तायाश्चावच्छेदिका शक्तिः। अस्माकं तु मते सर्वत्र कारणतायाः शक्तेरेवच्छेदकत्वान्न कोऽपि दोषः। एवं तत्पार्यस्य तत्प्रतीतिजनकत्वरूपस्य शाब्दज्ञानजनकत्वे सिद्धे चतुर्थवर्णके तत्पर्यस्य शाब्दज्ञानहेतुत्वनिराकरणवाक्यं तत्प्रतीतीच्छयोच्चरितत्वरूपतात्पर्यनिराकरणपरम्। अन्यथा तात्पर्यनिश्चयफलकवेदान्तविचारवैयर्थ्यप्रसङ्गात्।

கூறபட்டதை உணர்த்தும் தன்மையுடைய வரையறை சக்தி ஆகும். எங்களுடைய மதத்தில் எல்லா நிலையிலும் காரணத்தன்மையை சக்தியினையே வரையறையாக ஏற்பதால் எந்த தோஷமும் இல்லை இவ்வாறு தாத்பர்யமானது அதனை உணர்த்துவதான சப்தத்தின் பொருளை உணர்ததும் தன்மையானது நிரூபிக்கபட்டதால் (விவரணத்தில்) நான்காம் காரணத்தன்மையை நிராகரிக்கும் வாக்கியம் அதனை உணர்த்த ஆசையினால் உச்சரிக்கபட்ட தாத்பர்யத்தினை நிராகரிப்பதானது. இல்லையென்றால், தாத்பர்ய நிச்சயமான பலன் உண்டாகும் வேதாந்தத்தின விசாரமானது உபயோகமற்றதாகும் நிலை உண்டாகும்.

केचित्तु शाब्दज्ञानत्वावच्छेदेन न तात्पर्यज्ञानं हेतुरित्येवं परं चतुर्थवर्णकवाक्यम्। तात्पर्यसंशयविपर्ययोत्तरशाब्दज्ञानविशेषे च तात्पर्यज्ञानं हेतुरेव। इदं वाक्यमेतत्परम्। उतान्यपरमिति संशये तद्विपर्यये च तदुत्तरवाक्यार्थविशेषनिश्चयस्य तात्पर्यनिश्चयं विनाऽनुपपत्तेरित्याहुः।

சிலரோ சப்தத்தின பொருளை உணர்த்தும் வரையறையாக தாத்பர்ய ஞானமானது காரணமில்லை என்பதானது நான்காம் வர்ணத்தின் வாக்கியம் என்பர், தாத்பர்யமானது சந்தேகம் மற்றும் தவறான அறிவினால் உண்டாகும் சப்தத்தின பொருளை உணர்த்துவதில் தாத்பர்ய ஞானம் காரணம், இந்த வாக்கியம் இப்படிபட்டதா இல்லை வேறுவகையானதா என்ற சந்தேகத்திலும் தவறான அறிவிலும்அதன் பின்னர் வாக்கியத்தின் பொருளை நிச்சயிப்பதில் தாத்பர்யத்தின் நிச்சயமில்லைாமல் உண்டாகாது என்று கூறுவர்.

तच्च तात्पर्यं वेदे मीमांसापरिशोधितन्यायादेवावधार्यते। लोके तु प्रकरणादिना। तत्र लौकिकवाक्यानां मानान्तरावगतार्थानुवादकत्वम्। वेदे तु वाक्यार्थस्यापूर्वतया नानुवादकत्वम्। तत्र लोके वेदे च कार्यपराणामिव सिद्धार्थानामपि प्रामाण्यम्। पुत्रस्ते जात इत्यादिषु सिद्धार्थोऽपि पदानां सामर्थ्यावधारणात्। अत एव वेदान्तवाक्यानां ब्रह्मणि प्रामाण्यम्। यथा चैतत्तथा विषयपरिच्छेदे वक्ष्यते।

அந்த தாத்பர்யமும் வேதத்தில் மீமாம்ஸையினால் தீர்மானிக்கபட்ட நியாயத்தினாலேயே (முறையாலேயே) நிச்சயமாகிறது, உலகத்திலோ **பிரகரணம்** (இடம், பொருள், ஏவல்) முதலியவற்றால். அதனில் உலகநடையான வாக்கியம் வேறு பிரமாணத்தினால் அறிந்த விஷயத்தினை மறுமொழிவது மட்டுமே. வேதத்திலோ வாக்கியத்தின பொருளானது அபூர்வம் (வேறு முறையால் அறிவது இயலாததால்) மறுமொழிவது ஆகாது. அங்கு உலகத்திலும் வேதத்திலும் காரியமான வாக்கியத்தைப்போல நிச்சயிக்கபட்ட பொருளை உணர்த்துவதிலும் பிரமாணத்தன்மை உள்ளது. <u>உனக்கு மகன் உண்டாகியிருக்கிறான்</u> என்பது முதலியவற்றில் நிச்சயமானதானாலும் சொற்களுக்கு பொருளை உணர்த்தும்

சாமர்த்தியம் காணப்படுகிறது. அதனாலேயே வேத வாக்கியமானது பிரம்மத்தில் பிரமாணத்தன்மை உள்ளது, இது எவ்வாறானதோ அதனை **விஷயபரிச்சேதத்தில்** (விஷய பகுதியில்) கூறுவோம்.

तत्र वेदानां नित्यसर्वज्ञपरमेश्वरप्रणीतत्वेन प्रामाण्यमिति नैयायिकाः। वेदानां नित्यत्वेन निरस्तसमस्तपुंदूषणतया प्रामाण्यमित्यध्वरमीमांसकाः। अस्माकं तु मते वेदो न नित्य। उत्पत्तिमत्त्वात्। उत्पत्तिमत्त्वं च अस्य महतो भूतस्य निःश्वसितमेतद्यदृग्वेदः इत्यादिश्रुतेः। नापि वेदानां त्रिक्षणावस्थायित्वम्। य एव वेदो देवदत्तेनाधीतः। स एव वेदो मयाऽधीत इत्यादिप्रत्यभिज्ञाविरोधात्। अत एव गकारादिवर्णानामपि न क्षणिकत्वं। सोऽयं गकार इति प्रत्यभिज्ञाविरोधात्।

அதனால் வேதமானது **நித்தியர், சர்வஞ்ஞர்** (எல்லாம் அறிந்தவர்) ஆன பரமேஷ்வரனால் உண்டாக்கபட்டதால் பிரமாணத்தன்மை உடையது எனபர் நையாயிகர்கள். வேதமானது நித்தியமானதால் எல்லா விதமான புருஷ தோஷமற்றது என்பதால் பிரமாணத்தன்மை உடையது என்பர் மீமாம்ஸகர்கள், எங்கள் மதத்திலோ வேதமானது நித்தியமில்லை உண்டாவதானதால், உண்டாவது என்பதும் – **அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஷ்வஸிதமேதத் யத்ருக்வேத** (இந்த மிகப் பெரியதான பரமாத்மாவினால் மூச்சுக்காற்றாக வெளியேற்றபட்டது ரிக் முதலிய வேதங்கள்) என்பது முதலான ஷ்ருதிகள், வேதமானது மூன்று க்ஷணம் வரை மட்டும் இருத்தலுடையதும் இல்லை. எந்த வேதத்தினையே தேவதத்தன் படித்தானோ, அதுவே என்னாலும் படிக்கபட்டது என்பது முதலான அறிவானது விரோதமாவதால் அதனாலேயே ககாரம் முதலிய எழுத்துக்களும் மூன்று க்ஷணம் இருத்தலுடையது இல்லை (க்ஷணிகமில்லை), அதுவே இந்த ககாரம் என்கிற அறிவானது விரோதமாவதால்.

तथा च वर्णपदवाक्यसमुदायस्य वेदस्य वियादिवत् सृष्टिकालीनोत्पत्तिमत्त्वं प्रलयकालीनध्वंसप्रतियोगित्वं च। न तु मध्ये वर्णानामुत्पत्तिविनाशौ।

**अनन्तगकारकल्पने गौरवात्। अनुच्चारदशायां वर्णानामनभिव्यक्तिस्तदुच्चारणरूपव्यञ्जकाभावान्न विरुध्यते। अन्धकारस्थले घटानुपलम्भवत्। उत्पन्नो गकार इत्यादिप्रत्ययः सोऽयं गकार इति प्रत्यभिज्ञाविरोधादप्रमाणम्। वर्णाभिव्यक्तिजनकध्वनिगतोत्पत्तिनिरूपितपरम्परासम्बन्ध-विषयत्वेन प्रमाणं वा। तस्मान्न वेदानां क्षणिकत्वम्।**

இப்படியாக வர்ணங்கள் (எழுத்துக்கள்), பதங்கள் (சொற்கள்) மற்றும் வாக்கிய கூட்டமான வேதமானது ஆகாயத்தைப் போன்று சிருஷ்டி காலத்தில் தோன்றுவதும் பிரளயகாலத்தில் அழிவதற்கு பாத்திரமாவதுமாக இருபதால், இடையில் அதன் எழுத்துக்களானது தோன்றி மறைவது இல்லை, பல ககாரங்களை கற்பனை செய்வது கௌரவம் என்கிற தோஷமாவதால். உச்சரிக்கபடாத நிலையில் எழுத்துகளின் தோற்றமின்மை அதன உச்சாரனை எனும் தோற்றுவிப்பது இல்லாததால் விரோதமாவதில்லை, இருட்டில் பானையானது காணபடுவதல்லாதது போல தோன்றியது ககாரம் என்பதெல்லாம் அது இந்த ககாரம் என்ற அறிவுக்கு விரோதமாவதால் பிரமாணமானதில்லை எழுத்துக்களானது தோன்றுவதற்கு த்வனியில் உள்ள உற்பத்தியினை நிரூபிக்கும் பரம்பரையான சம்பந்தமுடையதால் பிரமாணம் நிலையடைகிறது எனலாம். அதனால் வேதமானது க்ஷணிகமானது இல்லை.

**ननु क्षणिकत्वाभावेऽपि वियदादिप्रपञ्चवदुत्पत्तिमत्त्वेन परमेश्वरकर्तृकतया पौरुषेयत्वादपौरुषेयत्वं च वेदानामिति तव सिद्धान्तो भज्येतेति चेत्। न। न हि तावत्पुरुषेणोच्चार्यमाणत्वं पौरुषेयत्वम्। गुरुमतेऽपि अध्यापकपरम्परया पौरुषेयत्वापत्तेः। नापि पुरुषाधीनोत्पत्तिकत्वं पौरुषेयत्वम्। नैयायिकाभिमतपौरुषेयत्वानुमानेऽस्मदादिना सिद्धसाधनत्वापत्तेः। किन्तु सजातीयोच्चारणानपेक्षोच्चारणविषयत्वम्।**

ஆனால், க்ஷணிகத்தன்மை இல்லாதுபோனாலும் ஆகாயம் முதலிய பிரபஞ்சம் போன்று உற்பத்தியுடையதானதால் பரமேஷ்வரர் செய்வித்தது

என்பதால் புருஷனால் உண்டானது என்பதால் வேதமானது **அபௌருஷேயம்** (புருஷனால் உண்டாகபட்டது இல்லை) என்கிற உங்கள் சித்தாந்தம் அழியும் என்றால், தவறு, புருஷனால் உச்சரிக்கபட்டதால் பௌருஷேயம் ஆவதில்லை, காரணம், குரு மதத்திலும் (மீமாம்ஸகரரில் பிரபாகரர் சித்தாந்தம்) கற்பிக்கபட்டதால் பௌருஷேயமாகும் நிலையடையும். புருஷருக்கு அதீனமாக (அவரால்) உண்டாகும் தன்மையினையும் பௌருஷேயம் என்பதில்லை, நையாயிகர்கள் ஏற்க்கும் பௌருஷேயத்தினை குறிக்கும் அனுமானத்தில் எங்களால் **சித்தசாதனை** (நிரூபிக்கபட்டதினை நிரூபிப்பது) என்கிற தோஷம் சுமத்தபடுகிறது. இதனால், சமானமான ஜாதியால் உச்சாரனையினை எதிர்பார்க்காத உச்சாரனை விஷயத்தினையே (அபௌருஷேயம் என்கிறோம்)

**तथा च सर्गाद्यकाले परमेश्वरः पूर्वसर्गसिद्धवेदानुपूर्वीसमानानुपूर्विकं वेदं विरचितवान्। न तु तद्विजातीयं वेदमिति न सजातीयोच्चारणपेक्ष्यैवोच्चारणमिति तेषां पौरुषेयत्वम्। एवं पौरुषेयापौरुषेयभेदेनागम द्विधा निरूपितः।**

இதனால் சிருஷ்டி சமயத்தில் பரமேஷ்வரர் முன் சிருஷ்டியில் உண்டாயிருந்த வேதத்தினைப்போலவே இப்பொழுதும் உண்டாக்கினார், அதல்லாமல் வேறு வேதத்தினை அல்ல, என்பதால் சமான ஜாதியால் உச்சாரனையினை எதிர்பார்க்காத உச்சாரனை விஷயத்தன்மையான பௌருஷேயத்வம் வேதத்திலில்லை. மகாபாரதம் முதலியவையோ சமான ஜாதி உச்சாரனையை எதிர்பார்த்ததாகவே இருக்கும் உச்சாரணை என்பதால் அவை பௌருஷேயத் தன்மையுடையது. இதனால் பௌருஷேயம் அபௌருஷேயம் என்று ஆகமம் இருவகையாக நிரூபிக்கப்பட்டது.

## इत्यागमपरिच्छेदः॥

## ஆகம பரிச்சேதம் முற்றும்

# अथार्थापत्तिपरिच्छेदः

## அர்த்தாபத்தி பரிச்சேதம்

इदानीमर्थापत्तिर्निरूप्यते। तत्रोपपाद्यज्ञानेनोपपादककल्पनमर्थापत्तिः। तत्रोपपाद्यज्ञानं करणम्। उपपादकज्ञानं फलम्। येन विना यदनुपपन्नं तत्तत्रोपपाद्यम्। यस्याभावे यस्यानुपपत्तिस्तत्तत्रोपपादकम्। यथा रत्रिभोजनेन विना दिवाऽभुञ्जानस्य पीनत्वमनुपपन्नमिति तादृशपीनत्वमुपपाद्यम्। यथा वे रत्रिभोजनस्याभावे तादृशपीनत्वस्यास्यानुपपत्तिरिति रत्रिभोजनमुपपादकम्।

அடுத்து அர்த்தாப்பத்தி பிரமானத்தை நிரூபிக்கின்றோம். அதனில் **உபபாத்யமான** காரிய ஞானத்தினால் **உபபாதகமான** காரணத்தின் கற்பனையே அர்த்தாபத்தியாகும். அதனில் உபபாத்ய ஞானம் கரணம் (கருவி, பிரமாணம்) ஆகும். உபபாதக ஞானம் பலனாகிறது. எது இல்லாமல் எது உண்டாகிறதில்லையோ அது அங்கு உபபாத்யம், எதனின் இன்மையில் எது உண்டாவதில்லையோ அது அங்கு உபபாத்யம். எப்படி ராத்திரி உண்.பதால் அல்லாமல் காலையில் சாப்பிடாமலிருப்பவரின் தடிமனானது உண்டாவதில்லை என்று அப்படிப்பட்ட தடிமன் உபபாத்யம் அல்லது ராத்திரி உண்ணாத நிலையில் அதுபோன்ற தடிமனானது உண்டாவதில்லை என்று ராத்திரி உண்பது உபபாதகம்.

रत्रिभोजनकल्पनारूपायां प्रमितावर्थस्यापत्तिः कल्पनेति षष्ठीसमसेन अर्थापत्तिशब्दो वर्तते। कल्पनाकरणपीनत्वादिज्ञाने त्वर्थस्यापत्तिः कल्पना यस्मादिति बहुव्रीहिसमासेन वर्तते इति फलकरणयोरुभयोस्तत्पदप्रयोगः।

ராத்திரி உண்பது என்கிற கற்பனையான பிராமாவில் பொருளின் **ஆபத்தி** அதாவது கற்பனை என்று **சஷ்டி** (அறாம்) வேற்றுமை சமாசத்தால் அர்த்தாபத்தி

சொல்லானது உண்டாகின்றது. கற்பனையின் கரணமாக குண்டுத்தன்மையின் ஞானத்திலோ பொருளின் ஆபத்தி அதாவது கற்பனை எதனால் என்று **பஹுவ்ரீஹி** சமாசத்தால் உண்டாவதால் பலன் மற்றும் கரணம் ஆகிய இரண்டு பொருளிலும் அந்த சொல்லானது பிரயோகிக்கப்படுகின்றது.

**सा चार्थापत्तिर्द्विधा दृष्टार्थापत्तिः श्रुतार्थापत्तिश्चेति। तत्र दृष्टार्थपत्तिर्यथा इदं रजतमिति पुरोवर्तिनि प्रतिपन्नस्य रजतस्य नेदं रजतमिति तत्रैव निषिध्यमानत्वं सत्यत्वेऽनुपपन्नमिति रजतस्य सद्भिन्नत्वं सत्यत्वात्यन्ताभाववत्त्वं वा मिथ्यात्वं कल्पयतीति।**

அந்த அர்த்தாபத்தியானது இரண்டு வகைப்படுகிறது - **திருஷ்டார்தபத்தி** மற்றும் **ஷ்ருதார்தாபத்தி** என்றும் (கண்ட மற்றும் கேட்ட அர்த்தாபத்தி).அதனில் திருஷ்டார்தாபத்தியானது இது வெள்ளி என்று முன்னால் இருக்கும் தோற்றமான வெள்ளியில், இது வெள்ளியல்ல என்று அங்கேயே நிராகரிக்கப்படும்தன்மை வெள்ளியிருந்தால் உண்டாகாது என்று. வெள்ளியானது சத்திலிருந்து வேறானதன்மையுடையது அல்லது சத்தியத்தன்மையின் நிரந்தரயின்மைத்தன்மை என்றோ மித்யாத்தன்மையினை கற்பனை செய்விக்கிறது.

**श्रुतार्थापत्तिर्यथा यत्र श्रूयमाणवाक्यस्य स्वार्थानुपपत्तिमुखेनार्थान्तरकल्पनम्। यथा तरति शोकमात्मवित् इत्यत्र श्रुतस्य शोकशब्दवाच्यबन्धजातस्य ज्ञाननिवर्त्यत्वस्याऽन्यथाऽनुपपत्त्या बन्धस्य मिथ्यात्वं कल्प्यते।**

ஷ்ருதார்தாபத்தியானது, எங்கு கேட்கப்படும் வாக்கியமானதில் அதனுடைய பொருளினை நிரூபிக்காமல் வேறு பொருளினை கற்பனை செய்வது. உதாரணத்திற்க்கு, **தரதி சோகமாத்மவித்** (ஆத்மாவை அறிந்தவர் சோகத்தை கடக்கிறார்) என்பதில் கேட்கப்படும் சோகம் எனும் சொல்லின் பொருளான பந்தத்தில் ஈடுபட்டவனை ஞானத்தினை தவிர வேறெதாலும் நீக்குவது இல்லாததால் பந்தமானதில் மித்யாத்தன்மை கற்பனை செய்யப்படுகிறது.

यथा वा जिवी देवदत्तो गृहे नेति वाक्याश्रवणानन्तरं जीविनो गृहासत्त्वं बहिःसत्त्वं कल्पयति।

இல்லையேல், உயிரோடு இருக்கும் தேவதத்தன் வீட்டில் இல்லை என்ற வாக்கியம் கேட்டபின் உயிரோடு இருப்பவனின் (தேவதத்தன்) வீட்டில் இல்லாத தன்மையும் வெளியில் இருக்கும்தன்மையும் கற்பனை செய்யப்படுகிறது.

श्रुतार्थापत्तिश्च द्विविधा अभिधानानुपपत्तिरभिहितानुपपत्तिश्च। तत्र - यत्र वाक्यैकदेशश्रवणे अन्वयाभिधानानुपपत्त्याऽन्वयाभिधानोपयोगि पदान्तरं कल्प्यते तत्राभिधानानुपपत्तिः। यथा द्वारमित्यत्र पिधेहि इत्यध्याहरः। यथा वा विश्वजिता यजेत इत्यत्र स्वर्गकाम इति पदाध्याहारः।

ஷ்ருதார்தாபத்தியானது இரண்டு வகைப்படுகிறது. **அபிதான அனுபபத்தி** மற்றும் **அபிஹித அனுபபத்தி** என்றும். அதனில், எங்கு வாக்கியத்தின் ஒரு பகுதியானது கேட்கப்பட்டதும் அதன் அன்வயமானது (சொர்களின் சம்பந்தம்) ஆகாத நிலையில் அன்வயம் செய்ய உபயோகமான வேறு சொல்லானது கற்பனை செய்யப்படுகின்றது என்ற இடத்தில் அபிதானுபபத்தி. அதுபோல, கதவு என்பதில் அடைக்கவும் என்று **அத்யாஹாரம்** (கொண்டுவந்து சேர்க்கப்படுகிறதோ) அல்லது, **விஷ்வஜிதால்** (விஷ்வஜித் பெயருள்ள) யாகம் செய்யவும் என்பதில் சுவர்கத்தில் ஆசையுள்ளவன் எனும் சொல் **அத்யாசம்** (ஏற்றிப்பார்த்தல்) செய்யப்படுகிறது.

ननु द्वारमित्यादावन्वयाभिधानात्पूर्वमिदमन्वयाभिधानं पिधानोपस्थापकपदं विनाऽनुपपन्नमिति कथं ज्ञानमिति चेत्। न। अभिधानपदेन करणव्युत्पत्त्या तात्पर्यस्य विवक्षितत्वात्। तथा च द्वारकर्मकपिधानक्रियासंसर्गत्वं पिधानोपस्थापकपदं विनाऽनुपपन्नमिति ज्ञानं तत्रापि सम्भाव्यते।

ஆனால், கதவு என்பதில் அன்வய அபிதானம் செய்வதற்க்கு முன்னர்

இந்த அன்வய அபிதானமானது அடைத்தல் என்ற பொருள் படும் அடைக்வும் என்ற சொல் இல்லாமல் உண்டாகாது என்று எவ்வாறு ஞானம் உண்டாகின்றது என்றால் , தவறு, அபிதான சொல்லினால் கரண (கருவி) என்ற பொருள்படும்படியாக தாத்பர்ய பொருளானது குறிக்கப்படுகின்றது என்பதால். அதுபோல கதவு என்கிற சொல்லுடைய அடைத்தல் எனும் செயலானது, சேர்க்கை என்பதை குறிப்பதான அடைத்தல் என்ற பொருள்படும்படியாக அடைக்கவும் என்ற சொல் இல்லாமல் உண்டாகாது என்பதால் ஞானமானது அங்கும் உண்டாக இயலும்.

**अभिहितानुपपत्तिस्तु यत्र वाक्यावगतोऽर्थोऽनुपपन्नत्वेन ज्ञातः सन्नर्थान्तरं कल्पयति तत्र द्रष्टव्या। यथा स्वर्गकामो ज्योतिष्टोमेन यजेत इत्यत्र स्वर्गसाधत्वस्य क्षणिकज्योतिष्टोमयागगततयाऽवगतस्यानुपपत्त्या मध्यवर्त्यपूर्वं कल्प्यते।**

அபிஹித அனுபபத்தியானதோ எங்கு வாக்கியத்தினால் குறிக்கப்படும் பொருள் உண்டாகாது இருப்பதால் அறியப்படுவதாக இருந்து வேறு பொருளினை கற்பனை செய்விக்கின்றதோ அங்கு காணப்படவேண்டும். அதாவது, **சுவர்ககாமோ ஜ்யோதிஷ்டோமேன யஜேத** (சுவர்கத்தில் ஆசையுள்ளவர் ஜ்யோதிஷ்டோமம் என்ற பெயருள்ள யாகம் செய்யவும்) என்பதில் சுவர்கத்திற்க்கு சாதனமான ஜ்யோதிஜ்டோம யாகமான க்ஷணிகமான அதனால் அடையப்படும் சுவர்கம் என்பதின் சாதனையாக ஆகாத நிலையில் இடையில் ஒரு **அபூர்வம்** (புண்ணியம்) கற்பனை செய்விக்கின்றது.

**न चेयमर्थापत्तिरनुमानेऽन्तर्भावितुमर्हति। अन्वयव्याप्त्यज्ञानेनान्वयिन्यनन्तर्भावात्। व्यतिरेकिणश्चानुमानं प्रागेव निरस्तम्। अत एवार्थापत्तिस्थलेऽनुमिनोमीति नानुव्यवसायः। किं तु अनेनेदं कल्पयामीति।**

ஆனால் இந்த அர்த்தாபத்தி அனுமானத்தில் சேர்த்தல் இயலாது. நேர்மடையினை அறியாததால் எதனில் அந்த சம்பந்தம் செய்யப்படுகிறதோ அதனில் சம்பந்தம் அடையாததால். எதிர்மடையான அனுமானத்தினையோ

முன்னரே நிராகரித்துவிட்டோம். அதனாலேயே செய்கிறேன் என்ற **அனுவியவசாய** (இரண்டாம் நிலை) ஞானம் உண்டாகிறதில்லை , ஆனால் இதனால் இதனை கற்பனை செய்கிறேன் என்றே.

**नन्वर्थापत्तिस्थले इदमनेन विनाऽनुपपन्नमिति ज्ञानं करणमित्युक्तं। तत्र किमिदं तेन विनाऽनुपपन्नत्वम्। तदभावव्यापकाभावप्रतियोगित्वमिति ब्रूमः। एवमर्थापत्तेर्मानान्तरत्वसिद्धो व्यतिरेकि नानुमानन्तरम्। पृथिवीतरेभ्यो भिद्यते इत्यादौ गन्धवत्त्वमितरभेदं विनाऽनुपपन्नमित्यादिज्ञानस्य करणत्वात्। अत एवानुव्यसायः पृथिव्यामितरभेदं कल्पयामीति।**

ஆனால் அர்த்தாபத்தியில் இதுவல்லாமல் உண்டாகாது எனும் ஞானம் கருவி என்று கூறப்பட்டது. அங்கு எது அது அல்லாமல் உண்டாகாது என்றால் ,அது இன்மை வியாபித்திருக்கும் இன்மை பிரதியோகியே (எதன் இன்மையோ – இன்மைக்கு பாத்திரம்) என்று கூறுவோம். இவ்வாறு அர்த்தாபத்தியானது வேறு பிரமாணமாக நிரூபிக்கப்பட்டபின் எதிர்மடை வேறு பிரமாணமல்ல என்பது, பிருத்வீ மற்றவற்றிலிருந்து வேறுபடுகின்றது என்பது முதலியவைகளில், வாசனையுள்ளதன்மை அற்றவற்றிலிருந்து வேறுபடாமல் உண்டாகாது என்பதால், அதுவே ஞானத்திற்க்கு கருவியாவதால். அதனாலேயே அனுவியவசாய ஞானத்தில் பிருதிவீயில் மற்றவற்றிலிருந்து வேறுபடுதலை கற்பனை செய்கிறேன் எனப்படுகிறது.

## इत्यर्थापत्तिपरिच्छेदः॥

## அர்த்தாபத்தி பரிச்சேதம் முற்றும்

# अथानुपलब्धिपरिच्छेदः

## அனுபலப்தி பரிச்சேதம்

इदानीं षष्ठं प्रमाणं निरूप्यते। ज्ञानकरणाजन्याभावानुभवासाधारण-कारणमनुपलब्धिरूपं प्रमाणम्। अनुमानजन्यातीन्द्रियानुभावानुभवहेतुतावनुमानादाव-तिव्याप्तिवारणायअजन्यान्तं पदम्। अदृष्टादौ साधारणकारणेऽतिव्याप्तिवारणाय असाधारणेति पदम्। अभावस्मृत्यसधारणहेतुसंस्कारेऽतिव्याप्तिवारणाय् अनुभवेति विशेषणम्।

அடுத்து ஆறாவது **அனுபலப்தி** (இன்மை) பிரமானத்தை நிரூபிக்கின்றோம். ஞானத்தின் கரணத்தால் உண்டாகாத இன்மை அனுபவத்தின் அசாதாரணமான (விசேஷமான) காரணம் அனுபலப்தி பிரமாணம். அனுமானத்தினால் உண்டாகும் அதீந்திரிய விஷயங்களின் இன்மை அனுபவத்தின் காரணத்தில் அனுமானம் முதலியவைகளில் அதிவியாப்தி ஆகாதிருக்க **அஜன்யம்** (உண்டாகாத) என்ற சொல் தரப்பட்டது. அதிருஷ்டம் முதலியவைகளான சாதாரண காரணத்தில் அதிவியாப்தியுணடாகதிருக்க அசாதாரணம் என்கிற சொல் தரப்பட்டது. இன்மை குறித்த நினைவில் அசாதாரணமான காரணமான சம்ஸ்காரத்தில் அதிவியாப்தி உண்டாகாதிருக்க அனுபவம் என்கிற விசேஷணம் (குறிப்பு) தரப்பட்டது.

न चातिन्द्रियाभावानुमितिस्थलेऽप्यनुपलब्ध्यैवाभावो गृह्यतां विशेषाभावदिति वाच्यम्। धर्माधर्माद्यनुपलब्धिसत्त्वेऽपि तदभावानिश्चयेन योग्यानुपलब्धेरेवाभाव-ग्राहकत्वात्।

ஆனால், அதீந்திரியமான இன்மை அனுமிதியின் இடத்திலும்

அனுபவத்தினாலேயே இன்மையானது கிரகிகப்படும் (அறியப்படும்) , எந்த விசேஷணமும் இல்லாததால் என்று கூறுதல் சரியல்ல , தர்மம்-அதர்மம் முதலிய அனுபலப்தியானது இருந்தாலும் அதன் இன்மையானது நிச்சயிகப்படாததால் (நிரூபிகப்படாததால்) யோக்கியத்தன்மையுடைய அனுபலப்தியே அபாவதினை அறிவதென்பதால்.

**ननु केयं योग्यानुपलब्धिः। किं योग्यस्य प्रतियोगिनोऽनुपलब्धिरुत योग्याधिकरणे प्रतियोग्यनुपलब्धिः। नाद्यः। स्तम्भे पिशाचादिभेदस्याप्रत्यक्षत्वापत्तेः। नान्त्यः। आत्मनि धर्माधर्माद्यभावयापि प्रत्यक्षतापत्तेरिति चेत्। न। योग्या चासावनुपलब्धिश्चेति कर्मधारयाश्रयणात्। अनुपलब्धेर्योग्यता च तर्कितप्रतियोगिसत्त्वप्रसञ्जितप्रतियोगित्वम्। यस्याभावो गृह्यते तस्य यः प्रतियोगी तस्य सत्त्वेनाधिकरणे तर्कितेन प्रसञ्जनयोग्यमापादनयोग्यं यत्प्रतियोग्युपलब्धिस्वरूपं यस्यानुपलम्भस्य तदनुप्लब्धेर्योग्यत्वमित्यर्थः।**

ஆனால், இந்த யோக்கிய அனுபலப்தி என்பது என்ன, யோக்கியமான பிரதியோகியின் இன்மையா , இல்லை, யோக்கியமான அதிகரணத்தில் (தலத்தில்) பிரதியோகியின் இன்மையா. முதலாவது இல்லை , காரணம், தூணில் பிசாசு முதலிய பிரிவுகள் பிரதியக்ஷம் ஆவதியலாது. கடைசியும் (இரண்டவது) இல்லை , ஆத்மாவில் ஆத்மாவின் தர்மம் முதலியவையின் இன்மையும் பிரதியக்ஷமாகும் நிலை உண்டாகும் என்றால் , அது தவறு , யோக்கியமானதும் அதுவே அனுபலப்தியானதும் என்கிற **கர்மதாரய சமாசம்** ஏற்கப்படுவதால். அனுபலப்தியில் யோக்கியத்தன்மையானது தர்கிக்கும் (எந்த விஷயத்தினை குறித்து விசாரிக்கின்றோமோ) பிரதியோகியின் இருப்பினால் அடையப்படும் பிரதியோகித்தன்மை ஆகும். எதன் இன்மையானது அறியப்படுகிறதோ அதன் பிரதியோகியானது, அதன் இருத்தலுடையதான அதிகரணத்தில் தர்கிக்கப்பட்ட யோகியத்தன்மை (கற்பனையான) , அதாவது , ஏற்க்கப்பட்ட யோகியத்தன்மை எந்த பிரதியோகியினை அடைவதானதாக உள்ளதோ எந்த **உபலம்பனத்தின்** (ஞானத்தின்) அதுவே அனுபவத்தின் யோகியத்தன்மை என்று பொருள்.

तथा हि। स्फीतालोकवति भूतले यदि घटः स्यात्तदा घटोपलम्भः स्यादियापादनसम्भवात्तादृशभूतले घटाभावोऽनुपलब्धिगम्यः। अन्धकारे तु तादृशापादनासम्भवान्नानुपलब्धिगम्यता। अत एव स्तम्भे पिशाचसत्त्वे स्तम्भवत्प्रत्यक्षतापत्त्या तदभावोऽनुपलब्धिगम्यः। आत्मनि धर्मादिसत्त्वेऽप्यस्यातीन्द्रियतया निरुक्तोपलम्भापादनाऽसम्भवाद् न धर्माद्यभावस्यानुपलब्धिगम्यत्वम्।

அதனால், தெளிவானதான தரையில் பானை இருந்தால் அப்பொழுது பானை உபாலம்பம் (ஞானம்) உண்டாகும். என்கிற விஷயம் உண்டாக இயலும் (சம்பவமாகும்) என்பதால் அப்படிபட்ட தரையில் பானையின் இன்மை அனுபலப்தினால் அறியப்படுகிறது. ஆத்மாவில் தர்மம் முதலியவையின் இருந்தாலும் அது அதீந்திரியமானதால் கூறப்பட்ட ஞானமானது உண்டாகும் விஷயம் இல்லாததால் அந்த தர்மம் முதலியவைகளின் இன்மை அனுபலப்தியினால் அறியப்படுவதில்லை

ननूक्तरीत्याऽधिकरणेन्द्रियसन्निकर्षस्थलेऽभावस्यानुपलब्धिगम्यत्वंत्वदनुमतं तत्र क्लृप्तेन्द्रियमेवाभावाकारवृत्तावपि करणम्। इन्द्रियान्वयव्यतिरेकानुविधानादिति चेत्। न। तत्प्रतियोग्यनुपलब्धेरपि अभावग्रहे हेतुत्वेन क्लृप्तत्वेन करणत्वमात्रस्य कल्पनात्। इन्द्रियस्य चाभावेन समं सन्निकर्षाभावेनाभावग्रहाहेतुत्वात्। इन्द्रियान्वयव्यतिरेकयोरधिकरणज्ञानाद्युपक्षीणत्वेनान्यथासिद्धेः।

ஆனால் கூறப்பட்ட முறையில் அதிகரணமும் இந்திரியம் சேரும் இடத்தில் இன்மையானது அனுபலப்தியினால் அறியப்படுவது என்று நீங்கள் ஏற்பதில் அங்கு முழுவதுமாக இந்திரியமே இன்மையாகார விருத்தியிலும் கரணம் இந்திரியமானது நேர்மடை-எதிர்மடை இரண்டிலும் உங்களாலும் சம்மதிக்கப்பட்டதால் என்றால் அது தவறு அதன் பிரதியோகியின்

அனுபலப்திக்கும் இன்மையினை அறிவதில் காரணமாக ஏற்றதால் முழுமையான அதனில் கரணத்தன்மையானது கற்பனை மட்டுமே. இந்திரியத்தினையும் இன்மையினையும் ஒரே நேரத்தில் சம்பந்தம் செய்யாததினால் அதனில் இன்மை அறிவதில் காரணத்தன்மையில்லாததால் இந்திரியங்களின் நேர்மடை–எதிர்மடையோ இன்மையின் அதிகரணத்தின் ஞானத்தை அடைவதிலேயே அழிந்துபோவதால் அது **அன்யதாசித்தம்** (காரியம் உண்டாவதற்க்கு அவசியமற்றதுஇ பானை பாரியத்திற்க்கு மேகம், கழுதை போல) ஆகின்றது.

**ननु भूतले घटो नेत्याद्यनुभावानुभवस्थले भूतलांशे प्रत्यक्षत्वमुभयसिद्धमिति तत्र वृत्तिनिर्गमनस्यावश्यकत्वेन भूतलावच्छिन्नचैतन्यवत्तन्निष्ठघटाभावावच्छिन्नचैतन्यस्यापि प्रामात्रभिन्नतया घटाभावस्य प्रत्यक्षतैव सिद्धान्तेऽपीति चेत्। सत्यम्। अभ्हवप्रतीतेः प्रत्यक्षत्वेऽपि तत्करणस्यानुपलब्धेर्मानान्तरत्वात्। न हि फलीभूतज्ञानस्य प्रत्यक्षत्वे तत्करणस्य प्रत्यक्षप्रमाणतानियतत्वमस्ति। दशमस्त्वमसीत्यादिवाक्यजन्यज्ञानस्य प्रत्यक्षत्वेऽपि तत्करणस्य वाक्यस्य प्रत्यक्षप्रमाणभिन्नप्रमाणत्वाभ्युपगमात्।**

ஆனால் தரையில் பானை இல்லை என்பது முதலான இன்மை அனுபவ இடங்களில் தரையாகிய பகுதியில் பிரத்யக்ஷமானது இருவரும் (வாதி–பிரதிவாதி) ஏற்பது அதனில் விருத்தியானது செல்வது அவசியமானதால் தரை கூடியதான சைத்தன்யத்தை போல அதனிலுள்ள பானை இன்மை கூடிய சைத்தன்யமும் **பிரமாத்தாவை** (பார்ப்பவரை) காட்டிலும் வேறாக அல்லாததால் பானை இன்மையானது பிரத்யக்ஷமாகவே சித்தாந்தத்திலும் என்றால் உண்மை. இன்மை ஞானமானது பிரத்யக்ஷமானதாக ஆனாலும் அதன் கரணமான அனுபலப்தியானது வேறு பிரமானமாகும் அதுவுமல்லாமல் பலனாகிய ஞானமானது பிரத்யக்ஷமாகும்போது அதன் கரணமும் பிரத்யக்ஷமாகவேண்டும் என்கிற நியமம் இல்லை பத்தாவது நீயாகிறாய் முதலிய வாக்கியத்தால் உண்டாகும் ஞானமானது பிரத்யக்ஷமாக இருந்தாலும் அதன் கரணமான வாக்கியமானது பிரத்யக்ஷ பிரமாணத்தை காட்டிலும் வேறு பிரமாணமாக ஏற்க்கப்படுவதால்.

फलवैजात्यं विना कथं प्रमाणभेद इति चेत्। न। वृत्तिवैजात्यमात्रेण प्रमाणवैजात्योपपत्तेः। तथा च घटाद्यभावाकारवृत्तिर्नेन्द्रियजन्या। इन्द्रियस्य विषयेणासन्निकर्षात्। किन्तु घटानुपलब्धिरूपमानान्तरजन्या। इति भवत्यनुपलब्धेर्मानान्तरत्वम्।

பலனில் வேற்றுபாடில்லாமல் எவ்வாறு பிரமாணம் வேறுபடுகின்றது என்றால். தவறு விருத்தி வேறுபாட்டால் மட்டுமே பிரமாண வேறுபாடு உண்டாகமுடியும். அதனால் பானை முதலிய இன்மையாகார விருத்தியானது இந்திரியத்தால் உண்டாவதில்லை, இந்திரியமானது விஷயத்துடன் சேர்வத்தில்லாததால் (சம்பந்தபடாததால்) ஆனால் பானை அனுபலப்தி என்ற வேறு பிரமாணத்தினால் உண்டாவது என்று அனுபலப்தியானது வேறு பிரமாணத்தன்மை அடைகிறது.

नन्वनुपलब्धिरूपमानान्तरपक्षेऽप्यभावप्रतीतेः प्रत्यक्षत्वे घटवति घटाभावभ्रमस्यापि प्रत्यक्षत्वापत्तौ तत्राप्यनिर्वचनीयघटाभवोऽभ्युपगम्येत। न चेष्टापत्तिः। तस्य मायोपादानकत्वेऽभावत्वानुपपत्तेः। मायोपादानकत्वाभावे मायायाः सकलकार्योपादानत्वानुपपत्तिरिति चेत्। न। घटवति घटाभावभ्रमो न तत्कालोत्पन्नटाभावविषयकः। किन्तु भूतलरूपादौ विद्यमानो लौकिको घटाभवो भूतले आरोप्यत इत्यन्यथाख्यातिरेव। आरोप्यसन्निकर्षस्थले सर्वत्रान्यथाख्यातेरेव व्यवस्थापनात्।

ஆனால், அனுபலப்தி என்கிற வேறு பிரமாணத்தை ஏற்க்கும் நிலையிலும் இன்மை ஞானத்தின் பிரத்யக்ஷத்தன்மையில் பானையைப்போல பானை இன்மையின் பிரமையும் (தவறான அறிவு) பிரத்யக்ஷத்தன்மை அடையும் அங்கும் **அநிர்வசனீய** பானை இன்மையை ஏற்பீராக என்றால், எங்களுக்கு விருப்பமே என்பதியலாது, அதற்கு மாயா உபாதனமானதால் இன்மைத்தன்மை

அடையாது, மாயா உபாதானமாவது இயலாது எனறால், தவறு, பானையைப்போல பானையின்மையின் பிரமையானது அதே நேரத்தில் தோன்றும் பானை இன்மை விஷயமுடையதில்லை, ஆனால், தரை முதலியவற்றில் இருக்கும் லௌகிகமான பானையின்மையானது தரையில் **ஆரோபிக்க** (ஏற்றிப்பார்க்க) படுகிறது என்பதால் **அன்யதாகியாதியேயாகும்** (**அன்யதா** – வேறு ஒன்றின், **கியாதி** - ஞானம்), ஏற்றிப்பார்பது சம்பந்தமாகும் இடத்திலெல்லாம் அன்யதாகியாதியே எனறு நிச்சயிக்கப்பட்டதால்.

**अस्तु वा प्रतियोगिमति तदभावभ्रमस्थले तदभावस्यानिवचनीयत्वम्। तथाऽपि तदुपादानं मायैव। न ह्युपादानोपादाययोरत्यन्तसाजात्यम्। तन्तुपटयोरपि तन्तुत्वपटत्वादिना वैजात्यात्। यत्किञ्चिसाजात्यस्य मायाया अनिर्वचनीयत्वस्य घटाभावस्य च मिथ्यात्वधर्मस्य विद्यमानत्वात्। अन्यथा व्यावहारिकघटाद्यभावं प्रति कथं मायोपादानमिति कुतो नाशङ्केथाः। न च विजातिययोरप्युपादानोपादेयभावे ब्रह्मैव जगदुपादानं स्यादिति वाच्यम्। प्रपञ्चविभ्रमाधिष्ठानत्वरूपेण तस्येष्टत्वात्। परिणामित्वरूपस्योपादानत्वस्य निरवयवे ब्रह्मण्यनुपपत्तेः। तथा च प्रपञ्चस्य परिणाम्युपादानं माया। न ब्रह्म इति सिद्धान्त इत्यलमतिप्रसङ्गेन।**

இல்லையென்றால், பிரதியோகியினையுடையதில் அதன் இன்மையானதின் பிரமையுண்டாகும் இடத்தில் அதன் இன்மையில் அநிர்வசனீயத்தன்மை இருக்கட்டும், என்றாலும் அதன் உபாதானம் மாயையே. அதனால் உபாதானம் - உபாதேயம் இரண்டும் மிகவும் சமான ஜாதியானது என்றும் கூறுதலியலாது, நூல்-துணியும் கூட நூற்த்தன்மை மற்றும் துணித்தன்மை என்பதான வேற்று ஜாதியானதால். ஏதோ சிறிதாக இருக்கும் சமான ஜாதிதன்மையானது மாயையின் அநிர்வசனிய தன்மையான பானையின்மையிலும் மித்யாத்தன்மையான தர்மமானது இருப்பது காணப்படுகின்றதால் இல்லையென்றால், வியவகாரம் செய்யும் நிலையிலுள்ள பானை முதலியவையின் இன்மைக்கு எப்படி மாயாவானது உபாதானமாகும் என்று ஏன் சந்தேகப்படவில்லை . அதுமட்டுமல்லாமல் வேற்று ஜாதியானதாலும்

உபாதன-உபாதேய தன்மையில் பிரம்மமே ஜகத்தின் உபாதானம் என்று கூறக்கூடாது. **பிரபஞ்சத்தின்**(ஜகத்) பிரமைக்கு அதிஷ்டான தன்மையுடையதாக அது ஏற்கபடுவதனால் மாற்றமடையும் தன்மையுடைய உபாதானத்தன்மையானது **அவயவமற்ற** (பாகம்) பிரம்மத்தில் உண்டாகுதல் இயலாது. அதனால், பிரபஞ்சத்தின் மாற்றமான உபாதான காரணம் மாயாவே பிரம்மமில்லை என்பது சித்தாந்தம். இது இங்கு போதுமானது.

**स चाभावश्चतुर्विधः। प्रागभावः प्रध्वंसाभावोऽत्यन्ताभावोऽन्योन्याभावश्चेति। तत्र मृत्पिण्डादौ कारणे कार्यस्य घटादेरुत्पत्तेः पूर्वं योऽभावः स प्रागभावः। स च भविष्यतीति प्रतीतिविषयः। तत्रैव घटस्य मुद्गरपातानन्तरं योऽभावः स प्रध्वंसाभावः। ध्वंसस्यापि स्वाधिकरणकपालनाशे नाश एव। न चैवं घटोन्मज्जनापत्तिः। घटध्वंसध्वंसस्यापि घटप्रतियोगिकध्वंसत्वात् अन्यथा प्रागभावध्वंसात्मकघटस्य विनाशे प्रागभावोन्मज्जनापत्तिः।**

அந்த இன்மையானது நான்கு வகைப்படும் - **முன்னின்மை, பின்னின்மை, நிரந்தரஇன்மை** மற்றும் **ஒன்றுமற்றொன்றிலின்மை** என்றும். அதனில் களிமண் பிண்டம் முதலிய காரணத்தில் காரியமான பானையின் உற்பத்திக்கு முன்னர் எந்த இன்மையோ அது **முன்னின்மை**. அதுவும் உண்டாகும் என்று தோன்றும் விஷயம் அங்கேயே பானையானது தடியடி கொண்டபின்னர் எந்த இன்மையோ அது **பின்னின்மை** பின்னிமையிலும் தன்னுடைய அதிகரணமான (தலமான) கபாலமானது அழிவதினால் அழிவையேயடையும் (பின்னின்மை) அதனால் பானையானது உண்டாகாதா எனறால் பானை அழிவின் அழிவும் பானை பிரதியோகியின் அழிவே என்பதால், இல்லையென்றால் முன்னின்மையின் அழிவினையுடைய பானையானது அழிந்தால் முன்னின்மை மீண்டும் தோன்றும் நிலையுண்டாகும்.

**न चैवमपि यत्र ध्वंसाधिकरणं नित्यं तत्र कथं ध्वंसनाश इति वाच्यम्। तादृशाधिकरणं यदि चैतन्यव्यतिरिक्तं तदा तस्य नित्यत्वमसिद्धम्। ब्रह्मव्यतिरिक्तस्य**

**सर्वस्य ब्रह्मज्ञाननिवर्त्यताया वक्ष्यमाणत्वात्। यदि च ध्वंसाधिकरणं चैतन्यं तदाऽसिद्धिः। आरोपितप्रतियोगिकध्वंसस्याधिष्ठाने प्रतीयमानस्याधिष्ठानमात्रत्वात्। तदुक्तम् -**

**अधिष्ठानावशेषो हि नाशः कल्पितवस्तुन इति। एवं शुक्तिरूप्यविनाशोऽपीदमवच्छिन्नं चैतन्यमेव।**

இதனால் எங்கு அழிவின் அதிகரணமானது (தலமானது) நித்தியமோ அங்கு எவ்வாறு அழிவின் நாசம் என்று கேட்டால் சரியல்ல, அப்படிபட்ட தலமானது சைத்தன்யத்தினைக்காட்டிலும் வேறானதாக இருந்தால் அதன் நித்தியத்தன்மை நிரூபணமாகாது, பிரம்மத்தினைத்தவிர மற்றெல்லாமும் பிரம்ம ஞானத்தினால் நீங்குவதாக கூறப்போவதால். அழிவின் **அதிகரணம்**(தலம்) சைத்தன்யமேயென்றால் அது நிரூபனமாகாது ஏற்றிப்பார்க்கப்பட்ட பிரதியோகியுடைய அழிவானதின் அதிஷ்டானத்தில் தோன்றுவதான அதிஷ்டாணம் மட்டுமே என்பதால். அது (இவ்வாறு) கூறப்பட்டுள்ளது - அதிஷ்டானத்தின் மீதமிருக்கும் (பாக்கியிருக்கும்) நிலையே நாசமாகும் கற்பனை செய்யப்பட்ட விஷயங்களுக்கு, இதனால் சிப்பி - வெள்ளியின் அழிவானதும் இது கூடியதான சைத்தன்யமே.

**यत्राधिकरणे यस्य कालत्रयेऽप्यभावः सोऽत्यन्ताभावः। यथा वायौ रूपात्यन्ताभावः। सोऽपि घटादिवद् ध्वंसप्रतियोग्येव। इदमिदं नेति प्रतीतिविषयोऽन्योन्याभावः। अयमेव विभागो भेदः पृथक्त्वं चेति व्यवह्रियते। भेदातिरिक्तविभागादौ प्रमाणाभावात्। अयं चान्योन्याभावोऽधिकरणस्य सादित्वे सादिः। यथा घटे पटभेदः। अधिकरणस्यानादित्वेऽनादिरेव- यथा जीवे ब्रह्मभेदः। ब्रह्मणि वा जीवभेदः। द्विविधोऽपि भेदो ध्वंसप्रतियोग्येव। अविद्याया निवृत्तौ तत्परतन्त्राणां निवृत्त्यवश्यम्भावात्।**

எந்த தலத்தில் மூன்று காலத்திலும் எதன் இன்மையுள்ளதோ அது

நிரந்தரஇன்மை. உதாரணத்திற்க்கு, காற்றில் ரூபத்தின் நிரந்தரஇன்மை அதுவும் பானை முதலியதைப்போல அழிவுக்கு பாத்திரமாவதே. இது அதுவல்ல என்கிற அறிவிற்க்கு எது விஷயமோ அது ஒன்றுமற்றொன்றிலின்மை. இதனையே **விபாகம், பேதம், பிருதக்த்வம்** என்றும் கூறுகின்றனர் பிரிவினைத்தவிர மற்ற விபாகம் முதலியவற்றை ஏற்க பிரமாணம் இல்லாததால். இந்த ஒன்றுமற்றொன்றிலின்மையானது, தலமானது துவக்கமுடையதாக இருந்தால் துவக்கமுடையது எப்படி பானையில் துணியின் பேதமோ(பிரிவோ) தலமானது அனாதியானால் அனாதியே எப்படி ஜீவனில் பிரம்மத்தின் பிரிவோ, பிரம்மத்தில் ஜீவனின் பிரிவோ. இரண்டு வகையான பிரிவும் அழிவிற்கு பாத்திரமாவதே, அவித்தையானது நீங்கும்பொழுது அதனை சார்ந்திரக்கும் (அதீனமாக இருக்கும்) மற்ற (பிரிவுகளும்) நீங்குவது நிச்சயமானதால்.

**पुनरपि भेदो द्विविधः सोपाधिको निरुपाधिकश्चेति। तत्रोपाधिसत्ताव्याप्यसत्ताकत्वं सोपाधिकत्वं। तच्छून्यत्वं निरुपाधिकत्वम्। तत्राद्यो यथा एकस्यैवाकाशस्य घटाद्युपाधभेदेन भेदः। यथा वा एकस्यैव सूर्यस्य जलभाजनभेदेन भेदः। तथा च एकस्यैव ब्रह्मणोऽन्तःकरणभेदाद्भेदः। निरुपाधिकभेदो यथा घटे पटभेदः। न च ब्रह्मण्यपि प्रपञ्चभेदाभ्युपगमेऽद्वैतविरोधः। तात्त्विकभेदादेरनभ्युपगमेन वियादिवदद्वैताव्याातकत्वात्। प्रपञ्चस्याद्वैते ब्रह्मणि कल्पितत्वाङ्गिकारात्। तदुक्तं सुरेश्वराचार्यैः -**

**अक्षमा भवतः केयं साधकत्वप्रकल्पने।**
**किन्न पश्यसि संसारं तत्रैवाज्ञानकल्पितम्॥**

மீண்டும் பிரிவு இரண்டுவகை - உபாதி கூடியது, உபாதியற்றது என்றும். (உபாதி - வரையறை) அதனில் வரையறையின் இருத்தலினால் வியாப்ய இருத்தலுடையது உபாதிகூடியதன்மையுடையது அதனில் முதலாவதானது - ஒரே ஆகாயமே , பானை முதலிய வரையறை பிரிவுகளால் பிரிவடைகிறது, அல்லது ஒரே சூரியனே நீர்நிலைகளின் பிரிவுகளால் பிரிவடைகின்றது. அதுபோல, ஒரே பிரம்மமானது அந்தக்கரணத்தின் பிரிவுகளால் பிரிவடைகின்றது. உபாதியற்ற

பிரிவானது பானையில் துணியின் பிரிவு. அதனால், பிரம்மத்தில் பிரபஞ்சத்தின் பிரிவினை ஏற்றால் அத்வைதத்திற்க்கு விரோதமுண்டாகாது. தாத்விகமாக (உண்மையாக) பிரிவினை ஏற்க்காததால் ஆகாயம் முதலியவைபோல அத்வைதமானது அழிவடைவதல்லாததால் (நிராகரிக்கபடவுதல்லாததால்) பிரபஞ்சமானது (ஜகத்) அத்வைதமான பிரம்மத்தில் கற்பனை செய்யப்பட்டது என்று ஏற்பதால். **ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரும்** இதனையே –

(பிரம்மத்தில் முமுக்ஷுத்வம் முதலிய) சாதகத்தன்மையை கற்பனைசெய்வதில் உங்களுக்கு ஏன் இந்த வெறுப்பு, ஏன் நீ பார்க்கவில்லை சம்சாரத்தினை அதிலேயே அஞ்ஞானத்தால் கற்பனை செய்யப்பட்டதினை. – என்று

**अत एव विवरणेऽविद्यानुमाने प्रागभावव्यतिरिक्तत्वविशेषणम्। तत्त्वप्रदीपिकायामविद्यालक्षणे भावत्वविशेषणं च सङ्गच्छते। एवं चतुर्विधाभावानां योग्यानुपलब्ध्या प्रतीतिः। तत्रानुपलब्धिर्मानान्तरम्।**

அதனாலேயே **விவரணத்தில்** அவித்தையை குறித்த அனுமானத்தில் முன்னின்மையிலிருந்து வேறுபட்டது என்கிற குறிப்பினை (விசேஷத்தை) **தத்துவப்ரதீபிகையிலும் (சித்சுகி)** அவித்யா லக்ஷணத்தில் பாவத்தன்மை என்கிற விசேஷணமும் (குறிப்பும்) சரியாக பொருந்துகின்றது. இப்படி நான்கு வகையான இன்மையும் போக்கிய அனுபலப்தியினால் பிரதீதி (ஞானம்) உண்டாகின்றது. இதனால் அனுபலப்தி எனபது வேறு பிரமாணம்.

**एवमुक्तानां प्रमाणानां प्रामाण्यं स्वत एवोत्पद्यते ज्ञायते च। तथा हि स्मृत्यनुभवसाधारणं संवादिप्रवृत्त्यनुकूलं तद्वति तत्प्रकारकज्ञानत्वं प्रामाण्यम्। तच्च ज्ञानसामान्यसामग्रीप्रयोज्यं न त्वधिकं गुणमपेक्षते। प्रमामात्रेऽनुगतगुणाभावात्। नापि प्रत्यक्षप्रमायां भूयोऽवयवेन्द्रियसन्निकर्षः। रूपादिप्रत्यक्षे आत्मप्रत्यक्षे च तदभावात्। सत्यपि तस्मिन् पीतः शङ्ख इति प्रत्ययस्य भ्रमत्वाच्च।**

இப்படி கூறப்பட்ட பிரமாணங்களானதின் பிரமாணத்தன்மை தானே உண்டாகின்றது அறியவும் படுகிறது. அதனாலேயே ஸ்மிருதி, அனுபவம் இரண்டிற்கும் சாதாரணமான சம்யாதி (சரியான) பிரவிருத்திக்கு அனுகூலமான (ஏற்றதான) **தத்வதி தத்பிரகாரக ஞானத்வம்**(அது என்பதில் அதுவான ஞானத்தன்மை) பிரமாணத்தன்மையடைகிறது அதுவும் ஞானசாமானியத்தின் சாமகிரியினால் (அவசியமான பொருள்) பிரயோஜனத்தன்மையடைகிறது அதனைத்தவிர வேறு அதிகமான குனத்தை எதிர்ப்பார்ப்பதில்லை பிரமாவில் மட்டும் உண்டாகும் (ஊடுருவிருக்கும்) குணமில்லாததால். பிரத்யக்ஷ பிரமாணத்தில் மீண்டும்மீண்டும் விஷயம் மற்றும் இந்திரியத்தில் சேர்க்கையும் (குணம்) இல்லை ரூபம் முதலியவற்றின் பிரத்யக்ஷத்திலும் ஆத்மாவின் பிரத்யக்ஷத்திலும் அது இயலாததால். இருந்தாலும் அதனில் மஞ்சள் சங்கு என்று பிரமை தோற்றமானதாலும்.

**अत एव न सल्लिङ्गपरामर्शादिकमप्यनुमित्यादिप्रमायां गुणः। असल्लिङ्गपरामर्शादिस्थलेऽपि विषयाबाधेन अनुमित्यादेः प्रामात्वात्। न चैवमप्रमाऽपि प्रमा स्यात्। ज्ञानसामान्यसामग्र्या अविशेषादिति वाच्यम्। दोषाभावस्यापि हेतुत्वाङ्गीकारात्। न चैवं परतस्त्वमिति वाच्यम्। आगन्तुकभावकारणापेक्षायामेव परतस्त्वात्।**

அதனால்தான் அசத் லிங்கமான (குறியான) ஞானம் (பராமர்ஷம்) முதலியவைகளிலும் அனுமிதி முதலிய பிரமாவிற்கு (பிரயோஜனமான குணம்) குணமாகும் தன்மையில்லை, அஸத் லிங்கமான பராமர்ஷத்திலும்கூட விஷயமானது நிராகரணம் அடையாததால் அனுமிதி முதலியவையில் பிரமாத்தன்மை . இதனால், பிரமாவல்லாததும் பிரமாவாகும் ஞானத்திற்க்கான சாதாரணமான சாமகிரிகளில் (தேவையான விஷயம்) வேறுபாடில்லாததால் என்று கூறுதல் சரியல்ல, தோஷமின்மையையும் காரணமாக ஏற்பதால். அதனால், (பிரமா) பரதஸ்தன்மை (வேறொன்றால் ஒளிர்வது) என்ற நிலையடையும் என்று கூறக்கூடாது, வந்துபோவதான பாவ (இருத்தலுடைய) காரணங்களை கொண்டே வேறொன்றால் ஒளிரும் நிலை.

ज्ञायते च प्रामाण्यं स्वतः। स्वतोग्राह्यत्वं च दोषाभावे सति यावत्स्वाश्रयग्राहकसामग्रीग्राह्यत्वम्। स्वाश्रयो वृत्तिज्ञानं तद्ग्राहकं साक्षिज्ञानं तेनापि वृत्तिज्ञाने गृह्यमाणे तद्गतं प्रामाण्यं गृह्यते। न चैवं प्रामाण्यस।शयानुपपत्तिः। तत्र संशयानुरोधेन दोषस्यापि सत्त्वेन दोषाभावघटितस्वाश्रयग्राहकाभावेन तत्र प्रामाण्यस्यैवाग्रहात्।

பிரமாத்தன்மையானது தானே என்றே அறியப்படுகின்றது. தானே கிரகிக்கப்படுவது என்றால் தோஷமில்லாத நிலையில் பிரமாத்தன்மையினை சார்ந்திருக்கும் (பிரமாவின்) சாமகிரியினால் கிரகிக்கப்படும் தன்மை தன்னை சார்ந்தது என்றால் விருத்தி ஞானமும் அதனை கிரகிக்கும் சாக்ஷி ஞானமும். அதனாலேயே, விருத்தி ஞானம் கிரகிக்கப்படும்போது அதனுடைய பிரமாணத்தன்மையும் கிரகிக்கப்படுகின்றது. இதனால், பிரமாணத்தன்மையின் சந்தேகத்தன்மை உண்டாக்ககூடும் என்பதாகாது, அங்கு சந்தேகத்தினை சார்ந்து தோஷமும் இருப்பதால், தோஷமின்மை கூடிய தன்னுடைய ஆஷ்ரயத்தின் (சார்பின்) கிரகணமின்மையுள்ளதால் அங்கு பிரமாணத்தன்மையே கிரகிக்கப்படாததால்.

यद्वा यावत्स्वाश्रयग्राहकग्राह्यत्वयोग्यत्वं स्वतस्त्वम्। संशयस्थले प्रामण्यस्योक्तयोग्यतासत्त्वेऽपि दोषवशेनाग्रहाद् न संशयानुपपत्तिः। अप्रामाण्यं तु न ज्ञानसामान्यसामग्रीप्रयोज्यम्। प्रमायामप्यप्रामाण्यापत्तेः। किन्तु दोषप्रयोज्यम्। नाप्यप्रामाण्यं यावत्स्वाश्रयग्राहकग्राह्यम्। अप्रामाण्यघटकतदभाववत्त्वादेर्वृत्ति-ज्ञानाऽनुपनीतत्वेन सक्षिणा ग्रहीतुमशक्यत्वात्। किन्तु विसंवादिप्रवृत्यादिलिङ्ग-कानुमित्यादिविषय इति परत एवाप्रामाण्यमुत्पद्यते ज्ञायते चेति।

இல்லையேல், பிரமாத்தன்மையின் ஆஷ்ரயத்தினை கிரகிக்கும் கிரகணத்தன்மையின் போக்கியத்தன்மை என்பதே தானே எனும் தன்மை. சந்தேக இடத்தில் பிரமாணத்தன்மையில் கூறப்பட்ட யோக்கியத்தன்மையானது

இல்லாவிட்டாலும் தோஷத்தின் காரணமாக கிரகிக்கப்படாததால் அங்கு சந்தேகமுண்டாவதில்லை. பிரமாணத்தன்மையில்லாதது என்பது ஞானசாமான்ய சாமகிரியின் பிரயோஜ்யம் (காரியம்) இல்லை. பிரமாவிலும் பிரமாவிலா தன்மையுண்டாகும். ஆனால் தோஷத்தின் காரியமே. பிரமாததன்மையில்லாதது பிரமாத்தன்மையின் ஆஷ்ரயத்தினை கிரகிப்பதின் கிரகணமுமில்லை. பிரமாவல்லாதது கூடிய அதன் தன்மையுடையதில் விருத்தி ஞானத்தினை கூறாததால் சாக்ஷியால் கிரகிக்கப்படுவது இயலாததால். ஆனால் **விசம்வாதி** (தவறான, பலன்தராத ) பிரவிருத்தி முதலியவையில் லிங்க அனுமித்தி முதலிய விஷயம் என்று வேற்று (**பரதஸ்**) பிரமாணத்தன்மையற்ற நிலை உண்டாவதும் அறியப்படுவதும்.

## इत्यनुपलब्धिपरिच्छेदः ॥

## அனுபலப்தி பரிச்சேதம் முற்றும்

# अथ विषयपरिच्छेदः

## விஷய பரிச்சேதம்

एवं निरूपितानां प्रमाणानां प्रामाण्यं द्विविधं व्यावहारिकतत्त्वावेदकत्वं पारमार्थिकतत्त्वावेदकत्वं चेति। तत्र ब्रह्मस्वरूपावगाहिप्रमाणव्यतिरिक्तानां सर्वप्रमाणानामाद्यं प्रामाण्यम्। तद्विषयाणां व्यवहारदशायं बाधाभावात्। द्वितीयं तु जीवब्रह्मैक्यपराणां सदेव् सोम्येदमग्र आसीत् इत्यादीनां तत्त्वमसि इत्यन्तानाम्। तद्विषयस्य जीवपरैक्यस्य कालत्रयाबाध्यत्वात्।

இவ்வாறு நிரூபிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரமாணத்தன்மை இருவகைப்படும் - விவகார விஷயத்தின் தத்துவத்தினை உணர்த்துவது மற்றும் பரமார்த்திக விஷயத்தின் தத்துவத்தினை உணர்த்துவது என்றும். அதனில் பிரம்மத்தின் சுவரூபத்தினை உணர்த்தும் பிரமாணத்தை விடுத்து மற்ற எல்லா விஷயத்திலும் முதலாவது பிரமாணத்தனமை ஏற்கப்படுகின்றது. அதன் விஷயங்களானது வியவகார நிலையில் நிராகரிக்கப்படுவதல்லாததால். இரண்டாவது வகையோ ஜீவ-பிரம்மம் இரண்டற்றது.(வேறற்றது. ஒன்றே) என்பதை குறிக்கும் **சதேவ சௌம்யேதமக்ர ஆசீத்** (சத்மட்டுமே மென்மையானவனே. இதற்கு முன்னால்(சிருஷ்டிக்கு முன்னால் (இருந்தது ) முதிலயதிலிருந்து **தத்வமஸி** (நீ அதுவாகிறாய்) என்பது வரை. அதன் விஷயமான ஜீவ-பிரம்மம் பிரிவற்ற நிலையானது முக்காலத்திலும் நிராகரிக்கப்படுவதல்லாததால்.

तच्चैक्यं तत्त्वंपदार्थज्ञानाधीनज्ञानमिति प्रथमं तत्पदार्थो लक्षणप्रमाणाभ्यां निरूप्यते। तत्र लक्षणं द्विविधं स्वरूपलक्षणं तटस्थलक्षणं चेति। तत्र स्वरूपमेव लक्षणं

स्वरूपलक्षणं। यथा सत्यादिकं ब्रह्मस्वरूपलक्षणम्। सत्यं ज्ञानमनन्तं ब्रह्म। आनन्दो ब्रह्मेति व्यजानात् इति श्रुतेः।

அந்த ஐக்கியம் (சேர்க்கை) **தத்** மற்றும் **த்வம்** (அது மற்றும் நீ ) ஆகிய சொற்பொருட்களின் ஞானத்திற்க்கு அதீனமான ஞானம் என்பதால் முதலில் தத் சொற்பொருளானது லக்ஷணம் மற்றும் பிரமாணம் கொண்டு நிரூபிக்கப்படுகிறது. அங்கு லக்ஷணமானது இருவகைப்படும் - **சுவரூப லக்ஷணம்** மற்றும் **தடஸ்த லக்ஷணம்** என்றும். அதனில் சுவரூபமே எதன் லக்ஷணமோ அது சுவரூபலக்ஷணம், உதாரணத்திற்கு, **சத்யம்** முதலியவை பிரம்மத்தின சுவரூப லக்ஷணம். **சத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம** (சத்தியம், ஞானம், அனந்தம் அந்த பிரம்மம்) , **ஆனந்தோ பிரம்மேதி வியஜானாத்** (ஆனந்தத்தினை பிரம்மம் என்று அறிந்தான்) என்று ஷ்ருதி கூறுகின்றது.

ननु स्वस्य स्ववृत्तित्वाभावे कथं लक्षणत्वमिति चेत्। न। स्वस्यैव स्वापेक्षया धर्मिधर्मभावकल्पनया लक्ष्यलक्षणत्वसम्भवात्। तदुक्तम् आनन्दो विषयानुभवो नित्यत्वं चेति सन्ति धर्माः। अपृक्त्वेऽपि चैतन्यात्पृथगिवावभासन्ते इति।

ஆனால். தன்னில் தன விருத்தியானது இல்லாத நிலையில் லக்ஷணத்தன்மை எவ்வாறு உண்டாகும் என்றால், தவறு, தன்னிலேயே தன்னை சம்பந்தப்படுத்து (தன்ககு அபேக்ஷயாக) தர்மி மற்றும் தர்ம (தர்மி - தர்மமுடையது, தர்மம் - தன்மை, குணம்) நிலைகளை கற்பனை செய்டயப்பட்டதால் குறிப்பும் - குறிக்கப்பட்டதும் உண்டாக இயலும் இது கூறப்பட்டுமுள்ளது , **ஆனந்தோ விஷயானுபவோ நித்யத்வம் சேதி சந்தி தர்மா , அபிருதக்த்வேபி சைத்தன்யாத் பிருத்கவிபாஸன்தே** (ஆனந்தம், விஷய அனுபவம் மற்றும் நித்தியத்தன்மை என்று தர்மங்கள் உள்ளன, வேறற்றதாக இருந்தாலும், சைத்தன்யத்திலிருந்து வேறாக பிரகாசிக்கின்றது) என்று.

**तटस्थलक्षणं तु यावल्लक्ष्यकालमनवस्थितत्वे सति तद्यावर्तकं तदेव। यथा गन्धवत्त्वं पृथिवीलक्षणम्। महाप्रलये परमाणुषु उत्पत्तिकाले घटादिषु गन्धाभावात्। प्रकृते ब्रह्मणि च जगज्जन्मादिकारणत्वम्। अत्र जगत्पदेन कार्यजातं विवक्षितम्। कारणत्वं च कर्तृत्वमतोऽविद्यादौ नातिव्याप्तिः।**

தடஸ்தலக்ஷணமோ எது லக்ஷியத்திலில்லாமல் இருந்து அதன் விலக்கனை (மற்றதிலிருந்து வேறுபடுத்தலை) செய்கின்றதோ அதுவே உதாரணத்திற்க்கு, வாசனைத்தன்மையானது பிருத்வியின் தடஸ்த லக்ஷணம். மகா பிரளயத்திலும், பரமானுவிலிருந்து உண்டாகும் போதும் பானை முதலியவையில் வாசனை இல்லாததால். இங்கு பிரம்மத்திலும் ஜகத் உண்டாவது முதலிய காரணத்தன்மை (தடஸ்த லக்ஷணம்). இங்கு ஜகத் எனற சொல்லினால் காரியமாகும் எல்லாம் கூறப்பட்டது, காரணத்தன்மையோ கர்த்ருத்தன்மை (செயபவன் எனும் தன்மை, உண்டாக்கும் தன்மை) என்பதால் அவித்தை முதலியவற்றில் அதிவியாப்தியுண்டாவாதில்லை.

**कर्तृत्वं च तत्तदुपादानगोचरापरोक्षज्ञानचिकीर्षाकृतिमत्त्वम्। ईश्वरस्य तावदुपादानगोचरापरोक्षज्ञानसद्भावे च यः सर्वज्ञः सर्वविद्यस्य ज्ञानमयं तपः। तस्मादेतद्ब्रह्म नामरूपमन्नं च जायते इत्यादिश्रुतिर्मानम्। तादृशचिकीर्षासद्भावे सोऽकामयत बहुस्यां प्रजायेय इत्यादिश्रुतिर्मानम्। तादृशकृतौ च तन्मनोऽकुरुत इत्यादिवाक्यम्।**

உண்டாக்கும் - செயபவன் எனும் தன்மை என்பதும் அந்தந்த செயலினை குறித்த உபாதான விஷயத்தின அபரோக்ஷமான ஞானம், அதனை செய்ய ஆசை மற்றும் அதனை செய்யும் முயர்ச்சியுடைய தன்மையாகும். ஈஷ்வரருக்கு முழுமையாக உபாதனத்தினை குறித்த அபரோக்ஷ ஞானமானது இருப்பதற்கு **ய சர்வஞ்ஞ சர்வவித்யஸ்ய ஞானமயம் தப தஸ்மாதேதத் பிரம்ம நாமரூபமன்னம் ச ஜாயதே** (எவர் சர்வஞ்ஞரோ சர்வவித்துமோ (சாமானியமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ) எவருடைய தபஸானது ஞானமையமானதோ, அதனிலிருந்து இந்த ஹிரண்யரூபமானது பெயர், உருவம் மற்றும் உணவும் உண்டாயிற்று) என்கிற

ஷ்ருதியானது பிரமாணம். அப்படிப்பட்ட செய்ய ஆசையானது உணடாவதில், **ஸோகாமயத பஹூஸ்யாம் ப்ரஜாயேய** (அது ஆசைப்பட்டது பலவாக ஆவேனாக, பலவற்றை உற்பத்தி செய்வேனாக) என்கிற ஷ்ருதியானது பிரமாண். அப்படிப்பட்ட முயர்ச்சியில் (முயர்ச்சியின் இருப்பில்) . **தன்மனோகுருத** (அது மனதினை உண்டாகிற்று) என்பது முதலான வாக்கியம (பிரமாணம்)

ज्ञानेच्छेकृतीनां मध्येऽन्यतमगर्भलक्षणत्रितयमिदं विवक्षितम्। अन्यथा व्यर्थविशेषणत्वापत्तेः। अत एव जन्मस्थितिध्वंसानामन्यतमस्यैव लक्षणे प्रवेशः। एवं च प्रकृते लक्षणानि नव सम्पद्यन्ते। ब्रह्मणो जगज्जन्मादिकारणत्वे च यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति इत्यादि श्रुतिर्मानम्।

ஞானம், ஆசை மற்றும் முயர்ச்சி இவைகளுக்கிடையில் ஒவ்வொன்றும் லக்ஷணமாக இயலும் என்பதால் மூன்றும் கூறப்பட்டது இல்லாவிட்டால் தேவையற்ற விசேஷணம் தரப்பட்டது என்றாகும். அதனாலேயே சிருஷ்டி, ஸ்திதி மற்றும் நாசம் இவற்றில் ஏதோவொன்று மட்டுமே லக்ஷணத்தில் உள்ளது. இவ்வாறாக இங்கு ஒன்பது லக்ஷணங்கள் உண்டாகின்றது. பிரம்மாணது ஜகத்தில் சிருஷ்டி, ஸ்திதி மற்றும் நாசத்திற்கு காரணமானதினை – **யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிவிஷந்தி** (எதிலிருந்து இநத பூத்ஙகள் (பஞ்சபூதம்) சிருஷ்டியாயிற்றோ, எதனால் உண்டானது உயிாவாழ்கின்றதோ எதனில் இவை லயமாடைகின்றதோ) முதலிய ஷ்ருதிகள் பிரமாணம்.

यद्वा निखिलजगदुपादानत्वं ब्रह्मणो लक्षणम्। उपादानत्वं च जगदध्यासाधिष्ठानत्वम्। जगदाकारेण विपरिणममानमायाऽधिष्ठानत्वं वा। एतादृशमेवोपादानत्वमभिप्रेत्य इदं सर्वं यदयमात्मा। सच्च त्यच्चाभवत्। बहुस्यां प्रजायेय इत्यादिश्रुतिषु ब्रह्मप्रपञ्चयोस्तादात्म्यव्यपदेशः। घटः सन् घटो भाति घट इष्ट इत्यादि लौकिकव्यपदेशोऽपि सच्चिदानन्दरूपब्रह्मैक्याध्यासात्।

இல்லையேல், இந்த ஜகத் முழுவதற்க்கும் உபாதனத்தன்மை பிரம்மத்தின் லக்ஷணம், உபாதனத்தன்மை என்றால் ஜகத்தினை ஏற்றிப்பார்க்கும் அதிஷ்டணத்தை தன்மை, ஜகத் ஆகாரமாக மாற்றமடையும் மாயையின் அதிஷ்டானத்தன்மையோ ஆகும். இந்த வகையான உபாகனத்தன்மையினை குறித்தே **இதம் சர்வம் யதயமாத்மா** (இது என்ற எல்லாம் அந்த ஆத்மாவே). **சச்ச த்யச்சாபவத்** (சத்தும் (மூர்த்தமாகவும்) த்யத் (அமூர்த்தமாகவும்) ஆயிற்று, **பஹுஸ்யாம் ப்ரஜாயேய** (பலவாக ஆவேன்) என்பது முதலான ஷ்ருதிகளில் பிரம்மம் மற்றும் பிரபஞ்சம் இரண்டின் ஒற்றுமையையும் குறிப்பதே. பானை உள்ளது பானை பிராகாசிக்கின்றது, பானை விருப்பம் முதலிய லௌகிகமான வியவகாரமும் சத், சித், ஆனந்தமான பிரம்மத்தின் ஒற்றுமையின் அத்யாசத்தாலேயே.

**नन्वानन्दात्मकचिदध्यासाद् घटादेरिष्टत्वव्यवहारे दुःखस्यापि तत्राध्यासात्तत्रापि इष्टत्वव्यवहारापत्तिरिति चेत्। न। आरोपे सति निमित्तानुसरणं। न तु निमित्तमस्तीत्यारोप इत्यभ्युपगमेन दुःखादौ सच्चिदंशाध्यासेऽप्यानन्दंशाध्यासाभावात्। जगति नामरूपांशद्वयव्यवाहारस्तु अविद्यापरिणामात्मकनामरूपसम्बन्धात्। तदुक्तम् -**

**अस्ति भाति प्रियं रूपं नाम चेत्यंशपञ्चकम्।**
**आद्यं त्रयं ब्रह्मरूपं जगद्रूपं ततो द्वयम्॥ इति।**

ஆனால், ஆனந்தாத்மயமான சைத்தன்யத்தின் அத்யாசத்தினால் பானை முதலிய விருப்பப்பட்ட விஷயத்தின் வியவகாரத்தில், துன்பத்தினிலும் அத்யாசம் செய்ததால் அங்கும் விருப்பப்பட்ட விஷயம் என்கிற வியவகாரம் ஏற்பட இயலும் எனறால், தவறு, ஆரோபம் இருந்தால் நிமித்தமானது இருப்பதால் அனுசரனை செய்யப்படுகிறது, நிமித்தம் இருப்பதால் ஆரோபம் செய்யப்படுவதில்லை என்பது ஏற்க்கப்பட்டதால் துன்பம் முதலியவற்றில் சத், சித, அம்சத்திலன அத்யாசமானது இருநதாலும் ஆனந்த அம்சத்தின் அத்யாசத்தின் இன்மையிருப்பதால். ஜகத்தில் நாமம் மற்றும் ரூபம் என்கிற வியவகாரமானதோ அவித்தையின் மாற்றமான நாமம் மற்றும் ரூபதிகள் சம்பந்தத்தினால். இதுவே -

**அஸ்தி** (இருக்கிறது) , **பாதி** (பிரகாசிக்கின்றது), **பிரியம்** (விருப்பம்) , **ரூபம்** (உருவம்), **நாமம்** (பெயர்) என்கிற ஐந்து அம்சத்தில். முதல் மூன்றும் பிரம்மத்தின் ரூபம், மற்ற இரண்டும் ஜகத் ரூபம் என்று கூறப்பட்டது.

**अथ जगतो जन्मक्रमो निरूप्यते। तत्र सर्गाद्यकाले परमेश्वरः सृज्यमानप्रपञ्चवैचित्र्यहेतुप्राणिकर्मसहकृतोऽपरिमितानिरूपितशक्तिविशेषविशिष्टमायासहितः सन्नामरूपात्मकनिखिलप्रपञ्चं प्रथमं बुद्धावाकलय्येदं करिष्यामीति सङ्कल्पयति तदैक्षत बहुस्यां प्रजायेय इति सोऽकामयत बहुस्यां प्रजायेय इत्यादिश्रुतेः। तत आकाशादीनि पञ्चभूतानि अपञ्चीकृतानि तन्मात्रपदप्रतिपाद्यानि उत्पद्यन्ते। तत्राकाशस्य शब्दो गुणः। वायोस्तु शब्दस्पर्शौ। तजसस्तु शब्दस्पर्शरूपणि। अपां तु शब्दस्पर्शरूपरसाः। पृथिव्यास्तु शब्दस्पर्शरूपरसगन्धाः।**

அடுத்து ஜகத்தானது உண்டான முறையை நிரூபிக்கின்றோம். அதனில், சிருஷ்டிக்கு முன்னர் பரமேஸ்வரன் சிருஷ்டிக்கப்போகும் ஜகத்தின் விசித்திர (பலதரப்பட்ட) நிலைக்கு காரணமான பிராணிகளின் கர்மத்தின் (பிராரப்தம் முதலியவை) உதவியுடன் வரையறையற்ற வர்ணிக்கப்பட்ட இயலாத விசேஷ சக்தி கூடியதான மாயாவின் உதவியுடன் நாமம் ரூபமான பிரபஞ்சம் முழுவதினையும் முதலில் மனதில் தீர்மானித்து இதனை செயவேன் என்று சங்கல்பம் செய்து **ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய** (அது பார்த்தது (ஆசைப்பட்டது) பலவகையாவேனாக) என்று **சோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய** (அது ஆசைப்பட்டது பலவகையாவேனாக) என்பது முதலிய ஷ்ருதிகள். அதன்பின்னர் ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களை **அபஞ்சீகிருதமான** (பஞ்சீகரணமாகாத) தன்மாத்திலை எனபடுவதினை உண்டாக்கினார். அதனில் ஆகாயத்தின் குணம் சபதம் . வாயுவினுடையது சப்தம் மற்றும் ஸ்ப்ாஷம் நெருப்பினுடையது சப்தம், ஸ்பர்ஷம் மற்றும் ரூபம் . நீரினுடையதோ சப்தம், ஸ்பர்ஷம், ரூபம் மற்றும் ரஸம் (சுவை) , பிருத்வினுடையதோ (நிலம்) சப்தம், ஸ்பர்ஷம், ரூபம் ரஸம் மற்றும் கந்தம்(வாசனை).

**न च शब्दस्याकाधमात्रगुणत्वम्। वाय्य्वादावपि तदुपलम्भात्। न चासौ भ्रमः। बाधकाभावात्। इमानि बूतानि त्रिगुणमायाकार्याणि त्रिगुणानि। गुणास्सत्त्वरजस्तमांसि। एतैश्च सत्त्वगुणोपेतैः पञ्चभूतैर्व्यस्तैः पृथक् पृथक् क्रमेण श्रोत्रत्वक्चक्षूरसनघ्राणाख्यानि पञ्चज्ञानेन्द्रियाणि जायन्ते। एतेभ्यः पुनराकाशादिगतसात्त्विकांशेभ्यो मिलितानि मनोबुद्ध्यहङ्कारचित्तानि जायन्ते। श्रोत्रादीनां पञ्चानां क्रमेण दिग्वातार्कवरुणाश्विनोऽधिष्ठातृदेवताः। मन आदीनां चतुर्णां क्रमेण चन्द्रचतुर्मुखशङ्कराच्युताः अधिष्ठातृदेवताः।**

சப்தமானது ஆகாயத்தின் குணம் மட்டும் எனறு இல்லை, வாயு முதலியவற்றில் அது உள்ளதால் அது பிரமை என்றில்லை, நிராகரணம் இல்லாததால் இந்த பூதங்களானது முக்குணமுடைய மாயாவின் காரியமானதால் முக்குணமுடையது. குணங்களானது சத்துவம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகும். இதனில் சத்துவ குணம் கூடியதான பஞ்சபூதமானது தனித்தனியே முறையாக காது, தோல், கண், நாக்கு மற்றும் மூக்கு ஆகிய ஐந்து ஞானேந்திரியமானது உண்டாகின்றது. இதனிலிருந்து (அபஞ்சீகிருத) மீண்டும் ஆகாயம் முதலியவையின் சாத்வீகமான அம்சத்திலிருந்து கூடியதான மனது, புத்தி , அஹங்காரம் மற்றும் சித்தமானது உண்டாயிற்று. ஷ்ரோத்திரம் (காது) முதலிய ஐந்திலிருந்தும் **தீககு** (கிசை). **வாத** (வாயு) **அர்க்க** (சூரியன்). **வருண** மற்றும் **அஷ்வினிகுமாரர்கள்** ஆகிய **அதிஷ்தாத்திரு** தேவதைகள் உண்டானது. மனது முதலிய நான்கினிற்கும்ம முறையா சந்திரன், சதுர்முகன்(பிரம்மர்) , சங்கரர் மற்றும் அச்யுதர் **அதிஷ்டாத்ரு** தேவதைகள். (அதிஷ்டாத்ரு - அபிமானமுடைய)

**एतैरेव रजोगुणोपेतैः पञ्चभूतैर्व्यस्तैर्यथाक्रमं वाक्पाणिपादपायूपस्थाख्यानि कर्मेन्द्रियाणि जायन्ते। तेषां च क्रमेण वह्नीन्द्रोपेन्द्रमृत्युप्रजापतयोऽधिष्ठातृदेवताः। रजोगुणोपेतैः पञ्चभूतैरेव मिलितैः पञ्च वायवः प्राणापानव्यानोदानसमानाख्याजायन्ते। तत्र प्राग्गमनवान् वायुः प्राणः। नासादिस्थानवर्ती। अर्वाग्गमनवानपानः।**

पाय्वादिस्थानवर्ती। विष्वग्गतिमान् व्यानः। अखिलशरीरवर्ती। ऊर्ध्वगमनवानुत्क्रमणवायुरुदातः। कण्ठस्थानवर्ती। अशितपीतान्नादिसमीकरणकरः समानः। नाभिस्थानवर्ती। तैरेव तमिगुणोपेतैरपञ्चीकृतभूतैः पञ्चीकृतानि जायन्ते। तासां त्रिवृतं त्रिवृतमेकैकां करवाणि श्रुतेः पञ्चीकरणोपलक्षणार्थत्वात्।

இந்த ரஜோகுணம் கூடியதான பஞ்சபூதங்களானது (அபஞ்சீகிருத) முறையாக வாககு, கை, கால், குதம் மற்றும் மூத்திர (இந்திரியமான) கர்மேந்திரியங்கள் உண்டாகின்றது. அவைகளுக்கு முறையாக நெருப்பு (வன்னி), இந்திரன், உபேந்திரன், மிருத்யு (யமன்) மற்றும் பிரஜாபதி ஆகியவர்கள் அதிஷ்டாத்ரு தேவதைகள். ரஜோகுணம் கூடியதாக பஞ்சபூதங்களே கூடியதான (அம்சம) (அபஞ்சீகிருத) ஐந்து வாயுக்குள் (மூச்சுகாற்று) **பிராணன், அபானன், வியானன், உதானன்** மற்றும் **சமானன்** ஆகியவை உண்டாகின்றது. அதனில் மேலே செல்லும் வாயுவானது பிராணணñ, மூக்கு முதலிய இடத்தில் இருப்பது. கீழே செல்லும் வாயுவானது அபானன், குதம் முதலிய இடத்தில் இருப்பது முழு உடலிலும் செல்லும் வாயுவானது வியானன், உடல் முழுவதும் இருப்பது. மேலெழுவதாக இருக்கும் வாயு உதானன். கழுத்தில் இருக்கும். உண்ணபட்ட அருந்தபட்ட உணவு முதலியவைகளை செரிமானம் செய்வது சமானன் தொப்புளில் இருப்பது. அநத தமோகுணம் கூடியதான பஞ்சமகாபூதங்களால் (அபஞ்சீகிருத) பஞ்சீகிருதமான பஞ்சமகாபூதங்கள் உண்டாகின்றன. **தாஸாம் த்ரிவிருதம் த்ரிவிருதமேகைகாம் கரவாணி** , ( அவைகிளனை (செருப்பு, நீர், நிலம்) ஒவ்வொன்றையும் திருவிருதம் செயவேன்) என்ற ஷ்ருதியானத பஞ்சீகரணத்தின உபலக்ஷணமானது என்பதால்.

पञ्चीकरणप्रकारश्चेत्थम्। आकाशमादौ द्विधा तयोरेकं भागं पुनश्चतुर्धा विभज्य तेषां चतुर्णामंशानां वय्वादिषु भूतेषु संयोजनम्। एवं वायुं द्विधा विभज्य तयोरेकं भागं पुनः चतुर्धा विभज्य तेषां चतुर्णामंशानामाकाशादिषु संयोजनम्। एवं तेज आदिनामपि।

**तदेवमेकैकभूतस्यार्धं स्वांशात्मकद्धान्तरं चतुर्विधाभूतमयमिति पृथिव्यादिषु स्वांशाधिक्यात्पृथिव्यादिव्यवहारः। तदुक्तम् वैशेष्यात्तु तद्वादस्तद्वादः इति**

பஞ்சீகரணம் என்ற முறையானது இவ்வாறு – ஆகாயத்திநை முதலில் இரண்டாக (சரிசமமாக) பிரித்து அதனில் ஒரு பாகத்தை மீண்டும் நான்காக பிரித்து அவைகளில் நாலில் ஒரு பங்கை வாயு முதலியவற்றினுடன் சேர்க்கவேண்டும். இதுபோல வாயுவினை இரண்டாக பிரித்து அதனில் ஒரு பாகத்தை மீண்டும் நான்காக பிரித்து அவைகளில் நாலில் ஒரு பங்கை ஆகாயம் முதலியவையுடன் சேர்ககவேண்டும் இதுபோல நெருப்பு முதலியவைகளிற்கும் . இப்படி ஒவ்வொரு பூதத்தின் பாதி பாகத்தை தன்னுடைய மற்ற பாதிக்கு நான்குவித பூதங்களும் சேர்த்து இது இந்த பூதம் என்று பிருத்வீ முதலியதென்ற வியவகாரம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது – **வைஷேஷ்யாத்து தத்வாதஸ்தத்வாத** (விசேஷத்தினால் (அதிகமானதால்) அந்தந்த பெயரினால் கூறபடுகிறது) என்று.

**पूर्वोक्तैरपञ्चीकृतैर्लिङ्गशरीरं परलोकयात्रानिर्वाहकं मोक्षपर्यन्तं स्थायि मनोबुद्धिभ्यामुपेतं ज्ञानेन्द्रियपञ्चकर्मेन्द्रियपञ्चकप्राणादिपञ्चकसंयुक्तं जायते। तदुक्तम्**

**पञ्चप्राणमनोबुद्धिदशेन्द्रियसमन्वितम्।**
**अपञ्चीकृतभूतोत्थं सूक्ष्माङ्गं भोगसाधनम्॥ इति।**

முன்னர் கூறபட்ட அபஞ்சீகிருதமானதிலிருந்து லிங்கசரீரம் (சூக்கும) வேறு லோகத்தில் யாத்திரையினை நிர்வகிப்பது மோக்ஷம் வரையில் நிரந்தரமான மனது, புத்தி கூடியதான, ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பிராணன் முதலிய ஐந்தும் கூடியதாக உண்டாகிறது. இவ்வாறு கூறபட்டுள்ளது –

ஐந்து பிராணண், மனது, புத்தி பத்திந்திரியங்கள் கூடியதான. அபஞ்சீகிருதபூதங்களிலிருந்து உண்டானது சூக்கும சரீரமான போகசாதனம் (ஆனந்தம் அடையும் கருவி) என்று.

तच्च द्विविधं परमपरं च। तत्र परं हिरण्यगर्भलिङ्गशरीरम्। अपरमस्मदादिलिङ्गशरीरम्। तत्र हिरण्यगर्भलिङ्गशरीरं महत्तत्वम्। अस्मदादिलिङ्गशरीरमहङ्कार इत्याख्यायते।

அதுவும் இருவகைப்படுகிறது - **பரம்** மற்றும் **அபரம்** என்றும், அதனில் பரமானது ஹிரண்யகர்ப லிங்கசரீரமானது அஹங்காரம் என்று அழைக்கபடுகிறது.

एवं तमोगुणयुक्तेभ्यो पञ्चीकृतभूतेभ्यो भूम्यन्तरिक्षस्वर्महर्जनस्तपः सत्यात्मकस्योर्ध्वलोकसप्तकस्य अतलवितलसुतलतलातलरसातलमहातल-पातालाख्याधोलोकसप्तकस्य ब्रह्माण्डस्य जरायुजाण्डजस्वेदजोद्भिज्जाख्यचतुर्विध-स्थूलशरीराणामुत्पत्तिः। तत्र जरायुजानि जरायुभ्यां जातानि। मनुष्यपश्वादिशरीराणि। अण्डजानि अण्डेभ्यो जातानि। पक्षिपन्नगादिशरीराणि। स्वेदजानि स्वेदाज्जातानि। यूकामशकादीनि। उद्भिज्जानि भुमिमुद्भिद्य जातानि। वृक्षादीनि। वृक्षादीनामपि पापफलभोगायतनत्वेन शरीरत्वम्।

இவ்வாறு தமோ குணம் கூடியதான பஞ்சீகிருத பூதங்கள் **பூமி, அந்தரிக்ஷம், சுவர், மகர், ஜன, தப** மற்றும் **சத்யம்** ஆகிய மேலேழு லோகங்களும் **அதல , விதல, சுதல, தரலாதல, ரஸாதல, மகாதல** மற்றும் **பாதாளம்** ஆகிய கீழ்லோகங்களும் பிரம்மாண்டத்தின், அதனில் **ஜராயுஜ , அண்டஜ, ஸ்வேதஜ** மற்றும் **உத்பிஜ** என்று நான்குவகை ஸ்தூல சரீரமானது உண்டாகின்றது. அதனில் **ஜராயுஜமானது** வயிற்றிலிருந்து தோன்றுவது, மனிதர், பசு முதலிய சரீரங்கள் **அண்டஜமானது** முட்டையிலிருந்து தோன்றுவது. **ஸ்வேதஜமானது** வியர்வையிலிருந்து உண்டாவது, ஈ, கொசு , **உத்பிஜம்** என்பது பூமியிலிருந்து முலைத்து வருவது, மரம் முதலியவை, மரம் முதலியவைகளும் பாவகர்மத்தின் பலனை அனுபவிப்பதற்க்காக சரீரத்தன்மை அடைகிறது.

तत्र परमेश्वरस्य पञ्चतन्मात्राद्युत्पत्तौ सप्तदशावयवोपेतलिङ्गशरीरोत्पत्तौ हिरण्यगर्भस्थूलशरीरोत्पत्तौ च साक्षात्कर्तृत्वम्। इतरनिखिलप्रपञ्चोत्पत्तौ हिरण्यगर्भादिद्वारा हन्ताहमिमास्तिस्रो देवताः अनेन जीवेनात्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणि इति श्रुतेः। हिरण्यगर्भो नाम मूर्तित्रयादन्यः प्रथमो जीवः।

स वै शरीरी प्रथमः स वै पुरुष उच्यते।
आदिकर्त्ता स भूतानां ब्रह्माग्रेसमवर्तत॥

हिरण्यगर्भः समवर्तताग्रे भूतस्य इत्यादिश्रुतेः। एवं भूतभौतिकसृष्टिर्नीरूपिता। इदानीं प्रलयो नीरूप्यते।

அதனில் பரமேஸ்வரரானவாருக்கு பஞ்சபூத தன்மாத்திரைகளின் தோற்றத்தில் பதினேழு அவயவங்கள் கொண்ட சூக்கும சரீரம் தோன்றுவதில், ஹிரண்யகர்ப ஸ்தூல சரீரம் தோன்றுவதிலும் நேரடியான கர்த்தா (செய்பவர்) என்ற சம்பந்தமுள்ளது மற்ற பிரபஞ்சம (ஜகத்) முழுவதின் தோற்றத்திலும் ஹிரண்யகர்பரினால் – **த ஹன்தாஹதமிமாஸ்திஸ்ரோ தேவதா அனேன ஜீவேனார்தமனானு பிரவிஷ்ய நாமரூபே வியாகரவானி** (இந்த மூன்று தேவதைகளை இந்த ஜீவனில் செலுத்தி நாமம். ரூபம் இவைகளை உண்டாகுவேன்) என்று ஷ்ருதியும. ஹிரண்யகர்பம் என்பது மும்மூர்த்திகளைவிடுத்து வேறான முதல் ஜீவனாகும்.

அதுவே முதல் சரீரி (சரீரமுடையது) அதுவே புருஷன் என்படுகிறது.
பூதங்கள் தோற்றுவித்தவர் பிரம்மா முதலில் தோன்றினார்.

**ஹிரண்யகர்ப சமவர்ததாக்ரே பூதஸ்ய** (ஹிரண்யகர்கம் பூதங்களுக்கு முன்னர் தோன்றியது) என்பது முதலான ஷ்ருதிகள். இவ்வாறு பூதம் மற்றும் பௌதிக சிருஷ்டியானது நிரூபிக்கபட்டது இப்பொழுது பிரளயமானது நிரூபிக்கபடுகின்றது.

**प्रलयो नाम त्रैलोक्यनाशः। स च चतुर्विधः। नित्यः प्राकृतो नैमित्तिक आत्यन्तिकश्चेति। तत्र नित्यः प्रलयः सुषुप्तिः। तस्याः सकलकार्यप्रलयरूपत्वात्। धर्माधर्मपूर्वसंस्काराणां च तदा काराणात्मनाऽवस्थानम्। तेन सुषुप्तावन्तःकरणस्य विनाशे तदधीनप्राणादिक्रियाऽनुपपत्तिः। वस्तुतः श्वासाद्यभावेऽपि तदुपलब्धेः पुरुषान्तरविभ्रममात्रत्वात् सुप्तशरीरोपलम्भवत्।**

பிரளயமாவது மூன்றுலகங்களின அழிவு. அது நான்கு வகைபடுகின்றது. **நித்தியம், பிராகிருதம், நைமித்திகம்** மற்றும் **ஆத்யந்தியம்** என்றும். அதனில் நித்திய பிரளயமானது தூக்கமே, அங்கு எல்லா காரியமும் பிரளயமடைவதானதால், புன்னிய-பாவ மற்றும் பூர்வ சம்ஸ்காரமானது (என்னபதிவுகள்) அப்பொழுது காரண நிலையில் இருப்பதால். அதனால் தூக்கத்திலிருந்து விழித்தவருகு இன்ப-துன்ப அனுபவங்கள் உண்டாவாதில்லை, அதன நினைவும் கூட உண்டாவாதில்லை, தூக்கத்தில் அந்தக்கரணமானது அழிவதால் அதற்கு அதீனமாக இருக்கும் பிராணன் முதலிய செயல்கள் உண்டாவதியலாது என்பதில்லை உண்மையில் மூச்சு முதலியவை இல்லாத போதும் அதனையறியும் மற்றவரலலேயே அறியப்படுவதால் மட்டும் இருபதால் தூக்கத்திலிருகும் சரீரமானது இருத்தல் போல (அது மற்றவரின் கற்பனை மட்டுமே என்று பொருள்)

**न चैवं सुप्तस्य परेतादविशेषः। सुप्तस्य हि लिङ्गशरीरं संस्कारात्मनाऽत्रैव वर्तते। परेतस्य तु लोकान्तरे इति वैलक्षण्यात्। यद्वा अन्तःकरणस्य द्वे शक्ती ज्ञानशक्तिः क्रियाशक्तिश्चेति। तत्र ज्ञानशक्तिविशिष्टान्तःकरणस्य सुषुप्तौ विनाशः। न तु क्रियाशक्तिविशिष्टस्येति प्राणाद्यवस्थानमविरुद्धम्। यद्वा सुप्तः स्वप्नं न कञ्चन पश्यति। अथास्मिन्प्राण एवैकधा भवति। अथैनं वाक् सर्वैर्नामभिः सहाप्येति। सता सोम्य तदा सम्पन्नो भवति स्वमपीतो भवति इत्यादिश्रुतिरुक्तसुषुप्तौ मानम्।**

இறந்த உடலிலிருந்து வேறு வேற்றுடை இல்லை எனக்கூடாது .

தூக்கத்திதலிருப்பவரின் லிங்க (ஸ்தூல) சரீரமானது சம்ஸ்காரமாக இங்கேயே இருபதால் இறந்தவருடையதோ வேறு லோகத்தில் என்பது இங்கு விலஷனமாகும் இல்லையென்றால் அந்தக்கரணமானது இரண்டு சக்தியுடையது - **ஞானசக்தி** மற்றும் **கிரியாசக்தி** என்றும், அதனில் ஞானசக்தியுடன் கூடிய அந்தக்கரணமானது தூக்கத்தில் அழிவடைகிறது, கிரியாசக்தி கூடியதின் அல்ல என்பதால் பிராணன் முதலியவற்றின் இருத்தல் விரோதமில்லாததாகிறது. **யத்வா சுப்த ஸ்வப்னம் ந கஞ்சன பஷ்யதி, அதாஸ்மின ப்ராண ஏவைகதா பவதி, அதைனம் வாக் சர்வைர் நாமபி ஸஹாப்யேதி,** (இல்லையென்றால் தூக்கத்தினுள்ளவர் கனவு எதுவும் கானுவதில்லை. அந்நேரத்தில் அவருடைய பிராணன் ஒன்றுபட்ட நிலையடைகிறது. அந்நேரத்தில் அவருடைய வாக்கு எல்லா நாமத்துடன் லயடைகிறது), **சதா சோம்ய ததா சம்பன்னோ பவதி ஸ்வமபீதோ பவதி** (சத்துடன், மென்மையானவனே, அப்பொழுது சேர்நதவன் ஆகிறான், தன்னிலேயே லயமடைகிறான்) முதலிய ஷ்ருதிகளில் கூறபட்டது சுஷுப்தியில் (தூக்கதினை குறித்த) பிரமாணம்.

प्राकृतप्रलयस्तु कार्यब्रह्मविनाशनिमित्तकः सकलकार्यनाशः। यदा तु प्रागेवोत्पन्नब्रह्मसाक्षात्कारस्य कार्यब्रह्मणो ब्रह्माण्डाधिकारलक्षणप्रारब्धकर्मसमाप्तौ विदेहकैवल्यात्मिका परा मुक्तिः। तदा तल्लोकवासिनामप्युत्पन्नब्रह्मसाक्षात्काराणां ब्रह्मणा सह विदेहकैवल्यम्।

ब्रह्मणा सह ते सर्वे सम्प्राप्ते प्रतिसञ्चरे।
परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम्॥ इति श्रुतेः।

பிராகிருத பிரளயமானதே காரிய பிரம்மமானது அழிவதினை நிமித்தமாக கொண்டதான எல்லா காரியத்தின் அழிவுமாகும். எவர் முன்னரேயே பிரம்ம சாக்ஷாத்காரத்தினை அடைந்தவரோ அவர் காரிய பிரம்மத்தின் அதிகாரணமான (சக்தி) பிராரப்த கர்மமானது முடிந்தவுடன் **விதேக கைவல்யத்தை** (மோக்ஷத்தை) அடைவதான பரா முக்தியினை அடைகின்றனர். அப்பொழுது அந்த லோகத்தில் (பிரம்ம லோகத்தில்) வசிப்பவர்களான பிரம்ம சாக்ஷாத்காரத்தினை அடைந்தவாகள் அந்த பிரம்மத்துடனேயே விதேக

கைவலயத்தினை அடைகின்றனர்.

பிரம்மத்துடன் அவாகள் எல்லோரும் பிராகிருத பிரளயம் உண்டாகும்போது.
ஹிரண்யகர்பத்தின் முக்தி சமயத்தில் ஆத்மசாக்ஷாத்காரம் அடைந்தவர்கள் அடைவர் விதேககைவல்யம் - என்கிறது ஷ்ருதியும். (விதேக கைவல்யம் - சரீரம் விழுந்தவுடன் அடையும் மோக்ஷம்).

**एवं स्वलोकवासिभिः सह कार्ये ब्रह्मणि मुच्यमाने तदधिष्ठितब्रह्माण्डतदन्तर्वर्तिनिखिललोकतदन्तर्वर्तिस्थावरादीनां भौतिकानां भूतानां च प्रकृतौ मायायां लयः। न तु ब्रह्मणि। बाधरूपविनशस्यैव ब्रह्मनिष्ठत्वात्। अतः प्राकृत इत्युच्यते।**

இவ்வாறு தன்னுடைய லோகத்திலிருபவருடன் காரிய பிரம்மமானது முக்தியடையும் போது அதன் அதிஷ்டானமான பிரம்மாண்டமும் அதன எல்லா லோகங்களும் அதனில் இருபவர்களும் ஸ்தாவரங்களும் . பூதங்களும், பூதத்தினால் தோன்றுவதும் பிரகிருதியான மாயாவினில் லயமடைகின்றது, பிரம்மத்தில் இல்லை, பாதமான அழிவே பிரம்மத்தில் இருப்பதானதால், பிராகிருத பிரளயம் எனப்படுகிறது.

**कार्यब्रह्मणो दिवसावसाननिमित्तकस्त्रैलोक्यमात्रप्रलयः नैमित्तिकप्रलयः। ब्रह्मणो दिवसश्चतुर्युगसहस्रपरिमितिकालः। चतुर्युगसहस्राणि ब्रह्मणो दिनमुच्यते इति वचनात् प्रलयकालो दिवसकालपरिमितः। रात्रिकालस्य दिवसकालतुल्यत्वात् प्राकृतप्रलये नैमित्तिकप्रलये च पुराणवचनानि।**

**द्विपरार्धे त्वतिक्रान्ते ब्रह्मणः परमेष्ठिनः।**
**तदा प्रकृतयः सप्त कल्प्यन्ते प्रलयाय हि॥**

एष प्राकृतिको राजन् प्रलयो यत्र लीयते।

इति वचनं प्राकृतप्रलये मानम्।

एष नैमित्तिकः प्रोक्तः प्रलयो यत्र विश्वसृक्॥

शेतेऽनन्तासने नित्यमात्मसात्कृत्य चाखिलम्।

इति वचनं नैमित्तिकप्रलये मानम्।

காரிய பிரம்மத்தின் பகலானது முடியும்பொழுது அதன் காரணமாக மூவுலகம் மட்டும் அடையும் பிரலயமானது நைமித்திகமாகும். பிரம்மனின் பகலானது நான்கு யுகங்களின் ஆயிரம் மடங்கு காலமாகும், **சதுர்யுகசஹஸ்ராணி பிரம்மனோ தினமுச்யதே** ( நான்கு யுகத்தின் ஆயிரம்மடங்கு பிரம்மனின் பகல் எனபடுகிறது) என்ற வசனத்தினால், பிரளயகாலமும்ம ஒரு பகலின் காலத்தின் அளவினனானது. ராத்திரிகாலமானது பகல்பொழுதிற்க்கு சமமானதால் பிராகிருத பிரளயத்தினை குறித்தும் நைமித்திக பிரளயத்தை குறித்தும் புராண வசனங்கள் -

இரண்டு பரார்த்தம் முடியும்போது பரமேஷ்டியமான பிரம்மனின் அப்பொழுது மஹத் முதலிய பிரகிருதிகளின் பிரளயம் உண்டாகும். இதனையே பிரதகருதம் என்கிறார்கள். ராஜாவே, எங்கு எல்லாம் லயமடைகிறதோ. - என்கிற வசனம் பிராகிருத பிரளயத்தில் பிரமாணம்.

இதுவே நைமித்தக்கம் என்று கூறபடுகிறது, எதனில் பிரளயம் சிருஷ்டித்தவரில் உண்டாகிறதோ. அங்கு அவர் உறங்குகிறார் அந்நதாசனத்தில் உலகம் எல்லாவற்றையும் தன்னில் அடக்கிவைக்கிறபோது - என்கிற வசனம் நைமித்திக பிரளயத்தில் பிரமாணம்.

तुरीयप्रलयस्तु ब्रह्मसाक्षात्कारनिमित्तकः सर्वमोक्षः। स चैकजीववादे युगपदेव। नानाजीववादे तु क्रमेण। सर्वं एकीभवन्ति इत्यादिश्रुतेः। तत्राद्यास्त्रयोऽपि लयाः कर्मोपरतिनिमित्ताः। तुरीयस्तु ज्ञानोदयनिमित्तो लयोऽज्ञानेन सहेवेति विशेषः। एवं चतुर्विधप्रलयो निरूपितः।

நான்காவது பிரலயமானது பிரம்ம சாக்ஷாத்காரத்தினால் உண்டாவது எல்லாவாற்றிலிருந்தும் உண்டாகும் மோக்ஷமாக. அது ஒரு ஜீவன் என்று ஏற்கும்போது ஒரே நேரத்தில், பல ஜீவன் எனும்போது முறையாக, **சர்வம் ஏகீபவந்தி** (எல்லாம் ஒன்றாகின்றது) என்பது முதலான ஷ்ருதிகள். அங்கு முதல் மூன்றுவகையான லயமும் கர்மம் அடங்கியதால் உண்டாவது, நான்காவதோ ஞானம் உண்டாதால் உண்டாவது அஞ்ஞானத்துடன் அடங்குவது என்பது விசேஷம். இவ்வாறு நான்குவகை பிரளயமும் நிரூபிக்கபட்டது.

**तस्येदानीं क्रमो निरूप्यते। भूतानां भौतिकानां च न कारणलयक्रमेण लयः। कारणलयसमये कार्याणामाश्रयान्तराभावेनावस्थानानुपपत्तेः। किन्तु सृष्टिक्रमविपरीतक्रमेण। तत्तत्कार्यनाशे तत्तज्जनकादृष्टनाशस्यैव प्रयोजकयतया उपादाननाशस्याप्रयोजकत्वात्। अन्यथा न्यायमथे महाप्रलये पृथिवीपरमाणुगतरूपरसादेरविनाशपत्तेः।**

அதன் கிரமமானது (முறை) இப்பொழுது நிரூபிக்கபடுகிறது. பூத்ஙகளும் பௌதிகங்களும் காரண லயத்தின் கிரமத்திலேயே லயம். காரண லயத்தின் வேளையில் காரியங்களிற்கு வேறு சார்ந்திருப்பதற்கு இல்லாததால் இருத்தல் இயலாதுபோகும், ஆனால்., சிருஷ்டி கிரமத்திற்கு நேரெதிரான கிரமத்தில் இயலும், அதனதன் காரியமானது நலமடையும் போது (அழிவு. லயம்) அதனை உண்டாக்கும் அதிருஷ்டம் (புண்ணிய, பாவம்) அழிவதே காரணமாவதால் உபாதானமானது நாசமடைவது பிரயோசனத்தன்மையியல்லை . இல்லாவிட்டால் நியாயமத்தில் மகா பிரளயத்தில் பிருத்வீ பரமாணுவிலிருக்கும் ரூபம். ரசம், முதலியவை அழிவுடைய இயலாது.

**तथा च पृथिव्या अप्सु। अपां तेजसि। तेजसो वायौ। वायोराकाशे। आकाशस्य जीवाहङ्कारे। तस्य हिरण्यगर्भाहङ्कारे। तस्य चाविद्यायामित्येवंरूपाः प्रलयाः। तदुक्तं विष्णुपुराणे –**

जगत्प्रतिष्ठा देवर्षे पृथिव्यप्सु प्रलीयते।
तेजस्यापः प्रलीयन्ते तेजो वायौ प्रलीयते॥
वायुश्च लीयते व्योम्नि तच्चाव्यक्ते प्रलीयते।
अव्यक्तं पुरुषे ब्रह्मन् निष्कले संप्रलीयते॥ इति।

एवंविधप्रलयकारणत्वं तत्पदार्थस्य ब्रह्मणस्यतटस्थलक्षणम्।

அதனால், பிருத்வீ நீரில், நீர் நெருப்பில், நெருப்பு வாயுவில், வாயு ஆகாயத்தில், ஆகாயமானது ஜீவ அகங்காரத்தில் அது ஹிரண்யகர்ப அஹங்காரத்தில், அது அவித்தையில் என்பதானதாகும் பிரளயம். அது விஷ்ணுபுராணத்தில் கூறப்பட்டுள்ளது –

தேவரிஷியே, ஜகத்தின் அதிஷ்டானமான பிருத்வீ நீரில் லீனம் அடைகிறது, நீர் நெருப்பில் லயமடைகிறது, நெருப்பு வாயுவில் லயமடைகிறது .

வாயுவும் லயமடைகிறது ஆகாயத்தில், அதுவும் அவ்வியக்தத்தில் லயமடைகிறது. அவ்வியக்தம் புருஷனில். பிராம்மணரே, கலங்மற்றதில் நன்றாக லயமடைகிறது

என்று. இவ்வகையான பிரளயகாரணத்தன்மை அதன் பதார்த்தமான பிரம்மணின் **தடஸ்தலஷணமாகும்.**

## விளக்கம்

பரார்தே – பூர்வம், பரம (முதல் மற்றும் அடுத்து) என்று இரண்டு ஐம்பது வரும் கூடியதான பிரம்மணின் பகல் இரவு.

ननु वेदान्तैर्ब्रह्मणि जगत्कारणत्वेन प्रतिपाद्यमाने सति सप्रपञ्चं ब्रह्म स्यादन्यथा सृष्टिवाक्यानामप्रामाण्यापत्तेरिति चेत्। न। न हि सृष्टिवाक्यानां सृष्टौ तात्पर्यं किन्तु अद्वितीये ब्रह्मण्येव।

ஆனால், வேதாந்தத்தில் பிரம்மத்தில் ஜகத்தின் காரணத்தன்மையினை நிச்சயிததால், பிரபஞ்சம் (ஜகத் ) கூடியதானதாக பிரம்மமாகும், அதனை

ஏற்க்காவிட்டால் (காரணத்தன்மையை) சிருஷ்டியினை விளக்கும் வாக்கியமானது பிரமாணத்தன்மையினை இழக்கும் என்றால், தவறு, சிருஷ்டியினை கூறும் வாக்கியங்களுக்கு சிருஷ்டியினை விள்ககுவதில் தாத்பர்யமில்லை ஆனால் இரண்டற்ற (பிரிவற்ற) பிரம்மத்தை நிரூபிப்பதிலேயே.

**तत्प्रतिपत्तौ कथं सृष्टेरुपयोगः। इत्थम्। यदि सृष्टिमनुपन्यस्य निषेधो ब्रह्मणि प्रपञ्चस्य प्रतिपाद्यते। तदा ब्रह्मणि निषिद्धस्य प्रपञ्चस्य वायौ प्रषिद्धस्य रूपस्येव ब्रह्मणोऽन्यत्रावस्थानशङ्कायां न निर्विचिकित्समद्वितीयत्वं प्रतिपादितं स्यात्। ततः सृष्टिवाक्याद्ब्रह्मोपादेयत्वज्ञाने सत्युपादानं विना कार्यस्यान्यत्र सद्भावशङ्कायां निरस्तायां नेतिनेतीत्यादीनां ब्रह्मण्यपि तस्यासत्त्वोपपादने प्रपञ्चस्य तुच्छत्त्वावगमे निरस्ताखिलद्वैतविभ्रममखण्डं सच्चिदानन्दैकरसं ब्रह्म सिद्ध्यतीति परम्परया सृष्टिवाक्यानामप्यद्वितीये ब्रह्मण्येव तात्पर्यम्।**

பிரம்மத்தை நிரூபிக்க அது எவ்வாறு உபயோகமாகும் என்றால், இவ்வாறு சிருஷ்டியினை விளக்காமல் பிரம்மத்தில் பிரபஞ்சத்தின் நிராகரணத்தை நிரூபிததால் பிரம்மத்தில் நிராகரிக்கபட்ட பிரபஞ்மானது வாயுவில் நராகரிக்கபட்ட ரூபத்தைப்போன்று பிரம்மத்தைத்தவிர வேறு இடத்தில் (ஜகத்) இருப்பதான சந்தேகமானது முழுவதுமாக நிராகரிக்கபடாமல் இரண்டற்ற பிரம்மம் நிரூபணமாகாது என்பதால் சிருஷ்டி வாக்கியங்கள் பிரம்மத்தினை உபதானமாக நிரூபித்ததினால், உபாதனமில்லாமல் காரியமானது வேறு இடத்தில் இருத்தல் என்பது நிராகரிக்கபட்டதால் **நேதி நேதி** (இது அல்ல, இது அல்ல) என்பது முதலியவைகளால் பிரம்மத்திலும் அதன் அன்மையானது நிரூபிக்கபட்ட பின்னர் பிரபஞ்சமானது துச்சமானது (பொய தோற்றமாக) என்று அறிந்த பின்னர் த்வைதமானது முழுவதுமாக நிராகரிக்கபட்டதால் பிரிவற்ற சத், சித், ஆனந்தமான ஒரே சுவையுடையதான பிரம்மம் நிரூபணமாகின்றது என்று பரம்பரையாக சிருஷ்டி வாக்கியங்களும் இரண்டற்ற பிரம்மத்திலேயே தாத்பர்யம்.

**उपासनाप्रकरणपठितसगुणब्रह्मवाक्यानां चोपासनाविध्यपेक्षितगुणारोपमात्रपरत्वं। न गुणपरत्वम्। निर्गुणप्रकरणपठितानां सगुणवाक्यानां तु निषेधवाक्यापेक्षितनिषेध्यसमर्पकत्वेन विनियोग इति न किञ्चिदपि वाक्यमद्वितीयब्रह्मप्रतिपादनेन विरुध्यते।**

உபாசனை பகுதியில் கூறபட்ட சகுணபிரம்ம வாக்கியங்களோ உபாசனை விதியினால் எதிர்நோக்கபடும் குணங்களை ஆரோபிக்கமட்டும், அது குணத்தை குறிப்பது அல்ல நிர்குண பகுதியில் உள்ள சகுண வாக்கியங்களோ **நிஷேத** (நிராகரிக்கும்) வாக்கியங்கள் எதிர்நோக்கும் குணங்களை கூறுவதாக உள்ளது என்று சம்பந்தத்தினை புரிந்து கொள்ளவேண்டும் என்பதால் கொஞ்சமும் எந்த வாக்கியமும் அத்விதீய பிரம்மத்தினை நிரூபிப்பதிலிலருந்து விரோதமாகின்றதெனபதில்லை.

**तदेवं स्वरूपतटस्थलक्षणलक्षितं तत्पदवाच्यमिश्वरचैतन्यं मायाप्रतिबिम्बितमिति केचित्। तेषामयमाशयः जीवपरमेश्वरसाधारनं चैतन्यमात्रं बिम्बम्। तस्यैव बिम्बस्याविद्यात्मिकायां मायायां प्रतिबिम्बमिश्वचैतन्यमन्तःकरणेषु प्रतिबिम्बं जीवचैतन्यम्। कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः इति श्रुतेः। एतन्मते जलाशयगतशरावगतसूर्यप्रतिबिम्बयोरिव जीवपरमेश्वरयोभेदः। अविद्यात्मकोपाधेर्व्यापकतया तदुपाधिकेश्वरस्यापि व्यापकत्वम्। अन्तःकरणस्य परिच्छिन्नतया तदुपाधिकजीवस्यापि परिच्छिन्नत्वम्। एतन्मतेऽविद्याकृतदोषा जीव इव परमेश्वरेऽपि स्युरुधेः प्रतिबिम्बपक्षपातित्वादित्यस्वरसाद् बिम्बात्मकमीश्वरचैतन्यमित्यपरे। तेषामयमाशयः एकमेव चैतन्यं बिम्बत्वाक्रान्तमीश्वरचैतन्यं प्रतिबिम्बत्वाक्रान्तं जीवचैतन्यम्। बिम्बप्रतिबिम्बकल्पणरूपोपाधिप्रयुक्तो जीवपरभेदः। उपाधिकृतदोषाश्च**

**प्रतिबिम्बे जीवे एव वर्तन्ते। न तु बिम्बे परमेश्वरे। उपाधेः प्रतिबिम्बपक्षपातित्वात्। एतन्मते च गगनसूर्यस्य जलादौ भासमानप्रतिबिम्बसूर्यस्येव जीवपरयोर्भेदः।**

இப்படியாக ஸ்வரூப மற்றும் தடஸ்த லக்ஷணங்களால் குறிகபட்ட **தத்** என்கிற சொல்லால் குறிக்கபடும் ஈஷ்வர சைத்தன்யம் மாயாவில் பிரதிபிம்மமாக இருப்பது என்பர் சிலர் அவாகள் கூறுவதாவது - ஜீவ மற்றும் ஈஷ்வர நிலைக்கு பொதுவாக இருக்கும் (சமானமாக) சைத்தன்யமே பிம்பம். அந்த பிம்பமே அவித்தையான மாயையில் பிரதிபிமபமாகும் போது ஈஷ்வர சைத்தன்யம் என்றுமாகும், **கார்யோபாதிரயம் ஜீவ காரணோபாதிரீஷ்வர** (காரியமான வரையறை ஜீவன், காரணமான வரையறை ஈஷ்வரன்) என்கிறது ஷ்ருதி இவாகளின் மதத்தில் நீர் தேக்கத்திலிருக்கும் மற்றும் பானையிலிருக்கும் சூரியனின் பிரதிபிம்பத்தினை போனறு ஜீவன் மற்றும் ஈஷ்வரரின் பேதம். அவித்தை தன்மையான வரையறையானது வியாபித்து இருப்பதால் அதனை உபாதியாக கொண்ட ஈஷ்வரரும் வியாபித்திருக்கிறார். அந்தக்கரணமானது வரையறையானது சிறியதானதால் (வரையறுக்கப்பட்டதால்) அதனை உபாதியாகக்கொண்ட ஜீவனும் குறுகியிருப்பாராகிறார் (வரையறுக்கபட்டவராகிறார்) இவாகளிறன் மத்ததில் அவிதநதையினால் உண்டாகும் தோஷங்களானது ஜீவனை போல ஈஷ்வரரிலும் உண்டு. உபாதியானது பிரதிபிம்ப பக்ஷத்திதலிருப்பதால் அதனை விரும்பாதவாகள் பிம்பமாக ஈஷ்வர சைத்தன்யம் என்கின்றனர், அவாகள் கூறுவது சைத்தனயம் ஒன்றே, பிம்பமானது ஈஷ்வர சைத்தன்யம் என்றும் பிரதிபிம்ப சைத்தன்யமானது ஜீவ சைத்தன்யம் என்றும். பிம்பம் மற்றும் பிரதிபிம்பம் கற்பனையானது ஜீவன் ஒன்று என்று ஏற்பவாகளில் அவித்யா, பல ஜீவனிலோ அந்தக்கரணங்களே அவித்தை - அந்தக்கரணமான உபாதியால் உண்டாவத ஜீவ - ஈஷ்வர பேதம். உபாதியால் உண்டாகும் தோஷங்களோ பிரதிபிம்பமான ஜீவனில் மட்டும் உண்டாகின்றது, பிம்பமான பரமேஷ்வரனில் இல்லை உபாதியானது பிரதிபிம்ப பக்ஷத்திலிருப்பதால். இவர்கள் மதத்திலோ ஆகாயத்திலிருகும் சூரியனானது நீரில் பிரதிபலிக்கும் சூரியனானது நீரில் பிரதிபலிக்கும் சூரியனைப்போல ஜீவ - ஈஷ்வர பேதம்.

**ननु ग्रीवास्थमुखस्य दर्पणस्य इव बिम्बचैतन्यस्य परमेश्वरस्य जीवप्रदेशेऽभावात्तस्य सर्वान्तर्यामित्वं न स्यादिति चेत्। न। साभ्रनक्षत्रस्य आकाशस्य जलादौ प्रतिबिम्बितत्वे बिम्बभूतमहाकशस्यापि जलादिप्रदेशसम्बन्धदर्शनेन परिच्छिन्नबिम्बस्य प्रतिबिम्बदेशासम्बन्धित्वेऽप्यपरिच्छिन्नब्रह्मबिम्बस्य प्रतिबिम्बदेशसम्बन्धाविरोधात्।**

ஆனால், கழுத்திற்கு மேலேயுள்ள தலையானது கண்ணாடியில் தோன்றுவது போல பிம்ப சைத்தனயமான பரமேஷ்வரானவர் ஜீவனிருக்கும் இடத்தில் இல்லாததால் அவருக்கு (ஈஷ்வரருக்கு) சர்வாந்தர்யாமிதன்மை (எல்லா இடத்திலும் வியாபித்திருத்தல்) இயலாது என்றால், தவறு, மேகம் , நக்ஷத்திரங்கள் கூடிய ஆகாயமானது நீரில் பிரதிபிம்பமாகும் போதும் பிம்பமான ஆகாயமானதும் நீர் நிலையினை தொடுவதாக இருப்பது பார்க்கபடுவதால் வரையறுகப்பட்டதான பிம்பமானது பிரதிபிம்பமாகும் இடத்தில் சம்பந்தமடையாதபோதும் வரையறுகபடாத பிரம்மபிம்பமானது பிரதிபிம்பமான இடத்தில் சம்பந்தம் அடைவதில் எந்த பிரச்சனையுமில்லை.

**न च रूपहीनस्य ब्रह्मणो न प्रतिबिम्बसम्भवः। रूपवत एव तथात्वदर्शनादिति वच्यम्। नीरूपस्यापि रूपस्य प्रतिबिम्बदर्शनात्। न च नीरूपस्य द्रव्यस्य प्रतिबिम्बाभावनियमः। आत्मनो द्रव्यत्वाभावस्योक्तत्वात्। एकधा बहुधा चैव दृश्यते जल चन्द्रवत्।**

ரூபமற்ற பிரம்மத்தின் பிரதிபிம்பம் உண்டாவது இயலாது ரூபமுடையது மட்டுமே அவ்வாறு (பிரதிபிம்பம்) உள்ளதாக காணப்படுவதால் எனறு கூறுதல் தவறு. ரூபமல்லாத ரூபமும் பிரதிபிம்பமாவது காணப்படுவதால். ரூபமல்லாத திரவியமானது பிரதிபிம்பம் இன்மையுண்டாக வேண்டும் என்று நியமமில்லை, ஆத்மாவில் திரவியத்தன்மையில்லை என்று கூறபட்டதால், **ஏகதா பஹுதா சைவ த்ருஷ்யதே ஜல சந்திரவத்** (ஒன்றானதும் (ஈஷ்வரர்) பலவானதுமாக

காணப்படுகிறது நீரில் தோன்றும் நிலவுபோல).

**விளக்கம்**

மேகம் முதலியவைகளே நீரில் பிரதிபிம்பமாகிறது ஆகாயமில்லை என்பதால், காரணம் ஆகாயம் ரூபமற்றது என்று அறியபடுவதால், அதனால் ரூபமுடையது மட்டுமே பிரதிபிம்பம் ஆவது இயலும் என்பதால் ரூபமற்ற பிரம்மத்தின் பிரதிபிம்பம் எற்பது இயலாது. என்றால் அது தவறு, இங்கு பிரதிபிம்பம் ரூபமுடையதிற்கு மட்டுமா அல்லது ரூபமுடைய திரவியத்திற்காக என்ற நிலை (கேள்வி) எழும் சரி, முதலாவது ரூபமுடையதிற்கு என்று ஏற்றால் **குணே குணானங்கீகாராத்** (குணமானது குணத்தில் ஏற்கபடுவதில்லை) என்கிற நியமத்தால் ரூபத்தில் ரூபம் ஒருவரும் ஏற்பதில்லை என்பதால், அதன் (ரூபத்தின்) பிரதிபிம்பம் உண்டாவாது இயலது. அதுமட்டுமல்லாமல் ஆகாத்திலும் சப்தத்தின் பிரதிபிம்பமான எதிரொளி உண்டாவது காணபடுகிறது, இதனால். இரண்டாவதான ரூபமுடைய திரவியதிற்கு என்றால், ரூபமற்ற திரவியத்தின் பிரதிபிம்பம் உண்டாகாது என்ற நியமமில்லை. காரணம், சமவாயிகாரணம ் நிரூபிக்கபடாமல், குணமானது சார்ந்திருகும் திரவியமாகவோ ஆத்மா ஏற்கபடாததாகவும் கூறியதால். இதனால், ரூபமற்ற திரவியமான ஆகாயமானது பிரதிபிம்பமடையாதபோதும், ரூபமற்ற திரவியமல்லாத பிரம்மத்தின் பிரதிபிம்பமானது உண்டாவது இயலம்.

यथाह्ययं ज्योतिरात्मा विवस्वानपो भिन्ना बहुधैकोनुगच्छन् इत्यादिवाक्येन ब्रह्मप्रतिबिम्बाभावानुमानस्य बाधितत्वाच्च। तदेवं तत्पदार्थो निरूपितः।

**யதா ஹ்யயம் ஜ்யோதிராத்மா விவஸ்வாநபோ பின்னா பஹூதைகோனுகச்சன்** (எவ்வாறு இந்த ஒளிமயமான சூரியன் பல நீர்நிலைகளில் பலவகையாக தோன்றுகிறதோ) முதலிய வாக்கியத்தினால் பிரம்ம பிரதிபிம்பமின்மையின் அனுமானமானது நிராகரிக்கபட்டதாலும். இப்படியாக தத் என்கிற சொற்பொருளானது நிரூபிக்கபட்டது.

इदानीं त्वं पदार्थो निरूप्यते। एकजीववादेऽविद्याप्रतिबिम्बो जीवः। अनेकजीववादे अन्तःकरणप्रतिबिम्बः। स च जाग्रत्स्वप्नसुषुप्तिरूपावस्थात्रयवान्। तत्र जाग्रद्दशा नामेन्द्रियजन्यज्ञानावस्था। अवस्थान्तरे इन्द्रियाभावान्नातिव्याप्तिः। इन्द्रियजन्यज्ञानं चान्तःकरणवृत्तिः। स्वस्वरूपज्ञानस्यानादित्वात्।

இனி த்வம் சொற்பொருளானது நரூபிக்கபடுகிறது. ஜீவனானது ஒன்றே எனும் வாதத்தில் அவித்தையின் பிரதிபிம்பம் ஜீவன், ஜீவனானது பல எனும் வாதத்தில் அந்தக்கரணத்தின் பிரதிபிம்பம். அந்த ஜீவனும் விழிப்பு (ஜாகரத்), கனவு(ஸ்வப்னம்), தூக்கம் (சுஷுப்தி) என்கிற மூன்று நிலைகளையுடையது. அங்கு விழிப்பு நிலையென்பது இந்திரியத்தால் உண்டாகும் ஞானநிலை வேறு நிலைகளில் இந்திரியங்களின் இன்மையிருபதால் அதிவியாப்தியில்லை. இந்திரியத்தாலுண்டான ஞானமோ அந்தக்கரணத்தின் விருத்தியே. சுவரூபஞானமானது அநாதி என்பதால்.

सा चान्तःकरणवृत्तिरावरणाभिभवार्थेत्येकं मतम्। तथा हि। अविद्योपहितचैतन्यस्य जीवत्वपक्षे घटाद्यधिष्ठानचैतन्यस्य जीवरूपतया जीवस्य सर्वदा घटादिभानप्रसक्तौ घटाद्यवच्छिन्नचैतन्यावरकमज्ञानं मूलाविद्यापरतन्त्रमवस्थापद-वाच्यमभ्युपगन्तव्यम्। एवं सति घटादेर्न सर्वदाभानप्रसङ्गः। अनावृतचैतन्यसम्बन्धस्यैव भानप्रयोजकत्वात्। तस्य चावरणस्य सदातनत्वे कदाचिदपि घटभानं न स्यादिति तद्भङ्गे वक्तव्ये। तद्भङ्गजनकं न चैतन्यमात्रम्। तद्भासकस्य नदनिवर्तकत्वात्। नापि वृत्त्युपहितचैतन्यम्। परोक्षस्थलेऽपि तन्निवृत्त्यापत्तेरिति परोक्षव्यवावृत्तवृत्तिविशेषस्य। तदुपहितचैतब्यस्य वाऽऽवरणभङ्गजनकत्वमित्यावरणाभिभवार्था वृत्तिरिच्युते।

அந்த அநதக்கரணவிருத்தியும் மூடலை (ஆவரணம்) நீக்குவதன்பொருட்டு என்பது ஒரு மதம். அதாவது - அவித்தைகூடிய சைத்தன்யமானது ஜீவன் எனும் நிலையில் பானை முதலியவைக்கு

அதிஷ்டானமாக சைத்தன்யம் ஜீவரூபமாக ஜீவனுககு எப்பொழுதும் பானை முதிலயவற்றின் பிரகாசமானது உண்டாகும் நிலையிருப்பதால் பானை முதலிய கூடிய சைத்தன்யத்தினை மூடுவது அஞ்ஞானம் **மூலாவித்தை** அல்லாத வேறு ஒன்றினை ஏற்கவேண்டும் (தூலாவித்தை). இந்நிலையில் பானை முதலியவை எப்பொழுதும் பிரகாசிக்கும் நிலையில்லை, மூடலில்லாத சைத்தனயத்தோடு உண்டாகும் சம்பந்தமே பிராகாசிக்கும் தன்மையுள்ளது என்பதால். அதன மூடலானது எப்பொழுதும் இருப்பது என்றால் பானை முதலியவை எந்நிலையிலும் பிரகாசிககாதுபோகும் என்பதால் அதனை(மூடலை) அழிப்பது ஏற்கவேண்டியதால். அதனை அழிப்பது சைத்தன்யம் மட்டும் என்பதில்லை மூடலை பிரகாசிப்பது அதனை அழிக்கவல்லதல்லா விருத்தி கூடிய சைத்தன்யமும் இல்லை, பரோஷ நிலையிலும் அதன் நிவிருத்தி ஏற்படும் நிலையுண்டாகும் என்பதால் பரோக்ஷமல்லாத விருத்தியோ, அல்லது அது கூடிய சைத்தனயமோ மூடலை அழிக்கவல்லது என்று மூடலை அழிப்பது விருத்தி என்று கூறப்படுகிறது.

**सम्बन्धार्था वृत्तिरित्यपरं मतम्। तत्राविद्योपादिकोऽपरिच्छिन्नो जीवः। स च घटादिप्रदेशे विद्यमानोऽपि घटाद्याकारापरोक्षवृत्तिविरहदशायां न घटादिकमवभासयति। घटादिना तस्य सम्बन्धाभावात्। तदाकारवृत्तिदशायां तु भासयति। तदा सम्बन्धसत्त्वात्।**

சம்பந்தத்திற்காக (விஷயத்துடன்) விருத்தி என்று வேறு மதம் அதனில் அவித்தை வரையறையுடைய வரையறுக்கப்படாதவர் ஜீவன். அந்த ஜீவனும் பானை முதலிய இடங்களில் இருந்தபோதும் பானை முதலிய ஆகார விருத்தியில்லாத நிலையில் பானை முதலியவற்றை பிரகாசிப்பதில்லை பானை முதலியவற்றுடன் சம்பந்தமடையாததால். அந்த ஆகாரமான (பானை முதலிய) விருத்தியுண்டாகும்போதோ பிராகாசிக்கின்றது. அப்பொழுது சம்பந்தமுள்ளதால்.

**नन्वविद्योपाधिकस्यापरिच्छिन्नस्य जीवस्य स्वत एव समस्तवस्तुसम्बन्धस्य वृत्तिविरहदशायां सम्बन्धाभावाभिधानमसङ्गतम्। असङ्गत्वदृष्ट्या सम्बन्धाभावाभिधाना च वृत्त्यनन्तरमपि सम्बन्धो न स्यादिति चेत्। उच्यते। न हि वृत्तिविरहदशायां जीवस्य**

**घटादिना सह सम्बन्धसामान्यं निषेधामः। किं तर्हि। घटादिभानप्रयोजकं सम्बन्धविशेषम्। स च सम्बन्धविशेषो विषयस्य जीवचैतन्यस्य च व्यङ्ग्यव्यञ्जकतालक्षणः कादाचित्कः तत्तदाकारवृत्तिनिबन्धः।**

ஆனால், அவித்தையினை உபாதியாக உடைய வரையறுக்கபடாத ஜீவன் தானே எல்லா பொருட்களுடனும் சம்பந்தம் அடைவதால் விருத்திகளற்ற நிலையில் சம்பந்தமில்லாதது (விஷயத்துடன்) என்று கூறுவது பொருத்தமற்றது. சேர்க்கையற்றது (அசங்கம்) என்ற நோக்கில் சம்பந்தமற்ற நிலையினை கூறுவதானாலும் விருத்தியுண்டான பின்னும் சம்பந்தமடைவது இயலாது என்றால், கூறுகிறோம். விருத்திகளற்ற நிலையில் ஜீவனானது பானை முதலியதுடன் சம்பந்தத்தினை (பொதுவான) நிராகரிக்கவில்லை வேறு என்ன என்றால், பானை முதலியவைகளை பிரகாசிக்க அவசியமான சம்பந்தத்தினையே (விசேஷமான) அந்த விசேஷ சம்பந்தமும் ஜீவசைத்தன்யமும் **வ்யங்க்ய** - ( விஷயத்தை பிரகாசிக்கும்**) வியஞ்சக** ( பிரகாசமாகும் விஷயம்) சம்பந்தத்தினையே ஏற்பதால், அது எப்பொழுதாவதே உண்டாவது, அந்தந்த ஆகார விருத்திதயுடன் சம்பந்தப்பட்டது.

**तथा हि तैजसमन्तःकरणं स्वच्छद्रव्यत्वात् स्वत एव जीवचैतन्याभिव्यञ्जनसमर्थम्। घटादिकं तु न तथा। अस्वच्छद्रव्यत्वात्। स्वाकारवृत्तिसंयोगदशायां तु वृत्त्यभिभूतजाड्यधर्मकतया वृत्त्युत्पादितचैतन्याभिव्यञ्जन-योग्यताश्रयतया च वृत्त्युत्थानानन्तरं चैतन्यमभिव्यनक्ति।**

அதனாலேயே தைஜசமான (நெருப்புதன்மை) அந்தக்கரணம் தெளிவான திரவியமானதால் தானேயே ஜீவ சைத்தன்யத்தினை பிரகாசிப்பதில் சாமர்த்தியமுடையது, பானை முதலியது அவ்வாறு இல்லை, தெளிவற்ற (தூய்மையற்ற) திரவியமானதால். அதனாகார விருத்தியுடன் சேரும் நிலையிலோ விருத்தியினால் சூழபட்ட ஜடதன்மையுடையதானதால் விருத்தியுண்டு செய்யும் பிரகாசிக்கும் யோகியத்தனமையினை சார்ந்து இருப்பதாலும் விருத்தி தோன்றிய

பின்னர் சைத்தன்யம் பிரகாசிக்கிறது.

तदुक्तं विवरणे अन्तःकरणं हि स्वस्मिन्निव स्वसंसर्गिण्यपि घटादौ चैतन्याभिव्यक्तियोग्यतामापादयतीति। दृष्टं चास्वच्छद्रव्यस्यापि स्वच्छद्रव्यसम्बन्धदशायां प्रतिबिम्बग्राहित्वम्। यथा कुड्यादेर्जलादिसंयोगदशायां मुखादिप्रतिबिम्बग्राहिता। घटादेरभिव्यञ्जकत्वं च तत्प्रतिबिम्बग्राहित्वम्। चैतन्यस्याभिव्यक्तत्वं च तत्र प्रतिबिम्बितत्वम्।

இதுவே **விவரணத்திலும்** கூறபட்டுள்ளது – அந்தக்கரணமே தன்னைப்போல தன்னுடன் சம்பந்தப்பட்டதினையுமான பானை முதலியவற்றில் சைத்தன்யத்தினால் பிரகாசிக்கபடும் யோக்கியத்தன்மையினை உண்டுசெய்கிறது. காண்கிறதுமுண்டு, தூய்மையற்ற திரவியமும் கூட தூய்மையான திரவியத்துடன் சம்பந்தப்படும்போது பிரதிபிம்பத்தை கிரகிக்கின்றது. உதாரணத்திற்கு, சுவர் முதலியவற்றில் நீரின் சேர்க்கையால் முகம் முதலியவைகளை பிரதிபிம்பிக்கும் தன்மை பானை முதலியதில் பிரதிபிம்பத்தினை கிரகிக்கும் தன்மையும (சைத்தன்யம்) உண்டுசெய்கிறது, சைத்தன்யத்தின் பிரகாசிக்கிறது என்றால் அங்கு பிரதிபிம்பத்தை உண்டாக்குகின்றது என்பது.

अवंविधाभिव्यञ्जकत्वसिद्ध्यर्थमेव वृत्तेरपरोक्षस्थले बहिर्निर्गमनाङ्गीकारः। परोक्षस्थले तु वह्न्यादेर्वृत्तिसंसर्गाभावेन चैतन्यानभिव्यञ्जकतया न वह्न्यादेरपरोक्षत्वम्। एतन्मते च विषयाणामपरोक्षत्वं चैतन्याभिव्यञ्जकत्वमिति द्रष्टव्यम्। एवं जीवस्यापरिच्छिन्नत्वेऽपि वृत्तेः सम्बन्धार्थत्वं निरूपितम्। इदानीं परिच्छिन्नत्वपक्षे सम्बन्धार्थकत्वं निरूप्यते।

இப்படிபட்ட பிரகாசிக்கும் தன்மையினை உண்டாகவே விருத்தியானது அபரோக்ஷ (பிரத்யக்ஷ) நிலையில் வெளியில் செல்வது ஏற்கபட்டது. பரோக்ஷ (இந்திரியங்களுக்கு எட்டாத) நிலையிலோ நெருப்பு முதலியவற்றுடன்

விருத்தியானது சம்பந்தமடையாததால் சைத்தன்யமானது பரகாசிக்காததால் நெருப்பு முதலியவை பிரத்யக்ஷமாகாது. இந்த மதத்தில். விஷயத்தின் பிரத்யக்ஷத்தன்மை என்பது சைத்தன்யத்தால் பிரகாசிக்கும் தன்மை என்பதறியவேண்டும். இதுபோல ஜீவனும் வறையறுக்கபடாதவனானாலும் விருத்தியுடன் சம்பந்தம் ஏற்கபட்டது அடுத்து வறையறுக்கபட்டது என்கிற நிலையில் சம்பந்தத்தினை நிரூபிக்கின்றோம்.

**तथा हि अन्तःकरणोपाधिको जीवः। तस्य न घटाद्युपादानता। घटादिदेशासम्बन्धात्। किन्तु ब्रह्मैव घटाद्युपादानम्। तस्य मायोपहितस्य सकलघटाद्यन्वयित्वात्। अत एव ब्रह्मणः सर्वज्ञता। तथा च जीवस्य घटाद्यधिष्ठानब्रह्मचैतन्याभेदमन्तरेण घटाद्यवभासासम्भवे प्राप्ते। तदवभासाय घटाद्यधिष्ठानब्रह्मचैतन्याभेदसिद्ध्यर्थं घटाद्याकारा वृत्तिरिष्यते।**

அந்தக்கரணத்தினை உபாதியாயயுடையவன் ஜீவன் அது பானை முதலியவற்றின் உபாதான காரணம் இல்லை. பானை முதலிய தேசத்துடன் சம்பந்தமற்றதால், ஆனால் பிரம்மமே பானை முதலியவற்றின் உபாதானம். அதுவும் மாயா கூடியதாக எல்லா பானை முதலியவற்றில் ஊடுருவியிருப்பதால். அதனாலேயே பிரம்மமானது எல்லாவற்றையும் அறிகின்ற தன்மை (சர்வஞ்ஞதா) உள்ளது. அதனால் ஜீவனானது பானை முதலியவற்றின் அதிஷ்டான சைத்தன்யத்துடன் பிரிவற்ற நிலையில்லாமல் பானை முதலியவற்றினை பிரகாசிக்கும் தன்மை உண்டாகாத நிலையில், அதனை பிரகாசிக்க பானை முதலிய அதிஷ்டான சைத்தன்யத்துடன் பிரிவற்ற நிலையினை அடைவதற்கு பானை முதலிய ஆகாரமான விருத்தி ஏற்கபடுகிறது.

**ननु वृत्त्यापि कथं प्रामातृचैतन्यविषयचैतन्ययोरभेदः सम्पाद्यते। घटान्तःकरणरूपोपाधिभेदेन तदवच्छिन्नचैतन्ययोरभेदासम्भवादिति चेत्। न।**

**वृत्तेबहिर्देशनिर्गमनाङ्गीकारेण वृत्त्यन्तःकरणविषयाणामेकदेशस्थत्वेन तदुपधेयभेदाभावस्योक्तत्वात्। एवमपरोक्षस्थले वृत्तेमतभेदेन विनियोग उपपादितः।**

ஆனால். விருத்தியினாலும் எவ்வாறு பிரமாத்ரு சைத்தன்யத்தையும் விஷய சைத்தன்யத்தையும் பிரிவற்ற நிலையை உண்டாக்கமுடியும், பானை மற்றும் அந்தக்கரண உபாதியின் பிரிவு இருப்பதால் அதனுடன் கூடியதாக இருக்கும் சைத்தன்யமானது பிரிவற்ற நிலையை அடைவது இயலாது என்றால் தவறு, விருத்தியானது வெளியில் செல்வது ஏற்கபட்டதால் விருத்தியும், அந்தக்கரணமும் மற்றும் விஷயமும் ஒரே நிலையில் இருப்பதால் அதனில் உள்ள (சைத்தன்யத்தின்) பிரிவானது இல்லை என்று கூறபட்டதால். இவ்வாறு அபரோக்ஷ நிலையில் விருத்தியானது, மதங்களின் வேற்றுமையால், காண்பிக்கப்பட்டது.

**इन्द्रियाजन्यविषयगिचरापरोक्षान्तःकरणवृत्त्यवस्था स्वप्नावस्था। जग्रदवस्थाव्यावृत्त्यर्थम् इन्द्रियाजन्येति। अविद्यावृत्तिमत्यां सुषुप्तौ अतिव्याप्तिवाराणायान्तःकरणेति। सुषुप्तिर्नामाविद्यागोचराविद्यावृत्त्यवस्था। जाग्रत्स्वप्नयोरविद्याकारवृत्तेरन्तःकरणवृत्तित्वान्न तत्राव्याप्तिः। अत्र केचिन्मरणमूर्छयोरवस्थान्तरत्वमाहुः। अपरे तु सुषुप्तावेव तयोरन्तर्भावमाहुः। तत्र तयोरवस्थात्र्यान्तर्भावबहिर्भावयोस्त्वंपदार्थनिरूपणे उपयोगाभावान्न तत्र प्रयत्यते।**

இந்திரியங்களால் உண்டாகத விஷயத்தினை அறியும் அபதோக்ஷமான அந்தக்கரண விருத்தியின் நிலையை கனவு நிலை என்கிறார்கள். அவித்தை விருத்தியுடையதான தூக்க நிலையில் அதிவியாப்தியுண்டாகாதிருக்க அந்தக்கரணம் என்று தூக்கம் என்றால் அவித்தையினை அறிவதான (விஷயமாக) அவித்தை விருத்தி நிலையே. விழிப்பு மற்றும் கனவு நிலைகளில் அவித்தை ஆகாரமான அந்தக்கரண விருத்தியுடையதால் அங்கு அதிவியாப்தியில்லை. இங்கு சிலர் இறப்பு, மயக்கம் இரண்டையும் வேறு நிலைகள் என்று கூறுகின்றனர். மற்றவாகளோ தூக்கத்திலேயே அதனை சேர்க்க கூறுகின்றனர். இங்கு இந்த இரு நிலைகளையும் அதனில் சேர்ததாலும் சேர்க்காவிட்டாலும் த்வம் சொற்பொருளை

நிரூபிப்பதில் அது பிரயோஜனமற்றதால் அதனில் எந்த முயர்ச்சியும் எடுக்கபடவில்லை.

**तस्य च मायोपाध्यपेक्षयैकत्वम्। अन्तःकरणपाध्यपेक्षया च नानात्वं व्यवह्रियते। एतेन जीवस्याणुत्वं प्रत्युक्तम्। बुद्धेर्गुणेनात्मगुणेन चैव ह्याराग्रमात्रो ह्यवरोपि दृष्टः इत्यादौ जीवस्य बुद्धिशब्दवाच्यान्तःकरणपरिणामोपाधिकपरमाणुत्वश्रवणात्।**

அதுவும் (த்வம – ஜீவன்) மாயா உபாதியினை ஏற்றால் ஒன்றாகவும், அந்தக்கரண உபாதியினை ஏற்றால் பல என்றும் வியவகாரமுண்டாகிறது. இதனால் ஜீவன் அணு என்பது நிராகரிக்கபட்டது. **புத்தேர் குணேனாத்மகுணேணாத்மகுணேன சைவ ஹ்யாராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட** (புத்தியின் குணம் மற்றும் ஆத்ம குணத்தின் காரணத்தால் ஜீவன் சக்கிரத்தின் பிடிப்பு கம்பியினைப்போல வரையறை காணபட்டது) முதலியவையால் ஜீவனானது புத்தி என்ற சொல்லால் குறிப்பிடப்படும் அந்தக்கரணத்தின் மாற்றமேயான உபாதியுடையதால் பரமாணுத்தன்மையுடையது என்று அறியபடுகிறது.

**स च जीवः स्वयंप्रकाशः। स्वप्नावस्थामधिकृत्य अत्रायं पुरुषः स्वयंज्योतिः इति श्रुतेः। अनुभवरूपश्च प्रज्ञाननः इत्यादिश्रुतेः। अनुभवामीति व्यवाहरस्तु वृत्तिप्रतिबिम्बितचैतन्यमादायोपपद्यते। एवं त्वं पदार्थो निरूपितः। अधुना तत्त्वंपदार्थयोरैक्यं महावाक्यप्रतिपाद्यमभिधीयते।**

அந்த ஜீவன் தானே ஒளிர்கின்றவன் கனவு நிலையினை குறித்து, **அத்ராயம் புருஷ ஸ்வயம் ஜ்யோதி** (இந்நிலையில் இந்த புருஷன் தானே ஒளிர்கின்றவன்) என்கிறது ஷ்ருதி. அனுபவமாகும் தன்மையினை **பிரஞ்ஞானகண** (ஞானவுருவம்) என்கிறது முதலான ஷ்ருதியும். அனுபவம் செய்கிறேன் என்கிற வியவகாரமோ விருத்தியில் பிரதிபிம்பமாகும் சைத்தன்யத்தை கொண்டு கூறபட்டது. இவ்வாறு த்வம் சொற்பொருளும்

நிருபிக்கபட்டது. அடுத்து தத் மற்றும் த்வம் சொற்பொருளின் ஒற்றுமையை **மஹாவாக்கியத்தால்** நிரூபிக்கபட்டதினை கூறுகிறோம்.

**ननु नाहमीश्वर इत्यादिप्रत्यक्षेण। किंचिज्ज्ञत्वसर्वज्ञत्वविरुद्धदर्माश्रयत्वादिलिङ्गेन। द्वासुपर्णेत्यादिश्रुत्या।**

**द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च।**
**क्षरः सर्वाणि भूतानि कूतस्थोऽक्षर उच्यते॥**

**इत्यादिस्मृत्या च जीवपरभेदस्यावगतत्वेन तत्त्वमस्यादिवाक्यमादित्यो यूपः। यजमानः प्रस्तर इत्यादिवाक्यवद् उपचरितार्थमेवेति चेत्। न। भेदप्रत्यक्षस्य सम्भावितकरणदोषस्यासम्भावितदोषवेदजन्यक्ज्ञानेन बाध्यमानत्वात्। अन्यथा चन्द्रगताधिकपरिमाणग्राहिज्योतिःशास्त्रस्य चन्द्रप्रादेशग्राहिप्रत्यक्षेणे हीति न्यायेन जीवपरभेदग्राहिप्रत्यक्षस्य विशेषणीभूतधर्मभेदविषयत्वाच्च।**

ஆனால். நான் ஈஷ்வரனில்லை என்பது முதலியவை பிரத்யக்ஷமானதால், சிற்றறிவும் பேறறிவும் விரோதமான தர்மத்தினை சார்வதானது முதலிய லிங்கங்களால் (குறிகளால்**)** **த்வௌ சுபர்ணா**, (இரண்டு பறவைகள்) முதலிய ஷ்ருதிகளால்.

இரண்டு வகை புருஷர்கள் உலகத்தில் அழிபவர் - அழிவற்றவர் என்றும்
அழிபவர் எல்லா பூதங்களும் கூடஸ்தர் அழிவற்றவர் எனப்படுகிளது.

முதலிய ஸ்மிருதிகளாலும் ஜீவ - ஈஷ்வரரின் பிரிவானது கூறப்பட்டதால். தத்வமஸி முதலிய வாக்கயமும் **ஆதித்யோ யூப** ( சூரியன் தூண்) , **யஜமான ப்ரஸ்தர** (யஜமானர் துடப்பம்) முதலிய வாக்கியத்தினைப்போல உபசாரத்திற்காக என்றால், தவறு, பிரிவு பிரத்யக்ஷமானது உண்டாவதற்கு காரணமான கரண (கருவி) தோஷமானது அதுவற்ற வேத ஞானத்தால் பாதிக்கபடுவதால். இல்லையென்றால் சந்திரனில் இருக்கும் நீலமும் அகலமும் ஜோதிஷ சாஸ்திரத்தால் அறியபடுவதானது, சந்திரன் ஒரு ஜானளவு எனும் பிரத்யக்ஷத்தால் நிராகரிக்கபடும்

நிலையுண்டாகிறது. சுடப்பட்டதால் சிகப்பான பானையில் சிகப்பு இது வெள்ளையல்ல என்பது போல விசேஷம் இருந்தாலே என்கிற நியாயத்தால் ஜீவ - ஈஷ்வர பிரிவை கிரகிக்கும் பிரத்யக்ஷமானது விசேஷணமான தர்மத்திலுள்ள விஷயமாவதால்.

## விளக்கம்

கூறப்பட்ட நியாயமாவது **ஸவிஷேஷணே ஹி விதிநிஷேதௌ விஷேஷணமுபஸம்க்ராமத சதி விஷேஷ்யபாதே** (விசேஷமுடையதில் விதியும் நிஷேதமும் உண்டானால், அதன் விசேஷ்யமான அம்சத்தில் பாதம் (நிராகரணம்) உண்டானால். விசேஷன அம்சத்தில் என்று அறிந்து கொள்ளவேண்டும்) உதாரணத்தில், களிமண் சுடப்பட்டதால் சிகப்பான பானையில்வெள்ளை நிறத்தின் நிஷேதமானது பானையின் விசேஷனை நிறத்தில் மட்டுமேயாகிறது, அது விசேஷிக்கும் பானையில் இல்லை, அதுபோல, பானை சிகப்பு நிறமுடையது, வெள்ளையில்லை என்பதில் விசேஷ்யமான, நிறம் எனும் தாமத்தினையுடைய தர்மியில் எந்த பிரிவும் காணப்படுவதில்லை காரணம் அது பானை என்பதால் அறியபடபடுகிறது என்பதால் அப்படியே நான் ஈஷ்வரனில்லை என்பதிலும் பிரிவினைக் குறித்த பிரத்யக்ஷமானது ஜீவன் மற்றும் ஈஷ்வரனின் உபாதி எனும் விசேஷனத்தை குறித்ததாகும். அதுபோல , நான் பிரம்மமாக இருக்கிறேன், என்பதில் விசேஷ்யமான சைத்தினயத்தின் பிரிவற்ற நிலையினை குறிப்பதாகும், அதனால் இங்கு உபாதியிலுள்ள தர்மத்தின் பிரிவே குறிக்கபடுகிறது தர்மியின பிரிவு அல்ல.

**अत एव नानुमानमपि प्रमाणम्। आगमबाधात्। मेरुपाषाणमयत्वानुमानवत्। नाप्यागमान्तरविरोधः। तत्परातत्परवक्ययोः तत्परवाक्यस्य बलवत्त्वेन लोकसिद्धभेदानुवादिद्वासुपर्णादिवाक्यापेक्षया उपक्रमोपसंहाराद्यवगततात्पर्यविशिष्टस्य तत्त्वमस्यादिवाक्यस्य प्रबलत्वात्।**

இதனாலேயே அனுமானமும் பிரமாணமில்லை, ஆகயமானது நிராகரிக்கின்றதால், மேருமலை கற்களாலானது என்கின்ற அனுமானத்தினைப்

போல வேறு ஆகமத்தோடு எந்த விரோதமுமில்லை. அதனை குறிப்பதான வாக்கியம் மற்றும் அதனை குறிக்காத வாக்கியத்திலும் அதனைக் குறிப்பதான வாக்கியமே பலமுடையதாக ஏற்கபட்டதால். உலகத்தில் காணப்படும் (ஏற்கபடும்) பிரிவினை வழிமொழிதலாக உள்ள **த்வௌ சுபர்ணா**, முதலிய வாக்கியத்தினை காட்டிலும் முன்னுரை, முடிவுரை முதலியவை (**உபகிரமம், உபசமஹாரம்**) கூடியதான அத்வைததத்தினை குறிப்பதில் தாத்பர்யமான தத்வமஸி முதலிய வாக்கியமானது வலமுடையதானதால்.

## விளக்கம்

மேரு கற்கலாளானது என்கின்ற அனுமானமானது **சௌவர்ண குலகிரிராஜோ மேரு** (சுமேரு மலையரசனானது தங்கத்தன்மையானது) என்கிற ஆகமத்தால் நிராகரிக்கபடுகின்றது என்றுபொருள்.

**न च जीवपरैक्ये विरुद्धधर्माश्रयत्वानुपपत्तिः। शीतस्यैव जलस्यौपाधिकौष्ण्याश्रयत्ववत् स्वभावतो निर्गुणस्यैव जीवस्यान्तःकरणाद्युपाधिककर्तृत्वाद्याश्रयत्चप्रतिभासोपपत्तेः। यदि च जलादौ औष्ण्यमारोपितं। तदा प्रकृतेऽपि तुल्यम्। न च सिद्धान्ते कर्तृत्वस्य क्वचिदप्यभावादारोप्यप्रमाहितसंस्काराभावे कथमारोप इति वाच्यम्। लावेनारोप्यविषयसंस्कारत्वेनैव तस्य हेतुत्वात्।**

ஜீவ - பிரம்மத்தின் பிரிவற்ற நிலையை விரோதமான தர்மத்தை சார்வதான அர்த்தாபத்தி பிரமாணமும் நிராகரிக்காது. குளிர்மையாகவே இருக்கும் நீரானது உபாதியனால் (சம்பந்தத்தால்) அடையும் உஷ்ணத்தை போல இயல்பாகவே நிர்குணமாக இருக்கும் ஜீவனானது அந்தக்கரணம் முதலிய உபாதியால் **காத்தா** (செய்பவர்) முதலியவை சார்வது போல தோன்றுகிறது. நீரில் உஷ்ணத்தன்மையானது ஏற்றிபார்க்கபட்டதனால் இங்கும் (நிர்குண ஜீவனிலும்) அது சமமேயாகும். ஆனால் சித்தாந்தத்தில் கர்த்தா(செய்பவர்) முதலியவையின்

இருப்பு எங்குமில்லாததால் ஏற்றிபார்த்த விஷயத்தின் சம்ஸங்காரமானது இல்லாததால் ஏற்றிபார்க்கப்பட்டது என்று எவ்வாறு கூறபடுகிறது என்று கூறுதல் சரியல்ல, ஏற்றிபார்க்கபடுவதின் விஷயத்தின சம்ஸ்காரத்தினை ஏற்றபார்பதில் ஏற்பது சுலபமாகும். (ஏற்றபார்க்கபடும் விஷயத்தின் அனுபவத்தால் உண்டாகும் சம்ஸ்காம் ஏற்க அவசியமற்றதால்.)

**न च प्राथमिकारोपे का गतिः। कर्तृत्वाद्यध्यासप्रवाहस्यानादित्वात्। तत्त्वंपदवाच्ययोर्विशिष्टयोरैक्यायोगेऽपि लक्ष्यस्वरूपयोरैक्यमुपपादितमेव। अत एव तत्प्रतिपादकतत्त्वमस्यादिवाक्यानामखण्डार्थत्वम्। सोऽयमित्यादिवाक्यवत्। न च कार्यपराणामेव प्रामाण्यम्। चैत्र पुत्रस्ते जात इत्यादौ सिद्धेऽपि सङ्गतिग्रहात्। एवं सर्वप्रमाणाविरुद्धं श्रुति स्मृतीतिहासपुराणप्रतिपाद्यं जीवपरैक्यं वेदान्तशास्त्रस्य विषय इति सिद्धम्।**

அதனால் முதல்முறை ஏற்றிப்பார்த்தலில் என்ன வழி என்றால், கர்த்தா முதலிய ஏற்றபார்த்தலின் பிரவாகமானது அநாதியானதால். தத் மற்றும் த்வம் சொற்பொருளினுடன் கூடிய சைத்தன்யம் ஒன்றாக இல்லாத நிலையிலும் குறியான (லக்ஷியமான) சுவரூபத்தின் ஒற்றுமையை முன்பே நிரூபித்துவிட்டதால். அதனால் நிரூபிக்கபடும் **தத்வமஸி** முதலிய வாக்கியத்தால் குறிக்கபடும் அகண்டாத்தன்மை (பிரிவற்றதினை குறிக்கும் தன்மை). அவன் இவனே என்ற வாக்கியத்தினைப் போல, காரியத்தினை குறிப்பதான வாக்கியம் மட்டுமே பிரமாணம் என்றில்லை, சைத்திரா, உனக்கு மைந்தன் பிறந்துள்ளான் முதலியவற்றில சித்தமானதிலும் (நிச்சயமானதிலும், முன்னரே அடையபட்டதிலும்) பொருளானது உண்டாகிறதால், இதுபோல, எல்லா பிரமாணத்திற்கும் விரோதமற்ற ஷ்ருதி, ஸ்மிருதி, இதிகாஸம், புராணம் முதலியவையால் நிரூபிக்கபடும் ஜீவ - பிரம்மத்தின் ஒற்றுமையை நிரூபிப்பதே வேதாந்த சாஸ்த்திரத்தின் விஷயம் என்று நிரூபிக்கபட்டது.

## इति विषयपरिच्छेदः ॥

## விஷய பரிச்சேதம் முற்றும்

# अथ प्रयोजनपरिच्छेदः

## பிரயோஜன பரிச்சேதம்

इदानीं प्रयोजनं निरूप्यते। यदवगतं सत्स्ववृत्तितयेष्यते तत्प्रयोजनम्। तच्च द्विविधम् मुख्यं गौणं चेति। तत्र सुखदुःखाभावौ मुख्यं प्रयोजनम्। तदन्यतरसाधनं गौणं प्रयोजनम्। सुखं च द्विविधम्  सातिशयं निरतिशयं चेति। तत्र सातिशयं सुखं विषयानुषङ्गजनितान्तःकरणवृत्तितारतम्यकृतानान्दलेशाविर्भावविशेषः।

एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति इत्यादिश्रुतेः। निरतिशयं सुखं च ब्रह्मैव। आनन्दो ब्रह्मेतिव्यजानात्। विज्ञानमानन्दं ब्रह्म इति श्रुतेः।

அடுத்து பிரயோஜனம் நிரூபிக்கபடுகிறது. எது அறியப்பட்டதாக இருக்கும் நிலையில் தன்னுடைய விருத்தியால் அறிய ஆசைபடபடுகிறதோ அதுவே பிரயோஜனமாகும். அது இரண்டுவகை முக்கியம் மற்றும் முக்கியமற்றது என்று. அதில் இன்ப-துன்பத்தின் இன்மை முக்கியமான பிரயோஜனம். அதனில் ஒன்றினை அடைவிப்பது முக்கியமற்ற பிரயோஜனம். (இன்பம் அல்லது

துன்பமின்மை). இன்பமும் இரண்டுவகை – வரம்புள்ளது மற்றும் வரம்பில்லாதது என்று. அதனில் வரம்புள்ள இன்பம் விஷயத்துடன் உண்டாகும் சேர்க்கையால் உண்டாகும் அந்தக்கரண விருத்தியின் ஏற்றதாழ்வாலுண்டாகும் சிறிய இன்பத்தின தோற்றத்தால் உண்டாவது.

**ஏதஸ்யைவானந்தஸ்யான்யானி பூதானி மாத்ராமுபஜீவந்தி** (இந்த இன்பத்தினாலேயே மறறெல்லா உயிரினங்களும் வாழ்கின்றன) என்பது முதலான ஷ்ருதிகளும். வரம்பில்லாத இன்பமானது பிரம்மம் மட்டுமே **ஆனந்தோ பிரம்மேதி வ்யஜானாத** (ஆனந்தமே பிரம்மம் என்றறிந்தான்), **விஞ்ஞானமானந்தம் பிரம்ம** (விஞ்ஞானம் ஆனந்தமான பிரம்மமாகும்) என்பதான ஷ்ருதிகளும்.

आनन्दात्मकब्रह्मावाप्तिश्च मोक्षः शोकनिवृत्तिश्च। ब्रह्म वेद ब्रह्मैव भवति। तरति शोकमात्मवित् इत्यादिश्रुतेः। न तु लोकान्तरावाप्तिः। तज्जन्यवैषयिकानन्दो वा मोक्षः। तस्य कृतकत्वेनानित्यत्वे मुक्तस्य पुनरावृत्त्यापत्तेः।

ஆனந்த சுவரூபமான பிரம்மத்தின் அடைவும் துன்பத்தின் நீக்கமும் மோக்ஷமாகும். **பிரம்ம வேத ப்ரம்மைவ பவதி** (பிரம்மத்தை அறிந்து பிரம்மமாகவே ஆகிறார்.), **தரதி ஷோகமாத்மவித்** (ஆத்மாவை அறிந்தவர் சோகத்தினை கடக்கிறார்) முதலிய ஷ்ருதிகள். வேறு லோகத்தை அடைதல் அல்ல (மோக்ஷம்), அல்லது அங்கு உண்டாகும் விஷயானந்தம் மோக்ஷம் இல்லை. அது உண்டாக்கபடும் காரணத்தால் அநித்தியமாவதால் முக்தரும் மீண்டும் பிறப்படையும் நிலையுண்டாகும்.

ननु त्वन्मतेऽप्यानन्दावाप्तेरनर्थनिवृत्तेश्च सादित्वे तुल्यो दोषः। अनादित्वे मोक्षमुद्दिश्य श्रवणादौ प्रवृत्त्यनुपपत्तिरिति चेत्। न। सिद्धस्यैव ब्रह्मस्वरूपस्य मोक्षस्यासिद्धत्वभ्रमेण तत्साधने प्रवृत्त्युपपत्तेः। अनर्थनिवृत्तिरप्यधिष्ठानभूतब्रह्मस्वरूपतया सिद्धैव। लोकेऽपि प्राप्तप्राप्तिपरिहृत परिहारयोः प्रयोजनत्वं दृष्टमेव। यथा हस्तगतविस्मृतसुवर्णादौ तव हस्ते सुवर्णम् इत्याप्तोपदेशादप्राप्तमिव प्राप्नोति। यथा वा

वलयितचरणायां रज्जौ सर्पत्वभ्रमवतो नायं सर्प इत्याप्तवाक्यात् परिहृतस्यैव सर्पस्य परिहारः। एवं प्राप्तस्याप्यानन्दस्य प्राप्तिः। परिहृतस्याप्यनर्थस्य निवृत्तिः मोक्षः प्रयोजनम्।

ஆனால் உங்களுடைய மதத்திலும் ஆனந்தமடைதலும் துன்பம் நீங்குதலும் துவக்கம் உடையதாவதால் தோஷம் சமானமேயாகும். இதனால் அநாதி என்றால் மோக்ஷத்தினையடைய **ஷ்ரவணம்** (கேட்டல்) முதலியதில் பிரவிருத்தி இயலாது போகும் என்றால், தவறு, சித்தமாக (அடையப்பட்டதாக) இருக்கும் பிரம்ம சுவரூபமான மோக்ஷமானது அடையபடாதது என்ற பிரமை இருப்பதால் அதனை நீக்க பிரவிருத்தியுண்டாதல் கூடும். துன்பம் நீங்குதலும் அதிஷ்டானமான பிரம்ம சுவரூபமாக எப்பொழுதும் இருப்பதேயாகும். உலகத்திலும் உள்ளததினை அடைவதிலும் இல்லாததினை நீக்குவதிலும் பிரவிருத்தியானது காணப்படுகிறதேயாகும். உதாரணத்திற்கு கையிலிருக்கும் தங்கவளையல் முதலியவற்றை தேடும்பொழுது **உன்கையிலே தங்கவளையல்** என்கிற ஆப்தரின் உபதேசத்தால் இல்லாததை அடைந்தது போல இருப்பதும் அல்லது காலில் சுற்றிய கயிரில் பாம்பு என்கிற பிரமையடைந்தவரிடம் **அது பாம்பல்ல** என்கிற ஆப்தரின் உபதேசத்தால் நீங்கியதாகவே (இல்லாததாகவே) இருக்கும் பாம்பின் நீக்கம் இப்படி அடையபட்டதாகவே இருக்கும் இன்பத்தின் அடைவும் நீக்கபட்டதாவே இருக்கும் துன்பத்தின் நீக்கமும் மோக்ஷம் என்கிற பலன் (பிரயோஜனம்) ஆகும்.

स च ज्ञानैकसाध्यः तमेव विदित्वाऽतिमृत्युमेति नान्यः पन्था विद्यतेऽयनाय इति श्रुतेः। अज्ञाननिवृत्तेर्ज्ञानैकसाध्यत्वनियमाच्च। तच्च ज्ञानं ब्रह्मात्मैक्यगोचरम्। अभयं वै जनकप्राप्तोऽसि। तदात्मानमेवावेदहं ब्रह्मास्मि इति श्रुतेः। तत्त्वमस्यादिवाक्योत्थं ज्ञानं मोक्षस्य साधनम् इति नारदीयवचनाच्च।

அதுவும் (மோக்ஷமும்) ஞானத்தினால் மட்டுமே உண்டாவது **தமேவ விதித்வா தேம்ருத்யுமேதி நான்ய பன்தா வித்யதேயனாய** (அதனை அறிவதால் மரணத்தை கடக்கிறார் வேறு வழியில்லை இதனை அடைய) என்கிற ஷ்ருதியும். அஞ்ஞானத்தின் நீக்கமும் ஞானத்தினால் மட்டுமே முடியும் என்கிற நியமத்தாலும்

அந்த ஞானமாவது பிரம்மம் மற்றும் ஆத்மாவின் பிரிவற்ற நிலையை அறிவதாகிறது . **அபயம் வை ஜனகப்ராபதோஸி** (பயமற்ற நிலையை அடைந்துவிட்டார், ஜனகர்), **ததாத்மானமேவாவேதஹம் பிரம்மமாஸ்மி** (அந்த ஆத்மாவினையே அறிந்தேன் நான் பிரம்மமாக இருக்கிறேன்) முதலிய ஷ்ருதிகளும் , **தத்வமஸ்யாதி வாக்யோத்தம் ஞானம் சாக்ஷசாத் மோக்ஷக சாதனம்** (தத்வமஸி முதலிய வாக்கியத்தால் உண்டாகும் ஞானம் மோக்ஷத்திற்கு சாதனம்) என்று **நாரதரின்** வசனத்தினாலும்.

तच्च ज्ञानमपरोक्षरूपम्। परोक्षत्वेऽपरोक्षभ्रमनिवर्तकत्वानुपपत्तेः। तच्चापरोक्षज्ञानं तत्त्वमस्यादिवाक्यादिति केचित्। मननिदिध्यासनसंस्कृतान्तःकरणादेवेत्यपरे।

அந்த ஞானமும் அபரோக்ஷரூபமானது (பிரத்யக்ஷமானது). பரோக்ஷம் என்றானால் அபரோக்ஷமான பிரமையை நீக்குவது இயலாதாவதால், அந்த அபரோக்ஷ ஞானமும் தத்வமஸி முதலிய வாக்கியத்தால் உண்டாவது என்பர் சிலர். **மனன** (சிந்தித்தல்) , **நிதித்யாஸனத்தால்** (தெளிதலால்) பக்குவபட்ட அந்தக்கரணத்தாலேயே என்பர் மற்றவர்.

तत्र पूर्वाचार्याणामयमाशयः संविदापरोक्ष्यं न करणविशेषोत्पत्तिनिबन्धनम्। किन्तु प्रमेयविशेषनिबन्धनमित्युपपादितम्। तथा च ब्रह्मणः प्रमातृजीवाभिन्नतया तद्गोचरं शब्दजन्यज्ञानमप्यपरोक्षम्। अत एव प्रतर्दनाधिकरणे प्रतर्दनं प्रति प्राणोऽस्मि प्रज्ञात्मा तं मामायुरमृतमुपास्व इतीन्द्रप्रोक्तवाक्ये प्राणशब्दस्य ब्रह्मपरत्वे निश्चिते सति मामुपास्वेत्यस्मच्छब्दानुपपत्तिमाशङ्क्य तदुत्तरत्वेन प्रवृत्ते शास्त्रदृष्ट्या तूपदेशो वामदेववत् इत्यत्र सूत्रे शास्त्रीया दृष्टिः शास्त्रदृष्टिरिति तत्त्वमस्यादिवाक्यजन्यमहं ब्रह्मेति ज्ञानं दृष्टिशब्देनोक्तमिति।

இதனில், முன்பிருந்த ஆசாரியர்களின் விருப்பம் இதுவே - அபரோக்ஷமான ஞானமானது கரணத்தால் (கருவிபோல்) விசேஷமான (அல்லது

விசேஷமான கரணத்தால்) உண்டாவது என்கிற நியமமில்லை. ஆனால், **பிரமேயமான** (விஷய, வஸ்து) விசேஷத்தினால் உண்டாவது என்று நிரூபிக்கப்பட்டது. அதனாலேயே பிரம்மமானது, பார்பவர் ஜீவனிலிருந்து வேறுபட்டவரல்லாததால் அதனைக்குறித்த சப்தமானதினால் உண்டாகும் ஞானமும் அபரோக்ஷமேயாகும். இதனாலேயே **பிரதர்தனாதிகரணத்தில் பிரதர்தனனுக்கு ப்ராணோஸ்மி பிரஞ்ஞாத்மா தம் மாமாயுரம்ருதமுபாஸ்வ** (பிராணனாக இருக்கிறேன் இப்படியாக பிரஞ்ஞாத்மாவினை உபாசிததலை ஆயுள் மற்றும் மரணமற்ற பாவத்தையுடையதினை செய்வாயாக) என்று இந்திரனால் கூறபட்ட வாக்கியத்தில் பிராணன் என்கிற சொல்லானது பிரம்மத்தை குறிப்பது என்று நிச்சயிக்கப்பட்டால் , **மாம் உபாஸ்வ** (என்னை உபாஸிப்பாயாக) தியானிப்பாயாக) என்பதில் மாம் என்பதினை பிரயோகிக்க இயலாததினை சந்தேகித்து (அதன்பின்னர்) அதற்கு பதிலாக வரும் **ஷாஸ்திரத்ருஷ்ட்யாதுபதேஷோ வாமதேவவத்** ( சாஸ்திரத்தின் திருஷ்டியால் உபதேசம் வாமதேவரைப்போல) என்பதினை சூத்திரத்தில் சாஸ்திரத்தினால் உண்டான பார்வை சாஸ்திரதிருஷ்டி என்று தத்வமஸி – முதலிய வாக்கியத்தால் உண்டாகும் நான் பிரம்மம் , என்கிற ஞானம் இங்கு பார்வை (திருஷ்டி) என்பதினால் கூறபட்டது.

**अन्येषां त्वयमाशयः करणविशेषनिबन्धनमेव ज्ञानानां प्रत्यक्षत्वम्। न विषयविशेषनिबन्धनम्। एकस्मिन्नेव सूक्ष्मवस्तुनि पटुकरणापटुकरणयोः प्रत्यक्षत्वाप्रत्यक्षत्वव्यवहारदर्शनात्। तथा च संवित्साक्षात्त्वे इन्द्रियजन्यत्वस्यैव प्रयोजकतया न शब्दजन्यज्ञानस्यापरोक्षत्वम्।**

மற்றவர்களுடைய விரும்புவதோ – விசேஷமான கரணத்துடன் சம்பந்தமே ஞானத்தின் பிரத்யக்ஷத்தன்மையாகும், விஷயத்துடன் உள்ள சம்பந்தமல்ல, ஒரே சூக்குமமான விஷயத்தை குறித்து கூர்மையான கூர்மையற்ற என்ற நிலைகளால் பிரத்யக்ஷத்தன்மை பிரத்யக்ஷமாகதன்மை என்பது காணபடுவதால், அதனால் **சம்வித்தின்** (ஞானத்தின்) சாக்ஷாத்கரித்தலில் இந்திரியத்தினால் உண்டாவதினையே பிரயோஜனத்தைத்தருவது என்பதால் சப்தத்தினால் உண்டாகும் ஞானமானது அபரோக்ஷமில்லை.

ब्रह्मसाक्षात्कारेऽपि मनननिदिध्यासनसंस्कृतं मन एव करणम् मनसैवानुद्रष्टव्यः इत्यादिश्रुतेः। मनोऽगम्यत्वश्रुतश्चासंस्कृतमनोविषया। न चैवं ब्रह्मण औपनिष्दत्वानुपपत्तिः। अस्मदुक्तमनसो वेदजन्यज्ञानानन्तरमेव प्रवृत्ततया वेदोपजीवित्वात्। वेदानुपजीविमानान्तरगम्यत्वस्यैव वेदगम्यत्वविरोधात्।

பிரம்ம சாக்ஷாத்காரத்திலும் மனனம் மற்றும் நிதித்யாஸனத்தினால் பக்குவப்பட்ட மனதே கருவியாகின்றது , **மனஸைவானுத்ரஷ்டவ்ய** (மனதினாலேயே பார்க்கபடவேண்டும்) என்பது முதலான ஷ்ருதிகளும் மனதினால அறியபடமுடியாது என்று கூறும் ஷ்ருதியோ பக்குவப்படாத மனதினைக்குறிப்பது. இதனால் பிரம்மம் உபனிஷத்தினால் உண்டாவது என்கிற நிலையுண்டாகும் என்றால், அது தவறு, காரணம் நாங்கள் கூறும் மனதானது வேதத்தினால் உண்டாகும் ஞானத்திற்கு பிறகே பிரவிருத்திப்பதால் வேதத்தினால் உதவப்படுவது என்பதால், வேதத்தினால் உதவப்படாத பிரமாணத்தினால் அறியப்படுவதையே வேதத்தினால் அறியப்படுவது (உண்டாகாது) என்கிற சிந்தாந்தத்துடன் விரோதமடைகிறது.

शास्त्रदृष्टिसूत्रमपि ब्रह्मविषयमानसप्रत्यक्षस्य शास्त्रप्रयोजनत्वादुपपद्यते। तदुक्तम् –

अपि संराधने सूत्राच्छास्त्रार्थध्यानजा प्रमा।
शास्त्रादृष्टिर्मता तां तु वेत्ति वाचस्पतिः परः॥ इति।

तच्च ज्ञानं पापक्षयात्। स च कर्मानुष्ठानादिति परम्परया कर्मणां विनियोगः। अत एव तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसाऽनाशकेन इत्यादिश्रुतिः। कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते इत्यादिस्मृतिश्च सङ्गच्छते।

சாஸ்திரதிருஷ்டி சூத்திரமும் பிரம்மவிஷயமான மனதினால் அடையபடும் பிரத்யக்ஷத்தினையே சாஸ்த்திர பிரயோஜனம் என்று கூறுவதால். இவ்வாறு கூறபட்டுள்ளது –

**அபிசம்ராதனே** சூத்திரத்தினால் சாஸ்திரத்தை தியானிப்பதால் உண்டாகும் பிரமா சாஸ்திரதிருஷ்டி என்று ஏற்கிறார்கள், அவர்களை (மேன்மையானவர்களாக) மேன்மையான **ஸ்ரீ வாசஸ்பதி** அறிகிறார். அந்த ஞானமானதும் பாவங்களின் அழிவால். அவையும் கர்மத்தினை கடைபிடிப்பதால் என்று பரம்பரையாக கர்மத்தின் வினியோகம் அதனாலேயே **தமேதம் வேதானுவசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஞேன தானேன தபஸா அநாஷகேன** (அந்த ப்ரம்மத்தினை வேதத்ததை கூறுவதால், யஞ்ஞத்தினால், தானத்தால், தபஸால் மற்றும் மிதமான உணவினால் பிராம்மணர்கள் அறிய ஆசைபடுகிறார்கள்) என்பது முதலான ஷ்ருதிகளும், **கஷாயே கர்மபி பக்வே ததோ ஞானம் ப்ரவர்ததே** (பாவமானது கர்மத்தினால் பக்குவமடைந்தபோது ஞானமானது உண்டாகிறது) என்பது முதலான ஸ்மிருதிகளாலும் அறியப்படுகிறது.

**एवं श्रवणमनननिदिध्यासनान्यपि ज्ञानसधनानि। मैत्रेयीब्रह्मणे आत्मा वा अरे द्रष्टव्यः इति दर्शनमनूद्यतत्साधनत्वेन श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः इति श्रवणमनननिध्यासनानां विधानात्।**

இவ்வாறு ஷ்ரவணம். மனனம், நிதித்யாஸனமும் ஞானத்தையடைய சாதனையாகும் (வழியாகும்) மைத்ரேயி ப்ராஹ்மணத்தில் , **ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய** (ஆத்மாவினையே, மைத்ரேயி, பார்க்கவேண்டும் (சாக்ஷாத்கரிக்கவேண்டும்) ) என்று தர்ஷனத்தினை கூறிவிட்டு அதன் சாதனையாக **ஷ்ரோதவ்யோ மந்தவ்யோ நிததியாஸித்வய** ( கேட்க்கவேண்டும், சிந்திக்கவேண்டும், தெளியவேண்டும்) என்று ஷ்ரவனம், மனனம், நிதித்யாஸனமானது விதிக்கபட்டதால்.

**तत्र श्रवणं नाम वेदान्तानामद्वितीये ब्रह्मणि तात्पर्यावधारणानुकूला मानसी क्रिया। मननं नाम शब्दावधारितेऽर्थे मानान्तरविरोधशङ्कायां तन्निराकरणानुकूलतर्कात्मकज्ञानजनको मनसो व्यापारः। निदिध्यासनं नाम अनादिदुर्वासनया विषयेष्वाकृष्यमाणचित्तस्य विषयेभ्योऽपकृष्यात्मविषयकस्थैर्यानुकूलो मनसो व्यापरः।**

அங்கு ஷ்ரவணம் என்றால் வேதாந்தமானது இரண்டற்ற பிரம்மத்தில் நிச்சயிக்கும் தாத்பர்யத்திற்கு அனுகூலமான மனதினால் செய்யபடும் செயலாகும். மனனம் என்பது சப்தத்தினால் அறிந்த பொருளை மற்ற பிரமானத்தினால் விரோதிக்கபடும் சந்தேகம் எழும்போது அதனை நிராகரிப்பதற்கு அனுகூலமான தர்க்கமயமான ஞானத்தினை தரும் மனதின் செயல். நிதித்யாஸனம் என்பது அநாதியான கெட்ட வாசனைகளால் (சம்ஸ்காரத்தால்) விஷயதின்பால் ஈற்கப்படும் சித்தத்தை விஷயங்கிளலிருந்து இழுத்து ஆத்ம விஷயத்தில் நிலைபடுத்துவதற்கு அனுகூலமான மனதின் செயலாகும்.

**तत्र निदिध्यासनं ब्रह्मसाक्षात्कारे साक्षात्कारणम्। ते ध्यानयोगानुगता अपश्यन् देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम् इत्यादिश्रुतेः। निदिध्यासने च मननं हेतुः। अकृतमननस्यार्थदार्ढ्याभावेन तद्विषये निदिध्यासनायोगात्। मनने च श्रवणं हेतुः। श्रवणाभावे तात्पर्यानिश्चयेन शाब्दज्ञानाभावेन श्रुतार्थविषयकयुक्तत्वायुक्तत्व-निश्चयानुकूलमननायोगात्। एतानि त्रीण्यपि ज्ञानोत्पत्तौ कराणानीति केचिदाचार्या ऊचिरे।**

அதனில் நிதித்யாஸனமானது பிரம்மத்தை சாக்ஷாத்கரிக்க நேரடியான காரணமாகும். **தே த்யானயோகனுகதா அபஷ்யன் தேவாத்மஷக்திம் ஸ்வகுனைர்நிகூடாம்** (அந்த தியான யோகத்தில் ஈடுபட்டவர்கள் பார்த்தார்கள் தேவாத்ம சக்தியினை தன்னுடைய குணத்தினால் மூடபட்டதாக) என்பது முதலிய ஷ்ருதிகள். நிதித்யாசனத்திற்கு மனனமே காரணமாகும், மனனம் செய்யாதவர்களுக்கு பொருளானது திடமாக பதியாததால் அதனை குறித்த நிதித்யாஸனம் செய்யமுடியாததால். மனனத்திற்கும் ஷ்ரவனமே காரணமாகும், ஷ்ரவணமல்லாமல் தாத்பர்யமானது நிச்சியிக்க இயலாததால் சப்தத்தினாலுண்டாகும் ஞானமின்மையால் கேட்ட விஷயத்தினை குறித்த சரியானது தவறானது என்று நிச்சயித்தல் இயலாத மனனம் செய்ய முடியாததால், இவை மூன்றுமே ஞானம் உண்டாவதற்கு காரணங்கள் என்று சில ஆச்சாரியர்கள் கூறுகின்றனர்.

अपरे तु श्रवणं प्राधानम्। मनननिदिध्यासनयोस्तु श्रवणात्पराचीनयोरपि श्रवणफलब्रह्मदर्शननिर्वर्तकतया आरादुपकारकत्वेनाङ्गत्वमित्याहुः। तदप्यङ्गत्वं न तार्तीयशेषत्वरूपम्। तस्य श्रुत्याद्यन्यतमप्रमाणगम्यस्य प्रकृते श्रुत्याद्यन्यतमाभावेऽसम्भवात्।

மற்றவர்களோ ஷ்ரவணம் முக்கியம், மனனமும் நிதித்யாஸனமும் ஷ்ரவணத்திற்கு பிறகு உண்டாவதாலும், ஷ்ரவணமே பலனான பிரம்மத்தினை தர்ஷிப்பதினை தருவதனால் நேரடியாக (உடனே) பலன் தருவதான அங்கத்தன்மையை ஏற்கின்றனர். அந்த அங்கத்தன்மையும் மூன்றாம் (மீமாம்ஸையில் கூறபட்ட மூன்றாம் அத்யாயத்தின்) சேஷத்தன்மையுடைய (**சேஷ-சேஷிபாவம்**) இல்லை. அது (சேஷம்) ஷ்ருதி முதலிய ஏதாவது ஒரு பிரமாணத்தால் அறியபடுவதால் இங்கோ ஷ்ருதி முதலிய பிரமாணமானது இயலாததால்.

तथा हि। व्रीहिभिर्यजेत। दध्ना जुहोति इत्यादाविव मनननिदिध्यासनयोरङ्गत्वे न काचित्तृतीयाश्रुतिरस्ति। नापि बर्हिर्देवसदनं दामि इत्यादिमन्त्राणां बर्हिःखण्डनप्रकाशनसामर्थ्यवत् किञ्चिल्लिङ्गमस्ति। नापि प्रदेशान्तरपठितप्रवर्ग्यस्याग्निष्टोमे प्रवृणक्तीति वाक्यवच्छ्रवणानुवादेन मनननिदिध्यासनयोर्विनियोजकं किञ्चिद्वाक्यमस्ति। नापि दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत ई वाक्यावगतफलसाधनताकदर्शपूर्णमासप्रकरणे प्रयाजादीनामिव फलसाधनत्वेनावगतस्य श्रवणस्य प्रकरणे मनननिदिध्यासनयोराम्नानम्।

அதாவது, **வ்ரீஹிபிர்யஜேத** ( நெல்லைகொண்டு யாகம் செய்யவும்) , **தத்னா ஜுஹோதி** ( தயிரினால் ஹோமம் செய்யவும்) முதலியவற்றைப் போல மனனம் மற்றும் நிதித்யாஸனமானது அங்கமாக ஏற்க்க எந்த ஒரு மூன்றாம் வேற்றுமை கொண்டு ஷ்ருதியானதும் இல்லை அல்லது , **பர்ஹிர்தேவசதனம் தாமி** (தர்பையே உன்னை தேவதையின் ஆசனத்திற்காக அறுக்கிறேன்) முதலிய மந்திரங்களில் தர்பையை அறுத்தலினை உணர்த்துவதுபோல எந்த லிங்கமும் (குறியும்) இல்லை

அல்லது வேறு இடத்தில் கூறபட்ட **பிரவர்க்ய மந்திரத்தால் அக்னிஷ்டோம பிரகரணத்தில் பிரவிருணக்தி** (பிரவிக்யம் செய்யவும்) என்கிற வாக்கியம் படிக்கபட்டதால் செய்வதுபோல மனனம் மற்றும் நிதித்யாஸனத்தின் வினியோகமானதினைகூற வேறு வாக்கியமில்லை. **தர்ஷபூர்ணமாசாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத** ( அமாவசை மற்றும் பூர்ணமாசத்தில் சுவர்கத்தில் ஆசையுடையவர் யாகம் செய்யட்டும்) என்ற வாக்கியத்திலுள்ளது போல சாதனைகள் தர்ஷபூர்ணமாச பிரகரணத்தில் பிரயாஜம் முதலியவை போல பலனை அடைவதற்காக கூறபட்டதுபோல ஷ்ரவணத்திற்கு மனனம் மற்றும் நிதித்யாஸனம் கூறபடவில்லை.

ननु द्रष्टव्य इति दर्शनानुवादेन श्रवणे विहिते सति फलवत्तया श्रवणप्रकरणे तत्सन्निधावाम्नातयोर्मनननिदिध्यासनयोः प्रयाजन्यायेन प्रकरणादेवाङ्गतेति चेत्। न। ते ध्यानयोगानुगता अपश्यन् इत्यादिश्रुत्यन्तरे ध्यानस्य दर्शनसाधनत्वेनावगतस्याङ्गाकाङ्क्षायां प्रयाजन्यायेन श्रवणमननयोरेवाङ्गतापत्तेः क्रमसमाख्ये च दूरनिरस्ते।

ஆனால், **திரஷ்டவ்ய** (பார்க்கவேண்டும்) என்று பார்வையை கூறியிருப்பதோடு சிரவணமானது விதிக்கபட்டதால் பலனாக சிரவண பிரகரணத்தில் அதனருகில் கூறபட்ட மனனம் மற்றும் நிதித்யாஸனம் பிரயாஜ நியாயத்தைபோல பிரகரணத்தினாலேயே அங்கத்தன்மை என்றால், தவறு. **தே த்யானயோகானுகதா அபஷ்யன்** ( அந்த தியான யோகத்தினை கடைப்பிடிப்பவர்கள் பார்த்தார்கள்) என்பது முதலிய ஷ்ருதிகளின் இடையில் தியானத்தினை தர்ஷணத்திற்கு (பார்ப்பதற்கு) சாதனையாக அறியபட்ட அங்கத்தன்மையை எதிர்பார்த்தால் பிரயாஜ நியாயத்தால் சிரவண மற்றும் மனனம் மட்டுமே அங்கத்தன்மையடையும். இதனால், கிரமம் மற்றும் சமாக்யயையோ எங்கு தொலைவிலேயே நிராகரிக்கபட்டதாகிறது.

**किञ्च प्रयाजादावङ्गत्वविचारः सप्रयोजनः। पूर्वपक्षे विकृतिषु न प्रयाजाद्यनुष्टानम्। सिद्धान्ते तु तत्रापि तदनुष्टानमिति। प्रकृते तु श्रवणं न कस्यचित्प्रकृतिः। येन मनननिदिध्यासनयोस्तत्राप्यनुष्ठानमङ्गत्वविचारफलं भवेत्। तस्मान्न तार्तीयशेषत्वं मनननिदिध्यासनयोः। किन्तु यथा घटादिकार्ये मृत्पिण्डानां प्रधानकारणता। चक्रादीनां सहकारिकारणतेति प्राधान्याप्राधान्यव्यपदेशः। तथा श्रवणमनननिदिध्यासनानामपीति मन्तव्यम्।**

அதுமட்டுமல்லாமல் பிரயாஜம் குறித்த விஷயத்தில் அங்கத்தன்மையை பற்றிய விசாரமானது அவசியமாகின்றது. பூர்வபக்ஷிகள் விகிருதியில் பிரயாஜம்முதலியவற்றை அனுஷ்டானம் செய்யகூடாது எனும் போது சிந்தாந்திகள் அங்கும் அதனை அனுஷ்டிக்கவேண்டும் என்பர் ஆனால் இங்கோ சிரவணம் எதனுடைய பிரகிருதியும் இல்லை, மனனம் மற்றும் நிதித்யாஸனமானது அங்கும் விசாரம் செய்ய அவசியமாவதற்கு. அதனால் மூன்றாம் அத்யாயத்தில் கூறபட்ட சேஷத்தன்மை மனனம் மற்றும் நிதித்யாஸனத்திற்கு உண்டாகாது. ஆனால், எவ்வாறு பானை முதலிய காரியத்தில் களிமண் பிண்டமானது முக்கியமான காரணமாகிறதோ, சக்கிரம் முதலியவை உதவி புரியும் காரணமாகிறதோ, அதனால் பிரதானம், பிரதானமற்றது என்று கூறபடுகிறது. அதுபோல சிரவண, மனன மற்றும் நிதித்யாஸனத்திலும் என்றிறயவேண்டும்,

**सूचितं चैतद्विवरणाचार्यैः शक्तितात्पर्यविशिष्टशब्दावधारणं प्रमेयावगमं प्रत्यव्यवधानेन कारणं भवति। प्रमाणस्य प्रमेयावगमं प्रत्यव्यवधानात्। मनननिदिध्यासने तु चित्तस्य प्रत्यगात्मप्रवणतासंस्कारपरिपनिष्पन्नतदेकाग्रवृत्तिकार्यद्वारेण ब्रह्मानुभवहेतुतां प्रतिपद्यते इति फलं प्रत्यव्यवहितकारणस्य विशिष्टशब्धावधारणस्य व्यवहिते मनननिदिध्यासने तदङ्गेऽङ्गीक्रियेते इति।**

இதனையே **விவரணாசாரியர்** கோடிட்டு காண்பித்திருக்கிறார் - சக்தி மற்றும் தாத்பர்யம் கூறுவதாக சப்தத்தின் ஞானமானது பிரமேயத்தை (விஷயத்தை

– பிரம்மாத்ம ஒற்றுமையை) அடைவிப்பதற்கு காரணம் ஆகிறது, பிரமாணமானது பிரமேயத்தினை அறிவதற்கு காரணமாகிறதால். மனனம் மற்றும் நிதித்யாஸனத்திலோ சித்தத்தின் தன்னுடைய ஆத்மாவுடன் சம்பந்தத்தோடுள்ள சம்ஸ்காரத்தினால் உண்டாவதான ஏகாக்ர விருத்தியினால் பிரம்ம அனுபூதி (ஞானம்) காரணத்தன்மை அடைகிறது என்று பலனானதிற்கு தடையில்லாத (தொடர்ந்து) காரணம் கூடியதான சப்தஞானமானதும், தடையுள்ளபோது (தொடர்ந்தில்லாதபோது) மனனம் மற்றும் நிதித்யாஸனமானது அதன் அங்கமாக ஏற்கபடுகிறது – என்று.

**श्रवणादिषु च मुमुक्षूणामधिकारः- काम्ये करमणि फलकामस्याधिकारित्वात्। मुमुक्षायां च नित्यानित्यवस्तुविवेकस्येहामुत्रार्थफलभोगविरागस्य शमदमोपरति-तितिक्षासमाधानश्रद्धानां च विनियोगः। अन्तरिन्द्रियनिग्रहः शमः। बहिरिन्द्रियनिग्रहो दमः। विक्षेपाभाव उपरतिः। शीतोष्णादिद्वन्द्वसहनं तितिक्षा। चित्तैकाग्र्यं समाधानम्। गुरुवेदान्तवाक्ये विश्वासः श्रद्धा। अत्रोपरमशब्देन संन्यासोऽभिधीयते। तथा च संन्यासिनामेव श्रवणाधिकार इति केचित्। अपरे तु उपरमशब्दस्य संन्यासवाचकत्वाभावाद्विक्षेपाभावमात्रस्य ग्रहस्थेष्वपि सम्भवात्। जनकादेरपि ब्रह्मविचारस्य श्रूयमाणत्वात्सर्वाश्रमसाधारणं श्रवणादिविधानमित्याहुः।**

சிரவணம் முதலியவைகளில் முமுக்ஷுக்களுக்கே அதிகாரம் (தகுதி) உள்ளது, காமிய கர்மத்தில் பலனில் ஆசையுள்ளவர்களே அதிகாரிகள் என்பதுபோல, முமுக்ஷுவாவதற்கும் நித்திய மற்றும் அநித்திய விஷயத்தினை குறித்த **விவேகம்**, இந்த மற்றும் பர லோகத்திலும் உள்ள பலனை அடைவதில் **வைராக்கியம்**, **சமம்**, **தமம்**, **உபரதி**, **திதீக்ஷா**, **சமாதானம்** மற்றும் **சிரத்தை** ஆகியவை அவசியமாகிறது. அகக்கரணத்தினை (உள்ளேயுள்ள புலன்களை) தடைசெய்து வைப்பது (கட்டுப்பாட்டில் வைப்பது) **சமம்**. வெளி புலன்களை கட்டுபாடடில் வைப்பது **தமம்**. விக்ஷேபங்களினின்மை **உபரதி**. குளிர், சூடு முதலிய இரட்டைகளை சகிப்பது **திதீக்ஷா**. சித்தத்தின் ஏகாகிரம் (ஒருமைப்பாடு) **சமாதானம்**. குரு மற்றும் வேதாந்த வாக்கியத்தில் விஸ்வாசம் ( முழுநம்பிக்கை)

**சிரத்தா**. இங்கு உபரதி என்பதால் சன்யாசமானது குறிப்பிடப்படுகிறது. அதனால் சன்யாசிகளுக்கே சிரவணத்தில் அதிகாரம் என்கிறார் சிலர். மற்றவர்களோ **உபரதி** என்பதில் சன்யாசத்தினை குறிக்கும் சொல்லானது இல்லாததால் விக்ஷேபங்கள் இல்லாதது மட்டுமே என்பதால் கிரகஸ்தர்களிலும் அது இயலும் என்பதால், ஜனகர் முதலியவரிலும் பிரம்மவிசாரம் செய்யும் நிலை கேட்கபட்டதால் எல்லா ஆசிரமத்தவர்களுக்கும் சிரவணம் முதலியவை என்று கூறுவர்.

**सगुणोपासानमपि चितैकाग्र्यद्वारा निर्विशेषब्रह्मसाक्षात्कारे हेतुः। तदुक्तम् -**

**निर्विशेषं परं ब्रह्म साक्षात्कर्तुमनीश्वराः।**
**ये मन्दास्तेऽनुकम्प्यन्ते सविशेषनिरूपणैः॥**
**वशीकृते मनस्येषां सगुणब्रह्मशीलनात्।**
**तदेवाविर्भवेत्साक्षादपेतोपाधिकल्पनम्॥ इति।**

சகுண உபாசனையும் சித்தத்தின் ஒருமைப்பாட்டினைதந்து அதனால் நிர்விசேஷ (குணமற்ற) பிரம்ம சாக்ஷாத்காரத்தினையடைய காரணமாகிறது. இவ்வாறு கூறபட்டுள்ளது -

நிர்விசேஷமான (நிர்குணமான) பிரம்மத்தை சாக்ஷாத்கரிக்க சாமர்த்தியமில்லாதவர்கள், அப்படிபட்ட மந்த புத்தியுள்ளவர்களுக்கு சவிசேஷம் (சகுண) உபாசனையை உபதேசித்து தயைபுரிகிறது (ஷ்ருதி).

வசமாக்கபட்ட மனதுடையவர்கள் சகுண உபாசனையினால் அதுவே சாக்ஷாத்காரமாகிறது தன்னுடைய உபாதி கற்பனைகள் நீங்கியதாக - என்று.

**सगुणोपासानं चार्चिरादिमार्गेण ब्रह्मलोकगतानां तत्रैव श्रवणादुत्पन्नतत्त्वसाक्षात्काराणां ब्रह्मणा सह मोक्षः। कर्मिणां तु धूमादिमार्गेण पितृलोकगतानामुपभोगेन कर्मक्षये सति पूर्वकृतसुकृतदुष्कृतानुसारेण ब्रह्मादिस्थावरान्तेषु पुनरुत्पत्तिः। तथा च श्रुतिः रमणीयचरणा रमणीयां योनिमापद्यन्ते। कपूयचरणाः कपूयां**

**योनिमपद्यन्ते इति। प्रतिषिद्धानुष्ठायिनां तु रौरवादिनरकविशेषेषु तत्तत्पापोपचिततीव्रद्ःखमनुभूय श्वशूकरादितिर्यग्योनिषु स्थावरादिषु चोत्पत्तिरित्यलं प्रसङ्गादागतप्रपञ्चेनेति।**

சகுண உபாசனை செய்பவர்கள் **அர்ச்சிர்** முதலிய வழிகளால் பிரம்மலோகத்தினை அடைந்து அங்கேயே செய்யும் சிரவணத்தினால் உண்டாகும் தத்துவ சாக்ஷாத்காரத்தினால் பிரம்மனோடேயே (நான்முகன்) மோக்ஷம் அடைகிறார்கள். கர்மம் செய்பவர்களோ **தூமம்** முதலிய வழிகளால் பித்ரு லோகத்தினை அடைந்து அங்,கு விஷயங்களை அனுபவிப்பதால் கர்மமானது அழிந்த பின் முன்னர் செய்த புண்ணிய-பாவத்தினை அனுசரித்து பிரம்மன் முதல் சிறுபூச்சியினடைவில் மீண்டும் பிறப்பினை அடைவார்கள். இதனையே ஷ்ருதியும் விரும்பந்தகுந்த வழிமுறைகளை கடைபடிப்பவர்கள் நல்ல பிறப்பினையும், வெறுக்கதகுந்த வழிமுறைகளை கடைபிடிப்பவர்கள் கெட்ட பிறப்பினையும் அடைகிறார்கள், என்று நிஷேதிக்கபட்டதினை அனுஷ்டிப்பவர்களுக்கோ ரௌரவம் முதலிய நரகங்களிலும் அவரவர் பாபத்தினால் உண்டாகும் தீவிரமான துன்பத்தை அடைந்து நாய், கோழி முதலிய (ஊர்வன, பறப்பன) பிறவிகளையும் செடிகொடி பிறப்புக்களையும் அடைவார்கள். இவ்வளவு போதும் இங்கு செய்யபட்ட விஷயத்தின் விசாரம்.

**निर्गुणब्रह्मसाक्षात्कारवतस्तु न लोकान्तरगमनम्। न तस्य प्राणा उत्क्रामन्ति इति श्रुतेः। किन्तु यावत्प्रारब्धकर्मक्षयं सुखदुःखे अनुभूय पश्चादपवृज्यते।**

நிர்குண பிரம்மத்தினை சாக்ஷாத்காரம் செய்தவர்களோ வேறு லோகங்களை அடைவதில்லை, **ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி** (அவருடைய பிரணனானது மேலெழுவதில்லை) என்கிறது ஷ்ருதி, ஆனால் எதுவரை பிராரப்த கர்மமானது உள்ளதோ அதன் இன்பதுன்பத்தை அனுபவித்து பின்னர் முக்தியடைகிறார்கள்.

**ननु क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे इत्यादिश्रुत्या ज्ञानाग्निःसर्वकर्माणि भस्मसात्कुरुते तथा इत्यादिस्मृत्या च ज्ञानस्य सकलकर्मक्षयहेतुत्वनिश्चये सति प्रारब्धकर्मावस्थानमनुपपन्नमिति चेत्। न। तस्य तावदेव चिरं यावन्नाविमोक्ष्येऽथ सम्पत्स्ये इत्यादिश्रुत्या नाभुक्तं क्षीयते कर्म इत्यादिस्मृत्या चोत्पादितकार्यकर्मव्यतिरिक्तानां सञ्चितकर्मणामेव ज्ञानविनाशित्वावगमात्।**

ஆனால், **க்ஷியந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் திருஷ்டேபராவரே** .(அழிகின்றது அவருடைய கர்மங்கள் அந்த பராவரத்தை (பிரம்மத்தை) பார்த்ததினால்) முதலிய ஷ்ருதிகளாலும் , **ஞானாக்னி சர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா** (ஞானத்தீயானது எல்லா கர்மங்களையும் சாம்பலாக்குகின்றது) முதலிய ஸ்மிருதிகளும் ஞானத்தினால் எல்லா கர்மமும் அழிகின்றது என்பது நிச்சயமாகும்போது **பிராரப்தகர்மம்** மட்டும் இருப்பது இயலாது என்றால், தவறு, **தஸ்ய தாவதேவ சிரம் யாவன்னவிமோக்ஷ்யே அத சம்பத்ஸ்யே** (அவருக்கு அவ்வளவு நேரமேயாகும் எதுவரை பிராரப்தம் தீரவில்லையோ, அதன்பின்னர் மோக்ஷமடைகிறார்) முதலிய ஷ்ருதிகளாலும் , **நாபுக்தம் க்ஷீயதே கர்ம** (அனுபவிக்காமல் அழியாது கர்மம்) என்பது முதலான ஸ்மிருதிகளாலும் உண்டாகிவிட்ட (பலனை தரத்துவங்கிவிட்ட) கர்மங்களைத்தவிர **சஞ்சித** மற்றும் **ஆகாமிய** கர்மங்களே ஞானத்தினால் அழிகின்றது என்று அறியப்படுவதால்.

## <u>விளக்கம்</u>

கர்மம் மூன்றுவகை **சஞ்சிதம் , ஆகாமிய** மற்றும் **பிராரப்தம்**. சஞ்சிதம் என்பது எல்லா பிரவிகளிலும் அடைந்த கர்மத்தின் கூட்டம். ஆகாமியமாவது வெகு சீக்கிரத்தில் பலனை தரத்தக்கது, பிராரப்தம் என்பது இந்த சரீரம் உண்டாவதற்கான அதன் ஆயுள், அதனால் அனுபவிக்கபடவேண்டிய போகங்கள் மற்றும் அதனை அனுபவிக்க தகுந்ததான பிறப்பு முதியவைகளை நிச்சயிக்கிறது, என்பதால் அது பலனை தரத்துவங்கிவிட்டது. இதற்கு தரப்படும் உதாரணம், வில்லிலிருந்து புறப்பட்டு விட்ட அம்பானது தடுக்கபடமுடியாதது போல, லஷியத்தினை (இலக்கை) அடைந்தே அது நிற்கும் என்பதுபோல பிராரப்தம்

கர்மமும் பலனைதந்தே தீரும்.

सञ्चितं द्विविधं सुकृतं दुष्कृतं चेति। तथा च श्रुतिः तस्य पुत्र दायमुपयन्ति सुहृदः साधुकृत्यां द्विषन्तः पापकृत्याम् इति। ननु ब्रह्मज्ञानान्मूलाज्ञाननिवृत्तौ तत्कार्यप्रारब्धकर्मणोऽपि निवृत्तिः। कथं ज्ञानिनां देहधारणमुपपद्यते इति चेत्। न। अप्रतिबद्धज्ञानस्यैवाज्ञाननिवर्तकतया प्रारब्धकर्मरूपप्रतिबन्धकदशायामज्ञान-निवृत्तेरनङ्गीकारात्।

சஞ்சிதம் கர்மமானது இரண்டுவகை – புண்யம் மற்றும் பாபம் என்றும். இதனையே ஷ்ருதியும் , **தஸ்ய புத்ரா தாயமுபயந்தி சுஹ்ருத சாதுக்ருத்யாம் த்விஷந்தபாபக்ருத்யாம்** (அவருடைய (ஞானியுடைய) மகன்கள் சொத்தினையும், நன்மை செய்தவர்கள் புண்ணியத்தையும தீமை செய்தவர்கள் பாவத்தினையும்) என்று. ஆனால், பிரம்ம ஞானத்தால் மூல அஞ்ஞானமானது நீங்குவதால் அதன் காரியமான பிராரப்த கர்மமும் நீங்குகின்றது என்பதால் ஞானிகளுக்கு சரீரத்தினை தாங்குவது என்பது எவ்வாறு இயலும் என்றால், தவறு, தடையற்ற ஞானமே அஞ்ஞானத்தை நீக்குவதானதால், பிராரப்த கர்மம் எனும் தடையானது உள்ள நிலையில் அஞ்ஞானம் நீங்குவது ஏற்கபடுவதில்லை.

नन्वेवमपि तत्त्वज्ञानादेकस्य मुक्तौ सर्वमुक्तिः स्यात्। अविद्याया एकस्त्वेन तन्निवृत्तौ क्वचिदपि संसारायोगादिति चेत्। न। इष्टापत्तेरित्येके। अपरे त्वेतद्दोषपरिहाराय इन्द्रो मायाभिः इति बहुवचश्रुत्यनुगृहीतमविद्यानानात्वमङ्गीकर्तव्यमित्याहुः। अन्ये त्वेकैवाविद्या। तस्या एवाविविद्याया जीवभेदेन ब्रह्मस्वरूपावरणशक्तयो नाना। तथा च यस्य ब्रह्मज्ञानं तस्य ब्रह्मस्वरूपावरणशक्तिविशिष्टाविद्यानाशः। न त्वन्यं प्रति ब्रह्मस्वरूपावरणशक्तिविशिष्टाविद्यानाश इत्यभ्युपगमाद् सर्वमुक्तिः।

ஆனாலும், தத்துவ ஞானத்தால் ஒருவர் முக்தியடைந்தால் எல்லோரும்

முக்தியடைவார்கள், அவித்தையானது ஒன்றானதால் அது நீங்கியதால்எவருக்கும் சம்சாரம் உண்டாக இயலாது என்றால். தவறு சிலர் இதனை வரவேற்கிறார்கள், மற்றவர்களோ இந்த தோஷத்தினை நீக்குவதற்காக **இந்த்ரோ மாயாபிர்** (இந்திரன் மாயங்களை கொண்டு) என்ற பன்மையை குறிக்கும் ஷ்ருதியால் கூறபட்ட அவித்தையினை பலவாக ஏற்கவேண்டும் என்கின்றனர். (மாயாபி - மாயங்கள்) மற்றவர்களோ அவித்தை ஒன்றே (என்கின்றனர்) அந்த அவித்தையே ஜீவன் பலவானதால் பிரம்மத்தினை மூடுவதான ஆவரண சக்தியானது பல என்பதால். அதனால் எவருக்கு பிரம்மஞானமோ அவருக்கு பிரம்மத்தின் சுவரூபத்தை மறைக்கும் ஆவரண சக்தியான அவித்தை அழிகின்றது மற்றவர்களுக்கு இந்த பிரம்மத்தின் சுவரூபத்தை மறைக்கும் ஆவரண சக்தியான அவித்தையின் அழிவு இல்லை என்று ஏற்பதால் எல்லாருக்கும் முக்தி நிலையாகது.

**अत एव यावदधिकारमवस्थितिराधिकारिकाणाम् इत्यस्मिन्नधिकरणेऽधिकारिपुरुषणामुत्पन्नतत्त्वज्ञानानामिन्द्रादीनां देहधारणानुपपत्तिमाशङ्क्याधिकारापादकप्रारब्धकर्मसमाप्त्यनन्तरं विदेहकैवल्यमिति सिद्धान्तितम्।**

**तदुक्तमाचार्यवाचस्पतिमिश्रैः -**

**उपासनादिसंसिद्धितोषितेश्वरचोदितम्।**
**अधिकारं समाप्यैते प्रविशन्ति परं पदम्॥ इति।**

அதனாலேயே, **யாவததிகாரமவஸ்திதிராதிகாரிகாணாம்** (எதுவரை தகுதியிருக்கின்றதோ (ஜீவன்நிலை) அந்த அதிகாரிகளுக்கு அதுவரை இருத்தல்) என்கின்ற அதிகரணத்தில் அதிகாரியான புருஷர்களுக்கு அதாவது ஞானம் அடைந்தவர்களான இந்திரன் முதலியவர்களுக்கு சரீரத்தை தாங்குவதினை (கேள்வியை) எதிர்நோக்கி அதிகாரத்தைத்தரும் பிராரப்த கர்மத்தின் முடிவிற்கு பின்னர் **விதேய** (சரீரமற்ற) கைவல்யம் (மோக்ஷம்) என்று நிரூபிக்கபட்டுள்ளது.

இதனையே ஆசாரியர் ஸ்ரீ வாசஸ்பதிமிஷ்ரரும் -

உபாசனைகள் நன்றாக செய்யபட்டதால் சந்தோஷபடுத்தபட்ட ஈஷ்வரரிடமிருந்து அடைந்த, அதிகாரத்தினை முடித்துக்கொண்டு இவர்கள் அடைகிறார்கள் பரமபதத்தினை (பிரம்மத்தை) ) - என்று

**एतच्चैकमुक्तौ सर्वमुक्तिरिति पक्षे नोपपद्यते। तस्मादेकाविद्यापक्षेऽपि प्रतिजीवमावरणभेदोपगमेन व्यवस्थोपपादनीया। तदेवं ब्रह्मज्ञानान्मोक्षः। स चानर्थनिवृत्तिर्निरतिशयब्रह्मानन्दावाप्तिश्चेति सिद्धं प्रयोजनम्।**

இது ஒருவர் முக்தியடைந்தால் மற்றவர்களும் முக்தியடைவர் என்ற நிலையில் உண்டாவதில்லை அதனால் ஒரு அவித்தை என்கிற பக்ஷத்திலும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஆவரணத்தினை வேறாக ஏற்பதால் நிரூபிக்கபடுகின்றது. அதனால் இப்படிப்பட்ட பிரம்ம ஞானத்தால் மோக்ஷம், அதுவும் துன்பங்கள் முழுவதுமாக நீங்குவதும், முழுமையாக இன்பத்தை(அளவில்லாத) அடைவதும் என்று நிரூபிக்கபட்டது பிரயோஜகம்.

## इति प्रयोजनपरिच्छेदः॥

**பிரயோஜன பரிச்சேதம் முற்றும்**

## इति श्रीधर्मराजाध्वरीन्द्रविरचित वेदान्तपरिभाषा समाप्तः॥

**ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை முற்றும்**